# உலக சோசலிச வலைத் தள ஆய்வு

• தொகுதி 1 இதழ் 2 • 2002 2002 டிசம்பர்–2003 பெப்பிரவரி • விலை ரூபா 40.00

ஈராக்கிற்கு எதிரான அமெரிக்க யுத்தத்தை எதிர்!
ஏகாதிபத்தியத்திற்கு எதிராக சர்வதேச இயக்கத்தைக் கட்டி எழுப்பு! **2**

ஈராக்கிற்கு எதிரான போரும் உலக மேலாதிக்கத்திற்கான அமெரிக்க முன்னெடுப்பும் **8**




இலங்கை சோசலிஸட் மீதான தமிழீழ விடுதலைப் புலிகளின் வன்முறைத் தாக்குதலை கண்டனம் செய்! **28**

இலங்கை சமாதானப் பேச்சுவார்த்தைகள்: தமிழீழ விடுதலைப் புலிகள் அனைத்துலக மூலதனத்துக்கு தலைவணங்குகின்றனர் **31**

பாகிஸ்தான் பலவான் ஜனநாயக விரோத அரசியலமைப்பு மாற்றங்களை திணிக்கின்றார் **34**

குஜராத்தில் முன்கூட்டியே தேர்தல் நடத்துவதற்கான பி.ஜே.பி.யின் அழுத்தத்தை இந்திய உச்சநீதிமன்றம் ஒதுக்கித்தள்ளியது **35**

வேல்ட் கொம் அம்பலப்படுத்தலின் படிப்பினைகள் **40**

"பங்கீட்டில் ஐரோப்பா": ஆப்கானிஸ்தான் யுத்தமும் ஐரோப்பிய முதலாளித்துவத்தின் தடுமாற்றமும் **44**

எ.்.ப.பி.ஐ.யும் அல்பேர்ட் ஐன்ரைனும் **60**

டொறண்டோ சர்வதேச திரைப்பட விழா 2002 **64**

## www.wsws.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலக சோசலிச வலைத் தள கட்டுரைகளின் தொகுப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலக சோசலிச வலைத் தள ஆய்வு

"உலக சோசலிச வலைத் தள ஆய்வு" நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் இலங்கைப் பகுதியான சோசலிச சமத்துவக் கட்சியால் காலாண்டுக்கு ஒரு முறை வெளியிடப்படும் சஞ்சிகையாகும்.

தபால் பெட்டி: 12. ), கொழும்பு
தொலைபேசி: 712104

சந்தா விபரங்களுக்கு 68 ம் பக்கத்தைப் பார்க்கவும்.

© உலக சோசலிச வலைத் தளம்™

இங்கு பிரசுரமாகும் அனைத்துக் கட்டுரைகளும் உலக சோசலிச வலைத்தளத்துக்கு சொந்தமானதாகும். இங்கு வெளியாகும் எதையும் அனுமதியின்றி பிரதி எடுப்பதும் மீள்பிரசுரம் செய்வதும் முழுமையாகத் தடைசெய்யப்பட்டுள்ளது.

உங்கள் கருத்து: மின்னஞ்சல்: wswscmb@sltnet.lk

## உலக சோசலிச வலைத் தளம்

www.wsws.org

உலக சோசலிச வலைத் தளமானது நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் வெளியீடாகும். இது நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் இணைய மையமாகும். இதன் மூலம் உலகின் முக்கிய சம்பவங்கள் பற்றிய நாளாந்த ஆய்வுகளும் விபரங்களும் அதே போல் அரசியல், பொருளாதார மற்றும் சமூக சம்பவங்களினதும் மற்றும் உலகம் பூராவும் தொழிலாளர் போராட்டம், கலை, கலாச்சாரம், விஞ்ஞானம் வரலாறு மற்றும் தத்துவம் பற்றிய ஆய்வுகளும் கட்டுரைகளும் மார்க்சிய தளத்திலிருந்து வழங்கப்படுகின்றது.
உலக சோசலிச வலைத் தளம் நடைமுறையிலுள்ள ஊடகங்களுக்கு ஒரு பெறுமதிமிக்க பதிலீடாகும்.
இந்த அனைத்துக்கும் மேலாக தீர்க்கமான சோசலிச சிந்தனையின் உரிமைக்குள் பிரவேசிக்கும் வரலாற்று உண்மைகள் பற்றியும் 21ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் மனித குலம் முகம் கொடுத்துள்ள அத்தியாவசியமான பிரச்சினைகள் சம்பந்தமாக சிந்திப்பவர்களுக்கும் ஒரு விமர்சன ரீதியான மேடையை வழங்குகிறது.
அத்தோடு, உலக சோசலிச வலைத் தளம் ட்ரொட்ஸ்கிச இயக்கத்தின் வரலாறு, கோட்பாடு மற்றும் சமகால ஆய்வுகளை உள்ளடக்கிய பாகங்களையும், சிறிய நூல்களையும் விலைகொடுத்து வாங்கும் வசதிகள் கொண்ட ஒரு இணைய நூலகத்தையும் -Mehring Books Online- நடத்திவருகிறது.

# உள்ளே

## ஆசிரியர் குழு அறிக்கை

ஈராக்கிற்கு எதிரான அமெரிக்க யுத்தத்தை எதிர்!
ஏகாதிபத்தியத்திற்கு எதிராக சர்வதேச இயக்கத்தைக் கட்டி எழுப்பு! .......... 2

## ஈராக்கிற்கு எதிரான அமெரிக்க யுத்தம்

1. ஈராக்கிற்கு எதிரான போரும் உலக மேலாதிக்கத்திற்கான அமெரிக்க முன்னெடுப்பும்: .......... 8
2. சர்வதேச சங்கத்திற்கு உண்மையில் நிகழ்ந்தது என்ன? .......... 16
3. புஷ் நிர்வாகத்துக்கு யுத்தம் அவசியம் .......... 18
4. ஐ.நா சபையில் புஷ்: உலகத்துக்கு வாஷிங்டனின் போருக்கான இறுதி எச்சரிக்கை .......... 19
5. ஈராக்கிய ஆட்சியின் எதிர்ப்பாளர்களும் பாக்தாதில் "ஆட்சி மாற்றத்திற்கான" அமெரிக்க திட்டங்களும் .......... 21

## இலங்கை

6. சோசலிச சமத்துவக் கட்சியின் ஜனநாயக உரிமைகளை காப்பாற்று .......... 27
7. இலங்கை சோசலிஸ்ட் மீதான தமிழீழ விடுதலைப் புலிகளின் வன்முறைத் தாக்குதலை கண்டனம் செய்! .......... 28
8. ஏசியன் ரிபியூன், விடுதலைப் புலி பரிந்துரையாளருக்கான உலக சோசலிச வலைத் தளத்தின் பதிலை பிரசுரிக்கிறது .......... 29
9. இலங்கை சமாதானப் பேச்சுவார்த்தைகள்: தமிழீழ விடுதலைப் புலிகள் அனைத்துலக மூலதனத்துக்கு தலைவணங்குகின்றனர் .......... 31

## இந்திய உபகண்டம்

10. பாகிஸ்தான் பலவான் ஜனநாயக விரோத அரசியலமைப்பு மாற்றங்களை திணிக்கின்றார் .......... 34
11. குஜராத்தில் முன்கூட்டியே தேர்தல் நடத்துவதற்கான பி.ஜே.பி.யின் நெருக்குதலை இந்திய உச்சநீதிமன்றம் ஒதுக்கித்தள்ளியது .......... 35
12. போபால் பேரழிவு பற்றிய மனிதக் கொலைக் குற்றச்சாட்டுக்களைக் குறைப்பதற்கு இந்திய நீதிமன்றம் மறுக்கின்றது .......... 37

## அமெரிக்கா

13. வேல்ட் கொம் அம்பலப்படுத்தலின் படிப்பினைகள் .......... 40

## ஐரோப்பா

14. ஜேர்மன் தேர்தல்: ச.ஜ.கட்சியும் பசுமைக் கட்சியும் குறைந்த பெரும்பான்மையுடன் அதிகாரத்தை பாதுகாத்துக்கொண்டனர் .......... 42
15. "பங்கீட்டில் ஐரோப்பா": ஆப்கான் யுத்தமும் ஐரோப்பிய முதலாளித்துவத்தின் தடுமாற்றமும் .......... 44

## மத்தியகிழக்கு

16. இஸ்ரேலிய கல்விமான்களை பகிஷ்கரிப்பதற்கு எதிராக .......... 54
17. இஸ்ரேலிய கல்விமான்களை பகிஷ்கரித்தல் சம்பந்தமான கடிதங்களுக்கு உலக சோசலிச வலைத்தளம் பதிலளிக்கிறது .......... 55

## வரலாறு

18. எஃவ். பி. ஐ யும் அல்பேர்ட் ஐன்ஸ்ரைனும் .......... 60

## கலை விமர்சனம்

19. டொறண்டோ சர்வதேச திரைப்பட விழா 2002: ஏன் அதிகளவில் ஏமாற்றத்தை ஏற்படுத்தும் திரைப்படங்கள் உள்ளன? .......... 64

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈராக்கிற்கு எதிரான அமெரிக்க யுத்தத்தை எதிர்! ஏகாதிபத்தியத்திற்கு எதிராக சர்வதேச இயக்கத்தைக் கட்டி எழுப்பு!

உலக சோசலிச வலைத் தள ஆசிரியர் குழுவின் அறிக்கை
9 செப்டெம்பர் 2002

உலக சோசலிச வலைத் தளம் ஈராக்கிற்கு எதிரான அமெரிக்காவின் யுத்த முன்னெடுப்பை கண்டனம் செய்வதோடு புஷ்சுக்கும், ஜனநாயகக் கட்சியினருக்கும், அமெரிக்க கூட்டுத்தாபனங்களது அனைத்துப் பிரதிநிதிகளுக்கும் மற்றும் அரசியல் கும்பல்களுக்கும் எதிராக, அமெரிக்காவிலும் உலகெங்கிலும் உள்ள அனைத்து உழைக்கும் மக்களையும் இளைஞர்களையும் இராணுவ வாதத்திற்கு எதிரானவர்களையும் ஏகாதிபத்திய யுத்தத்திற்கு எதிரான ஒரு வெகுஜன இயக்கத்தை முன்னெடுக்குமாறு அழைப்பு விடுக்கின்றது.

அமெரிக்க ஏகாதிபத்தியத்தால் ஆன பூகோளப் போரை நோக்கிய ஒரு மாபெரும் வரலாற்று நிகழ்ச்சியை மதிப்பீடு செய்கையில், விடயங்களை அவற்றின் சரியான பெயர்களில் அழைப்பது அவசியமானதுடன், அது வெள்ளை மாளிகை, பென்டகன் மற்றும் காங்கிரஸ் ஆகியவற்றிலிருந்து தோன்றி, அமெரிக்க ஊடகத்தின் மூலம் ஊதிப்பெருக்கப்படும் பிரச்சார வெள்ளத்தினால் திசை திருப்பப்பட்டுவிட அல்லது அள்ளுப்பட்டுப் போய்விடக் கூடாது.

புஷ் முன்மொழிவதும், மற்றும் காங்கிரஸ் அங்கீகரிக்கத் தயாரிப்பதும் என்னவென்றால், உலகின் மிகவும் சக்திமிக்க நாடொன்றால் மிகப் பலவீனமான நாடுகளுள் ஒன்றுக்கு எதிராக நடத்தப்படும் சூறையாடும் யுத்தமாகும். ஈராக், எந்த நாட்டையும் விட இரண்டாவது பெரிய எண்ணெய் சேம இருப்புக்களுடன், எக்சோன் மொபில் (Exxon Mobil), வெரோன் டெக்சாகோ (ChevronTexaco) மற்றும் எஞ்சியுள்ள அமெரிக்கக் கூட்டுத்தாபனங்களுக்கு பெறுமதி மிக்க பரிசாகும். புஷ் "ஆட்சி மாற்றத்தை" பற்றிப் பேசும்பொழுது அவர் சுதந்திர ஈராக்கானது ஆப்கானிஸ்தானின் ஜனாதிபதியாக அமெரிக்கா நியமித்த ஹமித் கர்ஜாய் (Hamid Karzai) போன்ற அமெரிக்க அடிவருடியால் தலைமை தாங்கப்படும், அரைக் காலனித்துவ ஆட்சியால் பதிலீடு செய்வதை அர்த்தப்படுத்துகிறார். அது அமெரிக்க மற்றும் பிரிட்டிஷ் நலன்களுக்கு நாட்டின் வளங்கள் மீதான கூடிய சக்திமிக்க கட்டுப்பாட்டை அளிக்கும்.

சதாம் ஹூசைனை எவ்விதமான வார்த்தைகளால் தூசித்தாலும் அது ஈராக்கை, ஐக்கிய அமெரிக்க அரசுகளுக்கு எதிரான குறிப்பிடத்தக்க மூலோபாய அச்சுறுத்தலாக மாற்ற முடியும் என்று அர்த்தப்படாது. ஐக்கிய அமெரிக்க அரசுகளை, ஈராக் இரசாயன, உயிரியல் அல்லது அணு ஆயுதங்களால் தாக்குவது உடனடியானது எனக் கூறும் —புஷ், உதவி ஜனாதிபதி செனி மற்றும் நிர்வாகத்திற்கான ஏனைய பேச்சாளர்களால் விடுக்கப்படும் இறுதிப் பேரழிவு பற்றிய எச்சரிக்கைகள்— அமெரிக்கப் பொதுமக்கள் மீது தமது கருத்தைத் திணிப்பதற்கான சிடுமூஞ்சித்தனமான முயற்சி ஆகும். இந்தக் கூற்றுக்கள் பொய்யானவையாக இருக்கும் அதே வேளை, புஷ்ஷும், செனியும் மற்றும் அவரது குழாமும் அவை பொய்கள் என்பதை அறிந்துகொண்டுள்ள போதிலும், அவை ஊழல் மிக்க அமெரிக்க செய்தி ஊடகங்களால் அல்லது ஜனநாயகக் கட்சியால் சவால் செய்யப்படமாட்டாது என்பதை அவர்கள் அறிவார்கள்.

ஈராக்கிற்கு எதிரான போரானது மேலும் கூடிய மற்றும் இரத்தம் தோய்ந்த மோதல்களுக்கான களத்தை அமைத்துக்கொடுப்பதோடு, முன்னர் என்றுமில்லாத அளவிலான இறப்பு மற்றும் அழிவு பற்றி அச்சுறுத்துகின்றது . வாஷிங்டன் போஸ்டின் அண்மைய கருத்துரையில், முன்னாள் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் ஜ்பிக்னீவ் பிரேஜெஜின்ஸ்கி (Zbigniew Brzezinski) , ஈராக் மீதான முன்கூட்டிய தாக்குதல் (Preemptive attack) சர்வதேச உறவுகளின் முழுக் கட்டமைப்பு மீதும் ஆழமான சீர்குலைவை ஏற்படுத்தும் பாதிப்பைக் கொண்டிருக்கும் என எச்சரித்தார். ஐக்கிய அமெரிக்க அரசுகளின் பகைவர்கள் அதனை "பூகோள குண்டர் கும்பல்" என உருப்படுத்திக் காட்டுவர், எனவும் அவர் எச்சரித்தார். வார்த்தைப் பதமானது சொல்ல எண்ணி இருக்கக் கூடியதிலும் பார்க்க அதிகமாய் வெளிப்படுத்துகிறது: உலகம் முழுவதிலும் குற்றவியல் நிறுவனமாகக் காணப்படும் ஒன்றைத் தொடங்குவதற்குத்தான் புஷ் நிர்வாகம் தயாரித்துக் கொண்டிருக்கிறது.

## நாஸி போன்ற ஆக்கிரமிப்பு வேலைத்திட்டம்

அமெரிக்க அரசாங்கம் புதிதாய் ஈடுபட்டுள்ள இராணுவ வன்முறை வேலைத் திட்டம் மற்றும் அரசியல் ஆத்திரமூட்டல் ஆகியவற்றின் அளவானது நாஸிக்களின் நாட்களுக்குப் பின்னர் காணப்படாதது ஆகும். இந்த ஒப்பீடானது நம்பமுடியாததோ அல்லது சொற்சிலம்பமோ அல்ல. முன்கூட்டியத் தாக்குதல் பற்றிய கோட்பாட்டை பகிரங்கமாகப் பறைசாற்றுவதில் —வேறு வார்த்தைகளில் சொன்னால், சுயபாதுகாப்பு என்ற அப்பட்டமான பாசாங்குடன், வலியத்தாக்கும் நோக்கங்களுக்காக போர் முன்னெடுக்கப்பட்டது— இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர் நாஜி ஜேர்மனியின் தலைவர்கள் மற்றும் ஜப்பானிய பேரரசின் தலைவர்களை விசாரணைக்கு ஆளாக்கி, குற்றம் நிருபிக்கப்பட்டு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டது. அது போன்ற முதன்மையான குற்றங்களை இழைப்பதற்கு புஷ்சும் அவரது குழுவும் தயாரிப்பு செய்து கொண்டிருக்கின்றனர்.

நாஸிக்கள் செக்கோஸ்லோவேகியா, போலந்து, டென்மார்க், நெதர்லாந்து மற்றும் அக்கம் பக்கத்து நாடுகள் மீது தூண்டாத ஆக்கிரமிப்புக்களை நடத்தியபொழுது "வலிய இழுக்கும் போரைத் தொடுக்கும்" குற்றத்தை நாஸிக்கள் செய்தனர் என்ற நூரெம்பேர்க் விசாரணைகளின் முன்மாதிரியின் கீழ், புஷ் நிர்வாக அதிகாரிகள் விசாரணையை எதிர்நோக்க வேண்டியிருக்கும் என்பதை அறிந்துள்ளனர் என நம்புதற்கு காரணம் இருக்கிறது. அதனால்தான் போர்க் குற்றங்கள் தொடர்பான குற்றச்சாட்டுக்களைக் கவனிப்பதற்கு ஐக்கிய நாடுகளின் மேற்பார்வையின் கீழ் அமைக்கப்பட்ட, சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் (International Criminal Court) விசாரணை அதிகாரத்தில் இருந்து அமெரிக்க இராணுவ மற்றும் வெளிவிவகாரக் கொள்கை வகுப்பாளர்களை விதிவிலக்காக்கும் அமெரிக்காவின் உரத்த பிரச்சாரம் இருந்தது.

செப்டம்பர் 7 அன்று *நியூயோர்க் டைம்ஸ்* ஒரு வழக்கத்திற்கு மாறான கட்டுரையில், "புஷ் நிர்வாகமானது அதன் வலியுறுத்தல்களை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் விசாரணை அதிகாரத்தில் இருந்து அமெரிக்கர்களுக்கு விதிவிலக்குகள் கேட்பதில் நகர்த்தலைச் செய்தது. இதற்கான முக்கிய காரணம் போர்க்குற்றச் சாட்டுக்களின் பேரில் நாட்டின் உயர் மட்டத் தலைவர்கள் குற்றம் சாட்டப்படுவதிலிருந்தும், கைது செய்யப்படுவதிலிருந்தும் மற்றும் நீதிமன்றத்தின் முன்னால் இழுத்து நிறுத்தப்படுவதிலிருந்தும் அவர்களைப் பாதுகாப்பதாகும் என ஐரோப்பியக் கூட்டாளிகளுக்கு அதன் நிர்வாக அதிகாரிகள் கூறினர்" என அறிவித்தது.

சிலியிலும் அமெரிக்காவிலும் நீதிமன்றங்களில், முன்னாள் அரசு செயலாளர் ஹென்றி கிசிங்கருக்கு எதிராக, பரந்த அளவிலான படுகொலைகளுக்கு பொறுப்பாக இருந்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் சட்ட நடவடிக்கைகள் கொண்டு வரப்பட்டதை அமெரிக்க அதிகாரிகள் மேற்கோள் காட்டினர். அப்படுகொலைகள் சிலியில் ஜெனரல் அகஸ்டோ பினோசே சர்வாதிகாரத்தை நிறுவிய 1973 [illegible] இராணுவச் சதியை தொடர்ந்து உடன் நிகழ்ந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு உயர்மட்ட அமெரிக்க அதிகாரி டைம்ஸ் பத்திரிகையிடம் குறிப்பிடுகையில், நிர்வாகமானது கொடுமைகளை நிகழ்த்திய அமெரிக்க படைவீரர்களைப் பற்றி "எதிர்கால லெப்டினென்ட் காலிஸ்" (இவர் வியட்நாம் யுத்தத்தில் மைலாய் படுகொலைகளை நடாத்தி பின்னர் ஜனாதிபதி நிக்சனால் மன்னிப்பு வழங்கப்பட்டவர் பற்றிக் கவலைப்படவில்லை, மாறாக "உயர் மட்ட பிரமுகர்களான ஜனாதிபதி புஷ், செயலாளர் ரம்ஸ்பெல்ட், செயலாளர் பாவெல்" ஆகியோரின் போர்க்குற்ற விசாரணையின் சாத்தியத்தைப் பற்றியே கவலைப்படுகின்றது, எனக் கூறினார்.

புஷ் நிர்வாகமானது, ஈராக்கை மரண ஆபத்தான பேரச்சுறுத்தலாக உருப்படுத்திக் காட்டும் அதன் முயற்சியில், ஹிட்லர் மற்றும் கோயெபல்சுகளின் "பெரும் பொய்" உத்திகளை கண்மூடித்தனமாகப் பின்பற்றுகிறது. இப்பிரச்சாரமானது மிக அடிப்படையான உண்மைகளை பகிரங்கமாக அலட்சியம் செய்வதில் தங்கி இருக்கிறது. ஈராக் ஏற்கெனவே , ஒரு தசாப்தத்திற்கு முன்னர் அமெரிக்கத் தாக்குதலால் சூறையாடப்பட்ட ஒரு ஏழ்மை பீடித்த நாடாகும். அது பூகோளத்தில் உள்ள ஏனைய நாடுகளை போன்று, மிகச்சிறிய இராணுவ ஆற்றலை கொண்டுள்ளதால் அது ஐக்கிய அமெரிக்க அரசுகளுக்கு அச்சுறுத்தலாக இருக்காது, இருக்கவும் முடியாது.

புஷ் நிர்வாகமானது, ஈராக்கை மரண ஆபத்தான பேரச்சுறுத்தலாக உருப்படுத்திக் காட்டும் அதன் முயற்சியில், ஹிட்லர் மற்றும் கோயெபல்சுகளின் "பெரும் பொய்" உத்திகளை கண்மூடித்தனமாகப் பின்பற்றுகிறது. இப்பிரச்சாரமானது மிக அடிப்படையான உண்மைகளை பகிரங்கமாக அலட்சியம் செய்வதில் தங்கி இருக்கிறது. ஈராக் ஏற்கெனவே, ஒரு தசாப்தத்திற்கு முன்னர் அமெரிக்கத் தாக்குதலால் சூறையாடப்பட்ட ஒரு ஏழ்மை பீடித்த நாடாகும். அது பூகோளத்தில் உள்ள ஏனைய நாடுகளை போன்று, மிகச்சிறிய இராணுவ ஆற்றலை கொண்டுள்ளதால் அது ஐக்கிய அமெரிக்க அரசுகளுக்கு அச்சுறுத்தலாக இருக்காது, இருக்கவும் முடியாது.

ஈராக், மக்கள் தொகையில் முறையே உலகில் நாற்பத்தி நான்காவது நாடாகும். நிலப்பரப்பில் முறையே ஐம்பத்தி ஆறாவது மட்டுமே ஆகும். இரண்டு வகையையும் கணக்கில் எடுத்துக் கொண்டால் தர அடிப்படையில் அது ஆப்கானிஸ்தானை விடவும் கீழானது. பொருளாதார ஆற்றலில் ஈராக்கிற்கும் அமெரிக்காவிற்கும் இடையிலான வித்தியாசம் தலைகிறுகிறுக்க வைக்கும். ஈராக் 2000 ஆண்டில் 57 பில்லியன் டாலர்கள் மொத்த உள்நாட்டு உற்பத்தியைக் (GDP) கொண்டிருந்தது —இது தனியொரு அமெரிக்கரான பில்கேட்ஸின் சொந்த சொத்தை விடவும் குறைவானதாகும். 11 டிரில்லியன் அமெரிக்கப் பொருளாதாரம் ஈராக்கை விடவும் 200 மடங்குகள் பெரியதாகும். ஈராக்கின் பொருளாதார உற்பத்தி பர்மா மற்றும் இலங்கைக்குக் கீழேயும், கௌதமாலா மற்றும் கென்யாவுக்கும் சற்று மேலேயும் உள்ளது.

இராணுவ ஆற்றலைப் பொறுத்த மட்டில், இடைவெளியானது இன்னும் மிகப்பெரியது. 1991 பாரசீக வளைகுடாப் போரில் ஈராக்கில் புதிதாகப் படைத்துறைப் பணிக்குச் சேர்க்கப்பட்ட ஆயிரக்கணக்கானோர் அமெரிக்கக் குண்டுகளாலும், ஏவுகணைகளாலும் மற்றும் ஏனைய உயர் தொழில் நுட்ப ஆயுதங்களாலும் எரித்துக் கருக்கப்பட்டனர். அதேவேளை சில நூறு அமெரிக்கப் படைவீரர்கள் உயிரை இழந்தனர். இடையிலான தசாப்தத்தில், ஈராக் பொருளாதார முற்றுகைக்கு கீழ்ப்படுத்தப்பட்ட அதேவேளை திரும்பத் திரும்ப குண்டு வீச்சுக்களுக்கு உள்ளானதோடு, மற்றும் ஈராக்கிய இராணுவம் 1990-ல் இருந்த அதன் அளவில் இருந்து மூன்றில் ஒரு பங்காக சுருங்கி விட்டது. இதற்கிடையில் பென்டகனானது, அமெரிக்க இராணுவ வரவு-செலவுத் திட்டத்தை இப்பொழுது உலகில் உள்ள அடுத்த 25 நாடுகளால் செலவிடப்படும் இராணுவச் செலவுகளின் இணைந்த மொத்தத்தையும் மீறிச் செல்கின்ற அளவிற்கு கட்டி எழுப்பியுள்ளது.

## போரின் வர்க்கத் தன்மை

போரின் அடிப்படைப் பண்பு, அதில் ஈடுபட்டிருக்கும் அரசுகள் வரலாற்று ரீதியாய் வகிக்கும் நிலை மற்றும் வர்க்கத் தன்மையால் வரையறுக்கப்படுகின்றது. ஐக்கிய அமெரிக்க அரசுகள் பூகோளத்தை மேலாதிக்கம் செய்வதை நாடும் மிக சக்திவாய்ந்த ஏகாதிபத்திய நாடாக இருக்கிறது. ஈராக் மீது தொடுக்கவிருக்கும் அதன் தாக்குதலானது, நிகராகுவா, பனாமா, கிரெனடா, ஹைட்டி, சோமாலியா, சூடான், லிபியா, லெபனான், ஈராக், ஈரான், ஆப்கானிஸ்தான் போன்ற டசினுக்கும் மேலான நாடுகளாலும் மற்றும் முன்னாள் யூகோஸ்லாவியாவின் உட்கூறாய் இருந்த பல்வேறு அரசுகள் மற்றும் துண்டுப் பகுதிகளிலும் அமெரிக்கப் படைகளின் குண்டு வீச்சு, தாக்குதல், ஆக்கிரமித்தல் அல்லது ஒழுங்கமைக்கப்பட்ட ஆயுதம் தாங்கிய கவிழ்ப்பு ஆகிய பாதைகளிலான இரு தசாப்த காலங்களின் அதிகரித்த அளவிலான விளைவைப் பற்றிக் கவலைப்படாத மற்றும் வலிய இழுக்கும் நடத்தையின் உச்சக் கட்டமாக இருந்து கொண்டுள்ளது.

ஈராக்கானது காலனித்துவ ஒடுக்குமுறையில் வேரூன்றிய மூலத்தோற்றத்தைக் கொண்டிருக்கும் ஒரு நாடாகும். அது பல தசாப்தங்களாக பெரிய பிரித்தானியாவால் ஆளப்பட்டது. அதன் பிரதேசங்கள் அழிந்து கொண்டிருந்த ஒட்டோமான் பேரரசிலிருந்து வெட்டி எடுக்கப்பட்டது. 1950களின் இறுதிக்குப் பின்னர், பிரிட்டிஷாரால் திணிக்கப்பட்ட இறுதி முடியாட்சி தூக்கி வீசப்பட்ட பொழுது, அந்நாடானது தொடரான இராணுவ ஆதரவு பெற்ற முதலாளித்துவ தேசியவாதிகளின் ஆட்சியால் ஆளப்பட்டு வந்திருக்கிறது. அவை குளிர் யுத்தக் காலம் முழுவதும், ஐக்கிய அமெரிக்க அரசுகளுக்கும் சோவியத் ஒன்றியத்திற்கும் இடையில் சமநிலையைப் பேணும் நிலைப்பாட்டை கொண்டிருந்தன.

1979 ஈரானியப் புரட்சி, எண்ணெய் வளம் மிக்க பாரசீக வளைகுடாவில் முக்கிய அமெரிக்கக் கூட்டாளியாக இருந்த ஷா-வைத் தூக்கி எறிந்த பின்னர், ஈராக்கிய ஜனாதிபதி சதாம் ஹூசைன் தன்னைத்தானே அதற்கு சாத்தியமான பதிலீடாக வழங்கிக் கொண்டார். 1980ல் ஈரான் மீதான அவரது ஆக்கிரமிப்பு வாஷிங்டனால் பேரார்வத்துடன் வாழ்த்தி வரவேற்கப்பட்டதோடு பாக்தாதுடன் நெருக்கமான உறவையும் ஏற்படுத்தியதுடன், அந்த ஆட்சிக்கு ஆயுத விற்பனை செய்வதற்கு இருந்த எதிர்ப்பை கைவிட்டதுடன், ஈரானியத் துருப்புக்களின் நடமாட்டம் பற்றிய செயற்கைக்கோள் படங்களையும் ஈராக்கிய இராணுவத்திற்கு அளிக்கச் செய்தது.

அதேவேளை இன்று புஷ் நிர்வாகமானது, ஈராக் இராசாயன ஆயுதங்களை உடைமையாகக் கொண்டிருப்பதை ஒரு போருக்கான காரணம் எனக் காட்டுகிறது.அது இந்த ஆயுதங்களுக்கான மூலம் பற்றி விவாதிப்பதற்கு அக்கறை எடுக்கவில்லை. ஈரானிய வெற்றியைத் தடுப்பதற்காக இரசாயன ஆயுதங்களை ஈராக் பெறுவதற்கும் பயன்படுத்துவதற்கும் றீகன் நிர்வாகமானது ஆதரவளித்தது. ஆயிரக் கணக்கான ஈரானிய படைவீரர்களை கடுகுப் புகைத் (Mustard Gas) தாக்குதல்களுக்கான இலக்காகப் பயன்படுத்துவதற்காக, அமெரிக்கா உளவுத் தகவல்களைக் கூட வழங்கியது.

சதாம் ஹூசைன் செய்த குற்றங்களுள் ஒன்று, பத்து லட்சம் மக்களைக் கொன்ற போரை ஈரானுடன் ஆரம்பித்தது என அமெரிக்க நிர்வாக அதிகாரிகள் விவாதிக்கின்றனர். அமெரிக்க அரசாங்கம் —மத்திய கிழக்குக்கு அப்போது றீகனின் சிறப்புத் தூதுவராக இருந்த, தற்போதைய பாதுகாப்புச் செயலாளர் டொனால்ட் ரம்ஸ்பெல்ட் போன்ற அதிகாரிகள், எவ்வளவு சாத்தியமோ அந்த அளவுக்கு ஈரானிய இளைஞர்களைப் படுகொலை செய்வதற்கு ஹூசைன் மீது தூண்டுதல் செய்தது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உட்பட— இதற்கான பொறுப்பின் பெரும் பங்கை ஏற்கிறது, இது ஒரு குற்றம் என்பதை அவர்கள் முழுமையாக நன்கு அறிவர்.

1990 இல் ஈராக்கிய தலைவர் குவைத் ஆக்கிரமிப்புடன் ஐக்கிய அமெரிக்க அரசுகளுடன் மோதலுக்கு வந்தார். பின்னர் அவர் அமெரிக்க அரசாங்கத்தாலும் செய்தி ஊடகத்தாலும் பூதமாகக் காட்டும் பிரச்சாரத்தால் விரைந்து மாற்றப்பட்டார். அவை தொடர்ச்சியாக —பனாமாவின் மானுவெல் நோரிகா, சோமாலியாவின் மொகம்மது அய்டிட், யூகோஸ்லாவியாவின் ஸ்லொபோடன் மிலோசெவிக் மற்றும் ஒசாமா பின் லேடனையும் (நேற்றைய சோவியத் எதிர்ப்பு "விடுதலைப் போராளி", இன்றைய முதன்மைப் பயங்கரவாதி) கூடப் போல— நேற்றைய நண்பர்களை இன்றைய பகைவர்களாக மாற்றுதற்கு பயன்படுத்தப்பட்டன. ஹுசைன் அவரது முறையே பாக்தாதின் கொடியவராக, முழு பாரசீக வளைகுடாப் பகு மேலும் மேலாதிக்கம் செய்யும் மற்றும் அதன் மூலம் எண்ணெய் வளங்கள் மீதான அமெரிக்கக் கட்டுப்பாட்டிற்கு அச்சுறுத்தல் செய்யும் புதிய ஹிட்லராக உருவகித்துக் காட்டப்பட்டார்.

ஈராக் இராணுவ சாதனத்தின் பெரும் பகுதியை அழித்து பன்னிரண்டு ஆண்டுகள் கழித்து, சதாம் ஹுசைன் அவரது அண்டை அயலாரை படைபலத்தின் மூலம் வெற்றி கொள்ள முனைகின்றார் என வெள்ளை மாளிகை இனியும் பாசாங்கு செய்ய முடியாது. பதிலாக, செப்டம்பர் 11 தாக்குதலை அடுத்துத் தொடர்ந்து, புஷ் நிர்வாகமானது புதிய மற்றும் முன்னர் கனவுகாணாத ஒன்றான, ஈராக் மீதான யுத்தத்தை நியாயப்படுத்த மதச்சார்பற்ற ஈராக்கிய ஆட்சிக்கும் ஹுசைனை வீழ்த்துவதற்காக திரும்பத் திரும்ப அழைப்பு விடுத்த அல் கொய்தா இஸ்லாமிய அடிப்படை வாதிகளுக்கும் இடையிலான கூட்டின் சாத்தியம் பற்றி ஒரு புனைவை உருவாக்கியது.

## வாஷிங்டனின் உண்மையான போர் இலக்குகள் என்ன?

முதலாவதாக, ஈராக்கை இராணுவ ரீதியாக ஆக்கிரமித்தலும் அதன் எண்ணெய் வளங்களைக் கைப்பற்றலுமாகும். இது எரிசக்தி ஏகபோகங்களுக்கு பெரும் நற்பேறுகளை வழங்குவதோடு அது பொதுவில் அமெரிக்க வெளியுறவுக் கொள்கையில் பேரளவு செல்வாக்கை செயலில் முனைவிப்பதுடன், குறிப்பாக புஷ் நிர்வாகத்தை மேலாதிக்கம் செய்கிறது. பெட்ரோலியம் வளங்களைக் கட்டுப்படுத்துவது பொருளாதார லாபங்களை மட்டும் வழங்கவில்லை. பெரிதளவான அரசியல் மற்றும் மூலோபாய நெம்புகோலையும் கூட வழங்குகின்றது. ஈராக்கின் எண்ணெயை விரைவில் கைப்பற்றுவதன் மூலம், அமெரிக்காவானது, பாரசீக வளைகுடாவில் பெட்ரோலிய ஏற்றுமதிகள் மீது பெரிதும் சார்ந்து இருக்கின்ற ஐரோப்பா மற்றும் ஆசியாவில் உள்ள அதன் பெயரளவிலான கூட்டாளிகளுக்கு எதிராக, அதேபோல ரஷ்யா, சீனா மற்றும் மத்திய கிழக்கு மற்றும் வடக்கு ஆபிரிக்கா முழுதுவதும் உள்ள ஆட்சிகளுக்கும் எதிராக தனது நிலையைப் பெரிதும் உயர்த்திக் கொள்ளும். ஆப்கானிஸ்தானில் போர் மூலம் மத்திய ஆசியாவில் அதன் அரசியல் மற்றும் இராணுவ செல்வாக்கு எல்லையை விரிவுபடுத்தி வைத்திருக்கும் நிலையில், ஈராக்கை அமெரிக்கா வெற்றி கொள்வது அமெரிக்க ஆளும் தட்டினருக்கு இரு முக்கிய எண்ணெய் உற்பத்திப் பிராந்தியங்களில் போட்டியிட முடியாத மேலாதிக்க நிலை வகிப்பை வழங்கும்.

## இரண்டாவது, அமெரிக்க இராணுவ ஆற்றலை பூகோள ரீதியாய் விஸ்தரித்தல்

ஈராக்கில் அமெரிக்க ஆட்சிக்கு உட்பட்ட எல்லைப் பகுதி இந்தப் பிராந்தியத்திலும் இதற்கு அப்பாலும் எதிர்கால போர்களுக்கான ஒத்திகை பார்க்கும் தளமாக இருக்கும். மிகவும் கூடிய உடனடியான இலக்கு ஈராக்கின் எண்ணெய் வளம் மிக்க அண்டை நாடு ஈரானாகும். இறுதியாக சவுதி அரேபியாவுக்கு எதிராக இராணுவ நடவடிக்கை எடுக்க அரசியல் அமைப்புக்குள்ளே செயலூக்கமான பிரச்சாரம் நடக்கிறது. சூடான், யேமன், லிபியா மற்றும் சிரியா ஆகிய அனைத்தும் சாத்தியமான இலக்குகளாக காட்டப்பட்டிருக்கின்றன.

அமெரிக்கத் துருப்புக்களும் போர் விமானங்களும் கிட்டத்தட்ட மத்தியதரைக் கடலுக்கும் தியென் ஷான் மலைகளுக்கும் இடையில் ஒவ்வொரு நாட்டிலும் நிறுத்தப்பட்டுள்ளன. அம்மலைகள் முன்னாள் சோவியத் மத்திய ஆசியாவுக்கும் சீனாவுக்கும் இடையிலான எல்லையைக் குறிக்கின்றன. ஈராக்கிற்கு எதிரான தாக்குதல் ரஷ்யாவுக்கும் சீனாவுக்கும், இரு அணுஆயுத வல்லரசுகளுக்கும் எதிராக வரவிருக்கும் போர்களுக்கு முன்னோடியானதாக, அமெரிக்க இராணுவ மற்றும் அரசியல் வட்டங்களுக்குள் பார்க்கப்படுகின்றது என்பதில் ஐயமில்லை.

## மூன்றாவது, உள்நாட்டு அரசியலைக் கட்டுப்படுத்தலைப் பராமரித்தல்

வளர்ந்து வரும் சமூக, அரசியல் சமத்துவமின்மை மற்றும் அரசியல் அமைப்புடன் பரந்த அளவில் பரவி இருக்கும் மக்களின் நம்பிக்கையின்மை சூழலின் கீழ், ஆளும் தட்டானது, திசைதிருப்புவதன் மூலம் மற்றும் வழிவிலகச் செய்வதன் மூலமும் மற்றும் "பயங்கரவாதம் மீதான போர்" என்பதன் பின்னர் அவர்களின் மனக்குறைகளை வழிப்படுத்துவதன் மூலமும் தத்துவார்த்த மற்றும் அரசியல் கட்டுப்பாட்டைப் பராமரிக்க நாடுகிறது. போரானது, உள்நாட்டு ஸ்திரத்தன்மையைப் பராமரிப்பதற்கான கடுமையான வழிமுறைகளாக ஆகிறது. தேசிய பாதுகாப்பு மற்றும் போரின் நெருக்கடி நிலைகளின் பெயரில், அரசாங்கமானது ஜனநாயக உரிமைகள் மீது கடுமை தணியா தாக்குதலை மேற்கொண்டு வருகிறது. சர்வாதிகார இராணுவ முகாம் கட்டுப்பாட்டில் உள்ள அரசுக்கான அடிப்படையை உருவாக்குகிறது.

வெளிப்பாடு என்னவாக இருக்கும்? விரைவான அமெரிக்க இராணுவ வெற்றி நிகழக்கூடியதாக ஒருவர் ஏற்றுக் கொண்டாலும் கூட, இந்த இலக்கை நிறைவேற்ற நிர்வாகமானது அமெரிக்க உயிர்களைப் பலிகொடுக்க மட்டுமல்லாது, எண்ணற்ற ஈராக்கியர்களைக் கொல்லவும் தயாரிப்பு செய்திருக்கிறது என்பது தெளிவானதாகும். அத்தகைய நடவடிக்கையைப் பின்பற்றும் ஒரு அரசாங்கம், நவீன வரலாற்றில் மாபெரும் கொடுமைகளுள் ஒன்றான, பெருமளவிலான குற்றத்தில் அமெரிக்க மக்களைச் சிக்கவைக்கும்.

அமெரிக்காவைப் பொறுத்த மட்டில், ஈராக்கிய ஆட்சியைக் கவிழ்ப்பதற்கும் ஒரு பொம்மை ஆட்சியை நிறுவுவதற்கும், முதலாவது வளைகுடாப் போர் அளவிலான காட்டுமிராண்டித்தனமான குண்டு வீச்சுக்கள் கூட போதுமானதல்ல. அமெரிக்க இராணுவத் திட்டமிடலாளர்கள், குண்டு மழைபொழிவதுடன் சேர்த்து படைவீரர்களுக்கும், விரும்பினால் குடிமக்களுக்கும் எதிராக நகர்ப்புற போரை நடாத்தி, பாக்தாத் மற்றும் மற்றைய பிரதான நகரம் ஒவ்வொன்றையும் சூறையாடுவதற்கு தயாரிப்பு செய்துகொண்டிருக்கின்றனர். இறப்பு எண்ணிக்கை பத்தாயிரக் கணக்கில் அல்லது இலட்சக் கணக்கில் ஏற்படக் கூடும்.

அணு ஆயுதங்கள் அமெரிக்காவால் பயன்படுத்தல் நிகழ்வுக்கு அப்பாற்பட்ட ஒன்றைத் தேடிக் கூறவில்லை. கடந்த மார்ச்சில் வெளியான அணு ஆயுதங்கள் அபிவிருத்திக்கான புதிய அமெரிக்க வழிகாட்டு நெறிமுறைகள் மற்றும் பயன்படுத்தலின் படி, அணு ஆயுதங்களைக் கட்டவிழ்த்து விடுவதற்கான ஒரு காட்சி ஈராக்குடனான போர் விளைவிக்கும் இஸ்ரேல் மீதான ஈராக்கிய ஏவுகணைத் தாக்குதலாகும்.

மேலும், ஈராக் வெற்றி கொள்வதற்கான அமெரிக்கப் போர்களின் முடிவாக இருக்கப்போவதில்லை. ஆப்கானிஸ்தானில் போரை ஆதரித்த மற்றும் ஈராக்கிற்கு எதிரான போரை அங்கீகரித்தவர்கள் எதிர்கால அமெரிக்க இராணுவ நடவடிக்கைகளுக்கான பொறுப்பைக் கட்டாயம் எடுக்க வேண்டும். அத்தகைய போர்கள் ஏற்கனவே செயலூக்கத்துடன் பென்டகனால் திட்டமிடப்பட்டிருக்கின்றன. கடந்த மாதம் நடாத்தப்பட்ட, மிக சமீபத்திய அமெரிக்க ஆணையக, மற்றும் கட்டுப்படுத்தும் பயிற்சியானது 2007ல் ஈரான் மீது அமெரிக்க ஆக்கிரமிப்பைத் தூண்டிவிடும் போர் விளையாட்டாக இருந்தது.

## போலியான பகிரங்க விவாதம்

செப்டம்பர் 4 அன்று காங்கிரசின் தலைவர்களின் குழுவுடன் ஜனாதிபதி புஷ்சின் வெள்ளை மாளிகை சந்திப்பானது, ஈராக் மீதான அமெரிக்க ஊடுருவல் மற்றும் இராணுவ ஆக்கிரமிப்புக்கான வழியைத் தயாரிக்கும் ஒருங்குபடுத்தப்பட்ட பிரச்சாரத் தாக்குதலின் தொடக்கமாகும். ஈராக் மீதான இராணுவ

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

நடவடிக்கைக்கான காங்கிரசின் வாக்கை அனுமதிக்க மட்டும் புஷ் ஒப்புக்கொண்டார். ஏனென்றால் அவர் போர் தீர்மானத்தினை நிறைவேற்ற போதுமான அளவு இரு கட்சி ஆதரவுக்கு முன்னதாகவே உத்தரவாதம் கொடுக்கப்பட்டிருந்தார்.

விவாதம் என்று அழைக்கப்படுவது —ஜனநாயகக் கட்சியின் 2000 ஆண்டு ஜனாதிபதி வேட்பாளர் அல்கோர் முதல் அவையின் ஜனநாயகக் கட்சித் தலைவர் டிக் ஜிப்பார்ட் வரையிலான- முன்னணி ஜனநாயகக் கட்சியினர் ஏற்கனவே ஈராக்கிற்கு எதிரான இராணுவ நடவடிக்கைக்கு அவரது ஆதரவை அறிவித்திருந்த சூழ்நிலைகளின் கீழே இடம்பெற்றது. ஒரு செனெட்டர் அல்லது காங்கிரஸ் உறுப்பினர் கூட புஷ் இன் போர்க் கொள்கையை — ஐக்கிய அமெரிக்க அரசுகளுக்கு ஈராக்கை ஆக்கிரமிக்க மற்றும் அதன் அரசாங்கத்தைத் தூக்கி வீசுவதற்கு உரிமை இருக்கிறது என்ற கொள்கையை - சவால் செய்திருக்கவில்லை.

எந்தவிதமான உண்மையான ஜனநாயக ரீதியான விவாதத்தின் முற்கூறுகள் —வெளிப்படையான மற்றும் நேர்மையான தகவல்கள், பொதுமக்கள் பங்கேற்பு, எதிர்த்தரப்புக்களும் இருத்தல் ஆகியன— தற்போதைய விவாதத்தில் பற்றாக்குறையாக இருக்கின்றன. அரசியல் அமைப்புக்குள்ளே உள்ள புஷ் மற்றும் அவரது விமர்சகர்கள்: சதாம் ஹூசைன் ஒரு அரக்கன், ஈராக் அமெரிக்காவை அச்சுறுத்துகின்றது, அமெரிக்கா மத்திய கிழக்கில் அமைதிக்கும் ஜனநாயகத்துக்குமான சக்தி, அமெரிக்க இராணுவ நடவடிக்கையானது ஒரு போதும் சூறையாடும் காரணங்களுக்காக இடம் பெறவில்லை, தற்பாதுகாப்புக்காகத்தான், போன்ற பொது கட்டமைப்பை ஏற்றுக்கொண்டனர்.

ஆனால் உண்மையில், இக்கருத்துரைகள் ஒரு அக்கறை மிகுந்த ஆய்வின் கீழ் பொறிந்து போகின்றன:

வளர்ந்து வரும் சமூக, அரசியல் சமத்துவமின்மை மற்றும் அரசியல் அமைப்புடன் பரந்த அளவில் பரவி இருக்கும் மக்களின் நம்பிக்கையின்மை சூழலின் கீழ், ஆளும் தட்டானது, திசைதிருப்புவதன் மூலம் மற்றும் வழிவிலகச் செய்வதன் மூலமும் மற்றும் "பயங்கரவாதம் மீதான போர்" என்பதன் பின்னர் அவர்களின் மனக்குறைகளை வழிப்படுத்துவதன் மூலமும் தத்துவார்த்த மற்றும் அரசியல் கட்டுப்பாட்டைப் பராமரிக்க நாடுகிறது. போரானது, உள்நாட்டு ஸ்திரத்தன்மையைப் பராமரிப்பதற்கான கடுமையான வழிமுறைகளாக ஆகிறது. தேசிய பாதுகாப்பு மற்றும் போரின் நெருக்கடி நிலைகளின் பெயரில், அரசாங்கமானது ஜனநாயக உரிமைகள் மீது கடுமை தணியா தாக்குதலை மேற்கொண்டு வருகிறது. சர்வாதிகார இராணுவ முகாம் கட்டுப்பாட்டில் உள்ள அரசுக்கான அடிப்படையை உருவாக்குகிறது.

## சதாம் ஹூசைன் பரந்த அழிவுகரமான ஆயுதங்களைத் தயாரிக்கிறார்

நாம் கண்டவாறு, அவர் ஆரம்பத்தில் அமெரிக்காவின் ஒரு கூட்டாளி மற்றும் அமெரிக்க வெளிவிவகாரக் கொள்கையின் ஒரு கருவி என்ற வகையில், அவற்றைப் பெற்று ஈரானுக்கு எதிராகப் பயன்படுத்தினார். அவற்றில் பெரும்பாலானவை முறையே 1990களில் ஐ.நா தடைகளின் கீழ் அழிக்கப்பட்டு விட்டன. முன்னாள் ஆயுத பரிசோதனை அதிகாரிகளான ஸ்காட் ரிட்டர் மற்றும் ரிச்சர்ட் பட்லர் போன்றோர், ஈராக் அத்தகைய ஆயுதங்களில் அதனை மீளக் கட்டி எழுப்புதற்கான அதன் திறனை குறிப்பிடத்தக்க வகையில் கொண்டிருக்கிறது. என்ற கூற்றுக்களை உறுதியாக மறுத்திருக்கின்றனர். வியட்னாமில் அமெரிக்கத் தலையீட்டிற்கான சாக்குப்போக்கை வழங்கிய இழிபுகழ் பெற்ற டோன்க்கின் வளைகுடா சம்பவத்தைப் போல அப்போதிருந்து சில ஆண்டுகள் கழிந்து இப்போது, ஏனைய அத்தகைய பொய்மைப்படுத்தல்களின் பாணி உண்மை என்றால், ஈராக்குடனான போருக்குப் பின்னர் நீண்ட காலம் கழித்து, அமெரிக்க செய்தி ஊடகத்தில் ஈராக்கில் பரந்த மக்களைக் கொல்லும் எந்தவிதமான ஆயுதங்களும் ஒருபோதும் இருந்திருக்கவில்லை மற்றும் போருக்கான ஒரு சாக்குப்போக்கை வழங்கும் மொத்தத் துணியிலிருந்து அது உற்பத்தி செய்யப்பட்டது என்ற சிறு குறிப்புக்கள் தோன்றலாம்.

அமெரிக்க மற்றும் பிரிட்டிஷ் அரசாங்கங்கள் மட்டுமே சதாம் ஹூசைனின் அணு, உயிரியல் மற்றும் இரசாயன ஆயுதங்கள் பற்றி அவரின் பேயுருவில் நம்பிக்கை கொள்வதில் உரிமை கொண்டாடுகின்றன. ஈராக்கானது அச்சுறுத்தலைப் பிரதிநிதித்துவம் செய்கின்றது என்பதற்கு எந்தவித நற்சான்றையும் ஏனைய ஐரோப்பிய அரசுகளும் அளிக்கவில்லை. அரபு நாட்டை அழிப்பதில் உரிமை கொண்டாடும் அக்கறைகளைக் கொண்ட இஸ்ரேலைத் தவிர்ந்த மத்திய கிழக்கின் எந்த நாடுகளும் சரி அவ்வாறு செய்யவில்லை.

ஈராக் ஐ.நாவால் விலக்கி வைக்கப்பட்ட சில ஆயுதங்களை இன்னமும் பெற்றிருக்கிறது என்பது உண்மையாக இருந்தாலும் கூட, அத்தகைய ஆயுத முறைகளை உடைமையாகக் கொண்டிருத்தல் மட்டுமே ஒரு நாட்டை ஆக்கிரமிப்பதற்குப் போதுமான அடிப்படையாக எப்போதிருந்து இருக்கிறது? இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர் இருந்து ரஷ்யா, சீனா, பிரிட்டன், பிரான்ஸ், இந்தியா, பாக்கிஸ்தான் மற்றும் இஸ்ரேல் ஆகியன அணு ஆயுதங்களை உடைமையாகக் கொண்டிருப்பதில் ஐக்கிய அமெரிக்க அரசுகளுடன் சேர்ந்திருப்பது தெரிந்ததே. சில மாதங்களுக்குள்ளேயே இரசாயன மற்றும் உயிரியல் ஆயுதங்களைக் கட்டி எழுப்பும் திறமையை டசின் கணக்கான நாடுகள் கொண்டிருக்கின்றன. இருந்தும், இந்தக் காலகட்டம் முழுவதும் இந்தப் பிரச்சினை தொடர்பாக எந்த அமெரிக்க அரசாங்கமும் போருக்குச் சென்றிருக்கவில்லை. மாறாக, அமெரிக்க கொள்கை ஆயுதக் கட்டுப்பாடுகள் மீதான இராஜதந்திரப் பேச்சுக்களில் ஈடுபடல், அணு ஆயுத பரவல் தடை பற்றிய கட்டுப்படுத்தும் ஒப்பந்தங்களை உருவாக்குவதில், ஆயுத சேகரிப்புக்களைக் குறைத்தல் மற்றும் ஒரேயடியான அணு மற்றும் உயிரியல் ஆயுத சோதனைகளைத் தடை செய்வதல் போன்றவற்றில் ஈடுபட்டு வந்துள்ளன.

ஐக்கிய அமெரிக்க அரசுகளை நேரடியாகத் தாக்கும் திறனை சதாம் ஹூசைன் கொண்டிருக்கவில்லை மற்றும் அவரது அரசியல் பகைவர்களாக இருக்கும் பயங்கரவாதிகளுக்கு அத்தகைய ஆயுதங்களை அவர் வழங்குவது என்பது நியாயமானதாக இல்லை. ஈராக் நீண்ட தூர ஏவுகணைத் திறனைப் பெற்றிருக்கவில்லை மற்றும் அதனை அபிவிருத்தி செய்ய ஒருபோதும் நாடி இருக்கவில்லை. 1991 பாரசீக வளைகுடாப் போரின் பொழுது, அமெரிக்க அணு ஆயுதத் தாக்குதலை எதிர்கொண்ட பொழுது மற்றும் முதலாவது புஷ் நிர்வாகத்திடமிருந்து அதன் இலக்கு குவைத்திலிருந்து ஈராக்கிய துருப்புக்களை வெளியேற்றுவது, பாக்தாதை ஆக்கிரமிப்பது அல்ல என்ற உத்தரவாதங்களின் பொழுது, அது இரசாயன ஆயுதங்களைப் பயன்படுத்தவில்லை. அழிவுகரமான பாதிப்பின் சாத்தியத்துடன் ஒரேயொரு சூழ்நிலையில்தான் ஈராக்கின் சிறியளவிலான இராசாயன ஆயுதங்கள் பயன்படுத்தப்படக் கூடும்: நாட்டின் இதயப் பகுதியில் அமெரிக்கத் துருப்புக்களைக் கொண்டுவரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமெரிக்க ஆக்கிரமிப்பின் நிகழ்வில்தான்.

## ஐ.நா. பாதுகாப்புச் சபை தீர்மானங்களை சதாம் ஹுசைன் மீறிக்கொண்டிருக்கிறார்

இது உண்மையாக இருக்கலாம். பல்வேறு ஐ.நா தீர்மானங்களை ஈராக் ஏற்றுக்கொண்டதன் பின்னரும், முற்றுகை மூலம் மக்களைப் பட்டினிபோடுவதை சட்டரீதியானதாக ஆக்கியதன் பின்னரும், ஒரு அமெரிக்க அடிவருடி ஆட்சியால் மட்டுமே அவை அனைத்துடனும் ஒத்துப்போக முடியும். ஆனால் ஐ.நா பாதுகாப்புச்சபை தீர்மானங்களை மீறுவதானது எப்போதிருந்து ஒரு தலைப்பட்சமான அமெரிக்க இராணுவ நடவடிக்கைக்கு அடிப்படையாக இருந்திருக்கிறது? ஐ.நா தீர்மானங்களை ஈராக்கை விட இஸ்ரேல் மிக அப்பட்டமாக மீறி இருக்கையில், ஆறு நாட்கள் போருக்குப் பின்னர், 35 ஆண்டுகளுக்கும் மேலாக மேற்குக் கரையையும் காசா பால நிலத் துண்டையும் ஆக்கிரமித்திருக்கும் அரசுடன் வெள்ளை மாளிகையின் போருக்கான ஆர்ப்பரிப்பு இல்லை.

அமெரிக்க அரசாங்கம், வலுச்சண்டைக்கு இழுக்கும் அதன் நடவடிக்கைகளுக்கான ஒரு மூடுதிரையாக, வசதியாக இருக்கும் பொழுது ஐ.நாவை பயன்படுத்துகிறது. ஏனைய சம்பவங்களில் அது ஐ.நாவை தண்டனையிலிருந்து விலக்கீட்டு உரிமையுடன் அலட்சியம் செய்கிறது. இவ்வாறு, ஒரு தசாப்தத்திற்கும் மேலாக.அமெரிக்க மற்றும் பிரிட்டிஷ் போர் விமானங்கள், வாஷிங்டனால் ஐ.நா அனுமதியின்றி அறிவிக்கப்பட்ட "பறக்கத்தடை" மண்டலங்கள் மேலான ரோந்துகளின்போது, ஈராக்கின் வடக்கிலும் தெற்கிலும் உள்ள இலக்குகள் மீது குண்டுகளை வீசி இருக்கின்றன. அமெரிக்க அரசாங்கமே UNSCOM உடன் அமெரிக்கக் குண்டு வீச்சுக்களுக்கான குறி இலக்குளை அடையாளம் காட்டுவதையும் மற்றும் எதிர்கால படுகொலை முயற்சிகளுக்கு சதாம் ஹுசைனின் நடமாட்டங்களை ஆய்வுசெய்வதையும் இலக்காகக் கொண்ட, சி.ஐ.ஏ நபர்களை ஊடுருவச் செய்து ஈராக்கில் ஐ.நா பரிசோதனைக் குழுவைத் தலைகீழாக்கியது.

புஷ் நிர்வாகமானது, அதன் இராணுவ நடவடிக்கைகள் ஐ.நா பாதுகாப்பு அவைக்கு கீழ்ப்பட்டதல்ல எனவும் அது பாதுகாப்பு சபையின் அனுமதி நிபந்தனையின் பேரில் ஈராக் மீது தாக்குதலை நடத்தாது எனவும் சுட்டிக்காட்டுகிறது. இந்த இரட்டை நிலைப்பாடு தெளிவானதாகும்: ஈராக் ஐ.நாவுக்கு கீழ்படிய வேண்டும் அல்லது அழிக்கப்படும், ஆனால் அமெரிக்கா அது விரும்புவதை செய்ய முடியும் என்பதேயாகும்.

## சதாம் ஹுசைன் தனது மக்களை ஒடுக்கும் சர்வாதிகாரி

மீண்டும் உண்மைதான், ஆனால் அமெரிக்க வெளியுறவுக் கொள்கையானது மத்திய கிழக்கிலும் வேறெங்கேனும் சரி 50 ஆண்டுகளாக அத்தகைய ஆட்சியாளர்களை பெரும்பாலும் முன்கொண்டு வருவதாகவும் அவர்களுக்கு முண்டு கொடுப்பதாகவும் அமைந்திருந்தது. ஈரானின் ஷா, சௌதி முடியாட்சி, மற்றும் துருக்கியில் உள்ள பல்வேறு இராணுவச் சர்வாதிகாரிகள் உட்பட, அவர்களில் பலரை விவாதத்திற்கு எடுத்துக் கொண்டால் சதாம் ஹுசைனைப் போன்றே காட்டுமிராண்டித்தனமானவர்கள். அமெரிக்காவும் கூட, சோவியத் ஒன்றியத்திற்கும் மதச்சார்பற்ற அரபு தேசியவாதத்திற்கும் எதிரான போராட்டத்தில் ஒரு கருவியாக இஸ்லாமிய அடிப்படைவாதக் குழுக்களை கட்டி எழுப்பவும் மற்றும் படிமுறைரீதியாக நிதியூட்டவும் செய்தது.

புஷ் நிர்வாகமானது வரவிருக்கும் ஈராக்கிற்கு எதிரான அமெரிக்கப் போருக்கான சர்வதேச ஆதரவை உறுதிப்படுத்தும் அல்லது குறைந்த பட்சம் தடைச்சொல்லின்றி உடன்படவைப்பதற்கான அதன் முயற்சியில், செச்சென்யாவில் ரஷ்ய அரசாங்கத்தால் ஈவிரக்கமற்ற இராணுவ ஒடுக்குதலுக்கும், க்சிக்கியாங்கில் உய்குர் பிரிவினைவாத குழுக்கள் மீதான சீன ஒடுக்குதலுக்கும், குர்துகள் மீதான துருக்கிய ஒடுக்குதலுக்கும் ஜனநாயக மற்றும் மனித உரிமைகள் பற்றியதில் ஏனைய எண்ணற்ற அத்துமீறல்களுக்கும் பச்சை விளக்கு காட்டி இருக்கிறது.

ஐக்கிய அமெரிக்க அரசுகளானது, ஜனநாயகத்திற்கான சக்தியைப் பிரதிநிதித்துவப்படுதுவதிலிருந்தும் அப்பால், பிராந்தியத்தின் எண்ணெய் வளங்கள் மீதான அமெரிக்கக் கட்டுப்பாட்டுடனும், அதே போல் இஸ்ரேல் அரசுக்கான அமெரிக்க ஆதரவுடனும் தவிர்க்க முடியாதபடி முரண்படும் அரபு மக்களின் ஜனநாயக அபிலாஷைகளை உள்ளார்ந்த ரீதியில் எதிர்த்தது. ஈராக் மீதான அமெரிக்க ஆக்கிரமிப்பானது, ஜனநாயகத்திற்கான வெற்றியைப் பிரதிநிதித்துவம் செய்வதிலிருந்து விலகி, அதிகரித்த அளவில் காட்டுமிராண்டித்தனமான மற்றும் ஒடுக்குமுறைப் பண்பை எடுக்கும். அது மேற்குக்கரை மற்றும் காசா மீதான இஸ்ரேல் ஆக்கிரமிப்பை பெரும்பாலும் ஒப்பீட்டளவில் கடுமையற்றதாகப் பார்க்கச் செய்யும்.

## குற்றவாளிகளின் அரசாங்கம்

புஷ் நிர்வாகம் ஈராக்கில் "ஆட்சி மாற்றம்" பற்றி ஓயாமல் பேசி வருகிறது. உலக *சோசலிச வலைத் தளமானது*, சோசலிஸ்டுகள் மற்றும் ஜனநாயக உரிமையின் பாதுகாவலர்கள் என்ற வகையில், இரு முதலாளித்துவ தேசியவாத அரசியலையும் சதாம் ஹுசைனின் சர்வாதிகார வழிமுறைகளையும் விட்டுக் கொடுக்காது எதிர்க்கிறது. ஆனால் இந்த ஆட்சியை அகற்றுவது ஈராக் மக்களின் பணியே அன்றி அமெரிக்க அரசாங்கத்தினது அல்ல.

உலகைப் பொறுத்தவரை தீக்குறி, ஏற்கனவே ஐக்கிய அமெரிக்க அரசுகளில் இடம்பெற்றுள்ள "ஆட்சி மாற்றம்" ஆகும். புஷ் நிர்வாகமானது அமெரிக்க ஆளும் தட்டில் உள்ள குற்றவாளி நபர்கள் அதிகாரத்துக்கு வந்துள்ளதைப் பிரதிநிதித்துவம் செய்கின்றது. இது மிகைப்படுத்தல் அல்ல: அதன் அரசியல் வழிமுறைகளில், சமூக அடித்தளத்தில் மற்றும் வெளிவிவகாரக் கொள்கையில், புஷ் நிர்வாகமானது கொள்ளைக் கும்பல் வாதத்தை உருவகப்படுத்துகிறது.

இந்த அரசாங்கமானது, முந்தைய நிர்வாகத்தை சீர்குலைப்பதற்கான சதி மற்றும் வலதுசாரி அரசியல் சீரழிவிலான கிளின்டனின் பதவி நீக்க விசாரணையில் உச்சக்கட்டத்தை அடைந்து, 2000 ஆண்டு ஜனாதிபதித் தேர்தல் திருட்டால் பின்தொடரப்பட்ட, நீண்ட பிரச்சாரத்தின் உற்பத்திப் பொருளாகும்.

புஷ் நிர்வாகம் அதன் முன்னணி நபர்களை கடந்த ஆண்டு கூட்டுத்தாபன ஊழல்களில் அம்பலப்பட்டிருக்கும் படிமுறைரீதியான இலஞ்ச ஊழல்களை உடைய சமூகத் தட்டிலிருந்து எடுத்துக் கொண்டுள்ளது. தரைப்படை செயலாளர் தோமஸ் வைட் முன்னாள் என்ரோன் நிர்வாக அதிகாரி ஆவார். உதவி ஜனாதிபதி டிக் செனி எரிசக்தி கட்டுமான நிறுவனமான ஹாலிபர்ட்டன் (Halliburton) இன் தலைமை நிர்வாக அதிகாரியாக இருந்த அவரது முந்தைய பாத்திரத்தில் மோசடிக் கணக்குகளுக்காக விசாரணையின் கீழ் இருக்கிறார். புஷ் தன்னும் அவரது சொந்த நல்வாய்ப்பை, நட்பு மற்றும் உள் வியாபாரம் (பங்குகளின் விலைகள் பற்றி முன்னரே அறிந்து வியாபாரத்தில் ஈடுபடல்) அடிப்படையில் பெருக்கிக் கொண்டார். பாதுகாப்பு செயலாளர் டொனால்ட் ரம்ஸ்பெல்ட் மற்றும் திறைசேரி செயலாளர் போல் ஓ 'நெய்ல் இருவரும் கூட முன்னாள் தலைமை நிர்வாக அதிகாரிகளேயாகும். அதேவேளை ஏனைய உயர் அதிகாரிகளும் எரிசக்தி, மருந்துப் பொருட்கள் மற்றும் கார் தொழிற்சாலைகளுக்காக உறுப்பினர்களின் ஆதரவைத் திரட்டும் ஆதரவாளர்களாக சேவை செய்துள்ளனர்.

புஷ் வெள்ளை மாளிகையில் நுழைந்த பொழுது, தலைமை நிர்வாக அதிகாரிகளால் நிரம்பியுள்ள தனது அமைச்சரவை, அரசாங்கத்தை ஒரு வர்த்தகத்தைப் போல நடத்தும் என செருக்குடன் கூறிக்கொண்டார். இது உண்மையானது: புஷ் நிர்வாகமானது அரசாங்கத்தில் என்ரோன், வேர்ல்ட் கொம், க்ளோபல் கிராசிங், டைகோ மற்றும் ஏனைய டசின் கணக்கான கூட்டுத்தாபன சூழ்ச்சிகளின் உயர் மட்ட வகையறாக்களின் வழிமுறைகளைப் பொருத்திக் கொண்டுள்ளது.

புஷ்ஷின் உள்நாட்டுக் கொள்கைகள் கூட்டுத்தாபன அமெரிக்காவை வளப்படுத்துவதன் பேரில், உழைக்கும் மக்களை படிமுறைரீதியாகக் கொள்ளையிடுவதை அதிகரிக்கிறது. அமெரிக்க வரலாற்றிலேயே செல்வந்தர்களுக்காக மிகப்பெரிய அளவு வட்டி குறைப்பு வழியாக, தலைகிறுகிறுக்கச் செய்யும் 1.35 டிரில்லியன் டாலர்களை புஷ் தள்ளினார். அவரது நிர்வாகம் தொழிலாள வர்க்கத்தின் ஜனநாயக உரிமைகள் மற்றும் வாழ்க்கைத் தரம் மீது தாக்குதலுக்கு மேல் தாக்குதலைத் தொடுத்திருக்கிறது. சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு ஒழுங்குகள், சுற்றுச்சூழல் பாதுகாப்புக்கள்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழிற்சங்க உரிமைகள் அனைத்தும் தனிநபர் செல்வம் மற்றும் கூட்டுத்தாபன லாபத்தை திரளச்செய்வதில் எந்தவிதமான கட்டுப்பாடுகளையும் அகற்றுவதற்கான ஓட்டத்தின் ஒரு பகுதியாக அழிவுக்கான இலக்காக ஆக்கப்பட்டிருக்கின்றன.

புஷ் நிர்வாகத்தின் வெளியுறவுக் கொள்கையானது அதன் உள்நாட்டுக் கொள்கையின் பூகோள அளவிலான விரிவாக்கம் ஆகும். குற்றம் மற்றும் பித்தலாட்டம் மூலம் அதிகாரத்துக்கு வந்தவர்கள் இப்பொழுது போர் மற்றும் சமாதானம் பற்றி முடிவுகளை எடுக்கின்றனர். கூட்டுத்தாபன தட்டுக்களின் மிகவும் கொள்ளை அடித்துப் பறிக்கும் பகுதியினரின் —பூகோளத்தை சூறையாடலில் இலாபம் பெற விரும்பும் எரிசக்தி ஏகபோகங்கள், ஆயுதத் தொழில்துறை, நிதிக் கூட்டுக்கள் ஆகியோரின்— நலன்களை அதிகரிக்க, அவர்கள் அமெரிக்க அரசாங்கத்தின் இராணுவ மற்றும் அரசியல் வளங்களைப் பயன்படுத்துகிறார்கள்.

போர்க்கால நடவடிக்கைகள் வெளிநாட்டு இலக்குகளுக்கு எதிராக மட்டும் அல்லாமல், உள்நாட்டில் அமெரிக்க மக்களுக்கும் எதிராக மேற்கொள்ளப்படும். நிர்வாகமானது ஏற்கனவே அரசியல் கருத்துவேறுபாட்டை குற்றமயமாக்க ஆரம்பித்துள்ளது. புஷ் எதிர்ப்பு ஆர்ப்பாட்டக்காரர்கள் கைது செய்யப்பட்டும் தாக்கப்பட்டும் உள்ளனர். ஈராக்குடனான போருக்கு தங்களின் எதிர்ப்பை தெரிவித்ததற்காக சிறையில் தள்ளப்படுகின்றனர். பயங்கரவாதத்துக்கு எதிரான போரில் "ஒன்றில் நீங்கள் எம் பக்கம் இருக்க வேண்டும் அல்லது எமக்கு எதிராக இருக்க வேண்டும்" என புஷ் அறிவித்திருக்கிறார். இந்தக் கொள்கையின் தர்க்கவியலானது நிர்வாகத்திற்கு எதிரான அனைத்து சமூக எதிர்ப்புக்களையும் ஒரு தேசத்துரோகமாக நடத்துவதாக இருக்கிறது.

## யுத்தமும் சோசலிசத்திற்கான போராட்டமும்

ஈராக்கிற்கு எதிரான தற்போதைய ஏகாதிபத்தியத்திய யுத்தத்திற்கு எதிரான போராட்டம் ஐக்கிய அமெரிக்க அரசுகளின் முழு சமூக மற்றும் அரசியற் கட்டமைப்புக்கு எதிரான போராட்டத்துடன் கட்டுண்டிருக்கிறது. இறுதி ஆய்வில் புஷ் நிர்வாகமும் அதன் கொள்கைகளும் அந்தக் கட்டமைப்பின் உற்பத்திப் பொருளாக இருக்கின்றன. போரானது அமெரிக்காவின் ஆளும் தட்டின் வேலைத் திட்டமாக ஆகி இருக்கிறது, ஏனெனில் ஆழமாகி வரும் சமூக மற்றும் பொருளாதார நெருக்கடிகளில் இருந்து வெளிவருவதற்கு அதனிடம் வேறு வழி எதுவும் கிடையாது.

சர்வதேச ரீதியாகவும் மத்திய கிழக்கிலும் அதன் இலக்குகளை பின்தொடர்வதற்கான சிறந்த வழிபற்றி புஷ் நிர்வாகத்துக்கு அறிவுரை கூறுவதை நாடும், ஜனநாயகக் கட்சியின் பகுதியினர் உட்பட, விமர்சகர்கள் என கூறப்படுபவர்கள் அனைவரிலிருந்தும் *உலக சோசலிச வலைத் தளமானது* தன்னைப் வேறுபடுத்திக் கொள்கிறது. அமெரிக்க மக்களின் ஜனநாயக விருப்பினை பிரதிபலிப்பது என்பது ஒருபுறம் இருக்க, சோசலிஸ்டுகள் என்ற வகையில், அமெரிக்க அரசாங்கத்தின் கொள்கைகள் அமெரிக்க மக்களின் சட்டரீதியான மற்றும் நேர்மையான நலன்களை வெளிப்படுத்துவதாக நாம் அணுகவில்லை. நாம் அமெரிக்க அரசாங்கத்தின் கொள்கைகளை எதிர்ப்பதோடு, அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கு எதிராக அமெரிக்காவிலும் சர்வதேச ரீதியாகவும் உழைக்கும் மக்களின் சக்தி வாய்ந்த இயக்கத்தை அபிவிருத்தி செய்வதற்காக வேலை செய்கின்றோம்.

அத்தகைய இயக்கம் ஒரு சோசலிச வேலைத்திட்டத்தை கட்டாயம் அடிப்படையாகக் கொண்டிருக்க வேண்டும். ஏனென்றால் ஏகாதிபத்தியப் போரானது முதலாளித்துவ அமைப்புமுறையின், எல்லாவற்றுக்கும் மேலாக உலக முதலாளித்துவத்தின் மிக ஆற்றல் வாய்ந்த மையத்தில், ஐக்கிய அமெரிக்க நாடுகளில் உள்ள முரண்பாடுகளின் தவிர்க்க முடியாத உற்பத்திப் பொருளாகும். ஐக்கிய அமெரிக்க அரசுகளானது இருபதாம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் அதன் முழுமலர்ச்சிக் காலங்களுக்கு மாறாக, இனியும் வளர்ந்து வரும் சக்தியாக இல்லை அல்லது அது ஜனநாயக ஒப்பனைகளில் அதன் பூகோள அபிலாஷைகளை மூடி மறைக்கிறது.

அமெரிக்க முதலாளித்துவத்தின் வரலாற்று ரீதியான அழுகலை இரு அடிப்படை உண்மைகள் வெளிப்படுத்துகின்றன. சர்வதேச ரீதியாக, ஐக்கிய அமெரிக்க அரசுகள் அதன் பூகோள மேலாதிக்க நிலையை இழந்திருப்பதோடு, ஐரோப்பாவிலும் ஆசியாவிலும் சக்திமிக்க வர்த்தகப் போட்டியாளர்களை அது எதிர்கொள்கிறது. மற்றும் பிரம்மாண்டமான வர்த்தகப் பற்றாக்குறை மற்றும் செலுத்துகைப் பற்றாக்குறையை எதிர்கொள்வதுடன், அது தேசிய வங்குரோத்தை முன்னறிவிக்கின்றது. உள்நாட்டில், அமெரிக்க சமூகமானது முன்னர் என்றும் இருந்திரா வடிவங்களில் சமூக மற்றும் பொருளாதார துருவமுனைப்படலால் துயருறுகின்றது. மக்கள் தொகையானது முன்னர் என்றுமிருந்திரா அளவு செல்வத்தை அனுபவிக்கும் சிறிய துண்டுப் பகுதிக்கும், வாழக்கைத் தரம் தேக்கமடைந்து வரும் அல்லது வீழச்சி அடைந்துவரும் அதே வேளை வேலைகள், ஓய்வூதியங்கள், சுகாதார பராமரிப்பு மற்றும் பொது சேவைகள் சம்பந்தமான பாதுகாப்பின்மை பெருகிவருவதை எதிர்கொள்ளும், உழைக்கும் மக்களின் பரந்த பெரும்பான்மை பகுதிக்கும் இடையில் பிளவுண்டு இருக்கிறது.

அதனால்தான் அமெரிக்க ஜனநாயகத்தின் அழுகிப்போதலானது, செப்டம்பர் *11*-ஐ பின்தொடர்ந்து இயற்றப்பட்ட ஒடுக்குமுறை நடவடிக்கைகளால் முடுக்கிவிடப்பட்டிருக்கிறது. அத்தகைய சின்னஞ்சிறு சதவீத மக்கள் அனைத்து செல்வங்களையும் கட்டுப்படுத்தல் மற்றும் அவர்களின் இலாப நலன்களுக்காக மீதமுள்ள மக்களை பணயக்கைதியாக வைத்திருக்கும் ஒரு சமுதாயத்தில் ஜனநாயக வடிவங்களைப் பராமரித்தல் என்பது சாத்தியமில்லை.

பூகோள ரீதியில் அமெரிக்க இராணுவ வாதத்தின் தோற்றமானது ஏகாதிபத்தியம் பற்றிய மார்க்சிச ஆய்வின் ஆழமான உறுதிப்படுத்தலாகும். இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் லெனினால் இனங்காணப்பட்ட அனைத்து சிறந்த ஆய்வுக் கட்டுரைகளும் —நாடுகளை காலனித்துவ பாணியில் ஆக்கிரமித்தல், கச்சாப் பொருட்களைக் கொள்ளையிட்டுத் தனதாக்கிக் கொள்வதற்கான இராணுவப் போராட்டம், "காலிலிருந்து தலைவரை பிற்போக்கு" உள்நாட்டுக் கொள்கை —புஷ் நிர்வாகத்தின் வேலைத் திட்டமாக இருக்கின்றன.

அமெரிக்க அரசாங்கமானது, செப்டம்பர்*11* துயரச் சம்பவத்தை அரசியல் மற்றும் கோர்ப்பொரேட் தட்டுக்களுக்கு உள்ளே உள்ள மிகப் பிற்போக்கான சக்திகளின் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிகழ்ச்சி நிரலை நடைமுறைப்படுத்துதற்கான சாக்குப்போக்கை வழங்குவதற்கு பற்றிக் கொண்டது. —ஒன்றில் தாக்குதல்களைத் தடுப்பதற்குத் தவறியதில் அல்லது செயலூக்கத்துடன் (வேண்டுமென்றே) அவற்றைப் பொறுத்தருளியதில், அதன் சொந்தப் பாத்திரம், இன்னும் விசாரணை செய்யப்பட இருக்கிறது. ஆப்கானிஸ்தானில் நடந்த போரானது பெரிய அளவிலான மற்றும் இன்னும் கூடிய இரத்தம் தோய்ந்த சாகசங்களுக்குமான ஒரு மிதிகல்லாகவே இருந்தது.

உழைக்கும் மக்களைப் பொறுத்தவரை, ஏகாதிபத்தியத்திற்கு எதிரான போராட்டமும் வாழக்கைத் தரம் மற்றும் ஜனநாயக உரிமைகளைப் பாதுகாத்தலும் ஒரே போராட்டத்தின் இரு பக்கங்களாகும். வெள்ளை மாளிகையிலும் பென்டகனிலும் உள்ள போர்வெறியைத் தூண்டுபவர்களை தடுத்து நிறுத்தக் கூடிய ஒரே சக்தி, இராணுவ வாதத்துக்கும் போருக்கும் எதிரான தொழிலாள வர்க்கத்தால் தலைமை தாங்கி நடாத்தப்படும் ஒரு வெகுஜன இயக்கமாகும். அது முழு ஆளும் தட்டிற்கும் மற்றும் அதன் இரு கட்சிகளுக்கும் எதிராக இயக்கப்படும். புஷ்ஷின் போர்த்திட்டங்களை எதிர்ப்பதற்கு காங்கிரஸ் அல்லது ஜனநாயகக் கட்சியினர் மீது நம்பிக்கை வைக்க முடியாது. முடிவில், இந்த சக்திகள் புஷ் தாமே பாதுகாக்கின்ற அதே அமைப்பு முறையையே பாதுகாக்கின்றனர். மற்றும் அதே அடிப்படை சமூக நலன்களையே பிரதிநிதித்துவம் செய்கின்றனர்.

*உலக சோசலிச வலைத் தளமும்*, சோசலிச சமத்துவக் கட்சியும் போருக்கு எதிராகவும் ஜனநாயக உரிமைகளைப் பாதுகாப்பதிலும் அத்தகைய தொழிலாள வர்க்க இயக்கத்தை வளர்த்தெடுப்பதற்கு தம்மை அர்ப்பணித்துக் கொண்டுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈராக்கிற்கு எதிரான போரும் உலக மேலாதிக்கத்திற்கான அமெரிக்க முன்னெடுப்பும்

டேவிட் நோர்த்
4 அக்டோபர் 2002

*பின்வருவது உலக சோசலிச வலை தளத்தின் ஆசிரியர் குழு தலைவரான, டேவிட் நோர்த்தால் அக்டோபர் 1, 2002 அன்று அன் ஆர்பரில் உள்ள மிச்சிகன் பல்கலைக் கழகத்தில் பலர் வருகை தந்திரும், பகிரங்கக் கூட்டத்தில் வழங்கப்பட்ட அறிக்கை ஆகும்.*

செப்டெம்பர் 17, 2002 அன்று புஷ் நிர்வாகமானது அதன் "ஐக்கிய அமெரிக்க அரசுகளின் தேசிய பாதுகாப்பு மூலோபாயத்தை" வெளியிட்டது. இந்த முக்கியமான பத்திரம் பற்றி செய்தி ஊடக அமைப்பில் இதுவரையிலும் அக்கறை கொண்ட ஆய்வு எதுவும் இல்லாமல் இருந்து வருகிறது. குறைந்த பட்சம் சொன்னால், இது துரதிர்ஷ்டவசமானது, ஏனென்றால் இந்தப் பத்திரம் அமெரிக்க இராணுவ வாதத்தின் பிரம்மாண்டமான வெடிப்புக்கான அரசியல் மற்றும் தத்துவார்த்த நியாயத்தை முன்னெடுக்கின்றது. அப்பத்திரமானது உலகில் எங்கும், அது தேர்ந்தெடுக்கும் எந்த நேரத்திலும் அமெரிக்க நலன்களுக்கு ஒரு அச்சுறுத்தலாக இருக்கும் என அது நம்பும், அல்லது சில கட்டங்களில் அச்சுறுத்தலாக ஆகும் என அது கருதும் எந்த நாட்டிற்கும் எதிராக இராணுவ பலத்தைப் பயன்படுத்துவதற்கான உரிமையை ஐக்கிய அமெரிக்க அரசுகளுக்கு வழிகாட்டும் கொள்கையாக வலியுறுத்துகின்றது. இப்பொழுது ஐக்கிய அமெரிக்க அரசுகளால் செய்யப்பட்டுக் கொண்டிருப்பது போல், நவீன வரலாற்றில் வேறெந்த நாடும் பூகோள தலைமை நிலைக்கான —அல்லது, மிகவும் அப்பட்டமாகக்கூறினால், உலக மேலாதிக்கத்துக்கு— அத்தகைய ஒரேயடியான கூற்றை வலியுறுத்தி இருக்கவில்லை. ஹிட்லரின் பைத்தியக்காரத்தனத்தின் உச்சியில் நாஸி ஜேர்மனி கூட அவ்வாறு இருந்ததில்லை.


டேவிட் நோர்த்

இந்தப் பத்திரத்தின் செய்தியானது அதன் சிடுமூஞ்சித்தனமான இடக்கரடக்கலை (தீய சொல்லை மறைத்துக் கூறும் மங்கல் சொல்லை) மற்றும் திட்டமிட்ட மழுப்புதலை துகிலுரித்துள்ளது தவறில்லாமல் தெளிவாகிறது. ஐக்கிய அமெரிக்க அரசுகள் அது தேர்ந்தெடுக்கும் நாட்டின் மீது குண்டு வீசுவதற்கும், ஆக்கிரமிப்பதற்கும் மற்றும் அழிப்பதற்குமான உரிமையை உறுதிப்படுத்திக் கூறுகிறது. வேறு எந்த நாட்டின் இறையாண்மை பற்றிய சர்வதேச விதிமுறையின் விஷயத்தில் அது மதிப்பதற்கு மறுத்துவரும் அதேவேளை உலகின் எந்த பகுதியிலும் உள்ள, அதாவது ஐக்கிய அமெரிக்க அரசுகளின் நலன்களுக்கு அச்சுறுத்தலாக விளங்குகிறது அல்லது என்றாவது ஒரு நாள் அச்சுறுத்தலாக அமையும் என தாம் நம்பும் எந்தவொரு நாட்டுக்கும் எதிராக, உலகில் எந்தவொரு இடத்திலும், எந்தவொரு சந்தர்ப்பத்திலும் இராணுவச் சக்தியைப் பயன்படுத்துவதற்கான உரிமையுள்ளது என்பதே ஐக்கிய அமெரிக்காவின் செயல்முறைக் கொள்கைகளாகும் என இந்த பத்திரம் உறுதியாகத் தெரிவிக்கின்றது. குறுகிய காலத்தில் அதன் அச்சுறுத்தல்கள், "தோல்வியுற்ற அரசுகள்" என அழைக்கப்படுவதற்கு எதிராக விடுக்கப்பட்டன —அதாவது, ஏகாதிபத்தியத்தின் கொள்ளையடிக்கும் கொள்கைகளால் சூறையாடப்பட்ட ஏழ்மை பீடித்த மற்றும் முன்னாள் காலனிகளான மூன்றாம் உலக நாடுகளுக்கு விடுக்கப்பட்டது. ஆனால் இரண்டாம் உலகப் போருக்கு முந்தைய ஏகாதிபத்திய காட்டுமிராண்டிப் பேச்சைப் புதுப்பிப்பதில், பத்திரமானது "பெரும் வல்லரசுகள்" என குறிக்கும் ஐக்கிய அமெரிக்க அரசுகளின் பெரும் போட்டியாளர்கள், புஷ் நிர்வாகத்தின் துப்பாக்கி இலக்குகளில் எந்த வகையிலும் வைக்கப்படவில்லை. ஐக்கிய அமெரிக்க அரசுகள் இப்பொழுது தயாரித்துக் கொண்டிருக்கும் சிறிய மற்றும் பாதுகாப்பற்ற நாடுகளுக்கு எதிரான போர்கள் ஷஅனைத்திற்கும் முதலாவதாக ஈராக்கிற்கு எதிரான போர்ஷ மிகவும் வல்லமை மிக்க இலக்குகளுக்கு எதிரான இராணுவ கடுந்தாக்குதலுக்கான தயாரிப்பாக இருக்கும் என்பதை நிருபிக்கும்.

இப்பத்திரமானது "ஐக்கிய அமெரிக்க அரசுகள் உலகில் முன்னர் என்றுமிருந்திராத ஷமற்றும் சமமற்ற ஷ பலத்தையும் செல்வாக்கையும் பெற்றிருக்கிறது" என்ற செருக்குடன் ஆரம்பிக்கின்றது. "ஐக்கிய அமெரிக்க அரசுகளின் தேசிய பாதுகாப்பு மூலோபாயம் *நமது மதிப்பு* மற்றும் *நமது தேசிய நலன்களின்* ஐக்கியத்தை எதிரொலிக்கும் வேறுபட்ட அமெரிக்க சர்வதேசிய வாதத்தை அடிப்படையாகக் கொண்டிருக்கும்" என்ற மூச்செடுக்கும் தன்முனைப்புடன் அது அறிவிக்கின்றது. இந்த சூத்திரம் அது நினைவு கொள்ளப்பட வேண்டும் என்ற கருத்தைக் கவருகிறது: அமெரிக்க மதிப்புக்கள் + அமெரிக்க நலன்கள் = ஒரு வேறுபட்ட அமெரிக்க சர்வதேசியம். அது அமெரிக்காவுக்கு எது நல்லதோ அது உலகத்திற்கு நல்லது என உறுதிப்படுத்தும் ஒரு மிகவும் வேறுபட்ட வகையிலான சர்வதேசியம்! இந்தப் பத்திரத்தின் முன்னுரையில் புஷ் உறுதிப்படுத்துகின்றவாறு, அமெரிக்காவின் மதிப்புக்கள் "ஒவ்வொரு சமுதாயத்திற்கும், ஒவ்வொரு நபருக்கும் சரியானது மற்றும் உண்மையானது..."

இந்த மதிப்புக்கள், "தனிச்சொத்துடைமைக்கான மதிப்பு"; வர்த்தக முதலீட்டை, புதுமுறை காணலை, மற்றும் தொழில்துறை உரிமையாளர் நடவடிக்கை ஆகியவற்றை ஊக்கப்படுத்துகின்ற வளர்ச்சி சார்பான சட்டரீதியானதும் ஒழுங்குமுறையானதுமான கொள்கைகளை; "வரிக்கொள்கைகள்— வேலைக்கான ஊக்கத் தொகையை முன்னேற்றும் மற்றும் முதலீட்டை முன்னேற்றும் —குறிப்பாக குறைந்த விளிம்பு நிலை வட்டிவீதங்கள்; மூலதனத்தை அதன் மிகத் திறமையான பயன்படுத்தலில் வைப்பதற்கு அனுமதிக்கும் வலுவான நிதி அமைப்பு முறைகள்"; "வர்த்தக நடவடிக்கைக்கு ஆதரவு தரும் நல்ல நிதிக் கொள்கைகள்" போன்ற— அமெரிக்க செல்வராட்சியின் நன்கறியப்பட்ட அரசியல் சமூக சீர்திருத்த சட்டங்களின் தொகுப்பு தவிர வேறு எதுவும் அல்ல. அப்பத்திரம் பின்வருமாறு அறிவிக்கின்றது: "வரலாற்றுப் படிப்பினைகள் தெளிவாக இருக்கின்றன: சந்தைப் பொருளாதாரங்கள், அரசாங்கத்தின் கடும் தலையீட்டில் பொருளாதாரங்களை ஆணையிடுவன மற்றும் கட்டுப்படுத்துவன அல்லாதிருப்பது, முன்னேற்றத்தைக் கொண்டுவருதற்கான மற்றும் வறுமையைக் குறைப்பதற்கான சிறந்த வழியாக இருக்கின்றன. சந்தை ஊக்கத்தொகைகளை மற்றும் சந்தை நிறுவனங்களை மேலும் பலப்படுத்தும் கொள்கைகள் எல்லாப் பொருளாதாரங்களுக்கும் -தொழில்துறை நாடுகள், தோன்றிக் கொண்டிருக்கும் சந்தைகள், மற்றும் வளர்ச்சி அடைந்து— கொண்டிருக்கும் உலகம் அனைத்திற்கும் பொருத்தமானதாக இருக்கின்றன."

இந்தவிதமான வலதுசாரி வெற்றுரைகள் ஆழமாகிக் கொண்டிருக்கும் உலகப் பொருளாதார நெருக்கடிக்கு இடையில் ஒன்றை உறுதிபடக் கூறுகின்றன. அதில் முழுக் கண்டங்களும் சந்தைப் பொருளாதாரங்களின் விளைபயன்களால் பாதிக்கப்பட்டிருக்கின்றன. அது அவற்றின் சமூக உள்கட்டமைப்புக்கள் என ஒருசமயம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்பாக மட்டும் முக்கியத்துவம் உடையதாக அல்லாமல்-இன்று பிறவகையிலும் அசாதாரணமான முக்கியத்துவம் உடையதாகும். நூரெம்பேர்க்கில் நிலைநாட்டப்பட்ட முன்நிகழ்வு ஏதாவது நிகழ்காலப் பொருத்தத்தைக் கொண்டிருக்குமானால், இந்தப் பத்திரத்தில் நுட்பமாக விளக்கப்பட்ட முழு மூலோபாயமும் சர்வதேச விதியின் எல்லைகளுக்கு வெளியில் செல்கிறது. இந்தப் பத்திரத்தில் வலியுறுத்தப்பட்ட, அமெரிக்க மூலோபாயத்துக்கு அத்திவாரமாக சேவைசெய்யும் அடிப்படைக்கூற்று, தாக்குதலுக்கான தெளிவான மற்றும் ஆதாரம் காட்டத்தக்க அச்சுறுத்தலைத் தடுப்பதற்காகவே செயல்படுகிறது என்பதற்கு, நம்பத் தகுந்த ஆதாரங்களை வழங்காமல், இன்னொரு நாட்டுக்கு எதிராக ஒரு தலைப்பட்சமான இராணுவ நடவடிக்கை எடுப்பதற்கு உள்ள ஐக்கிய அமெரிக்க அரசுகளின் உரிமை ஆகும். எப்பொழுதெல்லாம் தீர்மானிக்கிறதோ அப்பொழுது அவ்வாறு செய்வதற்கும் வன்முறையைப் பயன்படுத்துவதற்கும் அனைத்து வகையிலும் சூழ்ந்து கொண்ட அரசுகளின் இந்த வலியுறுத்தலானது, மேலோட்டமான ஆய்வுகளுடன் கூட ஈடுகொடுக்க முடியாத இறுக்கமில்லாமல் -வடிவமைக்கப்பட்ட மொழியுடன் நியாயப்படுத்தப்படுகிறது: *"போக்கிரி அரசுகளையும் அவர்களின் பயங்கரவாத கட்சிக்காரர்களையும் அவர்கள் அமெரிக்க ஐக்கிய அரசுகளுக்கும் நமது கூட்டாளிகளுக்கும் எதிராக பரந்த அழிவுகரமான ஆயுதங்களைப் பயன்படுத்தக் கூடும் அல்லது அச்சுறுத்த முனையும் முன்னர், தடுத்து நிறுத்துவதற்கு* நாம் கட்டாயம் தயாரிப்பு செய்யப்பட்டிருக்க வேண்டும்."

ஒரு "போக்கிரி அரசு" என எதை யார் வரையறை செய்வது? ஏதாவது அரசு அமெரிக்க நலன்களை நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ சவால்செய்கிறதா? புஷ் நிர்வாகம் "போக்கிரி அரசுகளாக" கருதவிருக்கும், "போக்கிரி அரசுகளின்" சாத்தியம் விளக்கப்படாத. அந்த அனைத்து நாடுகளின் பட்டியலானது மிகவும் நீண்ட ஒன்றாகும். இந்தப் பட்டியல் நிச்சயமாக கியூபாவையும் உள்ளடக்கி இருக்கிறது. அது ஹெகார்ட் ஷ்ரோடர் (Gerhardt Schroeder) பிரதமராக மறுதேர்வு செய்யப்பட்டதன் பின்னர் ஜேர்மனியையும் கூட உட்சேர்த்துக் கொள்ளக் கூடும்!

"பயங்கரவாதி" பற்றிய திட்டவட்டமான வரையறைக்காகவும் நாம் கேட்க வேண்டும். இது இகழார்ந்த வகையில் தெளிவில்லாமல் அரசியல் சூழ்ச்சிக்கு உள்ளாக்கப்படும் வார்த்தையே ஆகும். மேலும், அமெரிக்க ஐக்கிய அரசுகள் "போக்கிரி அரசை" தாக்கும் முன்னர் "போக்கிரி அரசு" என்று அழைக்கப்படுவதற்கும் ஒரு "பயங்கரவாத கட்சிக்காரருக்கும்" இடையிலான தொடர்பை நிலைநாட்டுவதற்கு எந்தத் தரத்திலான சான்று தேவைப்படும்? சற்றே மற்றொருநாள், ஜனாதிபதி, அவரது தேசிய பாதுகாப்பு ஆலோசகர் மற்றும் பாதுகாப்பு செயலாளர் ஆகியோர் ஈராக்கிற்கும் அல் கொய்தாவுக்கும் தொடர்பு இருக்கிறது என்று, இந்தக் கூற்றுக்கு உண்மை நிகழ்வோடு தொடர்புடைய எந்த ஆதாரமும் வழங்காமல் அறிவித்தனர், மற்றும் மாறுபாடான வகையில் இஸ்லாமிய அடிப்படைவாத இயக்கங்கள் தொடர்பான ஈராக்கின் மதச்சார்பற்ற ஆட்சியின் குரோதமான நோக்கு பற்றி உண்மையில் அறியப்பட்டிருக்கிறது.

இறுதியாக, "பரந்த அழிவுகரமான ஆயுதங்களைப் பயன்படுத்த இயலும் முன்னர் அல்லது அச்சுறுத்த இயலும் *முன்னர்* போக்கிரி அரசுகளுக்கும் அவர்களின் பயங்கரவாத கட்சிக்காரர்களுக்கும்" எதிராக இராணுவ நடவடிக்கையை எடுப்பதற்கான உரிமை பற்றிய வலியுறுத்தலானது, அமெரிக்க ஐக்கிய அரசுகளானது அச்சுறுத்தும் *சாத்தியம்* உள்ளதாக எந்தெந்த அரசுகளை இனங்காட்டுகிறதோ அவற்றைத் தாக்கும் உரிமையைப் பற்றி அது கூறுகிறது என்று மட்டுமே அர்த்தப்படுத்த முடியும். தற்போது ஒரு அரசு அமெரிக்க ஐக்கிய அரசுகளுக்கு ஒரு அச்சுறுத்தலாக இருக்காவிட்டாலும்; அமெரிக்க ஐக்கிய அரசுகளுக்கு எதிராக ஒரு தாக்குதலை செயலூக்கத்துடன் தயாரிக்காதது ஒரு புறம் இருக்கட்டும், தற்போது அது திட்டமிடலில் இல்லாதிருந்தாலும், அமெரிக்க அரசாங்கம் அதனை அமெரிக்க தேசிய பாதுகாப்புக்கு ஒரு சாத்தியமான அல்லது கருவடிவிலான அச்சுறுத்தலைக் கொண்டிருப்பதாக இனங்கண்டால், அது தாக்குதலுக்கான முறைமையான இலக்காக இன்னும் இருக்கும்.

"அச்சுறுத்தல்" பற்றிய ஒரு வரையறைக்கு, அமெரிக்க ஐக்கிய அரசுகளுக்கு எதிரான எல்லாருக்கும் தெரியத்தக்க வெளிப்படையான நடவடிக்கை தேவைப்படவில்லை, மாறாக எதிர்காலத்தில் சில கட்டத்தில் அச்சுறுத்தல் ஆவதற்குரிய சாத்தியம் ஒன்றே, அமெரிக்கத் தாக்குதலுக்கான சாத்தியமான இலக்குகளின் பட்டியலில் உண்மையில் உலகில் உள்ள ஒவ்வொரு நாட்டையும் வைக்கும். இது ஒரு மிகைப்படுத்தல் அல்ல. அப்பத்திரம் "பகைவர்கள்" பற்றி மட்டும் பேசவில்லை, "சாத்தியமுள்ள பகைவர்கள்" பற்றியும் கூட பேசுகிறது, மற்றும் அவற்றை "அமெரிக்க அரசுகளின் ஆற்றலை கடந்து செல்லும் அல்லது சமப்படுத்தும் நம்பிக்கைகளில் ஒரு இராணுவத்தைக் கட்டுவதை" மேற்கொள்ள வேண்டாம் என்று எச்சரிக்கிறது. "முன்னேறிய இராணுவ செயல்வல்லமைகளை" சீனாவின் முயற்சிகளுக்கு எதிராக அது நேரடியாக எச்சரிக்கிறது, அவ்வாறு செய்வதன் மூலம் "சீனா காலாவதியாகிப் போன ஒரு பாதையைப் பின்பற்றுகிறது, இறுதியில் அது தேசிய பெருமை பற்றிய அதன் சொந்தப் பின்பற்றலை இடையூறுக்கு உள்ளாக்கும்" என உறுதியாகக் கூறுகிறது —அதாவது, அது ஒரு அச்சுறுத்தலாக வெளிப்படும், அதற்கு அமெரிக்க ஐக்கிய அரசுகளால் முன்கூட்டியே தாக்கும் (ஒன்று இடம்பெறுவதற்கு முன்னர்) இராணுவ பதில் நடவடிக்கை தேவைப்படலாம் என்கிறது.

அறிக்கையானது "முன்னேறிய இராணுவ செயல்வல்லமைகளை" *சீனா* பின்பற்றுவதன் அர்த்தம் "காலாவதியாகிப் போன பாதையை" பின்பற்றுவதாகும் என சீனாவிற்குக் கூறும் அதேவேளை, சற்றே இரண்டு பக்கங்கள் தள்ளி, போலி நடிப்பாய் ஏய்க்கும் விதத்தில் அமெரிக்க இராணுவ பலத்தின் அத்தியாவசியப் பாத்திரத்தினை மீள உறுதிப்படுத்துவதற்கான நேரம்" என்று முடிவாய் வலியுறுத்தி அறிவிக்கிறது. சவாலுக்கு அப்பால் எமது பாதுகாப்புக்களை நாம் கட்டாயம் கட்டி எழுப்ப வேண்டும் மற்றும் பராமரிக்க வேண்டும் என்கிறது. "மற்றும் இந்த செயல் வேலைத் திட்டம் உலகம் முழுவதும் அமெரிக்காவின் இராணுவ நிலைகொள்ளலின் பரந்த விரிவாக்கத்தை இன்றியமையாததாக்குகிறது. "உறுதியிலாத்தன்மையுடன் போராடுவதற்கு மற்றும் நாம் எதிர் கொள்ளும் பல பாதுகாப்பு சவால்களை சந்திப்பதற்கு அமெரிக்க ஐக்கிய அரசுகளுக்கு மேற்கு ஐரோப்பா மற்றும் வடகிழக்கு ஆசியாவுக்கு உள்ளேயும் அப்பாலும் நிலையங்களும் தளங்களும் தேவைப்படுகின்றன, அதேபோல அமெரிக்கப் படைகளை நீண்ட தொலைவுக்கு அனுப்புவதற்கான தற்காலிக ஏற்பாட்டு வசதிகளும் தேவைப்படுகின்றன.

பத்திரமானது நிலவுகின்ற மற்றும் சாத்தியமான அச்சுறுத்தல்களுக்கு எதிராக முன்கூட்டியே தாக்கும் புதிய கோட்பாட்டை திரும்பத் திரும்ப வலியுறுத்துகின்றது, மற்றும் அமெரிக்க ஐக்கிய அரசுகள் எதிர்பார்த்திராத மற்றும் கற்பனை செய்யமுடியாத புதிய ஆபத்தை திடீரென்று எதிர்கொள்ளும்பொழுது, பின்வாங்கச் செய்யும்படியான முந்தைய கோட்பாட்டைக் கைவிடுதல் செப்டம்பர்11, 2001 நிகழ்ச்சிகளுக்கு ஒரு அவசியமான பதிலாக இருக்கிறது. "குளிர் யுத்த அச்சுறுத்தலின் தன்மையானது, பரஸ்பரம் உத்தரவாதம் செய்யப்பட்ட அழிவின் விட்டுக் கொடுக்காத மூலோபாயத்தினை உண்டுபண்ணும் பகைவர்கள் பலத்தைப் பயன்படுத்தலை பின்வாங்கச் செய்வதற்கு வலியுறுத்தல் செய்வது, அமெரிக்க ஐக்கிய அரசுகளுக்கு தேவைப்பட்டது" என அறிக்கை வலியுறுத்தல் செய்கிறது. சோவியத் ஒன்றியத்தின் பொறிவுடனும் குளிர் யுத்தத்தின் முடிவுடனும், எமது பாதுகாப்பு சூழல் பெரும் மாற்றங்களுக்குள் சென்றிருக்கிறது." சிலவற்றுக்குப் பின்னர், பத்திரமானது சோவியத் ஒன்றியத்தை "பொதுவாக இதுகாறும் உள்ள நிலையில், ஆபத்து-தீங்கு விளைவிக்கும் பகைவன்" என விவரிக்கிறது. "பின்வாங்கச் செய்தல் பலனுள்ள பாதுகாப்பாக இருந்தது" என்கிறது.

1980 கள் ஒப்பீட்டளவில் அண்மைய வரலாறாக இருக்கும். எம்மைப் பொறுத்தவரை, 1960களை இன்னும் நினைவு கூரக் கூடியவர்களை, மற்றும் 1950 களின் வரலாறு பற்றி கூட சிலவற்றை அறிந்திருப்பவர்களைப் பொறுத்தவரை, இவை குறிப்பிடத்தக்க வார்த்தைகளாக இருக்கின்றன. குளிர் யுத்த வரலாற்றுடன் பரிச்சயமில்லாதவர்கள், இந்த மூலோபாயப் பத்திரத்தின் ஆசிரியர்கள் —சோவியத் சோசலிச குடியரசுகளின் ஒன்றியத்தை இப்பொழுது கிட்டத்தட்ட பழங்கால நாட்ட வார்த்தையில் "கௌரவமாய் மற்றும் பணிவான வகையில் பின்வாங்கச்செய்தல் பயன்மிக்கதாய் இருந்த அதற்கு எதிராக, பொதுவாக இதுகாறும் உள்ள நிலையில், ஆபத்து (தீங்கு) விளைவிக்கும் பகைவன்" என விவரிக்கும் அவர்கள்— கிட்டத்தட்ட அதே ஆட்கள், 1980கள் போல் அண்மையில், சோவியத் ஒன்றியத்தை "தீமையின் குவிமையம்" என

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விவரித்தனர். அதற்கு எதிராக ஐக்கிய அமெரிக்க அரசுகள் ஒட்டுமொத்த யுத்தத்துக்காக தயார் செய்யவேண்டும் என விவரித்தனர். தற்போதைய பாதுகாப்பு செயலாளர், டொனால்ட் ரம்ஸ்பெல்ட் நெருக்கமாகத் தொடர்புடைய தற்போதைய அமைப்புக்கான வலதுசாரிக் குழு 1970களில் அமைக்கப்பட்டது. அது சோவியத் ஒன்றியத்துடன் ஆயுதக்கட்டுப்பாட்டு உடன்படிக்கைகளை வெறுப்புடன் எதிர்த்தது. இந்த அமைப்பு சோவியத் சோசலிச குடியரசுகளின் ஒன்றியத்திற்கு எதிராக பெரும் இராணுவக் கட்டி எழுப்பலைக் கோரியது, மற்றும் சோவியத் ஒன்றியத்திற்கு எதிரான அணு ஆயுதப் போரை அமெரிக்க ஐக்கிய அரசுகள் நடத்தும் சாத்தியம் பற்றியும் அதில் வெல்லும் சாத்தியம் பற்றியும் விவாதித்தது. 'நட்சத்திரப் போர்' (Star Wars) என்று பெயர் பெற்ற றேகன் நிர்வாகத்தின் ஆதரவு பெற்ற ஏவுகணை பாதுகாப்பு முன்னெடுப்பானது (Strategic Defense Initiative (SDI)), குடியரசுக் கட்சியில் உள்ள அதி வலதுசாரி சக்திகள் —அவர்களின் மத்தியில் இப்போது காணப்பட இருக்கின்ற, புஷ் நிர்வாகத்தின் கொள்கைகளை இயக்கும் பிரதான நபர்கள், சிறப்பாக செனி, ரம்ஸ்பெல்ட் மற்றும் உல்போவிட்ஸ் ஆகியோர் அமெரிக்க ஐக்கிய அரசுகளைப் பொறுத்தவரையில் சோவியத் சோசலிச குடியரசுகளின் ஒன்றியத்திற்கு எதிராக சக்தியுள்ள ஒரு இராணுவ தேர்வாக அணு ஆயுதங்களைப் பயன்படுத்துவதை எண்ணிப்பார்ப்பதை சாத்தியமாக்கும் தொழில்நுட்பத்தினை அபிவிருத்தி செய்வதற்கான — கொள்கையில் இருந்து எழுந்தது.

இந்த புஷ் நிர்வாகத்தின் தேசிய பாதுகாப்பு மூலோபாயத்தின் கீழ் இருக்கும் வரலாற்று பொய்மைப்படுத்தலுக்கும் அரசியல் ஏமாற்றுக்கும் நாம் வருகின்றோம் — இன்றியமையாத வகையில் செப்டம்பர் 11 நிகழ்வுகளுக்கு ஒரு பதிலாக இருக்கின்ற, அறிக்கையில் குறிக்கப்பட்டுள்ள கொள்கைகள், அல்கொய்தா மற்றும் ஏனைய பயங்கரவாத அமைப்புக்களினால் அமெரிக்க ஐக்கிய அரசுகள் மீது திணிக்கப்பட்ட தவிர்க்க முடியாத இராணுவ கடப்பாடுகளாகத் தீர்மானிக்கப்பட்டன மற்றும் வடிவமைக்கப்பட்டன. புஷ் நிர்வாகத்தின் தேசிய பாதுகாப்பு மூலோபாயத்தில் குறிக்கப்பட்டுள்ள உலக மேலாதிக்கத்திற்கான திட்டமானது செப்டம்பர் 11, 2001 நிகழ்ச்சிகளுக்கு விதிவிலக்கான பதிலாக இருந்து கொண்டிருப்பதற்கும் அப்பால், அது ஒரு தசாப்தத்திற்கும் மேலான அபிவிருத்தியில் இருந்து வந்திருக்கின்றது.

## சோவியத் ஒன்றியத்தின் கலைப்பு

இரு தசாப்தங்களுக்கு முன்னர் தேசிய பாதுகாப்பு மூலோபாயத்தின் முகத்திரை விலக்கிய மூலங்கள், 1991 டிசம்பரின் சோவியத் ஒன்றியம் கலைக்கப்பட்ட நாளுக்கு திரும்பிச்செல்ல முடியும். இது அமெரிக்க ஐக்கிய அரசுகளைப் பொறுத்தவரை மிகப் பரந்த செயல்விளைவுடைய முக்கியத்துவம் கொண்டது. நூற்றாண்டின் கிட்டத்தட்ட முக்கால்வாசி பகுதிகளாக, அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் மற்றும் சோவியத் ஒன்றியத்தின் தலைவிதியானது விடுபட முடியாமல் இணைந்திருந்தன. போல்ஷிவிக் கட்சியை ஆட்சிக்குக் கொண்டு வந்த அக்டோபர் புரட்சி இடம்பெற்றது அமெரிக்க ஐக்கிய அரசுகள் முதலாம் உலகப் போரில் நுழைந்த 1917 ஏப்ரலுக்கு சில மாதங்களுக்குப் பின்னரேயாகும். இவ்வாறு, பிரதான ஏகாதிபத்திய சக்தியாக அதன் வெளிப்படுதலின் ஆரம்ப நாட்களிலிருந்து, அமெரிக்க ஐக்கிய அரசுகளானது, உலக சோசலிசப் புரட்சியை பறைசாற்றிய புதிய வரலாற்று சகாப்தத்தின் வருகையைப் பறைசாற்றிய தொழிலாளர் அரசின் யதார்த்தத்துடன் மோதியது. லெனின் மற்றும் ட்ரொட்ஸ்கியால் ஆரம்பத்தில் அறிவிக்கப்பட்ட புரட்சிகர சர்வதேச கருத்துக்கள் பற்றியதில் ஸ்ராலினிச அதிகாரத்துவத்தின் அடுத்தடுத்த காட்டிக் கொடுப்பு இருப்பினும், ரஷ்யாவின் முதலாளித்துவத்தைத் தூக்கி வீசியதால் உண்டு பண்ணப்பட்ட அரசியல் —அமெரிக்க ஐக்கிய அரசுகள் உட்பட முன்னேறிய முதலாளித்துவ நாடுகளில் உள்ள தொழிலாள வர்க்கத்தின் சமூக நனவு மற்றும் அரசியல் போர்க்குணத்தின் வளர்ச்சியில், மற்றும் சிறப்பாக இரண்டாவது உலகப் போரின் பின்னர் பூகோளத்தின் குறுக்கே அடித்துச் செல்லும் காலனித்துவ எதிர்ப்பு மற்றும் ஏகாதிபத்திய எதிர்ப்பு போராட்டத்தின் அலையில்— தசாப்த காலங்களாக தொடர்ந்து எதிரொலிக்க இருந்தது.

இரண்டாம் உலகப்போரில் இருந்து அது உலக முதலாளித்துவத்தின் தலைவராக தோன்றினாலும், அமெரிக்க ஐக்கிய அரசுகளானது உலகை பொருத்தக்கூடியதாக பார்க்கிறவாறு ஒழுங்கு செய்வதற்கான நிலையில் இல்லை. அணுகுண்டை உடைமையாகக் கொண்டிருப்பது, அமெரிக்க ஐக்கிய அரசுகளுக்கு அச்சுறுத்துவதற்கான அதிகாரம் கொடுக்கும் மற்றும், தேவைப்படுமானால், சோவியத் ஒன்றியத்தை அழிக்கும் என்ற ஆரம்ப எதிர்ப்புகள், 1949ல் சோவியத் ஒன்றியத்தின் அணுஆயுத சாதன உற்பத்தியால் சிதறுண்டு போனது. அதே ஆண்டில் சீனப்புரட்சியின் வெற்றியானது, ஆசியாவின் மீது சவால் செய்ய முடியாத ஆதிக்கத்தை, அது கொண்டுபடுத்தும் என்ற அமெரிக்காவின் எதிர்பார்ப்பிற்கு ஒரு அழிவுகரமான தாக்குதல் கொடுப்பதை பிரதிநிதித்துவப்படுத்தியது.

பனி யுத்த ஆரம்ப ஆண்டுகள் முழுவதும் சோவியத் ஒன்றியத்துடன் எப்படி அணுகுவது என்பது தொடர்பாக அமெரிக்க ஆளும் வட்டங்களுக்குள்ளே ஒரு கசப்பான மோதல் இருந்துவந்தது. 1940களின் இறுதி மற்றும் 1950களின் ஆரம்பத்தினது கொடிய கம்யூனிச எதிர்ப்பு வேட்டையாடல் மற்றும் அரசியல் களையெடுப்புக்கள் ஆகியன இந்த விவாதம் இடம்பெற்ற சூழலின் முக்கிய கூறுகளாக இருந்தன. ஆளும் தட்டின் வலதுசாரி பிரிவினர் (கன்னை) 'திருப்பிச் சுருட்டல்' மூலோபாயத்துக்கு -அதாவது, சோவியத் ஒன்றியத்தையும் சீனாவில் மாவோயிச ஆட்சியையும் அழித்தலுக்கு- வக்காலத்துவாங்கின. இது அணு ஆயுதங்களைப் பயன்படுத்தலை தவிர்க்க முடியாததாகக்கூட ஆக்கியது. அயலுறவுத்துறை கொள்கை வகுப்பாளர் ஜோர்ஜ் எப். கென்னன் உடன் தொடர்புடைய இன்னொரு பிரிவு, மோதலை அதிகரிக்கவிடாது 'தடுத்து வைத்திருக்கும்' திட்டத்தை

> இந்தவிதமான வலதுசாரி வெற்றுரைகள் ஆழமாகிக் கொண்டிருக்கும் உலகப் பொருளாதார நெருக்கடிக்கு இடையில் ஒன்றை உறுதிபடக் கூறுகின்றன. அதில் முழுக் கண்டங்களும் சந்தைப் பொருளாதாரங்களின் விளைபயன்களால் பாதிக்கப்பட்டிருக்கின்றன. அது அவற்றின் சமூக உள்கட்டமைப்புக்கள் என ஒருசமயம் நிலைகொண்டிருந்தவற்றை தகர்த்துள்ளதோடு பில்லியன் கணக்கான மக்களை விவரிக்க முடியாத நிலைமைகளுள் ஆழ்த்தியுள்ளது. சோவியத் சோசலிச குடியரசுகளின் ஒன்றியம் கலைக்கப்பட்டு அதன் முதலாளித்துவ மீட்சியின் ஒரு தசாப்தத்திற்குப் பின்னர், ரஷ்யாவின் இறப்புவிதம் அதன் பிறப்பு விதத்தை மிஞ்சுகிறது. சர்வதேச நாணய நிதியம் அதன் சமூகவிரோத பரிசோதனைகளை களிப்புடன் நடைமுறைப்படுத்தும் ஒரு ஆய்வுக் கூடமான தென் அமெரிக்கா, ஒரு பொருளாதார சிதைவு நிலையில் இருக்கின்றது. தென் ஆபிரிக்காவில், மக்கள் தொகையின் கணிசமான பகுதியினர் எச்.ஐ.வி வைரஸ்களால் பாதிக்கப்பட்டிருக்கின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்மொழிந்தது.

ட்ருமன் நிர்வாகம் சீன இராணுவத்திற்கு எதிராக அணுஆயுதங்களைப் பயன்படுத்துவதை அங்கீகரிப்பதற்கு நெருக்கமாக வருகையில், இந்த பிரிவுகளுக்கு (கன்னைகளுக்கு) இடையிலான மோதல் கொரிய யுத்தத்தின் போது முன்னுக்கு வந்தது. 1950, நவம்பர் 30ல் நடைபெற்ற ஒரு செய்தியாளர் மாநாட்டில், ட்ருமன் கொரிய போரில் சீனா நுழைவதை எப்படி அணுக அவர் விருப்பங்கொண்டுள்ளார் என்று கேட்டனர். ஜனாதிபதி பதிலளிக்கையில்: "நாம் எப்போதும் போலவே, இராணுவ சூழலை சந்திப்பதற்குத் தேவையான என்னென்ன நடவடிக்கைகள் இருக்கின்றனவோ அவற்றை எடுப்போம், என்றார். பின்னர் அவர் குறிப்பாக அது அணுகுண்டு பயன்படுத்துவதை உள்ளடக்கியுள்ளதா எனக் கேட்கப்பட்டார், அதற்கு ட்ருமன், அது "நாம் வைத்திருக்கும் ஒவ்வொரு ஆயுதத்தையும் உள்ளடக்குகிறது, என பதிலளித்தார். அதிர்ச்சியுற்ற செய்தியாளர்கள் இந்தக் கூற்றை விளக்குமாறு வலியுறுத்தியபோது, "அணுகுண்டு பயன்படுத்தல் செயலூக்கத்துடன் எண்ணப்பட்டிருந்தது, "[5] என்றார்.

சர்வதேச பெருங்கூச்சல் அமெரிக்க அரசாங்கத்தை ட்ருமனின் கூற்றுக்கு பதில்வினையாற்றும்படி நிர்ப்பந்தித்தது பின்நிகழ்வாகியது. இறுதியாக, ட்ருமன் நிர்வாகம் மஞ்சூரிய கொரிய எல்லையில் ஜப்பான் கடலில் இருந்து மஞ்சள் கடல்வரை "கோபால்ட் கதிரியக்க வீச்சின் ஒரு பட்டை" யை பரப்புதற்கு 30லிருந்து 50 அணுகுண்டுகள் போடப்படவேண்டும் என்ற ஜெனரல் மக்ஆர்தரின் (General MacArthur) கோரிக்கையை நிராகரித்தது. இந்த முன்மொழிவு ஒரு பைத்தியக்கார ஜெனரலின் மூளையில் உருவாகிய குழந்தை அல்ல. இந்த மற்றும் அதேபோன்ற கருத்துக்கள் நன்கு ஆலோசிக்கப்பட்டது மற்றும் ஆதரிக்கப்பட்டது. அணு ஆயுதங்களைப் பயன்படுத்தலை பகிரங்கமாக ஆதரித்தவர்களுள் பிற்கால உதவி ஜனாதிபதியின் தந்தையும் காங்கிரஸ் உறுப்பினருமான மூத்த அல்பர்ட் கோரெம் ஒருவராகும். கொரியப் போரில் அணுகுண்டுகளைப் பயன்படுத்தாதிருக்க முடிவெடுத்தமைக்கு இரு காரணிகள் வழிவகுத்தன. முதலாவதாக, நிலவும் இராணுவ சூழலில் அது பலனுள்ளது என நிரூபிக்குமா என்பது பற்றி அங்கு சீரிய சந்தேகங்கள் இருந்தன. இரண்டாவது, மற்றும் தீர்மானகரமானது, கொரியாமீது குண்டு போடுவது ஒரு அரசியல் சங்கிலித்தொடரான எதிர்வினையை இயங்க வைக்கும், அது அமெரிக்க ஐக்கிய அரசுகளுக்கும் சோவியத் ஒன்றியத்துக்கும் இடையில் அணுஆயுத மோதல்களுக்கு வழிவகுக்கும் என்ற அச்சம் இருந்ததாகும். குளிர் யுத்தத்தின் எஞ்சிய தசாப்தங்களில், "பின்வாங்கும்படி செய்வதன்" உண்மையான அர்த்தம், சோவியத் சோசலிச குடியரசுகளின் ஒன்றியத்தை அவ்வாறு செய்வதிலிருந்து அமெரிக்க ஐக்கிய அரசுகள் நாடுகள் தடுப்பது அல்ல, மாறாக சோவியத்தின் திருப்பித் தாக்கல் சாத்தியமானால் அவ்வாறு செய்வதிலிருந்து அமெரிக்க ஐக்கிய அரசுகளைத் தடுப்பதாகும்.

குளிர் யுத்தம் ஒட்டு மொத்தத்தின் மூலோபாயமாக இல்லாதது என்பது ஒருபுறம் இருக்க, குளிர் யுத்தத்தின்பொழுது அமெரிக்க ஐக்கிய அரசுகளின் அணுஆயுத மூலோபாயம் பற்றி சக்தி இழக்கும் வகையில் விவாதிப்பதற்கான இடம் இதுவல்ல. ஆனால் கடந்த தசாப்தத்தின் சம்பவங்களையும் அமெரிக்க அரசாங்கத்தின் தற்போதைய நடவடிக்கைகளைப் பற்றியும் புரிந்துகொள்வதன் நோக்கத்திற்காக, சோவியத் ஒன்றியம் அமெரிக்க இராணுவ பலத்தை செயல்படுத்தலின் கீழ் வைக்கப்பட்ட சோவியத் ஒன்றியத்தின் இருப்பு எனும் கட்டுப்பாடுகளின் கீழ் அமெரிக்க ஆளும் வர்க்கத்தின் பரந்த பகுதிகள் சினமுட்டப்பட்டன என்பது கட்டாயம் வலியுறுத்தப்பட வேண்டும். இந்தக் காலகட்டம் முழுவதும் ஜனாதிபதி ஐசனோவர் அழைத்த "இராணுவ — தொழிற்சாலை வளாகம்" என்பதனுள்ளே சக்திமிக்க வட்டாரத்துக்குள் எஞ்சி இருந்தது, அது சோவியத் ஒன்றியத்துடன் கடுமை தணியாத மோதலுக்கு தள்ளியது. நான் ஏற்கனவே குறிப்பிட்டவாறு, புஷ் நிர்வாகத்தில் தற்போது மிகமுக்கிய பதவிகளில் இருப்பவர்களுள் பலர் 1970கள் மற்றும் 1980களில் பெரும் சோவியத் விரோத இராணுவக் கட்டி எழுப்பலுக்கு வெறியுடன் வக்காலத்து வாங்கியவர்களாக, மற்றும் சோவியத் சோசலிச குடியரசுகளின் ஒன்றியத்தின் மீது அணு ஆயுதத்தாக்குதலை நடத்தல் நிகழக்கூடிய தேர்வாக கருதப்பட்டிருந்தது என்று கூட வாதித்தவர்களாக இருந்தனர்.

அமெரிக்க வெளிவிவகாரக் கொள்கையின் அதிகரித்துவரும் வலியத்தாக்கும் தன்மை குடியரசுக் கட்சியின் பிரத்தியேகமான செயல்முறைத் திட்டமாக இல்லை. ஜிம்மி கார்ட்டர் நிர்வாகம் சோவியத் ஒன்றியத்தின் மத்திய ஆசிய குடியரசுகளை சீர்குலைக்க வேண்டி ஆப்கானிஸ்தானுக்குள் இஸ்லாமிய அடிப்படைவாதிகளைத் தூண்டி விடும் கருத்தை தட்டிவிட்டது. கார்ட்டரின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் ஜபிக்னீவ் பிரிஜேஜின்ஸ்கி, பல ஆண்டுகளுக்கு முன்னர் உறுதிப்படுத்தியவாறு, சோவியத் ஒன்றியம் அந்த நாட்டில் இராணுவ தலையீடு செய்ய தீர்மானிக்கும் முன்னரே ஆப்கானிஸ்தானில் அமெரிக்க நடவடிக்கைகள் நன்கு செயல்பட்டுக் கொண்டிருந்தன.

குளிர் யுத்தத்தின் பொழுது சோவியத் - அமெரிக்க உறவுகள் பற்றி மேலதிகமாய் ஒரு விடயம் கூறப்பட வேண்டும். அமெரிக்க வலியத் தாக்குதல் தன்மை உலக முதலாளித்துவ பொருளாதாரத்துடன் தொடர்புடையது என்று பலமாக மற்றும் செயலூக்கத்துடன் விவாதிக்கப்பட முடியும் என்று நான் நம்புகிறேன். இரண்டாம் உலகப் போருக்குப் பின்னரான சர்வதேச முதலாளித்துவத்தின் விரிவாக்க முழுமலர்ச்சிக் காலத்தின்பொழுது, அமெரிக்க ஆளும் தட்டிற்குள்ளேயான கசப்பான போராட்டம் சோவியத் ஒன்றியத்துடன் சமரசத்தை ஆதரித்தவர்களின் விவாதங்களின் அடிப்படையில் தீர்க்கப்படுவதை நாடியது. உலகரீதியான பொருளாதார விரிவாக்கத்தின் பொதுவான சூழ்நிலைகள், கிழக்கு — மேற்கு பிரிவு என்று அழைக்கப்படும் புவிசார் அரசியல் கட்டமைப்புக்குள்ளே அமெரிக்க முதலாளித்துவத்தை லாபரீதியாக இயங்குதற்கு அனுமதிக்குமளவுக்கு, அமெரிக்க ஆளும் தட்டு சோவியத் சோசலிச குடியரசுகளின் ஒன்றியத்துடன் அணுஆயுத மோதலைத் தவிர்க்க அல்லது தள்ளிப்போடவாவது மூலோபாய முடிவை செய்தது. வெளிப்படையான இராணுவ மோதல்கள் புற எல்லைகளுக்கு மட்டுப்படுத்தப்பட்டிருந்தன.

இருப்பினும், உலக முதலாளித்துவம் ஆழமான கட்டமைப்பு மற்றும் அமைப்பு முழுதும் சார்ந்த பிரச்சினைகளில் இருந்து தோன்றிய நீண்ட பொருளாதாரத் தேக்கநிலை மற்றும் பொருளாதார சரிவு கொண்ட காலகட்டத்தில் 1970களில் நுழைகையில், —அதன் தற்போதைய பொருளாதார பின்னடைவு முன்கூட்டிய அடையாளமாக இருக்கிறது— இன்னும் அதிகமாய் வலியத் தாக்கும் போக்குகளை உறுதிப்படுத்தியதோடு ஆளும் வட்டத்திற்குள்ளே ஆதரவான பதிலையும் கண்டன. ஒருவர் இரு மாபெரும் எண்ணெய் அதிர்ச்சிகளையும் கூட சேர்க்கலாம். முதலாவது, எண்ணெய் விற்பனை மீது புறக்கணிப்பை திணித்தலை அமல்படுத்துவதற்கான அரபு அரசுகளின் முடிவின் விளைவாக, 1973ல் முதலில் நிகழ்ந்தது. இரண்டாவது, 1979 ஈரானியப் புரட்சியைத் தொடர்ந்தது. எண்ணெய், இயற்கை வாயு மற்றும் ஏனைய அத்தியாவசிய மூலோபாய வளங்களை அமெரிக்க ஆளும் வர்க்கம் பெறுவதன் பேரில் எந்தவிதமான எதிர்கால இடையூறுகளையும் தடுப்பதற்கு அதன் உறுதியை அதிகரித்தது.

1980களின் பெரும் இராணுவக் கட்டி எழுப்பலானது, அமெரிக்க ஆளும் தட்டின் சக்திமிக்க பகுதிகள் சோவியத் ஒன்றியத்துடனான ஒரு பிரதான மோதலில் தோன்றும் ஆபத்தை காண விரும்புகிறது என்பதைச் சுட்டிக்காட்டுவதாகவே காணப்பட்டது. இந்தப் யுத்தவெறி கொண்ட சர்வதேசக் கொள்கை றேகன் நிர்வாகத்தால் பின்பற்றப்பட்ட உள்நாட்டுக் கொள்கையின் கண்ணாடி பிரதிபலிப்பாக இருந்தது. அது தொழிற்சங்க- உடைப்பின் வெற்றிகரமான மற்றும் செயலூக்கமுள்ள வேலைத்திட்டத்தையும் முந்தைய 50 ஆண்டுகளாக தொழிலாள வர்க்கத்தால் வென்றெடுக்கப்பட்ட சமூக சீர்திருத்தங்களை "மீள சுருட்டிக் கொள்வதையும்" முன்னெடுத்தது.

முடிவில், சோவியத் சோசலிச குடியரசுகளின் ஒன்றியத்தை கலைப்பதற்கு முடிவெடுத்தது சோவியத் அதிகாரத்துவமேயாகும். 1991ல் சோவியத் ஒன்றியத்தின் சுய-கலைப்பு —ஸ்ராலினிச அதிகாரத்துவத்தால் அக்டோபர் புரட்சியின் வழிப்பெற்ற பேறு இறுதியாகக் காட்டிக் கொடுக்கப்பட்டது -அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கு முன்னர் என்றுமிருந்திராத வரலாற்று வாய்ப்பினை உண்டு பண்ணியது. முதல் தடவையாக அது அதன் நோக்கங்களை அடைவதற்கு பலத்தைப் பயன்படுத்துவதில் எந்தவித குறிப்பிடத்தக்க கட்டுப்பாடுகளும் —இராணுவ அல்லது அரசியல் கட்டுப்பாடுகளும்— இல்லாத சர்வதேச சூழலில் செயல்பட முடிந்தது. அமெரிக்க ஐக்கிய அரசுகளின் மூலோபாய குறிக்கோள்கள் மீதான மிகவும் கொடிய மற்றும் பிற்போக்கான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போக்குக் கொண்டவர்களின் உள் விவகாரங்கள் இந்த கருத்துக்களில் இருந்தே எடுத்துக்கொள்ளப்பட்டன.

சோவியத் சோசலிசக் குடியரசுகளின் ஒன்றியம் இல்லாதொழிந்தது, அமெரிக்காவைப் பொறுத்தவரை சவால் செய்ய முடியாத பூகோள மேலாதிக்கத்தை நிறுவுவதற்கான வாய்ப்பை வழங்கியது என அவர்கள் அறிவித்தனர். 1991ல் வலதுசாரி பத்தி எழுத்தாளர் சார்லஸ் கிராத்தம்மர் (Charles Krauthammer) குறிப்பிட்டவாறு அமெரிக்க ஐக்கிய அரசுகளின் பணியானதுமுற்றுமுழுதான பூகோள மேலாதிக்க நிலையை ஏற்படுத்துவதற்கான ஒரு 'ஏகதுருவ இலக்கமைவை' பயன்படுத்திக் கொள்வதாக இருந்தது. அமெரிக்க ஐக்கிய அரசுகள் அது எதனை எல்லாம் விரும்புகிறதோ அதனை அடைய இராணுவ பலத்தைப் பயன்படுத்துவதற்கு தயங்கக் கூடாது என கிராத்தம்மர் வலியுறுத்தினார். ஐரோப்பியர்களும் ஜப்பானியர்களும் எளிமையாக நடத்தப்பட வேண்டும், மற்றும் அவர்கள் அமெரிக்க ஐக்கிய அரசினை கெஞ்சுபவராக அல்லது இருந்தனர் என்பதை அங்கீகரிப்பதற்கு நிர்ப்பந்திக்கப்பட வேண்டும். அமெரிக்கத் தலைமைத்துவப் பொறுத்தமற்ற பன்முகத்தன்மைக்கு உதட்டளவில் சேவை செய்வது அரசியல் ரீதியாக உசிதமாக இருக்கும் அதேவேளை, அந்தக் கொள்கை யதார்த்தத்தில் இறந்து விட்டது. 'உலக ஒழுங்கின் விதிமுறைகளை வெட்கமில்லாமல் கீழே போடுவதற்கு மற்றும் அவற்றை வலிந்து செயற்படுத்த தயாரிப்பு செய்வதற்கு" [6] தன்னிச்சையாக அதன் ஆற்றலை செயல்முறைப்படுத்துவதற்கு அமெரிக்க ஐக்கிய அரசுகளுக்கு நேரம் வந்திருந்தது.

விசித்திரம், அவர் இந்த வார்த்தைகளை எழுதிய பொழுது, பல ஆண்டுகளுக்கு முன்னர் இருபதாம் நூற்றாண்டில் மாபெரும் மார்க்சிஸ்டுகளில் ஒருவரால் செய்யப்பட்ட முன்கணிப்பை அவர் திருப்பம் செய்வதை ஒருவேளை கிராத்தம்மர் உணராதிருக்கலாம். லியோன் ட்ரொட்ஸ்கி 1928ல் எழுதுகையில், ஐரோப்பாவை "ஒழுங்கு செய்ய" ஜேர்மனி முதலாம் உலகப் போரைத் தூண்டி விட்டது என்று நினைவு கூர்ந்தார். ஆனால் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் நோக்கங்கள் இன்னும் அதிகமான பேராசையை நிரூபிக்கப்படும். 'அமெரிக்க ஐக்கிய அரசுகள் உலகை "கட்டாயம் 'ஒழுங்கு' செய்யும்"' என ட்ரொட்ஸ்கி எழுதினார். 'அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் எரிமலை வெடிப்புடன் வரலாறானது மனிதகுலத்தை நெருக்குநேர் கொண்டுவந்திருக்கிறது' என ட்ரொட்ஸ்கி எழுதினார்.[7]

> இரண்டாம் உலகப்போரில் இருந்து அது உலக முதலாளித்துவத்தின் தலைவராக தோன்றினாலும், அமெரிக்க ஐக்கிய நாடுகளானது உலகை பொருந்தக்கூடியதாக ஒழுங்கு செய்வதற்கான நிலையில் இல்லை. அணுகுண்டை உடைமையாகக் கொண்டிருப்பது, அமெரிக்க ஐக்கிய அரசுகளுக்கு அச்சுறுத்துவதற்கான அதிகாரம் கொடுக்கும் மற்றும் தேவைப்படுமானால், சோவியத் ஒன்றியத்தை அழிக்கும் என்ற ஆரம்ப எதிர்ப்புகள், 1949ல் சோவியத் ஒன்றியத்தின் அணுஆயுத சாதனை உற்பத்தியால் சிதறுண்டு போனது. அதே ஆண்டில் சீனப்புரட்சியின் வெற்றியானது, ஆசியாவின் மீது சவால் செய்ய முடியாத ஆதிக்கத்தை அது செயல்படுத்தும் என்ற அமெரிக்காவின் எதிர்பார்ப்பிற்கு ஒரு அழிவுகரமான தாக்குதல் கொடுப்பதை பிரதிநிதித்துவப்படுத்தியது.

## முதலாவது புஷ் நிர்வாகத்தினால் பின்பற்றப்பட்ட இராணுவ மூலோபாயம் பற்றிய மீளாய்வு

முதலாவது புஷ் நிர்வாகமானது சோவியத் சோசலிசக் குடியரசுகளின் ஒன்றியம் இல்லாமல் போனமைக்கு அமெரிக்க இராணுவ மூலோபாயத்தை ஒரு முழு அளவிலான மீளாய்வுக்கு உட்படுத்துவதன் மூலம் பதிலளித்தது. அதன் மேலோங்கி நின்ற குறிக்கோள்கள் சோவியத் ஒன்றியம் கலைக்கப்பட்டதால் ஏற்பட்ட அதிகார வெற்றிடத்தை செயலூக்கத்துடன் பயன்படுத்திக்கொள்வதாகவும், மற்றும் அவ்வாறு செய்வதன் மூலம் எந்த நாடும் அமெரிக்க ஐக்கிய அரசுகளுக்கு சவாலாக்கூடிய போட்டியாளராக தோன்றுவதிலிருந்து தடுக்கும் ஒரு புவிசார் அரசியற்கோட்பாட்டை ஏற்படுத்துவதாகவும் இருந்தது. இந்த சோவியத்வேலைத்திட்டத்திற்கு இருக்கின்ற அல்லது சாத்தியமுள்ள எந்த பகைவரையும் அல்லது எதிரியையும் அச்சுறுத்துவதற்கு மற்றும் தேவைப்பட்டால் தாக்குவதற்கு, இராணுவ பலத்தைப் பயன்படுத்துவது முக்கியமானதாக இருந்தது. 1992ல், பாதுகாப்பு செயலாளர் டிக் செனி மற்றும் அப்போதைய படைத்தளபதியான கொலின் பவெல் அமெரிக்க இராணுவப் படைகளுக்கான பரந்து விரிந்த செயற்பாட்டு குறிக்கோள்களை நடைமுறைப்படுத்துவதற்கு அழைப்பு விடுத்தனர். அதாவது இராணுவமானது 100 நாட்களில் ஒரு பெரிய போரை மற்றும் 180க்கும் குறைவான நாட்களில் இரண்டு போரை முடிக்கக்கூடியதாக இருக்க வேண்டும் என துவங்கி விட்டது.

பில் கிளின்டன் தேர்ந்தெடுக்கப்பட்டது அமெரிக்க இராணுவத் திட்டமிடலாளர்களின் அதிகரித்துவரும் வலுச்சண்டை நோக்கில் எந்தவித குறிப்பிடத்தக்க மாற்றத்தையும் கொண்டு வரவில்லை. 'பங்குகொள்ளல் மூலம் உலகை வடிவமைத்தல்' என்ற முழக்கத்தின் கீழ், 1990களில் அமெரிக்காவின் நீண்டகால பூகோள மேலாதிக்கத்தை உத்தரவாதம் செய்வதற்கான பிரதான வழிமுறையாக இராணுவ ஆற்றலை கண்ட ஜனநாயகக் கட்சி மற்றும் குடியரசுக் கட்சி இரண்டினதும் உள்ளே அரசியல் ஒத்திசைவின் தொடர்ச்சியைக் காணக்கூடியதாக இருந்தது.

ஆயினும், இராணுவ ஆற்றலின் தீர்க்கமான பாத்திரத்தின் மீதான இந்த வலியுறுத்தல் அதன் பலத்திலிருந்து எழவில்லை மாறாக, இன்னும் சொல்லப்போனால் அமெரிக்க முதலாளித்துவத்தின் கீழ்ப்படிவான பலவீனத்திலிருந்தே ஆகும். சாராம்சத்தில், இராணுவவாதமானது பொருளாதார மற்றும் சமூக சரிவின் அறிகுறியாகும். அதன் பிரதான போட்டியாளர்களுக்கு எதிரிடையாக அமெரிக்க முதலாளித்துவத்தின் பொருளாதார பலத்தின் நம்பிக்கை சரியான காரணத்துடன் இழந்து போனமையில், மற்றும் உள்நாட்டு சமூகக் கட்டமைப்புக்குள்ளே பிளவுகள் பற்றிய அச்சம் வளர்ச்சி காணும்போது, ஆளும் தட்டானது தொந்தரவு கொடுக்கும் அனைத்து எதிர்மறைப் போக்குகளுக்கும் எதிராக எதிர்வினை ஆற்றக்கூடிய வழிமுறையாக இராணுவ ஆற்றலை காண்கின்றது. நியூயோர்க் டைம்ஸின் தோமஸ் பிரைட்மன் (Thomas Friedman) மார்ச் 1999ல் எழுதியவாறு "மறைந்த முஷ்டி இல்லாமல் சந்தையின் மறைந்த கை ஒருபோதும் வேலை செய்யாது. எப்-15 ஐ கட்டுமானம் செய்பவரான, மக்டொனால் டக்ளஸ் இல்லாமல் மக் டொனால்ட் செழிக்க முடியாது. சிலிக்கன் பள்ளத்தாக்கின் தொழில்நுட்பத்திற்காக உலகை பாதுகாப்பாக வைத்திருக்கும் மறைந்த முஷ்டி அமெரிக்க இராணுவம், விமானப்படை, கடற்படை மற்றும் கடற்படையின் காலாட்படை..... என அழைக்கப்படுகின்றது. அமெரிக்கா கடையில் இல்லாமல், அமெரிக்கா ஒன்றுமே இருக்காது."

அமெரிக்காவின் மூலோபாய குறிக்கோள்கள் பற்றிய கலந்துரையாடல் போக்குகளில் ஈராக் பிரச்சினை முக்கிய பாத்திரத்தை ஆற்றியது. ஒரு தசாப்தத்திற்கு சற்று முன்னர் ஈராக்கிற்கு எதிரான முதலாவது போர் அமெரிக்க ஏகாதிபத்தியத்தைப் பொறுத்தவரை ஒரு சிலவற்றிலேயே மிக முன்கூட்டி நிகழ்ந்தது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1991 ஜனவரி -பெப்ரவரியில், சோவியத் ஒன்றியத்தின் தலைவிதி இன்னும் நிச்சயமில்லாததாய் இருந்தவேளை, புஷ் நிர்வாகம் ஐ.நா உத்தரவுகளை வரம்பு மீறவோ மற்றும் சதாம் ஹூசைன் ஆட்சியை ஒருதலைப்பட்சமாகத் தூக்கி வீசவோ முயற்சிப்பதை அதிகம் ஆபத்துக்குரியதாய் கருதியது. ஆனால் போர் கிட்டத்தட்ட ஒரு முடிவுக்கு வந்திருந்த வேளை, ஆளும் தட்டின் சக்திமிக்க பகுதிகளுக்குள்ளே பெரும் வாய்ப்பு தவறவிடப்பட்டிருந்ததாக ஒரு உணர்வு இருந்தது. அமெரிக்க மேலாதிக்கத்தை சவால் செய்யக்கூடிய எந்த ஒரு அரசோ அல்லது அரசுகளின் சேர்க்கைகளோ தோன்றுவதைத் தடுக்கும் புதிய மூலோபாய நோக்கத்தின் உள்ளடக்கத்தினுள்ளே, ஈராக்கை வெற்றி கொள்வதானது தீர்வுக்குரிய மூலோபாய குறிக்கோளாகக் காணப்பட்டு வந்தது. வலதுசாரி மூலோபாய வல்லுநர்களால் தயாரிக்கப்பட்ட எண்ணற்ற பத்திரங்களில், சதாம் ஹூசைனின் அரசாங்கத்தை தூக்கி வீசுவதானது அமெரிக்காவுக்கு ஐரோப்பாவிலும் ஜப்பானிலும் உள்ள தனது சாத்தியமான பொருளாதார மற்றம் இராணுவ போட்டியாளர்களின் பொருளாதாரத்துக்கு அத்தியாவசியமானதும் அதிகபட்சம் நெருக்கடியான வளமுமான எண்ணெய் மீது மூலோபாய மேலாதிக்கத்தை வழங்கும் என வெளிப்படையாக வாதிட்டனர். கொள்கை வகுப்பதில் சிறப்பு வல்லுநர்களான ஜோர்ஜ் பிரைட்மன் மற்றும் மெர்டித் லெபார்ட் (Meredith Lebard) 1991ல் வெளியிடப்பட்ட, அவர்களின் செல்வாக்குமிக்க நூலான, *ஜப்பானுடன் வரவிருக்கும் போர்* என்பதில் பின்வருமாறு வாதிக்கின்றனர்.

"எண்ணெயோடு பாரசீக வளைகுடா ஒரு பிராந்திய பிரச்சினை என்பதை விடவும் அதிகமான ஒன்றாக ஆனது. அது அமெரிக்காவைப் பொறுத்தவரை உலகப் பொருளாதாரத்தின் இயக்க மையமாக ஆவதோடு, பிராந்தியத்தின் மேலாதிக்கம் முன்னர் எதிர்பார்த்திராத சர்வதேச ஆற்றல் மீது கதவைத் திறந்துவிடும். மறுபுறம், ஈராக் அல்லது ஈரான் போன்ற இன்னொரு பிராந்திய அரசை, பிராந்தியத்தின் கட்டுப்பாட்டைக் கைப்பற்றவும் அதன் சொந்த அதிகாரத்தை வலுப்படுத்தவும் அனுமதிப்பதானது, இந்தப் பிராந்தியத்தில் ஒரு தரைவழி போரைத் தொடுப்பதற்கு அமெரிக்காவைத் தயார்செய்திராவிடில், அச்சாத்தியத்தின் கதவை மூடிவிடும்.

"குவைத் மீதான 1990 ஈராக்கிய ஆக்கிரமிப்பின்பொழுது, அமெரிக்க பதில் வெளிப்படையாக ஒரே நோக்கத்தைக் கொண்டிருந்தது: பிராந்தியத்தின் எண்ணெய் அளிப்பில் ஈராக்கின் மேலாதிக்கத்தைத் தடுத்தல். ஆயினும், அது கூடவே இன்னுமொரு சாத்தியத்தைத் திறந்து விட்டது. குவைத்தை மீண்டும் எடுத்துக்கொள்வதிலும், சதாம் ஹூசைனின் ஆட்சியை தகர்ப்பதிலும் மற்றும் ஈராக் மீதான கட்டுப்பாட்டைக் கைப்பற்றுவதிலும் அமெரிக்காவின் வெற்றியானது அமெரிக்காவை உலகின் பேரளவு எண்ணெய் சேர்ம இருப்பின் மற்றும் உற்பத்தியின் கட்டுப்பாட்டில் வைக்கும். இந்த சக்தி எவ்வளவு சேதம்விளைக்காது பயன்படுத்தப்படும் என்பது ஒரு பொருட்டல்ல, அமெரிக்காவானது சர்வதேச பொருளாதார அமைப்பைக் கட்டுப்படுத்துவதில் வெளித்தோன்றும்.....

"...அது உற்பத்தி ஒதுக்கீடுகளை நிர்ணயிக்கும் நிலையில் இருக்கும். ஆகையால் விலைகளையும், அதேபோல எண்ணெய் நகர்வினையும் கட்டுப்படுத்தும். தனது 60 சதவீதத்திற்கும் மேலான எண்ணெய் ஏற்றுமதிகளுக்காக ஹோர்முஜ் நீரிணைக்குள் (Straits of Hormuz) உள்ள நாடுகளில் சார்ந்திருக்கும் ஜப்பான் போன்ற நாடுகள், அதன் மாபெரும் பொருளாதாரப் போட்டியாளர் —உலகின் ஒரே பெரிய பொருளாதாரம் மற்றும் ஜப்பானின்பால் அதிகரித்த அளவில் கடுமையாயிருக்கும் -ஜப்பானின் எண்ணெய் இருப்பின் நேரடிக் கட்டுப்பாட்டில் இருப்பதைக் காணும்.....

"...முன்னணி அரசியல் சக்தியான அமெரிக்கா திடீரென்று தனது அரசியற் சக்தி சர்வதேசப் பொருளாதாரத்தின்மீது முதுகுக்குப் பின்னால் மல்லன் பிடி போட பயன்படுத்தக் கூடிய ஒரு ஸ்தானத்தில் இருப்பதாய் தன்னையே கண்டு கொள்ளும்.

"பாரசீக வளைகுடாவானது ஐக்கிய அமெரிக்க அரசுகளுக்கும் ஜப்பானுக்கும் இடையிலான மோதல்களின் மையமாக விளங்குவது அவசியமானதாக இருக்கும். எண்ணெய் பாயும் அந்தப் பகுதியில் ஜப்பானின் பாதுகாப்பற்ற நிலையும் இப்பிராந்தியத்தில் அமெரிக்க அதிகாரத்தின் வளர்ச்சியும், கட்டாயமாக ஜப்பானின் பாதுகாப்பின்மை அதிகரிப்பதையே அர்த்தப்படுத்தும். மோதலின் பிராந்தியமயமாதல் மற்றும் பொருளாதாரத்தின் பிராந்திய பிளவுகள் ஐக்கிய அமெரிக்க அரசுகளைப் பொறுத்தவரை முக்கியமான கதவைத் திறக்கும்: ஜப்பானிய எண்ணெய் இருப்பை சூழ்ச்சியுடன் கையாளுதல் ஜப்பானிய ஏற்றுமதிகள் அமெரிக்காவிற்கு முன்வைக்கும் சவாலை சிறந்த முறையில் முடிவுக்குக் கொண்டுவரக் கூடும்." [8]

எளிதில் பாதிக்கக் கூடிய இந்த பிரச்சினை பற்றிய விவாதம் உண்மையில் தொடக்கூடாததாக இருக்கும். அமெரிக்க வெகுஜன ஊடகங்களைத் தவிர, அமெரிக்காவைப் பிரதானமாய் முன் ஆக்கிரமித்திருப்பது பரந்த மக்களை அழிக்கும் ஆயுதங்கள் எனப்படுபவை அல்ல, மாறாக எண்ணெயே ஆகும் என்பது முழு உலகத்திலும் பரவலான அங்கீகாரத்துக்குள்ளாகிறது. ஆப்கானிஸ்தான் மீதான யுத்தமானது, உலகில் இரண்டாவது பெரும் பெட்ரோலிய சேர்ம இருப்புக்களைக் கொண்டிருப்பதாக நம்பப்படும் மத்திய ஆசியாவில் புதிய அமெரிக்க இராணுவ தளங்களை உருவாக்குவதற்கான வாய்ப்பை வழங்கிய அதேவேளை, ஈராக்கை வென்று கைப்பற்றுவதானது பாரசீக வளைகுடா பிராந்தியத்தின் இரண்டாவது பெரிய மசகு எண்ணெய் சேர்ம இருப்பினை உடனடியாக ஐக்கிய அமெரிக்க அரசுகளின் கட்டுப்பாட்டில் வைக்கும். சொல்லுதற்கரிய தோமஸ் பிரைட்மனை மேற்கோள் காட்டுவதாயின், "உடைந்து போயிருக்கிறது ஈராக், நாம் ஈராக்கை சொந்தமாக்குவோம்."

தமது குற்றவியல் திறமைகளை எண்ணெய் தொழில்துறை நிர்வாக அதிகாரிகளாக சாணை தீட்டிக் கொண்ட செனி போன்றோர்களை முன்னணியாகக் கொண்ட புஷ் நிர்வாகமானது, பாரசீக வளைகுடாவை தோன்றிக் கொண்டிருக்கும் அமெரிக்கப் பேரரசின் கிரீடத்துக்கு பொருத்தமான மாணிக்கக் கல்லாக காண்கின்றது. மத்திய ஆசியாவில் இறுதியில் வெளிக்கொண்டுவர விருக்கும் எண்ணெய் மற்றும் இயற்கை வாயு சேர்மங்கள் மீதான கட்டுப்பாட்டுடன் அந்தப் பிராந்தியத்தின் மேலாதிக்கமும் சேர்ந்து விடுமாயின், ஐக்கிய அமெரிக்க அரசுகளை நீண்டகாலத்துக்கு சட்டம் முதலியவற்றுக்கு பிடிகொடாமல் ஏய்க்கும் நீண்டகால மூலோபாய மேலாதிக்கத்தை அவர்கள் அடைவார்கள் என்று அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் தலைவர்கள் நம்புவர். உலக மேலாதிக்கத்தின் இந்தக் காட்சி, மூலோபாய பூகோள வளங்களின் கட்டுப்பாடு மூலமாக உத்தரவாதம் செய்யப்படுவதானது, பிற்போக்கு கனவுருவுப் புனைவாற்றலாகும். அது நிர்வாக நிறுவனத்தின் பரந்த பகுதியினர் மத்தியில் ஆர்வம் மிக்க பார்வையாளர்களைக் கண்டிருக்கிறது. அமெரிக்காவின் அரசியல் மற்றும் பொருளாதார பிரபுக்கள் மத்தியில் காணப்படும் எண்ண வடிவமானது, ரொபட் கப்லன் எழுதிய போர்வீரன் அரசியல்: தலைமைத்துவம் அஞ்ஞானப் பண்பை கோருவது ஏன்? என்ற நூலில் பிரதிபலித்துள்ளது.

"மிக வெற்றிகரமான எமது வெளிநாட்டுக் கொள்கை, உலகில் அமெரிக்கா அதிக செல்வாக்கைக் கொண்டிருக்க வேண்டும். இவ்வாறு, எதிர்கால வரலாற்றாசிரியர்கள் இருபத்தோராம் நூற்றாண்டில் ஐக்கிய அமெரிக்க அரசுகளை ஒரு குடியரசு போல ஒரு பேரரசாக திரும்பிப் பார்ப்பர். அது வரலாறு முழுவதும் உள்ள ரோம் மற்றும் ஏனைய பேரரசிலிருந்து எவ்வளவுதான் வேறுபட்டிருந்த போதும் அவ்வாறு பார்ப்பர். தசாப்தங்கள் மற்றும் நூற்றாண்டுகள் செல்கையில், ஐக்கிய அமெரிக்க அரசுகள் நாற்பத்து மூன்று ஜனாதிபதிகளுக்குப் பதிலாக, நூறு ஜனாதிபதிகளை அல்லது 150 ஜனாதிபதிகளைக் கூடக் கொண்டிருக்கும், மற்றும் அவர்கள் கடந்து போன பேரரசுகளின் —ரோமன், பைஜான்டன், ஒட்டோமான் இவற்றின்— ஆட்சியாளர்கள் போல ஒரு நீண்ட பட்டியலில் இடம் பெறுவர். தொல் பழமையுடன் ஒப்பிடுவது குறைந்துபோவதை விடவும் வளரும். குறிப்பாக ரோமானது ஒழுங்கற்ற உலகில் ஒரு அற்ப ஒழுங்கை ஊக்குவிக்க பல்வேறு வழிகளைப் பயன்படுத்தும் ஒரு மேலாதிக்கச் சக்தியின் ஒரு மாதிரி ஆகும்..." [9]

இந்தப் பிதற்றல் ஒரு வகை நம்பத்தகாத கலாச்சார இயல்நிகழ்ச்சியின் —பொது நாகரிகம் என்பதைப் பற்றிக் கூறத் தேவையில்லை, அனைத்துவிதமான வரலாற்று உணர்வு மற்றும் நிகழ்கால யதார்த்தம் ஆகியவற்றை இழந்து விட்ட ஆளும் தட்டுக்குள்ளே உள்ள மாயத் தோற்ற மனநிலையின் ஒரு எடுத்துக்காட்டின்— நலனாக மட்டுமே இருக்கிறது.

ஐக்கிய அமெரிக்க அரசுகள் இந்த கனவுருப் புனைவாற்றல்களை நடைமுறைப்படுத்துதற்கு விழையும் மட்டத்திற்கு அது எதிர்ப்பை எதிர்கொள்ளும்: முதலாவதாக, அமெரிக்கக் கொள்ளையிடல்களின் உடனடி இலக்குகளாக இருப்பவற்றிலிருந்தேயாகும். வென்றடக்குவதற்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிரான, அதாவது முதலாளித்துவத்திற்கு எதிரான போராட்டத்திலிருந்து பிரிக்கப்பட முடியாதது. மேலும், அந்தப் போராட்டமானது ஐக்கிய அமெரிக்க அரசுகளுக்குள்ளேயும் சர்வதேச ரீதியாகவும் புறநிலைரீதியாக முதலாளித்துவத்திற்கு எதிராக நிற்கும் பரந்த சமூக சக்திகளை அணிதிரட்டுவதற்கு பாடுபடும் அந்த மட்டத்துக்கு மட்டுமே வெற்றிகரமாக இருக்க முடியும். அந்த சமூக சக்தி, நவீன முதலாளித்துவ சமுதாயத்தில் உள்ள அபரிமிதமான மக்களைக் கொண்டிருக்கும் தொழிலாள வர்க்கமாகும்.

அவ்வாறு, யுத்தத்துக்கு எதிரான போராட்டத்தின் மையமானது தொழிலாள வர்க்கத்தை ஒரு சுதந்திரமான அரசியல் சக்தியாக அணிதிரட்டுவதும் ஒழுங்கமைப்பதுமேயாகும். ஐக்கிய அமெரிக்க அரசுகளுக்குள்ளே, இதன் அர்த்தமானது, முதலும் முக்கியமுமாக, தொழிலாள வர்க்கத்தை ஜனநாயகக் கட்சியின் அரசியல் மேலாதிக்கத்திலிருந்து விடுவிப்பதும் புதிய, சுதந்திரமான, சோசலிசக் கட்சியைக் கட்டுவதுமாகும். அத்தகைய கட்சியின் வேலைத்திட்ட ரீதியான முதன்மையான தன்மை, தொழிலாள வர்க்கத்தின் சர்வதேச ஐக்கியத்தின் முன்னோக்கை அடிப்படையாகக் கொண்ட ஏகாதிபத்தியத்திற்கு எதிரான போராட்டத்திற்கு கட்டாயம் தன் அர்ப்பணிப்பைக் கொண்டிருக்க வேண்டும்.

ஐக்கிய அமெரிக்க அரசுகளில் அத்தகைய கட்சி இருக்கிறது. அதுதான் சோசலிச சமத்துவக் கட்சி, அது நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவுடன் அரசியல் ஐக்கியத்தைக் கொண்டிருக்கிறது. அதில் சேருவது பற்றி எண்ணிப்பார்க்குமாறு உங்கள் அனைவரையும் நான் கேட்டுக்கொள்கிறேன்.

### குறிப்புக்கள்:

1.வறுமைத் தளம், வறுமை ஒழிப்பும் உலக வங்கியும், உலக வங்கி உத்தியோகபூர்வ சாராம்சம்.
2. நூரம்பேர்க் விசாரணைகளில் ஒரு பகுதி (நியூ யோர்க், 1992), பக்கம். 641.
3. அதே நூல்,பக்கம் 51.
4.அதே நூல், பக்கம் 51-52.
5.ஸ்டென்லி வின்றப், *மக் ஆதரின் யுத்தம்: கொரியாவும் ஒரு அமெரிக்க வீரரின் நிராகரிப்பும்* (நியு யோர்க், 2000) பக்கம். 253-54.
6.வெளியுறவு, 70ம் பாகம். இல *1, 191*, பக்கம் 33.
7. லியோன் ட்ரொட்ஸ்கியின் படைப்புகள் 1933-34 (நியு யோர்க், 1998) பக்கம் 302.
8. நியு யோர்க், *1991.* பக்கம் 210-11.
9. நியு யோர்க், 2002, பக்கம் 153.

# சர்வதேச சங்கத்திற்கு உண்மையில் நிகழ்ந்தது என்ன?

டேவிட் நோர்த்
20 செப்டெம்பர் 2002

அமெரிக்க இதழியமை (journalism) உள்ளடக்கிக் கொண்டிருக்கும் புத்திஜீவி மற்றும் ஒழுக்க ரீதியானவற்றுக்கு தரிசாய்ப்போன நிலத்தில், பண்டிதர்கள் என்று கூட பெயர்பெற்ற செய்தித்தாள் பத்தியாளர் குழுவால் ஆக்கிரமிக்கப்பட்டிருப்பது போன்ற ஒரு அருவறுக்கத்தக்க பகுதி, அந்த வட்டாரத்தில் வேறு கிடையாது. அவன் அல்லது அவளது குறிப்பிட்ட பணி, பொதுமக்கள் கருத்தை மழுங்கடிக்க, தவறாக வழிநடத்த மற்றும் தூண்டி விடவும் தேவையான அளவு சிடுமூஞ்சித்தனம், ஏமாற்று, துதிபாடல் மற்றும் பேரினவாதம் ஆகியவற்றை நாள்தோறும் நிர்வகித்து வருவதேயாகும்.

இந்தத் தனிநபர்கள் உளவுச் சேவைகளிலும் மற்றும் அவர்கள் நம்பிக்கையுடனும் நெருக்கமாகவும் பகிர்ந்து கொள்ளும் அரசியல் மற்றும் கூட்டுத்தாபன இடைத்தட்டுக்களில் உள்ள எண்ணற்ற ஆதரவாளர் மற்றும் நண்பர்களுடன், ஆளும் தட்டின் நீண்ட நலன்களை கொள்கைப் பிரச்சாரத்தின் பொருத்தமான வடிவங்களாக மொழிபெயர்க்கின்றனர். அங்கு —ஜனாதிபதி மற்றும் துணை ஜனாதிபதி உட்பட, புஷ் நிர்வாகத்தில் உள்ள முன்னணி நபர்களின் நம்பத்தகாத நிதி கொடுக்கல் வாங்கல்களை (அவர் அவர்களை குற்றம்புரிவோர் என முத்திரை குத்துவதினின்று தவிர்க்கிறார்) அம்பலப்படுத்துவதில் தனிப்பட்ட துணிவின் கருத்துப்பாய்ச்சலைக் காட்டிய மற்றும் ஒரு சில பத்திகளை அர்ப்பணிக்காத, *நியூயோர்க் டைம்ஸின்* போல் க்ருக்மன் போன்ற—ஒரு சில விதிவிலக்கானவர்கள் இருக்கின்றனர். ஆனால் க்ருக்மன் குறிப்பிடத்தக்கவர் ஏனெனில் அவரைப்போன்றோர் அங்கு அரிதாவர். பெரும்பாலான பகுதியைப் பொறுத்தவரை, அமெரிக்க செய்தித்தாள்களின் பத்திகள் பிற்போக்கு மற்றும் பழிபாவங்களுக்கு அஞ்சாத கயவர்களால் எழுதப்படுகின்றன.

இந்த அவதானிப்பிற்கான சம்பவம் நேற்றைய வாஷிங்டன் *போஸ்ட்டில்* வெளியிடப்பட்ட, அமெரிக்க இதழியல் துறையில் உள்ள, மிக வேண்டாச் சுவையுள்ள நபர்களுள் ஒருவரான, ஜோர்ஜ். எப்.வில் எழுதிய ஒரு பந்தி ஆகும். கிட்டத்தட்ட கால்நூற்றாண்டாக வில் ஒரு உயர் நோக்கத்திற்காக தன்னை அர்ப்பணித்துக் கொண்டதோடு, அவர் அதில் ஒருபோதும் ஊசலாடவில்லை: அது செல்வந்தர்களின் நலன்களைக் காப்பதேயாகும். அவர்களின் சார்பில் அவர் அளித்துவரும் சேவைக்காக அளிக்கப்பட்ட பெருமளவிலான வெகுமதிகளால், திரு. வில் தாமே மிகப் பெரிய செல்வந்தர் ஆனார்.

இப்பொழுது ஜோர்ஜ் வில்லின் பத்தியை சுருங்கப் பார்ப்போம். இது பிற்போக்குப் பண்டிதர்களின் புகழ்பெற்ற கவன ஈர்ப்புத் தந்திரங்களுள் ஒன்றின் எடுத்துக்காட்டாக மட்டுமே குறிப்பிடத்தக்கதாக இருக்கிறது —அதாவது, அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் நடவடிக்கைகளை நியாயப்படுத்த வரலாற்று ஒப்புமைகளை தவறாகப் பயன்படுத்தலாகும். உலக சோசலிச வலைத் தளத்தில் வெளியான அண்மைய கட்டுரை, முனிச்சில் ஹிட்லரின் அரசியல் நடத்தைக்கு மிகவும் ஒத்ததான நடத்தையை அமெரிக்க ஏகாதிபத்திய தலைவர்களால் எடுத்துக்காட்டிய போதிலும், "ஆக்கிரமிப்பாளி" சதாம் ஹூசைனுக்கு எதிரான அமெரிக்கப் போருக்கான ஒரு வாதமாக, அரசாங்கமும் பத்திரிக்கைகளும் 1938ல் முனிச்சில்பிரிட்டனும் பிரான்சும் ஹிட்லருக்கு சரணாகதி அடைந்ததை மாற்றமின்றி வணங்கிப் போற்றியதைப் பற்றிக் குறிப்பிட்டது. (பார்க்க: <u>புஷ் நிர்வாகத்துக்கு யுத்தம் அவசியம்</u>)

கடந்த வாரத்தில், சர்வதேச சங்கம் (League of Nations) பற்றிய ஒரு புதிய வரலாற்று ஒப்புமை பத்திரிகைகளில் தோற்றுவிக்கப்பட்டது. இந்தக் கருத்தானது ஐக்கிய நாடுகளின் பொதுச் சபையின் முன்னால் நிகழ்த்தப்பட்ட ஜனாதிபதி புஷ்சின் உரையில் வரவேற்பைப் பெற்றுக்கொண்டதை அடுத்து, அரசாங்கத்தின் ஆதரவைப் பெற்றது. ஐக்கியநாடுகள் சபையானது ஈராக்கிற்கு எதிரான அமெரிக்கப் போரின் பின்னால் நிற்காவிட்டால் சர்வதேச சங்கம் போல ஐ.நா.வும் தோல்வியுறும் என புஷ் எச்சரித்தார். இந்த வலியுறுத்தலை தனது ஒப்புமைக்கான விரிவான ஆதாரத்தைக் கொண்டு ஆதரிக்க அவர் முயற்சிக்கவில்லை.

தவிர்க்க முடியாமல், மிகவும் மரியாதைக்குரிய வரலாற்று மாணவர் —ஐக்கிய அமெரிக்க அரசுகளின் ஜனாதிபதி— எதைக் கூறிக் கொண்டிருந்தார் என்பதைப் பற்றி விளக்குவதை திரு. வில் தானே எடுத்துக் கொண்டார்.

"ஈராக்கில், ஐக்கிய நாடுகள் சபையானது அதன் அபிசீனியாவை சந்தித்துக் கொண்டிருக்கிறது" என திரு. வில் போதித்தார். "முசோலினியின் இத்தாலி, எத்தியோப்பியாவை ஆக்கிரமித்த, மற்றும் ஐக்கியநாடுகள் சபையின் முன்னோடியான சர்வதேச சங்கம், சர்வதேச ஒழுங்கின் கருவி என்ற வகையில் இலாயக்கற்றதாக நிருபிக்கப்பட இருந்த 1935ல், எத்தியோப்பியா அவ்வாறுதான் அழைக்கப்பட்டது."

திரு. வில் தமது பத்திகளை எழுதும்போது உதவுவதற்காக பெருந்திரளான ஆய்வாளர்களின் படையைக் கொண்டுள்ளார். ஆனால் அவர்கள் சர்வதேச சங்கம் பற்றியதில் இருந்து அவரை விலகி இருக்குமாறு ஆலோசனை கூறி இருந்திருப்பார்களாயின் அவர்கள் இன்னும் சிறப்பாக சேவை செய்திருக்க முடியும். உண்மைகள் பற்றிய விடயத்தில் முறையான கவனம், முறையான வரலாற்று உள்ளடக்கம், மற்றும் அக்கறையுடனும் ஆய்வு செய்யும் பொழுது, *1935* சம்பவங்கள் ஐக்கிய அமெரிக்க அரசுகளுக்கு எதிராகப் பேசுகின்றன.

முதலாவதாக, ஐக்கிய அமெரிக்க அரசுகள் சர்வதேச சங்கத்தில் ஒருபோதும் இணையவில்லை என்பது நினைவு கூரப்பட வேண்டும். அச்சங்கத்தினை அமைப்பதற்கு பிரதான நோக்கங் கொண்டவர்களுள் ஜனாதிபதி உட்ரோவில்சனும் ஒருவராக இருந்த போதும், அமெரிக்க செனெட் அதன் உருவாக்கத்திற்கு வழிவகுத்த உடன்படிக்கையை நிராகரித்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த நிராகரிப்பானது ஏகாதிபத்திய சகல நாடுகளின் பரஸ்பரங்களில், அமைதியின் பரஸ்பர அடித்தளத்தின் அடிப்படை பலவீனங்களில் ஒன்றை வெளிச்சம் போட்டுக் காட்டியது. அது அதி உயர் தேசிய நலன்களை மீறும் ஏதாவது ஒன்றை சர்வதேச கருத்தொருமைப்பாட்டுக்கு கீழ்ப்படியச் செய்வதற்கு பிரதான முதலாளித்துவ சக்திகளுக்கு அழுத்தம் கொடுக்கும் சக்திமிக்க வழிமுறைகள் எதுவும் இல்லாமையேயாகும்.

1929ல் வோல்ஸ்ட்ரீட் வெடிப்புடன் ஆரம்பமான உலகப் பொருளாதார நெருக்கடியின் போது, சர்வதேச சங்கமானது பிரதான ஏகாதிபத்திய சக்திகளுக்கிடையிலான தீர்க்கமுடியாத மோதல்களால் சிதறுண்டு போனது. 1931ல் பயங்கரவாத நடவடிக்கை (தென் மஞ்சூரிய புகையிரத பாதையின் ஒரு பகுதியை அழித்தல்) என குறிப்பிடப்படும் சம்பவத்தை, ஜப்பானிய இராணுவம் மஞ்சூரியாவைக் கைப்பற்றுவதற்கான சாக்குப் போக்காக பற்றிக் கொண்ட போது, சீனா சர்வதேச சங்கத்தை பிரச்சினையில் தலையிடுமாறு அழைத்தது. ஆனால் சீனா உடன்படிக்கை விதிமுறைகளை மீறி இருந்தது என பொய்யாகக் கூறிக் கொண்டு ஜப்பானியர்கள் அனைத்து சாதனங்களையும் நிராகரித்தனர்.

> சர்வதேச சங்கம் "தோல்வி" கண்டது, பலவீனமான மற்றும் குறை வளர்ச்சி நாடுகள் சர்வதேச சட்டத்திற்கு கட்டுப்பட மறுத்ததால் அல்ல. அதைவிட, பிரதான ஏகாதிபத்திய அரசுகள் தங்கள் நலன்களை முன்னெடுக்கும் போது வன்முறையைக் கைவிடுமாறு நிர்ப்பந்திக்கக்கூடிய வழிமுறைகள் எதுவும் இல்லாமையேயாகும்.

ஏனைய பிரதான ஏகாதிபத்திய வல்லரசுகளான, குறிப்பாக பிரிட்டனும் பிரான்சும் (சங்கத்துடன் பகுதியளவு இணைந்திருந்தபோதும் ஐக்கிய அமெரிக்க அரசுகளும் கூட) இந்தக் கட்டத்தில் ஏகாதிபத்திய ஜப்பானுடன் மோதுவது உசிதமானதுதானா என்பதை எண்ணிப் பார்க்கவில்லை. அது யுத்தத்துக்குச் செல்ல விருப்பம் கொண்டிருக்கும் வரையும், பெரிய வல்லரசுகளின் நலன்கள் நேரடியாகப் பாதிக்கப்படாதிருக்குமானால், சங்கமானது இவ்வொரு பிரதான ஏகாதிபத்திய நாடு ஒரு பலவீனமான, அயல் நாட்டை ஆக்கிரமிக்கும் நாட்டின் அதன் வழியில் செல்வதிலிருந்து தடுக்க தலையீடு செய்யவில்லை.

இப்பொழுது எத்தியோப்பியாவைப் பற்றிப் பார்ப்போம். 1935 அக்டோபரில், அந்த ஆபிரிக்க நாடு மீதான இத்தாலியின் பேரழிவான ஆக்கிரமிப்பானது அந்த தசாப்தத்தின் முடிவில் முழு அளவிலான போர் வெடிப்புக்கான சூழ்நிலைகளைத் தூண்டிய ஏகாதிபத்திய போட்டியுணர்வுகளும் மற்றும் காட்டுமிராண்டித்தனத்துக்கும் மற்றொரு எடுத்துக்காட்டாகும். இராணுவ பலப்பரீட்சை காண்பிக்கும் காட்சியுடன், தொன்மையான பிரத்தியேக ஆட்சிக்கு புது வழி அளிக்கும் நோக்கத்திற்காக இத்தாலிய ஆக்கிரமிப்புக்கு சர்வாதிகாரி முசோலினி ஆணையிட்டார். அது நிச்சயமாய் பிரிட்டன் மற்றும் பிரான்சின் அனுமதியின்றியே சாத்தியமற்றதாக இருந்திருக்கும். பேர்லினில் உள்ள நாஜி ஆட்சியின் வளர்ச்சி கண்ட அச்சுறுத்தல் ஏகாதிபத்திய குறிக்கோள்களுக்கு எதிராக முசோலினியின் ஆதரவை வென்றெடுக்க பிரெஞ்சு மற்றும் பிரிட்டிஷ் அரசாங்கங்கள் கிழக்கு ஆபிரிக்காவில் முசோலினியின் குறிக்கோள்களுக்கு நம்பிக்கையுடன் ஊக்கமளித்தன. அபிசீனியாவை படிப்படியாக இத்தாலிய ஆட்சிக்குட்பட்ட பகுதியாக மாற்றுவதை பிரிட்டனும் பிரான்சும் ஆட்சேபிக்காது என்ற தெளிவான குறிகாட்டல்கள் முசோலினிக்கு கொடுபட்டது.

ஆனால் முசோலினி ஒரு இராணுவ வெற்றியை விரும்பியபோது, அவரது ஆக்கிரமிப்பு பிரான்ஸ் மற்றும் பிரிட்டனுடனான அவரது உறவுகளில் இறுபாடுகளை ஏற்படுத்தியது. அவை சர்வாதிகாரியின் எல்லாப்புற நோக்கங்களுக்கு ஆட்சேபனையை வழங்கவில்லை, மாறாக அவற்றை அடைவதற்கு அவர் பயன்படுத்திய வழிமுறைகளுக்கு ஆட்சேபம் எழுப்பின. இத்தாலி, தன் பங்குக்கு, 'இந்தப் பிரச்சினை தீர்க்கமான நலன்களைப் பற்றியதாலும் இத்தாலியின் பாதுகாப்பு மற்றும் நாகரிகத்திற்கு முதன்மை முக்கியத்துவம் கொண்டிருப்பதாலும்', எத்தியோப்பியாவில் தனக்கு பொருத்தமானதாக அது உணரும் நடவடிக்கைகளையும் எடுக்கும் உரிமை கொண்டிருந்ததாக வலியுறுத்தியது.

இத்தாலியின் ஆக்கிரமிப்பிற்கு உடந்தையாய் இருந்த தங்களின் பாத்திரத்தை மூடிமறைப்பதற்கு ஆர்வத்துடன் இருந்த பிரிட்டனும் பிரான்சும் எத்தியோப்பியா மீதான ஆக்கிரமிப்பைப் பற்றி சர்வதேச சங்கத்தின் கண்டனங்களை இணைத்தன. ஆனால் இந்த பயனற்ற கண்டனத்தை செயல்படுத்துவதற்கு ஒன்றும் செய்யப்படவில்லை. ஏனென்றால் பிரதான ஏகாதிபத்திய வல்லரசுகளில் ஒன்று கூட எத்தியோப்பியாவின் சுதந்திரத்தைப் பாதுகாப்பதில் எந்த உண்மையான அக்கறையையும் கொண்டிருக்கவில்லை. அதன் தலைவரான பேரரசர் ஹைலி செலாசி, 'தேவையானபோது பயன்படுத்த ஆயுதங்களை அனுப்பும் வகையில் பெருமளவைக் காத்திருக்கும் நிதி, தொழில் மற்றும் தொழில்நுட்பம் கிடைக்கக்கூடிய, நாற்பத்திரண்டு மில்லியனுக்கும் மேலான ஆட்களைக் கொண்டு நடத்தும் அரசாங்கத்திற்கும், மற்றொரு பக்கம் ஆயுதங்கள் இல்லாத, வளங்கள் இல்லாத..... பன்னிரண்டு மில்லியன் மக்களைக் கொண்டுள்ள சிறிய நாட்டிற்கும் இடையிலான சமனற்ற போராட்டத்தில்' ஆதரவு வேண்டி சர்வதேச சங்கத்திற்கு பகிரங்கமாக வேண்டுகோள் விடுத்தார்.

பிரிட்டிஷ் மற்றும் பிரெஞ்சு ஏகாதிபத்தியங்களுக்கு எளிதில் வளைந்துபோகும் கருவியான, சர்வதேச சங்கம் எத்தியோப்பியாவுக்கு அடிப்படை ரீதியாக ஒன்றும் உதவவில்லை. அது அனுமதித்த மிக மட்டுப்படுத்தப்பட்ட பொருளாதாரத் தடைகள், முசோலினியின் இராணுவ இயந்திரம் தங்கி இருக்கும் இத்தாலிக்கு எண்ணெய் ஏற்றுமதிகளைத் தடைசெய்வதை உள்ளடக்கவில்லை. மற்றும் இத்தகைய எண்ணெய்க்குப் பிரதான வழங்குநராக இருந்தது யார்? அது எத்தியோப்பியப் போரின்பொழுது இத்தாலிக்கு அதன் எண்ணெய் ஏற்றுமதிகளை இரட்டிப்பாக்கிய ஐக்கிய அமெரிக்க அரசுகளைத் தவிர வேறு யாரும் இல்லை.2

சர்வதேச சங்கம் 'தோல்வி' கண்டது, பலவீனமான மற்றும் குறை வளர்ச்சி நாடுகள் சர்வதேச சட்டத்திற்கு கட்டுப்பட மறுத்ததால் அல்ல. அதைவிட, பிரதான ஏகாதிபத்திய அரசுகள் தங்கள் நலன்களை முன்னெடுக்கும் போது வன்முறையைக் கைவிடுமாறு நிர்ப்பந்திக்கக்கூடிய வழிமுறைகள் எதுவும் இல்லாமையேயாகும்.

1935 சம்பவங்களில் இருந்து ஒரு முடிவை பெறப்படுமாயின், அது ஈராக் எத்தியோப்பியாவின் பாத்திரத்தை வகித்துக் கொண்டிருக்கின்றது, இத்தாலியின் பாத்திரத்தை ஐக்கிய அமெரிக்க அரசுகள் வகித்துக்கொண்டிருக்கின்றன. இங்கிலாந்து மற்றும் பிரான்சின் பாத்திரங்களை.... இங்கிலாந்தும் பிரான்சும் சிறந்த முறையில் வகிக்கின்றன.

திரு. புஷ், இதுதான் இன்றைக்கான உங்களது வரலாற்றுப்பாடம்.

குறிப்புகள்:

அமெரிக்க வரலாற்றாசிரியர் வில்லியம் கெய்லர் மஞ்சூரியா மீதான ஜப்பானிய ஆக்கிரமிப்புக்கு ஏகாதிபத்திய பதிலின் ஒரு சுருக்கமான விளக்கத்தைத் தருகிறார். அவர் எழுதுகையில், அமெரிக்க அரசாங்கம் 'சீனாவுடனான அமெரிக்க வணிகத்தை மற்றும் கோமிண்டாங் கட்டுப்பாட்டுடன் உள்ள சீனாவின் மதிப்பளிக்க எஞ்சிய எதுவித முதலீட்டை பின்னணியில் வைத்து 1930களின் எஞ்சிய பகுதி முழுவதும் ஜப்பானுக்கான மூலோபாயப் பொருட்களின் அமெரிக்க ஏற்றுமதிகளை துறைகள் தொடர்ந்தது. 'பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் நிலை கொஞ்சம் சிறப்பானது. பிரிட்டன் அதன் தேசிய நலன்களுக்கு குறிப்பிட்ட முக்கியத்துவம் இல்லாத இடத்திலிருந்து அதனை இடம்பெயரச் செய்யாத நடவடிக்கை முயல மறுத்துக்கொண்டு ஆரம்பத்தில் ஜப்பானுடன் தொடர்ந்த அமைதி மனப்பான்மையைக் கூட காட்டியது. லண்டனில் உள்ள சில அதிகாரிகள் கிழக்கு ஆசியப் பிரதேசத்திலிருந்து ஒரு பலமான திசைதிருப்பலாக வடக்கு சீனாவில் போக்கிடமின்றி அதிகரிக்கும் இராணுவத் தலையீட்டை வரவேற்கக் கூடச் செய்தனர். கிழக்கு ஆசியா ஹொங்கொங்கிலிருந்து தெற்காக சிங்கப்பூர் வரை விரிந்து கிடக்கும் பகுதி ஆகும். அது பிரிட்டனின் பொருளாதார மற்றும் மூலோபாய அடித்தளத்தில் காரியமான அளவு அக்கறைக்குரியதாக இருந்தது. மஞ்சூரிய நிகழ்ச்சி முழுவதும் கிழக்கு ஆசிய மீதான பிரிட்டனின் கொள்கையானது ஆங்கிலேய ஜப்பானிய வர்த்தக மற்றும் மூலோபாய நலன்களின் செல்வாக்கு மண்டலத்துள் முழு பிரதேசத்தையும் பங்குபோட திருப்திப்படுத்தும் பகுதிகளை அடைவதற்கான குறிக்கோளால் வேலைத்திட்டம் செய்யப்பட்டது.' எனக் குறிப்பிடுகின்றார். [*The Twentieth Century World: An International History*. (New York and Oxford, 1986), p. 233.

2மேலது, பக்கம் 151

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புஷ் நிர்வாகத்துக்கு யுத்தம் அவசியம்

டேவிட் நோர்த்
*18 செப்டெம்பர் 2002*

ஐக்கிய நாடுகளின் ஆயுதப் பரிசோதகர்கள் மீண்டும் வருகை தருவதை ஈராக்கிய அரசாங்கம் எந்தவித நிபந்தனைகளுமின்றி அனுமதிப்பதானது, வேறு எதையும அடையாவிட்டாலும் தற்போதைய அனைத்துலக அரசியலின் மிக அடிப்படையான உண்மையை அம்பலப்படுத்துகிறது. அது புஷ் நிர்வாகத்துக்கு யுத்தம் அவசியம் என்பதையேயாகும். "பரந்த மக்களை அழிக்கும் ஆயுதங்கள்" என்ற அதன் பாசாங்குக் கூற்றானது, வேறெதுவுமன்றி மக்கள் மத்தியில் யுத்தத்தை நியாயப்படுத்துவதற்கான வழிமுறையை உற்பத்தி செய்வதாகும். அது ஐ.நா.வால் அலட்சியம் செய்யப்பட வேண்டும் எனும் ஈராக்கிய வெளியுறவு அமைச்சரின் ராஜதந்திர குறிப்புக்கு புஷ் நிர்வாகமானது கோபத்துடன் பதிலிறுத்தது. ஏனெனில், சதாம் ஹுசைனின் விட்டுக் கொடுப்பானது, ஐக்கிய அமெரிக்க அரசுகளுக்கு ஈராக்கை ஆக்கிரமிப்பதற்கும், அதன் அரசாங்கத்தை அழிப்பதற்கும், அதன் எண்ணெய் வயல்களைக் கைப்பற்றுவதற்கும் மற்றும் அந்நாட்டை செயல்முறை அளவில் அரைக்காலனித்துவ அந்தஸ்தில் இருத்துவதற்குமான போலி-சட்டரீதியான சாக்குப்போக்கின் மூடிமறைப்பை இல்லாமல் செய்யும் என்பதை அது அறியும்.

ஐக்கிய நாடுகள் சபையில் புஷ் நிர்வாகத்தால் கடந்த வாரம் கையாளப்பட்ட சூழ்ச்சிமுறைகள், ஈராக்கால் ஒருபோதும் உடன்பட முடியாத, ஆத்திரமூட்டும் மற்றும் கடுமையான தீர்மானங்களை பாதுகாப்பு சபையின் மூலமாக திணிக்கும் நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டிருந்தன. மேலும் முடிவானது, ஈராக் உடன்பட்டதா அல்லது இல்லையா என்பதைத் தீர்மானிப்பதை ஐக்கிய அமெரிக்க அரசுகளிடம் விட்டு விடும். இந்த ஏற்பாடானது நாட்கள் அளவில் இல்லை என்றாலும் சில வாரங்களினுள், ஐக்கிய அமெரிக்க அரசுகளுக்கு தவிரிர்க்க முடியாதபடி யுத்தத்துக்கான காரணத்தை வழங்கும் என்பதில் புஷ் நிர்வாகம் நம்பிக்கை கொண்டிருந்தது. ஈராக் "உடன்படவில்லை" மற்றும் குரோதங்களை உக்கிரப்படுத்தியது என அது சாதாரணமாக பிரகடனப்படுத்தக் கூடும்.

தற்போது வேடம் சற்று கலைக்கப்பட்டிருந்தாலும், ஐக்கிய நாடுகள் சபை அமெரிக்க அழுத்தத்திற்கு விரைவில் வளைந்து கொடுக்காது என நம்புவதற்கு எந்தவொரு காரணமும் கிடையாது. புஷ் நிர்வாகமானது தனக்கு விருப்பமானவற்றை, அதாவது முடிவுகள் மற்றும் யுத்தம் இரண்டையும் எடுத்துக்கொள்ளும்.

அரை நூற்றாண்டுகளுக்கும் மேலாக ஒவ்வொரு நிர்வாகமும், தனது சொந்த ஆக்கிரமிப்பு ஏகாதிபத்திய அரசியலை நியாயப்படுத்துவதற்கான 1938 மியூனிச் பயங்கரத்தை பூஜித்து வந்துள்ளன. 1938ல் பிரிடிஷ் பிரதமர் நெவில்லே சேம்பல்லெய்ன், ஹிட்லரின் வற்புறுத்தலுக்கு இணங்கி செக்கோஸ்லோவேக்கியாவை நாஸிகளிடம் கையளித்தார். அமெரிக்கா, தனது நடவடிக்கைகளை ஆக்கிரமிப்பு விரோத போர்வையால் மூடிக்கொள்வதை வழமையாகக் கொண்டுள்ளது. ஆனால், புஷ்சை ஈவிரக்கமற்ற கொடுங்கோலனுடன் சமரசம் செய்து கொள்ளுபவருக்கு எதிராக பொட்டலில் உறுதியாக நின்று கொண்டிருக்கும், சேர்ச்சிலுக்கு இணையான நவீனகால வடிவாக செதுக்கிக் காட்டும் இந்த சமீப முயற்சியானது, வேறு எந்த நிர்வாகமும் சாதித்திராத பொய்மைப்படுத்தலின் அளவைப் பெறுகிறது. புஷ் நிர்வாகத்தால் பின்பற்றப்படும் தந்திரோபாயங்கள், 1938 செப்டெம்பரில், செக் நெருக்கடியை பற்றிய மியூனிச் பேச்சுவார்த்தைகளின்போது நாஸி நிர்வாகத்தால் பயன்படுத்தப்பட்ட வழிமுறைகளை மிகவும் நெருக்கமாக நினைவுபடுத்துகின்றன.

*1938* கோடையில், பரந்த சமூகப் பொருளாதார முரண்பாடுகளுக்கு நாஸிகளிடம் அறிவுபூர்வமான தீர்வு இருந்திராத பட்சத்தில், ஹிட்லர் ஆட்சி யுத்தத்தை அவசியமான ஒன்றாக காணவிருந்தது. யுத்தத்துக்கான சாக்குப்போக்கைக் காண்பதற்கு நாஸி ஆட்சியின் முன்னணி நபர்களின் நோக்கத்தை விடவும், சுடெட்டென்லாண்ட் நெருக்கடியானது ஹிட்லர் செக்கோஸ்லோவேகியா மீதான தாக்குதலை நியாயப்படுத்துவதற்கான பற்றிக் கொண்ட சிறப்பான விஷயங்களுடன் ஷிரதானமாக, ஜேர்மன் சிறுபான்மையினரை தவறான முறையில் நடத்துவதுடி மிகவும் குறைவான தொடர்புகளையே கொண்டிருந்தன. உண்மையில் பல வரலாற்றாசிரியர்கள் விளக்கிக் காட்டியவாறு, ஹிட்லர் யுத்தத்தை தொடங்குவதற்கான நியாயப்படுத்தலைப் பெறுவதினை காட்டிலும் செக்கோஸ்லோவேகியாவிடமிருந்து சலுகைகளைப் பெறுவதில் குறைவாகவே அக்கறை கொண்டிருந்தார்.

வரலாற்றாசிரியர் அயன் கெர்ஷா, ஹிட்லரின் வாழ்க்கை வரலாறு பற்றிய அவரது சிறப்பான படைப்பில், மியூனிச்சில், சுடெட்டென்லாண்டை ஒரு தடவை கூட சுடாமல் கைப்பற்றுவதற்கு ஜேர்மனியை அனுமதித்த பிரிடிஷ் மற்றும் பிரெஞ்சு விட்டுக்கொடுப்புக்கள் நாஸி தலைவர்களை தொல்லைப்படுத்தின, என விரித்துரைக்கிறார். செக்கோஸ்லோவேகியாவை பிரிக்க அனுமதிக்கும் பத்திரங்களில் ஹிட்லர் தயக்கத்துடன் கையெழுத்திட்டார். "அவரைப் பொறுத்தவரை, அப்பத்திரம் அர்த்தமற்றதாக இருந்தது. மற்றும் அவரைப் பொறுத்தவரை மியூனிச், கொண்டாடுதற்குரிய பெரும் காரணமாக இருக்கவில்லை. கோடை முழுவதும் அவரது நோக்கமாக இருந்துகொணடிருந்த, அவர் உறுதியாய் இருந்த செக்குகளுடனான மட்டுப்படுத்தப்பட்ட யுத்தத்திலிருந்து கிடைக்கும் பெரும் வெற்றி பற்றிய விடயத்தில், தாம் ஏமாற்றப்பட்டதாக உணர்ந்தார்." [*Hitler 1936-1945: Nemesis* (New York and London, 2001), pp. 122-23].

ஜோர்ஜ் புஷ் அடால்ப் ஹிட்லராக இல்லை மற்றும் அவரது நிர்வாகம் நாஜி ஆட்சியின் அமெரிக்க இணையாக இல்லை. ஆனால் இந்த அரசாங்கத்தின் வெளிவிவகாரக் கொள்கையானது, அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் பூகோள புவி-மூலோபாய மற்றும் பொருளாதார அபிலாஷைகளை அடைவதற்கான ஒரு வழிமுறையாக போரைப் பயன்படுத்துவதற்கு மும்முரமாகக் கோரும் அமெரிக்க ஆளும் தட்டின் ஈவிரக்கமற்ற மற்றும் மூர்க்கமான பகுதிகளால் வடிவமைக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. கடந்த இரு நாட்களுக்குள் *வோல்ஸ்ட்ரீட் பத்திரிகை*யில் இடம்பெற்ற மாதிரிக் கட்டுரைகள், இந்த நிர்வாகத்தின் உள்ளேயும் அதன்மீதும் ஆழமான செல்வாக்குடைய முதலாளித்துவ வர்க்கத்தில் உள்ள சக்திகளின் கருத்துக்களை எதிரொலிக்கின்றன. செவ்வாயன்று, "போரை முடி" என தலைப்பிடப்பட்ட பத்தியில், விக்கடர் டேவிஸ் ஹேன்சன் ஐக்கிய அமெரிக்க அரசுகள் ஈராக்கை "கட்டாயம் ஆக்கிரமிக்க வேண்டும், வெல்ல வேண்டும் மற்றும் அமைதிப்படுத்த வேண்டும்" என்று எழுதினார்.

"ஈராக்கை விடுவித்தல் என்பது நடக்குமா என்பதை விட, எப்பொழுது என்பது பற்றிய கேள்வியாகவே அது அதிகமாய் இருக்கிறது" "சதாமை அழிப்பதிலான தாமதமும் கூட சில சாதகமான பலன்களை உருவாக்கி இருக்கிறது. நிர்வாகமானது அதன் போருக்கான காரணத்தை இங்கும் வெளிநாடுகளிலும் தெளிவாக்கி இருக்கிறது," என ஹேன்சன் பிரகடனப்படுத்தினார்.

அதேநாளன்று, *பத்திரிக்கை*யின் துணை ஆசிரியரான, ஜோர்ஜ் மெல்லோன், ஐக்கிய நாடுகள் சபைக்கு புஷ்ஷின் இறுதி எச்சரிக்கை "சதாம் ஹுசைனை அகற்றுவதற்கான களத்தைத் தொடங்கி வைக்கிறது" என அறிவித்தார். அவர் தொடர்ந்தார்: "எப்படி செய்யப்படும் என்பது அமெரிக்க இராணுவத்தைப் பொறுத்தது. ஆனால் இந்த நேரத்தைப் பொறுத்தவரை, நிலைமை கைக்குள் இருக்கிறது."

*திங்களன்று* வெளியிடப்பட்ட, "சதாமின் எண்ணெய்" எனத் தலைப்பிடப்பட்ட இன்னொரு கட்டுரையில், *பத்திரிகை*யானது, "எண்ணெய் விலைகளைக் கட்டுப்படுத்தி வைப்பதற்கான சிறந்த வழி, காலந்தாழ்த்தி நடத்தப்படுவதைக் காட்டிலும் விரைவில் நடத்தப்படும் ஈராக் மீதான வெற்றிகரமான போரேயாகும்" என அப்பட்டமாக வலியுறுத்திக் கூறியது.

உழைக்கும் மக்களான பரந்த வெகுஜனங்களின் மத்தியில் அமெரிக்க முதலாளித்துவத்தின் கூட்டுத்தாபன தூண்களை முற்றிலும் செல்வாக்கிழக்கவைக்கும் ஊழலுக்கு மத்தியில் மோசமடைந்து வரும் பொருளாதார நெருக்கடியுடன் தாம் முரண்கொண்டிருப்பதாகக் காணும் புஷ் நிர்வாகமானது, யுத்தத்தை ஆழமடைந்து வரும் மற்றும் எளிதில் அடக்கமுடியாதிருக்கும் உள்நாட்டுப் பிரச்சினைகளில் இருந்து கவனத்தைத் திருப்புவதாக காண்கின்றது.

நிர்வாகமானது ஈராக்கிற்கு எதிரான தனது யுத்தத்தில் நுழைவதில் வெற்றி பெற்றால், அது மிகப் பெரிய மற்றும் இரத்தம் தோய்ந்த கொடூரங்களுக்கு ஒரு முன்னோடியாக இருக்கும் என்பதை நிரூபிக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.நா சபையில் புஷ்: உலகத்துக்கு வாஷிங்டனின் போருக்கான இறுதி எச்சரிக்கை

ஆசிரியர் குழு
13 செப்டெம்பர் 2002

[illegible]

ஈராக்கிற்கு எதிரான வாஷிங்டனின் போர்த்திட்டங்களை வலியுறுத்தவும் ஐக்கிய நாடுகள் சபைக்கோ காலக்கெடு விதிக்கவும் அதாவது அமெரிக்க ஆக்கிரமிப்புக்கு ஒப்புதல் கொடு அல்லது 'சம்பந்தப்படாமல் இரு' என்று கூறவும் ஜோர்ஜ் டபிள்யு. புஷ் ஐக்கிய நாடுகள் பொதுச்சபைக்கு முன்சென்றார்.

அவரது சுலோகம் மீட்டலும் கொண்ட தெளிவு ஒருபுறம் இருக்க, அவரது முழுமையான உரை வெளிப்படையான முரண்பாட்டைக் கொண்டிருந்தது. ஐக்கிய நாடுகள் சபையின் விருப்பத்திற்கு மாறாக சதாம் ஹூசைன் செயல்பட்டதால் அவர் தண்டிக்கப்பட்டு தூக்கி வீசப்பட வேண்டும். ஐக்கியநாடுகள் சபை விரும்பினாலும், விரும்பாவிட்டாலும் அமெரிக்கா ஈராக்கை ஆக்கிரமிப்பு செய்து ஒரு கைப்பொம்மை ஆட்சியை நிறுவும். இந்த இரட்டை நிலைப்பாடு புஷ்ஷின் ஒவ்வொரு பேச்சிலும் ஊடுருவிப் பரந்துள்ளது.

அமெரிக்க ஜனாதிபதி, ஐக்கிய நாடுகள் சபையில் தோற்றமளிக்கப்போகும் தறுவாயில், பென்டகனின் அறிவிப்பு உலக அமைதி மற்றும் பாதுகாப்பு பற்றிய புஷ்ஷின் பேச்சுக்குப் பின்னால் இருக்கும் சண்டையிடும் குணத்தின் சாரத்தை கோடிட்டுக் காட்டியது. அதாவது புளோரிடாவில் உள்ள அமெரிக்க மத்திய ஆணையக தலைமையகத்தில் இருந்து ஜெனரல் டாமி பிராங்ஸின் தலைமையின் கீழ் 600 அதிகாரிகள் பாரசீக வளைகுடா நாடான கத்தாருக்கு அனுப்பப்படுவார்கள், அங்கே அவர்கள் ஒரு முன்னிலை போர் ஆணையகத்தை அமைப்பார்கள். இந்த அறிவிப்பு செய்யப்பட்ட நேரமானது வாஷிங்டனின் நோக்கங்கள் பற்றி எந்த ஐயங்களும் இருக்கக்கூடாது என்ற எண்ணம் கொண்டது.

மிகவும் வெளிப்படையாக சொல்லாமல் புஷ் உள் அர்த்தத்துடன் கோரிக்கை விடுத்தார். அதாவது ஒருசில வாரங்களுக்குள் ஐக்கிய நாடுகள் சபையின் ஆயுத பரிசோதகர்கள் ஈராக்கினுள் சென்று அங்கு தங்கு தடையின்றி அவர்கள் எந்தவிதமான அனைத்து ஆயுதக்கிடங்குகளுக்கும் செல்ல அனுமதிக்க வேண்டும் என்று ஈராக்கிற்கு கட்டளை இடும் தீர்மானம் ஒன்றை ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபை நிறைவேற்ற வேண்டும் என்பதாகும். அவ்வாறான ஒரு தீர்மானம், ஈராக் முழுமையாக இணங்கத் தவறும் பட்சத்தில் இராணுவப் படையைப் பயன்படுத்த முன்னதாகவே ஒப்புதல் அளிக்கும்.

அதேசமயம் புஷ், அப்படியான ஒரு தீர்மானம் கொண்டு வரப்படுவது, பாக்தாத் இணங்கினாலும் இணங்காவிட்டாலும் அமெரிக்கா ஆக்கிரமிப்பு செய்யவும் வாஷிங்டனுக்கு கீழ்ப்படியும் ஒரு கைப்பொம்மை அரசாங்கத்தை நிறுவுவதற்குமான முன்னோடியாகத்தான் இருக்கும் என தெளிவாகக் கூறினார்.

புஷ்ஷின் உரை பொய்கள், திரிபுகள் மற்றும் முரண்பாடுகளின் ஒரு தொகுப்பு ஆகும். அது ஈராக்கிற்கு எதிரான அமெரிக்கப் போரின் கருத்துக்களை ஊடுருவிப் பரவுகிறது. அது உலக அமைதிக்கும் பாதுகாப்புக்கும் பெரும் அச்சுறுத்தலாக ஈராக் அரசாங்கம் உள்ளது என்ற முட்டாள்தனமான அடிப்படையில் தங்கி உள்ளது. அப்படியான ஒரு அச்சுறுத்தல் மிகவும் கடுமையானது மிகவும் உடனடியானது என்பதால் உடனடி இராணுவ நடவடிக்கை தேவையானது என்பதாகும்.

சதாம் ஹூசைன் தனிநபர் ஹிட்லர் என்ற அமெரிக்காவின் கூற்றை புஷ் வலியுறுத்தினார், ஐக்கிய நாடுகள் சபை நிறுவப்பட்டது ஏனெனில், அதன் மூலமாக 'உலக அமைதி' மீண்டும் எப்பொழுதுமே 'எந்த ஒரு மனிதனின் விருப்பத்தின் பேரிலும் கெட்ட எண்ணத்தினாலும் அழிக்கப்படமாட்டாது' என்று அவர் பிரகடனம் செய்தார். 'ஈராக் அரசாங்கமானது எப்படியான ஒரு ஆக்கிரமிப்பு அச்சுறுத்தலை எதிர்கொள்ள ஐக்கியநாடுகள் சபை உருவாக்கப்பட்டதோ திட்டவட்டமாக அந்த தன்மை உடையதாகும்' என்றார் அவர்.

அப்படியான கூற்றுக்களின் வக்கிரத்தை உள்ளெடுத்துக் கொள்வதற்கு நிறைய விமர்சன மதிப்பீடுகள் வேண்டியதில்லை. ஈராக் ஒரு வறுமையான முன்னைய காலனித்துவ நாடாகும், அது போரில் தோற்கடிக்கப்பட்டதோடு ஒரு பத்தாண்டுகளுக்கு மேற்பட்ட பொருளாதாரத் தடைகளால் சிதறடிக்கப்பட்டது. அதன் பாதுகாப்புகள் 1991 வளைகுடாப் போரில் இருந்து நொறுக்கப்பட்டன. முழுமையாக பாதுகாப்பு இல்லாத ஒரு நாட்டுக்கு எதிராக அமெரிக்கா இடைவிடாது— இராஜதந்திர, பொருளாதார மற்றும் இராணுவ — போரை நடத்திவருகிறது. அநேகமாக நாளாந்த அடிப்படையில் அது வடக்கு மற்றும் தெற்கு ஈராக்கில் உள்ள இராணுவம் மற்றும் மக்கள் வாழும் பகுதிகள் மீது குறிவைத்து குண்டுகள் வீசுவதைத் தொடர்ந்து செய்கிறது.

உலகிலேயே மிகவும் சக்திவாய்ந்த ஏகாதிபத்திய நாட்டுக்காக புஷ் பேசுகிறார். அது மிகவும் முன்னேறிய மற்றும் பரந்த மக்களின் அழிவை ஏற்படுத்தக் கூடிய மரண ஆயுதங்கள் முழுவதையும் கொண்டு ஆயுதபாணியாக உள்ளது. அது சவால்விட முடியாத அதன் இராணுவ பலத்தைப் பயன்படுத்தி மிகவும் பலவீனமான மற்றும் சிறிய நாடுகளை அழித்தது, 1960கள் மற்றும் 70களில் வியட்நாமை நாசப்படுத்தியது, மற்றும் இரு தசாப்த காலத்தில் வேறும் பல நாடுகளை லெபனான், கிரெனடா, லிபியா, பனாமா, ஈராக், சோமாலியா, சூடான், யூகோஸ்லாவியா மற்றும் ஆப்கானிஸ்தான் ஆகியவற்றை — தாக்கியது.

அது தற்போது உலகம் முழுவதும் டசின் கணக்கான இடங்களில் இராணுவப் படைகளை நிறுத்தி உள்ளது. கடந்த வருடத்தை ஆப்கானிஸ்தான் மீது குண்டு போடுவதற்கு செலவிட்டது— ஆயிரக் கணக்கான மக்களைக் கொன்றது, கைப்பற்றப்பட்ட நூற்றுக்கணக்கான தலிபான் மற்றும் அல்கொய்தா இராணுவத்தினரைப் படுகொலை செய்தது.

ஜேர்மனியின் நாஜி அரசாங்கத்துடன் வரையறை செய்யக்கூடிய தோற்றங்களில் ஒன்று அதன் மூர்க்கமான இராணுவவாதமும் மற்றும் சர்வதேச சட்டம், உலக அபிப்பிராயம் பற்றிய இழிவான பார்வை ஆகும். புஷ் நிர்வாகம், தான் அதன் வெளிநாட்டுக் கொள்கையின் அடிப்படை அம்சமாக இராணுவப் படையைப் பயன்படுத்துவதன் மூலமாக தற்போதைய எந்த அரசாங்கத்தையும் விட, ஹிட்லர் அரசாங்கத்தைப் போன்று இருக்கிறது. ஐக்கியநாடுகள் சபையில் புஷ்ஷின் நடவடிக்கையானது சர்வதேச சட்டம் தொடர்பாக அவரது அரசாங்கத்தின் ஆணவப் புறக்கணிப்பையும் பொறுப்பின்மையையும் எடுத்துக்காட்டுகிறது.

ஈராக் இரசாயன, உயிரியல் மற்றும் அணு ஆயுதங்களைக் குவிக்கிறது என்ற குற்றச்சாட்டுக்கான ஆதாரத்தை முன்வைக்க எந்த முயற்சியையும் புஷ் எடுக்கவில்லை, அப்படிச் செய்ய வேண்டிய அவசியம் இல்லை என்ற நிலைப்பாட்டை அவரது நிர்வாகம் எடுக்கிறது. வாஷிங்டனின் வார்த்தையை அப்படியே ஏற்றுக் கொள்ள வேண்டும் என அமெரிக்கா மற்றும் உலகில் உள்ள மக்களுக்கு கூறப்பட்டுள்ளது.

இந்த நிலைப்பாட்டிற்கான தெளிவான விளக்கம் என்னவென்றால், அமெரிக்காவிடம் அதன் குற்றச்சாட்டுக்களை நிரூபிப்பதற்கு முக்கியமான ஆதாரம் எதுவும் கிடையாது. ஐக்கிய நாடுகள் சபையில் புஷ் பேசுவதற்கு ஒரு நாள் முன்னதாக, ஈராக்கின் அணு, இரசாயன மற்றும் உயிரியல் திறன்கள் பற்றிய ஒரு புதிய தேசிய உளவு அறிக்கையை திட்ட அரசாங்கம் தவறி விட்டது என அமெரிக்கப் புலனாய்வுத்துறை அதிகாரிகள் ஒப்புக் கொண்டனர். அப்படியானதொரு இடை முகவாண்மையின் (cross agency) ஆய்வு இறுதியாக இரண்டு வருடங்களுக்கு முன்புதான் செய்யப்பட்டது. செனெட் புலனாய்வுக் குழுவுக்கு தலைமை வகிக்கும் புளோரிடா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்த பொப் கிரகாம், கடந்த ஜூலையில் ஒரு புதிய மதிப்பீட்டுக்கு வேண்டுகோள் விடுத்தார். ஆனால் பலன் கிடைக்கவில்லை.

"எங்களை நம்புங்கள் இல்லாவிட்டால்" என்ற அமெரிக்க அரசாங்கத்தின் தற்போதைய பாவனையை, அக்டோபர் 1962ல் கியூபா ஏவுகணை நெருக்கடியின்போது கென்னடி நிர்வாகம் எடுத்த அணுகுமுறையுடன் ஒப்பிடுவது அறிவூட்டத்தக்கதாக இருக்கும். அந்த சமயத்தில் கியூபாவுக்கு எதிராக இராணுவ நடவடிக்கை மேற்கொள்வதற்கு முன்பு, கியூபா சோவியத் ஏவுகணைகளை நிறுத்தி உள்ளது என்பதற்கு தெளிவான ஆதாரத்தை ஐக்கிய நாடுகள் சபைக்கு போவதற்கு முன்பு காண்பிப்பது சட்டபூர்வமான அவசியம் என அமெரிக்க ஆளும் மேல் தட்டினர் கருதினர். பாதுகாப்பு சபைக் கூட்டம் ஒன்றில் ஏவுகணைப் பகுதிகளை காண்பிக்கும் அமெரிக்காவின் வேவுப் பணியில் எடுத்த நிழ, படங்களை ஐக்கியநாடுகள் சபைக்கான அமெரிக்கத் தூதர் அட்லை ஸ்டீவன்சன் போட்டுக் காண்பித்தார்.

அப்படியான ஆதாரம் இல்லாத நிலையில் போருக்கான அமெரிக்காவின் உரைச்சுருக்கம் இரண்டு வாதங்களுடன் சுருங்கிப் போகிறது. முதலாவது ஈராக் அரசாங்கம் உலகை அச்சுறுத்துகிறது, ஏனென்றால் அது அதனிடம் உள்ள பரந்த மக்களை அழிக்கக் கூடிய என குற்றம் சாட்டப்படும் ஆயுதங்களை பயங்கரவாதக் குழுக்களுக்கு வழங்கலாம், அவற்றினை இக்குழுக்கள் கடந்த செப்டம்பர் 11ல் ஏற்பட்ட அழிவை விட மோசமான தாக்குதல்களை நடத்த உபயோகிக்கலாம். சமீபத்திய எதிர்காலத்தில் ஈராக் ஒரு அணு ஆயுதத்தைக் கூட உருவாக்கலாம். "அவரிடம் அணு ஆயுதம் இருக்கிறது என்பதை முதல் தடவையாக நிச்சயமாக நமக்குத் தெரியப்போவது எப்போது என்றால் அதை அவர் பயன்படுத்தும் போதுதான், கடவுள்தான் தடுக்க வேண்டும்" என்று புஷ் கூறினார்.

வேறுவார்த்தைகளில் கூறினால் சதாம் ஹுசைனுக்கு எதிராக இறுதிவரையிலான அமெரிக்காவின் போருக்கு ஐக்கிய நாடுகள் சபை ஒப்புதல் கொடுக்க வேண்டியது எதற்கு என்றால், ஈராக் சர்வாதிகாரியிடம் ஏற்கனவே ஒன்று இருப்பதற்காக அல்ல, ஆனால் எதிர்காலத்தில் அவர் என்ன செய்யலாம் என்பதற்காகவாகும். போருக்கான முன்னர் அறிந்திராத இந்த நியாயப்படுத்தலை மிகத் தெளிவாகவே, எந்த ஒரு நாடும் இன்னொரு நாட்டின் மீது திடீர்த் தாக்குதல் நடத்துவதற்கு பயன்படுத்தலாம்.

மேலும் ஸ்தூலமாகக் கூறினால், ஐயத்திற்கிடமின்றி மேலும் பல நாடுகளின் மீது அமெரிக்கா இராணுவத் தாக்குதல்கள் நடத்துவதை நியாயப்படுத்துவதாக இருக்கும், ஒவ்வொரு ஐக்கிய நாடுகள் சபைப் பிரதிநிதியும் அறிந்தபடி அந்த நாடுகள் புஷ் நிர்வாகத்தினுள் உள்ள போர் சூழ்ச்சியினால் குறிவைக்கப்பட்டுள்ளன. குறிப்பாக— சிரியா, ஈரான் மற்றும் கொரியா ஆகியன.

இரண்டாவது விவாதம் 1991 வளைகுடாப் போருக்குப் பின்னர் நிறைவேற்றப்பட்ட ஐ.நா பாதுகாப்பு சபை தீர்மானங்களின் பாசுரத் ( Litany) தொகுதியை கொண்டிருக்கிறது, புஷ்ஷின் படி, ஈராக் மறுத்திருந்தது. இந்தத் தீர்மானங்களை அமுல்படுத்தல் எனும் பெயரில், அமெரிக்க இராணுவ நடவடிக்கைக்கு ஐ.நா அதன் இசைவாணையை அளிக்க வேண்டும் என புஷ் கூறினார்.

இந்த விவாதம் பற்றி கூறப்படவேண்டிய முதலாவது விஷயம் தீர்மானங்களை தாமே, 1991 வளைகுடாப் போரில் அமெரிக்காவினதும் அதன் ஏகாதிபத்தியக் கூட்டாளிகளினதும் கட்டளையின் பேரில் திணிக்கப்பட்ட வெற்றியாளரின் அமைதியைக் கொண்டிருக்கிறது. அவர்கள் ஐக்கிய நாடுகள் சபையின் அடிப்படைப் பாத்திரத்தை பெரும் வல்லரசுகளின் ஒரு கருவியாக சோதனை செய்கின்றனர்.

இந்த நடவடிக்கைகள், செயற்கடுமை வாய்ந்த பொருளாதாரத் தடைகளைத் திணித்தல் மற்றும் ஈராக்கின் இறையாண்மையை அகற்றல் ஆகியன, ஈராக்கியர்களைப் பட்டினிபோட மற்றும் துன்புறுத்த மற்றும் நாட்டை பழுதுபடுத்த, அதன்மூலம் ஈராக்கின் எண்ணெய் வளங்கள் மீது அதன் பிடியைப் பலப்படுத்த, கொள்ளையடிக்கப்பட்ட செல்வத்தின் பங்கு பிரிட்டன், பிரான்ஸ், ஜேர்மனி மற்றும் ஜப்பானுக்குக்குப் போகும் என்ற உறுதியுடன், வடிவமைக்கப்பட்டது.

ஆசியா, ஆபிரிக்கா மற்றும் இலத்தின் அமெரிக்காவில் உள்ள பல நாடுகளுக்கு எதிரான அவர்களின் வன்முறை மற்றும் அழிவு நடவடிக்கைகளுக்காக அமெரிக்கா மீதோ அல்லது மற்றைய ஏகாதிபத்திய நாடுகள் மீதோ அத்தகைய பொருளாதாரத் தடைகள் ஒருபோதும் திணிக்கப்பட்டதில்லை.

ஈராக்கின் பாவங்கள் பற்றிய அவரது பட்டியலில், அந்நாட்டின் மீது ஆத்திரமூட்டல்களைச் செய்யும்பொருட்டு மற்றும் திரும்பத்திரும்ப குண்டு வீச்சுத் தாக்குதல்களை நடாத்தும் பொருட்டு ஐ.நா தீர்மானங்களின் ஷரத்துக்களை அமெரிக்கா திரித்த மற்றும் தவறான வகையில் பயன்படுத்திய விதத்தைக் குறிப்பிடுவதை புஷ் புறக்கணித்தார். இவற்றுள், ஐ.நா அனுமதி ஆதரவின்றி நடைமுறைப்படுத்திய, ஈராக்கின் வடக்கிலும் தெற்கிலும் "பறக்கத்தடை" மண்டலங்களைத் திணித்தல், மற்றும் அமெரிக்க ஏவுகணைகளுக்கு துல்லியமான இலக்குகளைக் கண்டறிய மற்றும் சதாம் ஹுசைனுக்கும் மற்றைய ஈராக்கிய தலைவர்களுக்கும் எதிரான அமெரிக்க கொலைச்சதி முயற்சிகளுக்கான உளவுத் தகவல்களை அளிக்க உதவிய, ஐ.நா ஆயுத பரிசோதனையாளர்கள் மத்தியில் சி.ஐ.ஏ உளவாளிகளை ஊடுருவச் செய்தல் உள்பட அடங்கும்.

1998ல் ஆயுதப் பரிசோதகர்களுடன் ஈராக்கின் "முற்றிலும் ஒத்துழைப்பை நிறுத்தல்" பற்றி, அந்த ஆண்டில் டிசம்பரில் அமெரிக்கா- பிரிட்டிஷ் தொடுத்த நான்குநாள் வான் போரில் —இத்தாக்குதல் பாதுகாப்பு சபையின் அனுமதி இன்றி நடத்தப்பட்டது— ஐ.நா தனது ஆயுதப் பரிசோதகர்களை முன்னதாகவே திரும்பப் பெற்றதைக் குறிப்பிடாமல், கெட்டவைகளை மறைத்து நல்லவைகளாக குறிப்பிட்டார்.

1998ல், அமெரிக்கா ஈராக் தொடர்பாக ஒருதலைப்பட்சமாய் அறிவித்தது, வெறுமனே ஐ.நா பொருளாதாரத் தடைகளை வலிந்து ஏற்கும்படி செய்தல் மட்டுமல்ல, ஆட்சியை அகற்றுவதுமாக இருக்கும் — ஐ.நா விதிமுறைகளை மீறும் இக்கொள்கையையும் பற்றி அவர் குறிப்பிடவில்லை.

ஐ.நாவின் பொறுப்பின் மீறத்தகாத்தன்மை பற்றிய புஷ்ஷின்




அமெரிக்கா ஈராக்கிற்கு எதிராக முன்னெடுக்கவுள்ள யுத்தத்திற்கு எதிராக அமெரிக்க வாஷிங்டன் நகரில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அக்கறை என்று கூறப்படுவது அமெரிக்க நிலைப்பாட்டில் ஊடுருவிப் பரவி நிற்கும் போலிப்பாசாங்கை வெளிச்சம் போட்டுக் காட்டுகிறது. 35 ஆண்டுகளுக்கும் மேலாக ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகளில் இருந்து இஸ்ரேல் வெளியேறுவதைக் கோரும் ஐ.நா தீர்மானங்களை விட்டு பாராட்டும், மத்திய கிழக்கில் உள்ள அதன் நெருங்கிய கூட்டாளி இஸ்ரேல் பற்றி சொல்வதற்கு அவரிடம் ஒன்றும் இருந்திருக்கவில்லை.

மேலும் அமெரிக்காவானது தனக்கு உகந்ததாயிரா(த) என அது கருதும் ஐ.நா தீர்மானங்களால் கட்டுண்டிருக்க மறுக்கிறது. அது தற்போது போர்க் குற்றவாளிகளை விசாரிப்பதற்கான ஐ.நா-ஆல் புதிதாக நிறுவப்பட்ட, சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தை பயனற்றதாக்குவதற்கான வெளிப்படையான முயற்சியில் ஈடுபட்டுள்ளது.



அமெரிக்கா ஈராக்கிற்கு எதிராக முன்னெடுக்கவுள்ள யுத்தத்திற்கு எதிராக அமெரிக்க வாஷிங்டன் நகரில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டம்

ஈரான் மீதான சதாம் ஹூசைனின் ஆக்கிரமிப்பையும் ஹலாப்ஜாக் போரின் பொழுது இரசாயன ஆயுதங்களைப் பயன்படுத்தியதையும் பற்றிய அமெரிக்க தரத்திலான கண்டித்தல்களுடன் புஷ் ஈராக்கிற்கு எதிரான அவரது வசைமாரிகளை மேலும் மூத்தாய்ப்பாகக் கூறினார். ஈரானுக்கு எதிராக அமெரிக்கா சதாம் ஹூசைனை ஆதரித்ததை, இரசாயன மற்றும் உயிரியல் ஆயுதங்களை அபிவிருத்தி செய்ய அவருக்கு உதவியதை, மற்றும் ஈரானுக்கும் ஈராக்கின் வடக்கில் உள்ள அதன் கூட்டாளியான குர்துகளுக்கும் எதிராக இரசாயன ஆயுதங்களை அவர் பயன்படுத்துவதற்கு மௌனமாய் ஒத்துழைப்பு வழங்கிய உண்மையை அவர் தள்ளுபடி செய்தார்.

வியாழன் அன்று புஷ்ஷுக்கு முன்நிகழ்வாய் பேசுகையில் ஐ.நா பொதுச்செயலாளர் கோபி அன்னான் (Kofi Annan), ஐ.நா சபையானது, ஈராக்கிற்கு எதிரான புதிய போருக்காக அமெரிக்கா நாடும் சட்டரீதியான மூடுமறைப்பை வழங்குவதற்கு தயாராக இருந்தது என தெளிவுபடுத்தினார். அன்னான் அமெரிக்க தலைமையிலான 1991 போரை "பல்கூட்டு" நடவடிக்கையாக ஆதரித்து, வாஷிங்டன் முன்னால் கெஞ்சும் பாணியில் செய்துகாட்டினார். அவரது குறிப்புக்களின் சாராம்சம் ஐ.நா சேவைகளை அமெரிக்கா தொடர்வதற்கான வேண்டுகோளாக இருந்தது. போரில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும்பொழுது, அன்னான் புஷ்ஷுக்கு, "ஐக்கிய நாடுகள் சபையால் வழங்கப்படும் விசேட சட்டரீதியான தன்மைக்கு ஈடிணை ஏதுமில்லை" என்று அறிவுரை வழங்கினார்.

எல்லாவற்றுக்கும் மேலாக அம்மான், பிரான்ஸ் மற்றும் ஜப்பான் போன்ற குறைந்த ஏகாதிபத்திய வல்லரசுகளான, மற்றும் ரத்து அதிகாரத்தைக் (Veto Power) கொண்டிருக்கும் ஏனைய பாதுகாப்பு சபை உறுப்பினர்களான ரஷ்யா மற்றும் சீனா ஆகியன, வாஷிங்டனானது வளைகுடாவிலும் மற்றும் எங்கிலும் அவர்களின் நலன்களைக் கவனத்தில் எடுக்கும் என்ற உத்தரவாதங்களுக்கு பரிமாற்றமாக ஈராக்கிற்கு எதிரான இராணுவ நடவடிக்கையை அங்கீகரித்து ஒரு தீர்மானத்தை நிறைவேற்றத் தயாராக இருந்தன.

ஒட்டுமொத்தமாக எடுத்துக் கொண்டால், ஐக்கிய நாடுகள் பொதுச்சபையின் தொடக்கக் கூட்டத் தொடர் அமெரிக்க இராணுவ வாதத்தின் வெடிப்பின் அழிவுகரமான விளைபயன்களைப் பற்றி கடும் எச்சரிக்கையை வழங்கியது மற்றும் ஐக்கிய நாடுகள் சபை அல்லது வாஷிங்டனின் ஏகாதிபத்திய போட்டியாளர்களுக்கு வேண்டுகோள் விடுப்பதன் மீது தன்னைத் தளப்படுத்தி இருக்கும் எந்த விதமான எதிர்ப்பினையும் இட்டு நம்பிக்கை இன்மையை வழங்கியது. அமெரிக்க போர் முன்னெடுப்பை தடுத்து நிறுத்தக் கூடிய ஒரே ஒரு சக்தி இருக்கிறது, அது சோசலிச முன்னோக்கின் அடிப்படையில் அணிதிரட்டப்பட்ட, சர்வதேச தொழிலாள வர்க்கம் ஆகும்.

# ஈராக்கிய ஆட்சியின் எதிர்ப்பாளர்களும் பாக்தாதில் "ஆட்சி மாற்றத்திற்கான" அமெரிக்க திட்டங்களும்

பீட்டர் சைமன்ஸ்
30 செப்டெம்பர் 2002

புஷ் நிர்வாகமானது ஈராக் மீதான ஆக்கிரமிப்பும், சதாம் ஹூசைனை அகற்றுவதும் விடுதலையை உறுதிப்படுத்தும் நடவடிக்கைகள் எனவும், நீண்டகாலமாக துன்பப்பட்டுக்கொண்டிருக்கும் ஈராக்கிய மக்களின் அமைதிக்கும், ஜனநாயகத்திற்குமான ஒரு புதிய காலகட்டத்திற்கு இட்டுச்செல்லும் எனவும் விவாதிக்கின்றது. அமெரிக்க அதிகாரிகள் தற்போது ஈராக்கிய அரசாங்கத்தை பிரதியீடு செய்யும் நோக்கில் வெளிநாடுகளில் வாழும் ஈராக்கியர்கள் மத்தியில் விரைவான நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர்.

ஆனால் பக்தாதில் அமெரிக்க சார்பு ஆட்சி ஒன்றினை நிறுவுவதில் எவ்விதமான ஜனநாயகத்தன்மையும் கிடையாது. பாகிஸ்தானில் மறைந்திருந்த சி.ஐ.ஏ (CIA) இன் நீண்டகால சொத்தான ஹமீத் கர்சாயை ஆப்கானிஸ்தான் ஜனாதிபதியாக்கியது போன்று ஒரு புதிய தலைவர், ஈராக்கிய மக்கள் மீது திணிக்கப்படுவார். காபூலில் இருக்கும் அரசாங்கத்தைப்போல், பாக்தாதில் புதிய நிர்வாகமானது வாஷிங்டனால் தேர்ந்தெடுக்கப்பட்ட நபர்களால் நிரப்பப்படும். சில போலி ஈராக் வடிவிலான லோயா ஜிர்கா (loya jirga - காபூலின் பாரிய சாதிப்புக்குழுக்களின் மாநாடு) போல் ஒழுங்கமைக்கப்படும் ஒன்றிற்கு சட்டபூர்வத்தன்மை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழங்கப்படும்.

இந்த நடவடிக்கைகள் தற்போது ஆரம்பித்துவிட்டது. பாதுகாப்பு அமைச்சரான டொனால்ட் ரம்ஸ்பெல்ட், அவரது உதவியாளரான பௌல் வொல்வோவிட்ஸ், அமெரிக்க பாதுகாப்பு கொள்கை குழுவின் தலைவரான றிச்சாட் பேர்ல் போன்ற புஷ் நிர்வாகத்தின் கடும்போக்காளர்கள், ஹூசைனை பதவி கவிழ்ப்பதற்காக ஈராக்கின் எதிர்க்கட்சியினருக்கு ஆயுதம் வழங்குவதில் நீண்டகாலத்திற்கு முன்னரே வெற்றிபெற்றுள்ளனர். புஷ் பதவி ஏற்றதன் பின்னர், ஈராக்கிய எதிர்க்கட்சியினருக்கு வழங்கப்படும் நிதியுதவியானது குறிப்பிடத்தக்களவு அதிகரித்து வந்துள்ளது.

பத்தாண்டுகளுக்கு மேலாக ஈராக்கிலுள்ளான இரகசிய திட்டங்களுக்கான அமெரிக்க நடவடிக்கைகளுக்கு உதவும் ஈராக் தேசிய காங்கிரஸ் (Iraqi National Congress-INC) அவர்களுக்கு மிகவும் விருப்பமானவர்கள் ஆவர். இவ்வமைப்பானது தற்போது லண்டனில் உள்ள காரியாலயத்தில் இருந்து இயங்குகின்றனர். அவர்களின் தலைவரான அகமத் ஷலாபி, ஜோர்டானில் பாரிய ஏமாற்றுகளுக்காக குற்றம் சாட்டப்பட்ட மோசமான செல்வந்தராவர். அத்துடன் இவர் வாஷிங்டனின் நன்கு அறியப்பட்டவரும், றிச்சாட் பேர்ல் போன்றவர்கள் இவரது அமெரிக்க நண்பர்களில் உள்ளடங்குவார்.

> ஆனால் பக்தாதில் அமெரிக்க சார்பு ஆட்சி ஒன்றினை நிறுவுவதில் எவ்விதமான ஜனநாயகத்தன்மையும் கிடையாது. பாகிஸ்தானில் மறைந்திருந்த சீ.ஐ.ஏ இன் நீண்டகால சொத்தான ஹமீத் கர்ஸாயை ஆப்கானிஸ்தான் ஜனாதிபதியாக்கியது போன்று ஒரு புதிய தலைவர், ஈராக்கிய மக்கள் மீது திணிக்கப்படுவார். காபூலில் இருக்கும் அரசாங்கத்தைப்போல், பாக்தாதில் புதிய நிர்வாகமானது கவனமாக தேர்ந்தெடுக்கப்பட்ட நபர்களால் நிரப்பப்படும்.

கடந்த சிலமாதங்களாக சீ.ஐ.ஏ, அரசதிணைக்களம் மற்றும் ஏனைய கையாட்களும் புஷ்ஷின் யுத்தத் திட்டங்களுக்கு ஆதரவு வழங்குமாறு பலவிதமான ஈராக்கிய எதிர்ப்புக்குழுக்களை பயமுறுத்தியும், இலஞ்சம் கொடுத்தும் மற்றும் வசப்படுத்த முனைகின்றனர். அவர்களின் நோக்கமானது ஒரு ஒன்றிணைந்த குழுவை உருவாக்குவதும், ஆகக்குறைந்தது மேலெழுந்தவாரியான ஹூசேனுக்கு எதிரான ஒரு நம்பத்தகுந்த, ஒன்றிணைந்த மாற்றீட்டை உருவாக்குவதாகும். அத்துடன் அமெரிக்காவிற்கு ஈராக்கினுள் தனது ஆக்கிரமிப்பிற்கான திட்டமிடலுக்கும், வசதிகளுக்குமான உளவு, இராணுவ குழுக்கள், தளங்கள் போன்றவையும் தேவையாக உள்ளது.

ஏப்பிரல் மாதம் சீ.ஐ.ஏ, இரண்டு குர்திஸ்தான் குழுக்களான, குர்திஸ்தான் ஜனநாயக கட்சி மற்றும் குர்திஸ்தான் தேசபக்தி யூனியன் போன்றவற்றை சந்தித்து, வடக்கு ஈராக்கின் இரண்டு நகரங்களில் தளங்களை நிறுவுவதற்கான அனுமதியை கோரியுள்ளது. பிரித்தானிய பத்திரிகையான கார்டியனின் (*Guardian*) அறிக்கைகளில் , கடந்த காலத்தில் சீ.ஐ.ஏ. இந்த இரண்டு பிரிவினரையும் காட்டிக்கொடுத்ததால் இரண்டு குழுவும் ஐயுறவுடன் இருப்பதாக குறிப்பிட்டது. 1991 இல் இருந்து இவ்விரண்டு குர்திஸ்தான் இராணுவ குழுக்களின் கட்டுப்பாட்டில் உள்ள வடக்கு ஈராக்கானது, கடந்த பத்தாண்டுகளுக்கும் மேலாக அமெரிக்காவின் சதிகளுக்கான முக்கிய இடமாகும்.

கடந்த ஜூன் மாதம், வெளிநாட்டு திணைக்களமானது வாஷிங்டனில் ஷியைட் (Shiite) இனரை அடித்தளமாக கொண்ட ஈராக்கின் இஸ்லாமிய புரட்சிக்கான அதியுயர்குழுவுடன் (Supreme Council for the Islamic Revolution in Iraq -SCIRI) தனது முதலாவது உத்தியோகபூர்வமான பேச்சுவார்த்தையை நடாத்தியது. ஈராக்கின் இஸ்லாமிய புரட்சிக்கான அதியுயர்குழு, ஈராக்கின் ஷியைட் பெரும்பான்மையினரின் அமைப்புகளில் ஒன்றாகும். இது அதனது தலைவரான பக்கீர் ஹாகிம் தங்கியுள்ள ஈரானுடன் தொடர்புகளை வைத்திருக்கின்றது. ஆரம்பத்தில் ஈராக் மீதான அமெரிக்காவின் படையெடுப்பு தொடர்பாக கவனமாக இருந்தபோதிலும், தற்போது வாஷிங்டனின் ஹூசேன் எதிர்ப்பு முகாமில் இணைந்துகொண்டுள்ளது போல் தெரிகின்றது.

ஆகஸ்ட் 10ம் திகதி வெள்ளை மாளிகையில் மிக முக்கியமான கூட்டம் ஒன்று இடம்பெற்றது. இது சதாம் ஹூசேனிற்கு பின்னரான அரசாங்கம் தொடர்பான அமெரிக்காவின் முக்கிய திட்டம் சம்பந்தமாக பவல், ரம்ஸ்பெல்ட், உதவி ஜனாதிபதி டிக் ஷென்னி உட்பட புஷ் நிர்வாகத்தின் உயர் அதிகாரிகளுடன் 6 குழுக்களையும் கலந்துரையாடலுக்கு அழைத்திருந்தது. பாதுகாப்பு, வெளிநாட்டு அமைச்சகத்தாலும் மற்றும் சீ.ஐ.ஏ, தேசிய பாதுகாப்பு குழு போன்றவற்றாலும் கூட்டாக ஒழுங்கமைக்கப்பட்ட இக்கூட்டத்தில் ‘ஒரு சுதந்திர ஈராக்கிற்காக’’ இணைந்து இயங்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டது.

அகமத் ஷலாபி தலைமையிலான ஈராக் தேசிய காங்கிரஸ், குர்திஸ்தான் ஜனநாயக கட்சி, குர்திஸ்தான் தேசபக்தி யூனியன், ஈராக்கின் இஸ்லாமிய புரட்சிக்கான அதியுயர்குழு போன்றவற்றுடன், வெளிநாடுகளில் இயங்கும் இரண்டு அமைப்புகளான ஈராக்கிய தேசிய உடன்பாடும் (Iraqi National Accord -INA), அரசாட்சிக்கான அரசியலமைப்பு இயக்கம் (Constitutional Monarchy Movement -CMM) போன்றவையும் அதனுள் இணைக்கப்பட்டிருந்தன. ஈராக்கிய தேசிய உடன்பாடு என்பது சதாம் ஹூசேனின் பாத் கட்சியிலிருந்தும், ஈராக்கிய இராணுவத்திலிருந்தும், பாதுகாப்பு அமைப்பில் இருந்தும் முரண்பட்டு சென்ற ஒரு நிழல் குழுவாகும். இது சீ.ஐ.ஏ, பிரித்தானியாவின் எம்16 மற்றும் சவுதி அராபியாவின் உளவுத்துறையுடனும் நெருங்கிய தொடர்புகளை வைத்திருக்கின்றது. இதற்கு லண்டனிலும், மத்திய கிழக்கிலும் அலுவலகங்கள் உள்ளன. அரசாட்சிக்கான அரசியலமைப்பு இயக்கம், ஈராக்கின் அரசராக ஷெரிப் அலி பின் அல் ஹூசேனை மீண்டும் இருத்த விரும்புகின்றது.

வெள்ளை மாளிகை கூட்டத்தின் பின்னர் இத் தயாரிப்புக்கள் தீவிரமடைந்துள்ளன. ஒரு வாரத்தின் பின்னர், சண்டே டைம்ஸ் பத்திரிகையானது, ஈராக்கினுள் இரகசிய தகவல்களை சேகரிக்கவும், உயர்மட்டத்திலான கைவிட்டு ஓடும் நடவடிக்கைகளையும் தூண்டுவதன் பேரில் ஈராக்கிய எதிர்க்கட்சியினர் மறைமுகமான நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்காக, அமெரிக்கா மேலதிக நிதி உதவி வழங்க முனைவதாக குறிப்பட்டது. ஜூலையில் கார்டியன் பத்திரிகையால் ‘சிறிய, நிதி உதவி குறைந்த, ஆள்பலமற்ற அலுவலகம்’’ என குறிப்பிடப்பட்ட இந்த வெளிநாட்டு அமைச்சின் ‘ஈராக் திட்டத்தின் எதிர்காலத்திற்காக’’ 6 தொழிற்படும் குழுக்கள், காளான்கள் போல் உருவாகி உள்ளதுடன் அமெரிக்காவிலும், பிரித்தானியாவிலும் கூட்டங்களை நடாத்த ஆரம்பித்துள்ளது. புஷ் நிர்வாகம் 10,000 பேர் அடங்கிய ஈராக்கிய எதிர்ப்புகுழுக்களுக்கு ஆயுதப் பயிற்சி வழங்குவதற்கு காங்கிரசில் அனுமதி வாங்குவதற்காக தயாரிப்பு செய்வதாக கடந்த வாரம் அமெரிக்க செய்தி ஸ்தாபனங்கள் செய்தி வெளியிட்டிருந்தன.

## வளைகுடா யுத்தத்தின் பின்னர்

இராணுவத்தை விட்டோடியவர்களும் , ஐயுறவிற்குரிய வியாபாரிகளும், மன்னராட்சியை விரும்புவர்களையும், அரசியல் சந்தர்ப்பவாதிகளையும், குண்டர்களையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளடக்கியுள்ள ஈராக்கிய எதிர்க்குழுவின் கூட்டமானது, அமெரிக்கா பாக்தாதில் நிறுவ விரும்பும் அரசாங்கத்தின் ஊழல்மிக்க தன்மையை தெளிவாக காட்ட போதுமானதாகும்.

இவர்கள் அனைவரும், 1990-91 வளைகுடா யுத்தத்தில் இருந்து பகிரங்கமாக வாஷிங்டனுடன் இணைந்தும், எதிர்செயற்பட்டுள்ளனர். இவர்களில் பலர் வாஷிங்டனின் சம்பளப் பட்டியலில் நேரடியாக உள்ளடங்கியுள்ளதுடன், கடந்த காலத்தில் ஹூசேனை வெளியேற்ற முயன்று தோல்வியடைந்த அமெரிக்காவின் சதிகளில் பங்குபற்றியிருந்தனர். ஏனைய ஷியைட்டுக்களையும், குர்திஸ்தான் அமைப்புகளையும் பொறுத்தவரையில் யுத்தத்திற்கு பின்னர் உருவாகிய சந்தர்ப்பத்தை பயன்படுத்தி, தமக்கு ஓரளவு சுயாதீனத்தை ஸ்தாபித்துக்கொண்டு அமெரிக்காவிற்கும் மற்றும் அப்பிரதேசத்தின் ஏனைய போட்டி சக்திகளுக்கு இடையில் கொடுக்கல் வாங்கல்களை நடாத்திவருகின்றனர்.

வாஷிங்டனோ அல்லது அதனது ஈராக்கிய ஆதரவாளர்களோ ஒரு பரந்த கிளர்ச்சியையோ அல்லது ஜனநாயகம் தொடர்பான உண்மையான வெளிப்பாட்டையோ விரும்பவில்லை. இவ்விரண்டும் ஈராக்கையும், அப்பிராந்தியத்தையும் முக்கியமாக உறுதியற்றதாக மாற்றும். வளைகுடா யுத்தத்தின் மத்தியில் 1991 பெப்ரவரியில், முன்னாள் ஜோர்ஜ் புஷ், ஹூசேனுக்கு எதிரான கிளர்ச்சிக்கு அழைப்புவிட்டார். ஆனால் பின்னர் தெற்கில் உள்ள ஷியைட்டுக்களும், வடக்கிலுள்ள குர்திஸ்களும் கிளர்ந்து எழுந்தவுடன் அதனை உடனடியாக பின்வாங்கிக்கொண்டார். ஹூசேனின் விசேட குடியரசுப் படையினர் கிளர்ச்சியாளர்களை கொலைசெய்ததையும், எல்லையை நோக்கி ஒரு தொகை அகதிகளையும் அனுப்பியபோது அமெரிக்க இராணுவம் ஒன்றும் செய்யாது பார்த்துக்கொண்டு இருந்தது.

அமெரிக்காவின் நோக்கம், குர்திஸ்தானியர்களின் சுதந்திரத்திற்கான கோரிக்கைக்கு அல்லது நாட்டின் 60 வீதமான ஷியைட்டுக்கள் அரசியலில் ஆதிக்கத்தை பெறுவதற்கு ஏதாவது சலுகைகளை வழங்குவதல்ல. அமெரிக்காவின் கூட்டணி துருக்கியோ அல்லது சிரியாவும் ஈரானும் அவர்களது முக்கியமான குர்திஸ்தானிய சிறுபான்மையினர் பலமடைவது தொடர்பாக மிகவும் கவனமாகவுள்ளனர். ஷியைட்டுக்கள் தொடர்பாக அமெரிக்கா சவுதி அரேபியாவுடன் இணைந்து அப்பிரதேசத்தில் ஈரானிய ஷியைட்டுக்கள் ஆதிக்கம் பெறுவதற்கான நிலைக்கான எந்தவொரு அடியையும் எதிர்க்கின்றது.

பிரித்தானியாவுடன் இணைந்து அமெரிக்கா ஷியைட்டுக்களினதும், குர்திஸ்தானியர்களினதும் பரிதாபத்தை சுரண்டிக்கொண்டு, ஒருதலைப்பட்சமாக ஈராக்கின் வடபிரதேசத்தை 1991 ஏப்பிரலில் இருந்தும், தெற்கை 1992 ஆகஸ்டிலிருந்தும் "பாதுகாப்பான வலயமாகவும்", "பறக்க முடியாத" பிராந்தியமாகவும் தீர்மானித்தது. இராணுவம் அற்ற இப்பிராந்தியங்களானது நாட்டை 3 பிரிவுகளாக பிரிக்கவும், இராணுவ நிலைகளை தாக்குவதற்கு யுத்த விமான கண்காணிப்பு என்ற சாட்டின் கீழ் ஈராக்கின் மீது பறப்பதற்கு வழிசமைத்தது.

1991 இல் பாக்தாதின் மீதான முழு அளவிலான தாக்குதலை நிறுத்தி, புஷ் நிர்வாகமானது ஹூசேனை உள் சதிகள் மூலமும், இராணுவ கவிழ்ப்புகளாலும் பதவியகற்ற முனைந்தது. 1992 ஜூனில் ஆஸ்திரியாவின் வியன்னா நகரில் இடம்பெற்ற ஈராக் தேசிய காங்கிரசின் மாநாட்டை நிறுவுவதில் வாஷிங்டன் முக்கிய காரணியாகும். ஈராக் தேசிய காங்கிரஸ், ஹூசேன் எதிர்ப்பு அமைப்புகளுக்கான ஒரு தாய் (குடை) அமைப்பும் ஈராக்கினுள் இரகசிய நடவடிக்கைகளுக்கான முன்னணியுமாகும்.

ஈராக் தேசிய காங்கிரசும் அதனது சீ.ஐ.ஏ. ஆலோசகர்களும் ஈராக்கின் வடக்கில் முக்கிய குர்திஸ் நகரங்கள் உள்ளடங்கிய, பறக்க தடைசெய்யப்பட்ட 36ம் அகலக்கோட்டு பிரதேசத்தில் உள்ள இர்பில் நகரத்தில் தமது நடவடிக்கைகளுக்கான தளத்தை நிறுவியுள்ளனர். இரண்டு குர்திஸ்தான் அமைப்புகளான குர்திஸ்தான் ஜனநாயகக் கட்சியும், குர்திஸ்தான் தேசபக்தி யூனியனும் இராணுவமற்ற பிரதேசங்களை தமக்கு சாதகமாக பயன்படுத்திக்கொண்டு நடைமுறையில் ஒரு குர்திஸ்தான் சுயாட்சி பிரதேசத்தை உருவாக்கியுள்ளன. ஒரு குர்திஸ்தான் பிராந்திய அரசாங்கத்திற்கான தேர்தல்கள் 1992 இல் நடைபெற்று, குர்திஸ்தான் ஜனநாயக கட்சியின் தலைவரான மசூத் பர்சானிக்கும், குர்திஸ்தான் தேசபக்தி யூனியனின் தலைவரான ஜலால் தலபானிக்கும் இடையில் ஒரு அமைதியற்ற அதிகாரப்பகிர்வு உடன்பாட்டில் முடிவடைந்தது.

கடந்த வருடங்களில் குர்திஸ்தானியர்களினதும், ஷியைட்டுக்களினதும் கிளர்ச்சிகளினது கசப்பான அனுபவங்களின் மத்தியிலும் குர்திஸ்தான் ஜனநாயகக் கட்சியும், குர்திஸ்தான் தேசபக்தி யூனியனும் ஈராக் தேசிய காங்கிரசுடன் இணைந்துள்ளன. 1992 இல் வடக்கு ஈராக்கில் இடம்பெற்ற கூட்டமொன்றில் ஸ்ராலினிச ஈராக்கிய கம்யூனிஸ்ட் கட்சியும், ஈராக்கில் இஸ்லாமிய புரட்சிக்கான அதியுயர் குழுவின் முன்னோடி கட்சியான, இஸ்லாமிய அடிப்படைவாத அல் தாவா கட்சியும் (Al Dawa party) ஒரு உடன்படிக்கையில் கையெழுத்திட்டன.

1990 இன் ஆரம்பத்தில் ஈராக்கிய எதிர்ப்பு குழுக்களின் நடவடிக்கைகளுக்கு நிதியுதவி வழங்குவதற்காக அமெரிக்கா 100 மில்லியன் டொலர் செலவிட திட்டமிட்டிருந்தது. இதில் கூடியளவு பிரச்சாரத்திற்கும், பொதுஜன உறவுகளுக்குமாக செலவிட்டதாக கூறப்படுகின்றது. ஆனால் பாக்தாதிற்கு எதிராக ஒரு கிளர்ச்சியை உருவாக்கும் சீ.ஐ.ஏ. இனது முயற்சிகள் துன்பகரமாக தோல்வியடைந்தது. 1992 இலும் 1993 இலும் சதிமுயற்சிகள் தொடர்பாக குறிப்பிடப்பட்டது. ஆனால் இவை இரண்டும் கைதுகளிலும், மரண தண்டனைகளிலும் முடிவடைந்ததுடன், ஹூசேனின் பாதுகாப்பு அமைப்பை மேலும் பலமடையவே செய்தன.

மேலும், ஈராக் தேசிய காங்கிரசினுள் இணைந்திருந்த எதிர்ப்புக் குழுக்களின் பலமற்ற கூட்டானது விரைவாக உடைந்துபோனது. ஐக்கிய நாடுகளினது ஈராக் மீதான பொருளாதாரத் தடையால் உருவாகிய இலாபகரமான கடத்தல் தொழிலினால் கிடைத்த வருமானத்தை பங்கிடு செய்வதில் இரண்டு குர்திஸ்தான் குழுக்களும் முரண்பட்டுக்கொண்டன. துருக்கியிலிருந்து ஈராக்கிற்கு பொருட்களை காவிவரும் பார வண்டிகள் வடக்கிலுள்ள பறக்கமுடியாத பிரதேசத்தை ஒவ்வொரு நாளும் கடந்து செல்வதுடன், திரும்பி வரும்போது மலிவான எண்ணெயையும், மற்றும் எண்ணெய் உற்பத்திப் பொருட்களையும் நிரப்பிவந்தன. ஆனால் குர்திஸ்தான் ஜனநாயகக் கட்சியின் பிரதேசத்தை கடந்து வரும் பாதையில் கிடைக்கும் பெரிய சுங்கவரி வருமானத்தை பர்சானி, குர்திஸ்தான் தேசபக்தி யூனியனுடன் பகிர்ந்துகொள்ள மறுத்தார்.

1993 இல் இருந்து இரண்டு குழுக்களுக்கு இடையில் மோதல்கள் இடம்பெற்று வருவதுடன், இது தொடர்ந்து அதிகரிக்கின்றது. ஒவ்வொருவரும் மற்றவருக்கு எதிராக சதிகளில் ஈடுபடுவதுடன், பிராந்திய சக்திகளான ஈரான், சிரியா, துருக்கி, ஜோர்டான் மற்றும் சவுதி அரேபியாவின் ஆதரவை பெற்றுக்கொள்ள முனைகின்றன. இம்முரண்பாடு ஈராக் தேசிய காங்கிரசை உறுதியற்றதாக்கியதுடன், ஷியைட் அமைப்புகளினதும், ஈராக்கிய கம்யூனிஸ்ட் கட்சியினதும் உள்ளடங்கலான ஏனைய குழுக்களின் வெளியேற்றத்திற்கு காரணமானது.

இதேவேளை 1990 இல் பிரித்தானிய எம்16 இனதும், சவுதி அரேபியாவின் உளவுப்படையினதும் உதவியுடன் உருவாக்கப்பட்ட ஈராக்கிய தேசிய உடன்பாடு (INA) அமைப்பினது நடவடிக்கைகளை நோக்கி சீ.ஐ.ஏ.யின் கவனம் கூடுதலாக திரும்பியுள்ளது. ஈராக்கிய தேசிய உடன்பாடு, பாக்தாதில் ஒரு இரகசிய இராணுவ வலைப்பின்னலை உருவாக்க விரும்பும் நோக்கத்துடன், ஈராக் தேசிய காங்கிரசினது கட்டுப்பாடற்ற மற்றும் அதிகரித்தளவில் உறுதியற்றதாகிவரும் முன்னணி அமைப்பான ஈராக் தேசிய காங்கிரசை விட சீ.ஐ.ஏ.யினது நோக்கங்களுடன் கூடுதலாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒத்துப்போவதாக உள்ளது.

ஹுசேனின் கட்டுப்பாட்டிலுள்ள ஈராக்கின் பகுதிகளினுள்ளும், ஈராக்கிய தேசிய உடன்பாடும், ஈராக் தேசிய காங்கிரசும் அடித்தளத்தை கொண்ட இர்புல் (Irbul) பகுதியிலும் 1995 மார்ச் மாதத்தில் சீ.ஐ.ஏ.யினது நடவடிக்கைகள் தீவிரமடைந்ததாக காணப்பட்டது. கிடைத்த தகவல்களின்படி இத்திட்டத்தில் வடக்கில் ஒரு இராணுவத் தாக்குதலுடன், பாக்தாதில் ஆட்சியை கவிழ்த்தலும் அடங்கியிருந்தது. ஈராக் தேசிய உடன்பாடு உடனும், ஏனைய தொடர்புகளுடனும் தலைநகரில் சதிசெய்ய சீ.ஐ.ஏ. இரகசிய திட்டமிட்டிருந்தது.

இதேவேளை அமெரிக்கா, ஆகாயம் மூலமான பாதுகாப்பை தரும் பட்சத்தில் வடக்கின் பறக்க தடைசெய்யப்பட்ட பிரதேசத்தில் உள்ள குர்திஸ் நகரங்களான கிர்குக், மோசோல் போன்றவற்றை கைப்பற்ற குர்திஸ்தான் இராணுவக் குழுக்களுக்கு தனது ஒத்துழைப்பை தருவதாக ஷலாபி குறிப்பிட்டார். குர்திஸ்தான் ஜனநாயகக் கட்சியும் குர்திஸ்தான் தேசபக்தி யூனியனும் குறிப்பாக கிர்குக் பிரதேசத்தை தமது கட்டுப்பாட்டினுள் கொண்டவர விருப்பமுடையனவையாக உள்ளன. ஏனெனில் இது வடக்கு ஈராக்கின் வழமான எண்ணெய், நிலவாயு பிரதேசத்தின் மத்தியில் உள்ளது. ஈராக்கிய இராணுவத்துடன் போரிட பயிற்சியளிக்கப்படாத மற்றும் பலமற்ற ஆயுதம் தரித்த ஆயிரக்கணக்கான இராணுவக் குழுக்கள் அனுப்பப்பட்டுள்ளன.

பாக்தாதில் சதியும், வடக்கின் இராணுவ நடவடிக்கைகயும் பரிதாபகரமாக தோல்வியடைந்ததுடன், முழுவிடயமும் சகல பக்கத்திலும் கசப்பானதும் மற்றும் தொடர்ச்சியானதுமான ஒருவர்மீது ஒருவர் குற்றச்சாட்டுதலுக்கும் இட்டுச்செல்கின்றது. அமெரிக்காவினதும், பிரித்தானியாவினதும் உளவுத்துறையினதும் உதவியுடன், ஈராக்கிய தேசிய உடன்பாடு தனது நடவடிக்கைகளை 1996 இல் மீளஆரம்பித்திருந்ததுடன், ஜோர்டானை தளமாக பயன்படுத்தவும் அனுமதிபெற்றது. எவ்வாறிருந்த போதிலும் அதனது வலைப்பின்னல் ஈராக்கிய உளவுப்பிரிவால் ஊடுருவப்பட்டு பாரிய விளைவுகளை சந்தித்தது. 1996 ஜூனில் ஈராக்கிய தேசிய உடன்பாட்டினது நூற்றுக்கு மேற்பட்ட இராணுவ அதிகாரிகள் சுற்றிவளைக்கப்பட்டபோது, ஆகக்குறைந்தது அவர்களின் 30 பேராவது ஒன்றாக கொலைசெய்யப்பட்டனர்.

வடக்கு ஈராக்கில் சீ.ஐ.ஏ. இற்கும் அதனது ஆதரவாளர்களினதும் நிலைமை, சட்டியிலிருந்து நெருப்பிற்குள் வீழ்ந்தது போலானது. 1996 இல், குர்திஸ்தான் ஜனநாயக கட்சிக்கும், குர்திஸ்தான் தேசபக்தி யூனியனுக்கும் இடையிலான மோதல் அதியுயர் கட்டத்தை அடைந்தது. ஈரானிய இராணுவத்தால் தனது போட்டியாளர்கள் ஆதரவளிக்கப்படுவதாகவும், குர்திஸ்தான் தேசபக்தி யூனியனியனிடம் இருந்து இர்புல் நகரினை மீண்டும் கைப்பற்ற குர்திஸ் பிரதேசங்களுக்கு ஈராக்கினது இராணுவத்தை பார்ஸானி வரவேற்றார். ஈராக்கிய பாதுகாப்பு படையினர் அந்நகரத்தை மட்டும் கைப்பற்றவில்லை, அத்துடன் ஈராக்கிய ஆட்சியின் எதிர்ப்பாளர்களையும் ஒடுக்குவதற்கான சந்தர்ப்பமாக அதனை பயன்படுத்திக்கொண்டனர்.

இதன் விளைவானது, சீ.ஐ.ஏ. இற்கும், ஈராக்கிய தேசிய உடன்பாட்டிற்கும், ஈராக் தேசிய காங்கிரசுக்கும் முற்றுமுழுதான அழிவுகரமானதாக இருந்தது. ஒரு மதிப்பீட்டின்படி ஈராக்கிய இராணுவத்தால் 200 எதிர்ப்பாளர்கள் கொல்லப்பட்டுள்ளதுடன், 2,000 பேருக்கு அதிகமானோர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இன்னும் 650 பேர், இவர்களில் அதிகமானோர் ஈராக் தேசிய காங்கிரசை சேர்ந்தவர்கள் அவர்களின் சீ.ஐ.ஏ. யின் பயிற்சியாளர்களுடன் சேர்ந்து தப்பியோடி அமெரிக்காவில் குடியேறியுள்ளனர். ஒரு தாய் அமைப்பாக இருந்த ஈராக் தேசிய காங்கிரஸ் துண்டுகளாக உடைந்துபோனது. ஒரு வருட இடைவேளையின் பின்னர், ஈராக்கிய தேசிய உடன்பாடு பாக்தாதிலுள்ள தனது வலைப்பின்னலையும், வட ஈராக்கிலுள்ள தனது நடவடிக்கைக்கான தளத்தையும் இழந்தது.

1996 இல் வடக்கு ஈராக்கில் ஈராக்கிய எதிர்ப்பாளர்களும், சீ.ஐ.ஏ.வும் சந்தித்த பாரிய தோல்வியானது வாஷிங்டனில் பின்விளைவுகளை உருவாக்கியது. கிளின்டனின் நிர்வாகமானது மத்திய கிழக்கில் அமெரிக்காவின் நலன்களை போதியளவு மூர்க்கத்தனத்துடன் முன்னெடுக்கவில்லை என ஏற்கனவே குடியரசுக் கட்சியின் வலதுசாரிப் பிரிவினரின் தாக்குதலுக்கு உள்ளாகியிருந்தது. ஈராக்கிய எதிர்ப்பாளர்களினது உடைவானது கிளின்டனின் பிழையான நடத்தைகளின் பட்டியலில் இணைக்கப்பட்டதுடனும், காங்கிரசில் ஒரு பிரச்சாரம் ஆரம்பிக்கப்பட்டதுடனும், ஈராக்கிய விடுதலை சட்டத்தின் (Iraq Liberation Act) நடைமுறைப்படுத்தலுடன் இது 1998 இல் உச்சக்கட்டத்தை அடைந்தது. இச்சட்டத்தின் கீழ் முன்னொருபோதும் இல்லாதவாறு, "அரசாங்க மாற்றமானது" அமெரிக்காவின் சட்டத்துடன் இணைக்கப்பட்டதுடன், தேர்ந்தெடுக்கப்பட்ட ஈராக்கிய எதிர்ப்பு குழுக்களுக்கு 97 மில்லியன் டொலர் இராணுவ உதவியும் வழங்கப்பட்டது.

இந்த ஈராக் விடுதலை சட்டத்திற்கு ஆதரவளித்து, அதன் வரையறைகளை முற்றாக நடைமுறைப்படுத்தவில்லை என கிளின்டனை குற்றம் சாட்டியவர்களில் தற்போதைய ஈராக்கிற்கு எதிரான யுத்தத்தை தயாரிக்கும் முக்கியமானவர்களான ரம்ஸ்பெல்ட், வொல்வோவிட்ஸ், பேர்ல் ஆகியோர் அடங்குவர். 1998 இல் வொல்வோவிட்ஸ் காங்கிரசில் பின்வருமாறு குறிப்பிட்டார் : "இப்பிரச்சனையில் முக்கியமானதாகவுள்ளது, அமெரிக்கா ஈராக் தொடர்பாக ஒரு கடுமையான கொள்கையை பின்பற்ற முடியாமலும், விரும்பாமலும் இருப்பதாகும்".

2000 ஆண்டின் தேர்தல் பிரச்சாரத்தின்போது, புஷ்ஷின் வெளிநாட்டுக் கொள்கை ஆலோசகராக உரையாற்றிய பேர்ல் "ஆளுனர் புஷ் ஈராக் விடுதலை சட்டத்தை முற்றுமுழுதாக நடைமுறைப்படுத்துவார். அவர் அது தொடர்பாக நன்றாக விளங்கிக்கொண்டுள்ளார். அதன் அர்த்தம், சதாமின் அரசாங்கத்தை முடிவிற்கு கொண்டுவர எதிர்ப்பாளர்களுக்கு முக்கியமானதும், தொடர்ச்சியானதுமான உதவிகளை வழங்குதல் ஆகும்" என குறிப்பிட்டார். கிளின்டனின் நிர்வாகம் ஈராக்கிய ஆட்சியின் எதிர்ப்பாளர்களுக்கு இராணுவ உதவி வழங்கவில்லை எனவும், இச்சட்டத்தை நிறைவேற்றுவதில் "உறுதியான கபடத்தனத்தை" கொண்டிருந்ததாக பேர்ல் குற்றம் சாட்டினார்.

ஆனால் ஈராக், ஒரு பரந்த நோக்கத்தின் ஒரு பகுதியாகும். புஷ்ஷின் தேர்தல் பிரச்சாரமானது, குறிப்பாக எண்ணெய் வளம் மிக்க மூலோபாய முக்கியத்துவம் வாய்ந்த மத்திய ஆசியாவிலும் மத்திய கிழக்கிலும் அமெரிக்காவினது எதிர்க்கமுடியாத பூகோள ஆளுமையை உறுதிப்படுத்த இராணுவத்தை பயன்படுத்தவேண்டும் என தீர்மானித்த அமெரிக்க ஆளும் தட்டினரது பிரச்சார வாகனமாகியது. 2000 ஆம் ஆண்டு தேர்தலை களவெடுத்து பதவிக்கு வந்ததுமே, புஷ் நிர்வாகம் இந்த வெளிநாட்டு கொள்கையின் நோக்கத்தை தீவிரமாக முன்னெடுக்க ஆரம்பித்தது.

ஈராக் விடுதலை சட்டத்தின்கீழ் ஒதுக்கப்பட்ட நிதியானது ஈராக்கிய ஆட்சியின் எதிர்ப்பாளர்களுக்கு செல்லத்தொடங்கியது. உலக வர்த்தக மையத்தின் மீதானதும், பென்டகன் மீதானதுமான செப்டம்பர் 11 தாக்குதலில் சதாம் ஹுசேன் சம்பந்தப்பட்டிருந்தாலும் இல்லாவிடினும் ரம்ஸ்பெல்டாலும், பேர்லாலும், வொல்வோவிட்ஸ்ஸாலும் மற்றவர்களாலும் ஈராக்கில் அரசாங்கத்தை மாற்றும் அவர்களின் நீண்டநாள் திட்டத்தை விரைவுபடுத்த இது ஒரு சாட்டாக பாவிக்கப்பட்டது.

மீள புனரமைக்கப்பட்ட இத்திட்டத்தில் முக்கிய இலாபமடைந்தவர்கள் ஈராக்கிய தேசிய காங்கிரசாகும். 1996 இன் பின்னர் அது தனது காரியாலயத்தை இலண்டனில் மீளமைத்துக்கொண்டது. அமெரிக்க வெளிநாட்டு திணைக்களத்தின்படி, 2002 பெப்பிரவரியில் ஈராக் விடுதலை சட்டத்தின் கீழ் ஒதுக்கப்பட்ட நிதியுதவியான 24 மில்லியன் டொலரை ஈராக்கிய தேசிய காங்கிரஸ் பெற்றுக்கொண்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஹுசேனை, அகமத் சலாபி பிரதியீடு செய்வதை பேர்ல், ரம்ஸ்பெல்ட் குழுவினர் விரும்புவர் என்பதில் எவ்விதமான ஐயமுமில்லை. ஆனால் புஷ் நிர்வாகத்தினுள் இது தொடர்பாக தீவிரமான முரண்பாடு காணப்படுகின்றது. சலாபியின் முக்கிய ஆதரவாளர் ஒருவரின் கருத்துப்படி இவர் சி.ஐ.ஏ. இனுள்ளும், வெளிநாட்டு அமைச்சகத்திலும் ஒரு 'சந்தர்ப்பவாதி' எனவும், ஈராக்கிய தேசிய காங்கிரசை தனது இலாபத்திற்கு பயன்படுத்துகின்றார்" எனவும் கருதப்படுகின்றார். இக்குற்றச்சாட்டுக்கு ஜோர்டானின் பெட்ரா பாங்கின் (Petra Bank) இன் உடைவிற்கு காரணமான இவரது நிதிமோசடியை ஆதாரமாக காட்டுகின்றனர். 1989 இல் ஜோர்டானிலிருந்து தான் குற்றமற்றவர் என கூறிக்கொண்டு வெளியேறிய இவர், 200 மில்லியன் டொலரை ஏமாற்றினார் என்ற குற்றச்சாட்டில் தனது குற்றமின்மையை நிரூபிக்க 1992 இல் நீதிமன்றத்திற்கு திரும்பவில்லை. ஈராக்கிய தேசிய காங்கிரசின் விமர்சகர்கள் இக்குழுவிற்கு ஈராக்கினுள் முக்கிய ஆதரவில்லை என சுட்டிக்காட்டுகின்றனர்.

அப்படியிருந்தபோதிலும், முக்கியமானது என்னவெனில் சலாபியினதும், ஈராக்கிய தேசிய காங்கிரசினதும் ஆதரவின்மை புஷ் நிர்வாகத்தினரிடையே கவனத்திற்கு எடுத்துக்கொள்ளப்படுவதாக தெரியவில்லை. அண்மையில் அவுஸ்திரேலியாவின் போர் கோர்னர்ஸ் (Four Corners) என்ற நிகழ்ச்சியில் சலாபியை புகழ்ந்த பேர்ல் "மேற்கின் பெறுமதிகளை அவர் பிரதிநிதித்துவப்படுத்துவதாக" குறிப்பிட்டார். அதே நிகழ்ச்சியில் ஜோர்டானில் அவரின் நடவடிக்கை தொடர்பாக பேர்லின் கூட்டு சிந்தனையாளரான, அமெரிக்க மரபுரிமை நிறுவனத்தைச் (American Heritage Foundation) இனை சேர்ந்த டெனியேல் பிளெக்கா (Danielle Pleka) இடம் கேட்கப்பட்ட போது "அது முற்றுமுழுதாக சாத்தியமற்றது" என குறிப்பிட்டார்.

உலக சோசலிச வலைத் தளமானது சதாம் ஹுசேனுக்கு எவ்விதமான ஆதரவையும் வழங்கவில்லை. ஆனால், அமெரிக்காவின் ஆதரவுடன் ஈராக்கிய ஆட்சியின் எதிர்ப்பு குழுக்கள் அமைக்க விரும்பும் அரசாங்கமும் ஈராக்கிய மக்களின் நலன்களை பிரதிபலிக்கவில்லை. அவர்களது மிகவும் மோசமான ஊழல்மிக்க தன்மையானது புஷ் நிர்வாகம் விரும்பும் "அரசாங்க மாற்றம்" எப்படியான தன்மையை கொண்டிருக்கும் என்பதற்கு தெளிவான எடுத்துக்காட்டாகும். காபூலில் கர்சாயை போல் பாக்தாதில் அமைக்கப்படும் புதிய ஆட்சியும் அதனது உயிர்வாழ்க்கைக்கு அமெரிக்க இராணுவ, பொருளாதார மற்றும் அரசியல் உதவியில் முழுதாக தங்கியிருக்கும் ஒரு புதிய காலனித்துவ பொம்மை அரசாகவே இருக்கும்.

கடும்போக்காளர்களான பேர்ல் போன்றவர்களின் கண்களில், சலாபியின் பலவீனத்தைவிட அவரின் அமெரிக்க தலைவர்களுக்கான அடிபணிவே முக்கியமானதாக தெரிகின்றது. பேர்ல், ஈராக் மீதான அமெரிக்காவின் இராணுவ நடவடிக்கைகளை நீண்டகாலமாக ஆதரித்துவருவதுடன், இஸ்ரேலிய அரசுக்கான ஆதரவு உட்பட ஏனைய மத்திய கிழக்கு தொடர்பான புஷ் நிர்வாகத்தின் கொள்கைகளை ஆதரித்துவருகின்றார். ஈராக்கின் எண்ணெய் வளங்களை யார் கட்டுப்படுத்துவது என்பது தொடர்பான முக்கிய கேள்விகளில் எந்தப்பக்கம் தான் நிற்கின்றார் என்பதை சலாபி ஏற்கனவே காட்டியுள்ளார். அவர் வாஷிங்டன் போஸ்ட் (Washington Post) பத்திரிகைக்கு அண்மையில் ஈராக்கிய எண்ணெய் வயல்களை அமெரிக்க தலைமையிலான நிறுவனங்கள் அபிவிருத்திசெய்வதை விரும்புவதாகவும், "அமெரிக்க நிறுவனங்கள் ஈராக்கிய எண்ணெயில் ஒரு பாரிய பங்கு வகிக்கும்" எனவும் குறிப்பிட்டார்.

## இராணுவத்திலிருந்து விட்டோடியவர்கள்

பேர்லுக்கும், ரம்ஸ்பெல்டுக்கும், வொல்வோவிட்சிற்கும் எதிரான அமெரிக்க வெளிநாட்டு திணைக்களத்தில் உள்ளவர்கள் ஈராக் மீதான அமெரிக்க இராணுவத் தலையீட்டை அடிப்படையில் எதிர்க்கவில்லை. மாறாக, ஈராக்கிலும் மற்றும் அப்பிரதேசத்திலும் ஒரு பாரிய விளைவுகள் இல்லாது அமெரிக்க இராணுவம் பாக்தாதினுள் சென்று சலாபி போன்றவரை பதவியில் இருத்துவது என குறிப்பிடுவது பிரச்சனையை இலகுவாக எடுத்துக்கொள்வதாக குறிப்பிடுகின்றனர்.

இக்கருத்துக்களை பிரதிபலிக்கும்வகையில், முன்னாள் சி.ஐ.ஏ.யின் இயக்கியவரும், மத்திய கிழக்கில் 20வருட அனுபவத்தை கொண்டவருமான பொப் பியர் (Bob Baer), போர் கோர்னர் நிகழ்ச்சியில் இந்த "நவீன தாராளவாதிகளை" பற்றி கடுமையாக விமர்சிக்கையில் "ஒரு முற்றுமுழுதான திட்டமில்லை என்பது வாஷிங்டனில் எல்லோருக்கும் தெரியும். யார் சதாம் ஹுசேனை பிரதியீடு செய்வது? இது தொடர்பாக அவர்களுக்கு ஒரு சிந்தனையும் இல்லை. நீங்கள் உள்ளே சென்று இராணுவத்தை அழித்தால், அது ஈராக்கில் ஒரு வெற்றிடத்தை உருவாக்கும். இது தொடர்பாக ஒருவரும் ஆராயவில்லை" என அவர் விபரித்தார்.

"அரசாங்கத்தை மாற்றும்" புஷ்ஷின் திட்டத்தை விமர்சிப்பவர்கள், ஈராக்கிய அரசாங்கம் முற்றுமுழுதாக அழிக்கப்பட்டால் நாடு விரைவாக உடைந்துவிடும் என பயப்படுகின்றனர். அவர்கள் புஷ்ஷின் தகப்பனின் அனுபவத்தை சுட்டிக்காட்டி, 1991 இல் ஷியாவினரினதும், குர்திஸ் தேசியவாதிகளினதும் கிளர்ச்சியையும் தொடர்ந்து ஹுசேனை வெளியேற்றும் முயற்சியை நிறுத்தியதை சுட்டிக்காட்டினர். புஷ்ஷின் திட்டத்திற்கு மாற்றீடாக, ஈராக்கிய இராணுவம் தோற்கடிக்கப்படுகையில் அமெரிக்காவின் கொள்கையின் முக்கிய ஆயுதமாக இவர்கள் இராணுவத்தில் இருந்து விட்டோடிய பலவீனமானோருக்கு முக்கிய பங்கை வழங்க முன்தள்ளுகின்றனர்.

அப்படியான பதவியை ஏற்றுக்கொள்வதற்கு உள்ளவர்களுக்கு தட்டுப்பாடு இல்லை. ஈராக் தேசிய உடன்பாட்டில் மதவாதிகளை தவிர பல ஈராக்கின் இராணுவத்தின் முன்னாள் அதிகாரிகள் பல குழுக்களாக இருக்கின்றனர். இவர்கள் அனைவரும் சி.ஐ.ஏ. உடன் அல்லது வேறு உளவுப்பிரிவினருடன் தொடர்புகளை வைத்திருக்கின்றனர்.

இப்பட்டியலில், சுயாதீன அதிகாரிகள் இயக்கத்தின் தலைவரும், 7 வருடங்களுக்கு முன்னர் தோற்கடிக்கப்படும்வரை ஈராக்கின் இராணுவத்தின் ஐந்தாவது பிரிவின் முதலாவது டாங்கி பிரிவின் முதலாவது அதிகாரியான பிரிகேடியர் ஜெனரல் நஜிப் அல்-சல்கியும் அடங்குவர். அவர் தற்போது வாஷிங்டனுக்கு அண்மையில் வசிப்பதுடன், 30,000 பேர்வரை அணிதிரட்டக்கூடியவர் எனவும், எவராவது அவரின் கதையை கேட்டால் பாக்தாதின் மீது மூன்று பக்கத்தில் இருந்து தாக்குதலை நடாத்துவார் என விபரிப்பார். ஈரான்-ஈராக் யுத்தத்தில் இரசாயன ஆயுதங்களை பிரயோகித்ததற்காக இவர் டென்மார்க்கில் குற்ற விசாரணையை எதிர்நோக்குகின்றார்.

ஈராக் தேசிய கூட்டணி என்றழைக்கப்படும் முன்னாள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈராக்கிய இராணுவத்தின் அதிகாரிகள் குழு ஒன்றும் கடந்த ஜூலை மாதத்தில் இலண்டனில் 80 இராணுவ விட்டோடிகளை அணிதிரட்டி உதவியது. அதில் எடுக்கப்பட்ட தீர்மானங்களில், ஹூசேனுக்கு பின்னரான அரசாங்கத்திற்கான தயாரிப்பாக ஒரு இராணுவ அமைப்பை உருவாக்குவதும் ஆரவாரத்துடன் முடிவாக்கப்பட்டது. ஈராக் அதிகாரிகள் இயக்கத்தின் தலைவரான ஜெனரல் பௌசி அல்-ஷாமானி நிஸார் இதில் கலந்துகொள்ளவில்லை. ஏனெனில், *போர் கோர்னர்* நிகழ்ச்சிக்கு கூறியபடி அவர் தான் தனது சொந்த இராணுவ அமைப்பை 2 வருடத்திற்கு முன்னரே உருவாக்கிவிட்டதால் ஆகும். ஈரான்-ஈராக் யுத்தத்தில் ஈரானிய இராணுவத்திற்கு எதிராக இரசாயன ஆயுதங்களை பிரயோகித்ததாக அவர் ஒத்துக்கொண்டுள்ளார்.

அமெரிக்க வெளிநாட்டு திணைக்களம் இன்னுமொரு இராணுவ ஒடுகாலியான முன்னாள் ஈராக்கிய இராணுவ பொறுப்பதிகாரியான ஜெனரல் நிஸார் கஸ்ராஜினை உதவிக்கு தேடுகின்றது. இவர் அமெரிக்க சிந்தனைத் தாங்கியான (thinktank) மத்திய கிழக்கு நிலையத்தின் ஈராக்கிய எதிர்ப்பாளர்களின் கூட்டத்திற்கு அழைக்கப்பட்டிருந்தார். இவரும் *1988* இல் ஹலப்ஜா (Halabja) நகரத்தில் 3000 மக்களை பலிகொண்ட குர்திஸ் மக்கள் மீதான கடுகு மற்றும் நரம்பினை தாக்கும் வாயுவை பிரயோகித்தமைக்காக டென்மார்க்கில் விசாரணைக்கு உள்பட்டுள்ளார். கஸ்ராஜி *1998* இல் குர்திஸ்தான் மக்கள் மீதான நீண்ட ஒடுக்குமுறைக்கு இராணுவத் தலைமை தாங்கியதுடன், அதில் 100,000 பேர் கொல்லப்பட்டதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

கஸ்ராஜி மற்றும் அல்-ஷல்கி போன்றோரின் சேவையை எதற்காக வேண்டப்படுகின்றது என்பது தெளிவானது. அவர்களின் இராணுவத்திறமை எதிர்ப்பை ஒடுக்குவதற்கு பயன்படுத்தப்படும். ஏனெனில் அவர்களது இராணுவத்தொடர்பு அமெரிக்க ஆதரவிலான ஒரு ஈராக்கிய அரசாங்கத்திற்கான ஆதரவான இரு இராணுவத்தை கட்ட பயன்படுத்தப்படும். பியர் (Baer), அல்-ஷல்கியைப் பற்றி வெளிப்படையாக குறிப்பிடும் போது, "அவர் திரும்பி சென்று சதாம் ஹூசேனுக்கு பதிலாக ஒரு இராணுவ அரசாங்கத்தை அமைப்பார். நீங்கள் ஈராக்கை ஒன்றாக வைத்திருக்க உண்மையில் விரும்பினால் இதுதான் ஒரு சாத்தியமான வழியாகும். நீங்கள் செய்யமுடியாததும், செய்யகூடாததும் என்னவென்றால் அங்கு ஜனநாயகத்தை அறிமுகப்படுத்துவதுதான். அது ஒரு முற்றுமுழுதான சீரழிவைத்தான் உருவாக்கும்" எனக் குறிப்பட்டார்.

ஈராக்கிய எதிர்ப்புக் குழுக்களில் அது தியாகம் செய்து உதவி செய்யுமானால் இதனைத்தான் புஷ் நிர்வாகம் பிரயோசனமான குழுவாக கருதுகின்றது.

ஹூசேனுக்கு பின்னான அரசாங்கத்தில் ஒரு ஒழுங்கமைப்பினை விட்டுவிடாதிருக்க விரும்புவதில், இரண்டு குர்திஸ்தான் அமைப்புகளும் அமெரிக்க ஆக்கிரமிப்பிற்கான ஆதரவை வழங்க காத்திருக்கின்றன. *1993-1996* காலப்பகுதியிலான தமது கடுமையான மோதல்களை குர்திஸ்தான் ஜனநாயக கட்சியும் மற்றும் குர்திஸ்தான் தேசபக்தி யூனியனும் வாஷிங்டனின் உதவியுடன் முடிவிற்கு கொண்டுவந்து, வடக்கு ஈராக் இரண்டு குர்திஸ்தான் பண்ணைகளாக பிரித்துக்கொண்டுள்ளன. தான் இணைந்த சக்தியாக இருந்தால் பேச்சுவார்த்தை மேசையில் பலமாக இருக்கலாம் என முன்னாள் கசப்பான எதிரிகள் முடிவெடுத்தனர். இறுதியில், பார்ஸானியும் தல்பானியும் செப்டம்பர் மாத ஆரம்பத்தில் சந்தித்து குர்திஸ்தான சுயாட்சிப் பிரதேசத்திற்கான திட்டத்தை ஏற்றுக்கொண்டதுடன், குர்திஸ்தான் பிராந்திய பாராளுமன்றத்தினை அமைப்பதற்கும் ஒத்துக்கொண்டனர்.

குர்திஸ்தான் ஜனநாயக கட்சியும், குர்திஸ்தான் தேசபக்தி யூனியனும் தம்மால் இணைந்து 40,000 பேரினை அணிதிரட்டலாம் எனக் கூறினர். ஆனால் குர்திஸ்தான் இராணுவத்தினர் குறித்த அமெரிக்காவின் நோக்கு ஒரு கலந்த உணர்வுள்ளதாகவே உள்ளது. அவர்கள் ஹூசேனை வெளியேற்றுவதற்கு அமெரிக்க இராணுவத்திற்கு உதவலாம் என்றாலும், பாக்தாதில் அமெரிக்கா அமைக்கும் எந்தவொரு அரசாங்கத்திற்கும் குர்திஸ்தான [illegible] இருப்பதுடன், துருக்கியாலும், ஈரானாலும், சிரியாவாலும் ஆழ்ந்த ஐயுறவுடனேயே நோக்கப்படுகின்றனர். மேலும், அவர்களது ஆதிக்கத்தல் உள்ள கிர்குக் பிரதேசத்தின் மீதான தமது ஆதிக்கத்தை இன்னும் விரிவுபடுத்த விரும்புகின்றனர். ஏனெனில் இப்பிரதேசம் பாரிய எண்ணெய் மற்றும் எரிவாயு வளங்களை கொண்டிருப்பதுடன், இது ஈராக்கின் வளங்களை கட்டுப்படுத்தவிரும்பும் அமெரிக்காவின் திட்டங்களுடன் முரண்படுகின்றது.

அமெரிக்கா உடனடியான தந்திரோபாய நோக்கங்களுக்காக தவிர, 5,000-10,000 வரையிலான படையினரை வைத்திருக்கும் ஷியைட்டுக்களை அடித்தளமாக கொண்ட ஈராக்கின் இஸ்லாமிய புரட்சிக்கான அதியுயர்குழுவுடன் இணைந்து இயங்குவதற்கு வேறு காரணங்களில்லை. அமெரிக்க மரபுரிமைகள் நிறுவனத்தை சேர்ந்த டெனிலே பிளெக்டாவிடம் (Danielle Pletka), தெகிரானுக்கு சார்பான ஷியா (Shia) வினை சேர்ந்த ஒரு தலைவரை அமெரிக்கா ஏற்றுக்கொள்ளுமா? என பல்வேறுபட்ட ஷியைட் இனகுழுக்கள் தொடர்பான அமெரிக்காவின் பொதுவான அணுகுமுறை தொடர்பாவும் *போர் கோர்னர்ஸ்* நிகழ்ச்சியில் கேட்கப்பட்டதற்கு, அவர் ''ஈரானியர்கள் ஒரு கட்டுப்படுத்தும் நலன்களை கொண்டிருப்பதை நாங்கள் விரும்புகின்றோமா? இல்லை, இது தொடர்பான கேள்விக்கிடமில்லை. மாறாக ஈராக் ஈரானுக்கு ஒரு உதாரணமாக இருக்க விரும்புகின்றோம், பின்னர் அந்த நபர்களையும் அகற்றிவிடுவோம்'' என கூறினார்.

ஈராக்கிய ஆட்சியின் எதிர்ப்பு குழுக்களுள் குறைந்த முக்கியத்துவத்தை பெறுபவர்கள் அரசாட்சிக்கான சட்ட அமைப்பு இயக்கமாகும் (Constitutional Monarchy Movement). இது ஈராக்கிய தேசிய உடன்பாட்டுடன் கூடுதலாக அடையாளம் காணப்படுவதொன்றாகும். ஈராக்கின் எதிர்கால மன்னராவதற்கு கடந்த ஜூனில் லோகா ஜிர்காவில் இருத்தப்பட முன்னர் இத்தாலியில் உள்ள மாளிகையில் அடைபட்டுக்கிடந்த ஆப்கானிஸ்தானின் *80* வயதுடைய மன்னரான ஷகார் ஷாவினை விட, ஷரீப் அல் பின் ஹுசெயின் அக்கறை உள்ளவராக காணப்படுகின்றார். ஆனால் ஷரீப் அல் பின் ஹுசெயின் அவரது ஆப்கானிஸ்தானிய நண்பரைவிட குறைந்த சட்டபூர்வத்தன்மையையே கொண்டுள்ளார்.

ஈராக்கிய மன்னராட்சியானது பிரித்தானிய ஏகாதிபத்தியத்தினது கண்டுபிடிப்பாகும். இது புதிதாக உருவாக்கப்பட்ட சர்வதேச சங்கத்தில் (League of Nations) அப்பிரதேசத்தின் மீதான ஆளுமையை பாதுகாக்க *1920* இல் உருவாக்கப்பட்டதாகும். கஸ்கெமிட் அமிர் பைஸாலுக்கு முதலாவது பைஸால் பதவி வழங்கப்பட்டது. அவர் *1933* இல் மரணமடைந்தபோது அவரது விளையாட்டுப்பிள்ளையான மகன் மன்னர் காஸி பதவி ஏற்றார். ஆனால் அவர் ஒரு விபத்தில் *1939* இல் மரணமடைந்தார். மூன்றாவது மன்னரான பைஸல்*மிமி*, *1953* இல் பதவி ஏற்றபோதும் *1958* இராணுவ புரட்சியில் கொல்லப்பட்டார். இந்த சிறிய மற்றும் பரிதாபகரமான வரலாற்றின் அடித்தளம் 3 வயதான ஷரீப் அல் பின் ஹூசேனிற்கு அவரது மாமனார் கொல்லப்பட்ட பின்னர் ஈராக்கை "ஒன்றிணைக்கும் சக்தியை" வழங்கியது.

உலக சோசலிச வலைத் தளமானது சதாம் ஹூசேனுக்கு எவ்விதமான ஆதரவையும் வழங்கவில்லை. ஆனால், அமெரிக்காவின் ஆரதவுடன் ஈராக்கிய ஆட்சியின் எதிர்ப்பு குழுக்கள் அமைக்க விரும்பும் அரசாங்கமும் ஈராக்கிய மக்களின் நலன்களை பிரதிபலிக்கவில்லை. அவர்களது மிகவும் மோசமான ஊழல்மிக்க தன்மையானது புஷ் நிர்வாகம் விரும்பும் ''அரசாங்க மாற்றம்'' எப்படியான தன்மையை கொண்டிருக்கும் என்பதற்கு தெளிவான எடுத்துக்காட்டாகும். காபூலில் கர்ஷாயை போல் பாக்தாதில் அமைக்கப்படும் புதிய ஆட்சியும் அதனது உயிர்வாழ்க்கைக்கு அமெரிக்க இராணுவ, பொருளாதார மற்றும் அரசியல் உதவியில் முழுதாக தங்கியிருக்கும் ஒரு புதிய காலனித்துவ பொம்மை அரசாகவே இருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உலக சோசலிச வலைத் தளம் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் மரண அச்சுறுத்தலுக்கு எதிராக பிரச்சாரத்தை முன்னெடுக்கின்றது

# சோசலிச சமத்துவக் கட்சியின் ஜனநாயக உரிமைகளை காப்பாற்று

உ.சோ.வ.த. ஆசிரியர் குழு அறிக்கை
5 அக்டோபர் 2002

உலக சோசலிச வலைத் தளமும் (World Socialist Web Site -WSWS) இலங்கை சோசலிச சமத்துவக் கட்சியும் இலங்கையின் வடக்கின் யாழ்ப்பாணத்துறை தீவில் சோ.ச.க. அங்கத்தவர்களுக்கு எதிரான தமிழீழ விடுதலைப் புலிகளின் உள்ளூர் உத்தியோகத்தரின் மரண அச்சுறுத்தலை கண்டனம் செய்வதற்காக அனைத்து உ.சோ.வ.த. வாசகர்களுக்கும் உழைக்கும் மக்களுக்கும் மனித உரிமை அமைப்புகளுக்கும் மற்றும் ஜனநாயக உரிமைகளை மதிக்கும் அனைவருக்கும் அழைப்பு விடுக்கின்றது.

சோ.ச.க. யாழ்ப்பாணத்துறையில் ஒரு நீண்ட மற்றும் அடிப்படையான வரலாற்றைக் கொண்டுள்ளது. அது இலங்கை இராணுவத்தின் அழிவுகரமான நடவடிக்கைகளுக்கும் கொழும்பு அரசாங்கத்துக்கும் மற்றும் வடக்கில் உள்ள அதன் அரசியல் ஏஜன்டுகளுக்கும் எதிராக யாழ்ப்பாணத்துறை மீனவர்களதும் மற்றும் அவர்களின் குடும்பங்களதும் அடிப்படை ஜனநாயக உரிமைகளையும் சுயாதீன நலன்களையும் காப்பதற்காக உறுதியாகப் போராடி வந்துள்ளது.

எவ்வாறெனினும் இந்த முன்னோக்கானது நாட்டின் வடக்கில் இலங்கை அரசாங்கத்தின் கனிஷ்ட பங்காளியாக தம்மை மாற்றியமைக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள விடுதலைப் புலிகளின் நலன்களை குறுக்கறுக்கின்றது. சோ.ச.கவுக்கு எதிரான முதலாவது மரண அச்சுறுத்தலானது இலங்கை அரசாங்கம் விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்கி இரண்டு நாட்களின் பின்னரும் கொழும்புக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான முதலாவது தாய்லாந்து பேச்சுவார்த்தை இடம்பெறுவதற்கு 10 நாட்களுக்கு முன்னரும் விடுக்கப்பட்டது.

இனவாத சிங்கள அரசுக்கு எதிரான கசப்பானதும் மற்றும் நீண்டதுமான உள்நாட்டு யுத்தத்தில் போராடி வந்த விடுதலைப் புலிகளின் தலைமைத்துவம் இப்போது கொழும்புடனும் மற்றும் வெளிநாட்டு சக்திகளுடனும் தமது தற்சாட்சிப் பத்திரங்களை ஸ்தாபித்துக்கொள்ள எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றது. அரசியல் சட்டபூர்வத்துக்கும் அதிகாரத்தில் பங்கு வகிப்பதற்குமான மாற்றங்களின் பேரில் அது சர்வதேச நாணய நிதியமும் உலக வங்கியும் கோரும் சுதந்திர சந்தை கொள்கைகளை நடைமுறைக்கிடுவதோடு தொழிலாளர் வர்க்கத்திலிருந்தும் ஒடுக்கப்படும் மக்களிடமிருந்தும் எழும் எதிர்ப்பை தாமதமின்றி நசுக்கும்.

ஆகவேதான் விடுதலைப் புலிகள் சோ.ச.க. அங்கத்தவர்களின் உயிருக்கு அச்சுறுத்தல் விடுத்துள்ள அதே வேளை கட்சி அதன் அரசியல் நடவடிக்கைகளைத் தொடர்வதிலிருந்து தடைசெய்ய நடவடிக்கைகளை மேற்கொள்வதாகவும் எச்சரிக்கை விடுத்துள்ளது.

சோ.ச.க மற்றும் அதன் ஜனநாயக உரிமைகள் மீதான இந்தத் தாக்குதலானது, கொழும்பிலும் தாய்லாந்திலும் முடிய கதவுகளுக்குப் பின்னால் ஒழுங்கமைக்கப்பட்டு வரும் எதிர்கால ஆட்சி அமைப்பின் கீழ் தமிழ் தொழிலாளர்கள் விடுதலைப் புலிகளிடமிருந்து எதிர்பார்க்கக் கூடியது என்ன என்பதற்கான ஒரு முன் எச்சரிக்கையாகும்.

முதலாவது மரண அச்சுறுத்தல் செப்டெம்பர் 6ம் திகதி சோ.ச.கவினால் ஸ்தாபிக்கப்பட்ட ஒரு அமைப்பான அம்பிகை நகர் கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கத்தின் கூட்டமொன்றில் விடுதலைப் புலிகளின் யாழ்ப்பாணத்துறை பிரதிநிதியான செம்மணனால் விடுக்கப்பட்டது. இந்தக் கூட்டத்தில் செம்மணன், விடுதலைப் புலிகள் "இந்த வகையிலான கட்சியை அனுமதிக்கவில்லை" எனக் குறிப்பிட்டார். அவர் 1991ல் ஒரு தற்கொலைப் போராளியால் கொல்லப்பட்ட இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி அனுபவித்தது போன்ற அதே சிகிச்சையை சோ.ச.கவும் எதிர்நோக்கக் கூடும் என எச்சரித்தார். அவர் குறிப்பிட்டதாவது 'இலங்கைக்கு இராணுவத்தை அனுப்பிய ராஜீவ் காந்திக்கு என்ன நடந்தது? வெகு விரைவில் நாங்கள் நேரத்தைக் கண்டு பிடித்து அவசியமான மருந்தைக் கொடுப்போம்.'

இதன் தெளிவான கருத்தானது சோ.ச.க. விடுதலைப் புலிகளின் அரசியல் பிராந்தியத்தை "ஆக்கிரமித்துள்ள" அதே வேளை அதே வழியில் சமரசமாக தீர்த்துக்கொள்ளப்பட வேண்டும் என்பதுமேயாகும்.

செம்மணன் விடுதலைப் புலிகளின் தலைவர்களைப் பற்றி குறிப்பிடும்போது, அவர்கள் "மிகவும் ஆத்திரமடைந்துள்ளதோடு அவர்களை இலங்கையின் தென் பகுதிக்கு எத்தி விரட்டுமாறு (சோ.ச.க. அங்கத்தவர்களை) எங்களிடம் குறிப்பிட்டார்கள்" எனப் பிரகடனப்படுத்தினார்.

இந்தப் பிரத்தியேகமான கருத்துக்கள், விடுதலைப் புலிகள் தமது புதிய அலுவலகத்தை கட்டிட நிதிக்காக ஒரு குறிப்பிட்டத் தொகையை . கறந்துகொள்ள முயற்சித்த வேளை, கடற்தொழிலாளர் கூட்டுறவு சங்கம் விடுதலைப் புலிகளுக்கு பணம் வழங்க மறுத்ததன் பிரதிபலிப்பாகவே வெளியிடப்பட்டன.

அடுத்து வந்த இரண்டு வாரங்களில் செம்மணன் தீர்மானத்தை மாற்றுவதற்காக கூட்டுறவு சங்கத்தை இரண்டு முறை பலாத்காரமாக கூட்டுவதற்கு முயற்சி செய்தார். ஆனால் இரண்டு கூட்டங்களையும் உறுப்பினர்களில் பெரும்பான்மையானவர்கள் பகிஷ்கரித்தனர். சந்தேகத்துக்கிடமின்றி இந்தப் பிரதிபலிப்புகள் மீதான ஆத்திரத்தால், செம்மணன் செப்டெம்பர் 27ம் திகதி சங்கத்தின் வழமையான கூட்டத்தில் தலையீடு செய்வதற்காக அவரது பிரதிநிதியான அருந்தவனை அனுப்பி வைத்தார். அருந்தவன் தனது நூற்று நீட்ட உரையில், சோ.ச.க. அங்கத்தவர்களுக்கு எதிரான செம்மணனின் மரண அச்சுறுத்தலை மீள உச்சரித்த அதே வேளை விடுதலைப் புலிகளை எதிர்க்கும் எந்த ஒரு கட்சியும் பொலிசிலோ, நோர்வேயின் சமாதான கண்காணிப்பு குழுவிடமோ அல்லது விடுதலைப் புலிகளின் தலைமைத்துவத்திடமும் கூட முறையிடப்பட்டிருந்தாலும் அதைக் கருத்தில் கொள்ளாது "விரட்டியடிக்கப்படுவர்" என அறிவுறுத்தினார்.

விடுதலைப் புலிகளின் கோரிக்கைக்கு சங்கத்தை இணங்கச் செய்வதில் தோல்வி கண்டதால், மீள அச்சுறுத்தல்களானவை சோ.ச.கவை கட்டாயப்படுத்துவதையும், எந்தவொரு கோட்பாட்டு எதிர்ப்பாக்கும் இடங்கொடாமல் இருப்பதன் பேரில் கடற்தொழிலாளர் கூட்டுறவு சங்கத்துக்கும் யாழ்ப்பாணத்துறையில் உள்ள சாதாரண மக்களுக்கும் எச்சரிக்கை விடுப்பதையும் குறிக்கோளாகக் கொண்டிருந்தது.

உலக சோசலிச வலைத் தளமும் சோ.ச.கவும் விடுதலைப் புலிகளிடமிருந்து உடனடி விளக்கத்தைக் கோருகின்றது. நாம் குறிப்பிட்டது போல செம்மணன் விடுதலைப் புலிகளின் சார்பில் இயங்குகின்றாரா? அவரது அச்சுறுத்தல்கள் விடுதலைப் புலிகளின் தலைமையால் அனுமதிக்கப்பட்டிருந்தவையா? விடுதலைப் புலிகள் அமைப்பு அவரை ஆமோதித்ததா? அவ்வாறு இல்லையெனில் செம்மணனும் அவரது பிரதிநிதியும் ஒழுக்கமும் அடக்கமும் உடையவர்களாக ஆக்கப்படுவார்களா?

நாம் விடுதலைப் புலிகள் தமது உள்ளூர் உத்தியோகத்தர்களின் அவமதிக்கத்தக்க அச்சுறுத்தல்களையும் அதே போல் வடக்கில் அரசியல் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான சோ.ச.க வின் ஜனநாயக உரிமைகள் மீதான அவர்களின் தாக்குதல்களையும் பகிரங்கமாகவும் நிபந்தனையின்றியும் மறுதலிக்க வேண்டும் என உடனடியாக கோரிக்கை விடுக்க எங்களுடன் இணையுமாறு இலங்கையிலும் அனைத்துலகிலும் உள்ள தமிழ் அமைப்புகளுக்கு அழைப்பு விடுக்கின்றோம்.

விடுதலைப் புலிகள் சோசலிச சமத்துவக் கட்சியை இலக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்தது இது முதற் தடவையல்ல. 1998 ஜுலையில், விடுதலைப் புலிகள் வடக்கின் கிளிநொச்சி மாவட்டத்தில் நான்கு சோ.ச.க. அங்கத்தவர்களை கைது செய்து தடுத்து வைத்திருந்தனர். சோ.ச.க. உறுப்பினர்கள் தமிழ் தொழிலாளர்களுக்கு மத்தியில் சோ.ச.க.வின் வேலைத் திட்டத்துக்காக பிரச்சாரம் செய்து வந்தார்கள்: அது தீவின் வடக்குக் கிழக்கில் இருந்து இலங்கை இராணுவத்தை உடனடியாக வாபஸ்பெறச் செய்வதற்காகவும் விடுதலைப் புலிகளின் பிரிவினைவாத முன்நோக்குக்கு எதிராக ஸ்ரீலங்கா-ஈழம் சோசலிச ஐக்கிய குடியரசுக்காக தமிழ், சிங்களத் தொழிலாளர்களை ஐக்கியப்படுத்துவதுமாகும். ஆரம்பத்தில் விடுதலைப் புலிகளின் தலைமை இந்த நால்வரையும் அது தடுத்து வைத்திருப்பதை ஏற்றுக்கொள்ள மறுத்துவந்த போதிலும், அது சோ.ச.க.வும் நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவும் உலக சோசலிச வலைத் தளத்தின் ஊடாக முன்னெடுத்த சக்திவாய்ந்த அனைத்துலக பிரச்சாரத்தின் பெறுபேறாக முடிவில் அவர்களை விடுதலை செய்யத் தள்ளப்பட்டது.

சோ.ச.க. ஊர்காவற்துறையில் தாக்குதலுக்குள்ளானது இது முதற் தடவை அல்ல. 2000 ஆண்டு மார்ச்சில், ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் (ஈ.பி.டி.பி) உள்ளூர் உத்தியோகத்தர்கள், தமது அன்றாட வாழ்க்கையின் ஜீவனோபாயத்தின் மீது இலங்கை இராணுவத்தால் மேற்கொள்ளப்பட்டு வந்த அடக்குமுறைகளுக்கு எதிரான உள்ளூர் மீனவர்களின் போராட்டத்துக்கு தலைமை வகித்துக் கொண்டிருந்த சோ.ச.க. அங்கத்தவர்களையும் மற்றும் ஆதரவாளர்களையும் சரீர ரீதியில் தாக்கியது. ஈ.பி.டி.பி.யின் மூர்க்கமானதும் இரகசியமானதுமான தாக்குதலானது, அதனது பிரதிநிதிகள் வேறு எதற்காகவும் அன்றி கொழும்பு அரசாங்கத்துக்கு கூலிப்படைகளாகவும் குண்டர்களாகவும் மட்டுமே இயங்குகிறார்கள் என்பதை தீர்க்கமாக அம்பலப்படுத்துகிறது.

சோ.ச.க.வுக்கு எதிரான அண்மைய மரண அச்சுறுத்தலானது விடுதலைப் புலிகள் இதே போன்ற ஒரு பாத்திரத்தை இட்டு நிரப்புவதற்காகவே தயார் செய்துகொண்டிருக்கின்றார்கள் என்பதை சுட்டிக் காட்டுகின்றது. சோ.ச.க.வின் இலங்கை ட்ரொட்ஸ்கிஸ்டுகளை விடுதலைப் புலிகளின் குண்டர் நடவடிக்கைகளால் பயமுறுத்த முடியாது. இந்த அமைப்பின் மரண அச்சுறுத்தலானது தமிழ் சிங்கள தொழிலாளர் வர்க்கத்தின் மீதான அதனது எதிர்ப்பையும், தமது பொது ஒடுக்குமுறையாளர்களுக்கு எதிராக வடக்கிலும் தெற்கிலும் உள்ளத் தொழிலாளர்களை ஐக்கியப்படுத்துவதற்காக இலங்கையில் ஒரு சுயாதீன இயக்கத்தை கட்டியெழுப்புவதற்கான அவசியத்தின் மீதுமான எதிர்ப்பையும் மாத்திரமே அம்பலப்படுத்துகிறது.

சோ.ச.க. அங்கத்தவர்களுக்கு எதிரான மரண அச்சுறுத்தல்களை விலக்கிக்கொள்வதோடு அதை மறுதலிக்குமாறும், கட்டாயப்படுத்தலிலும் அடக்குமுறையிலிருந்தும் சுதந்திரமாக தமது அரசியல் வேலைகளை மேற்கொள்வதற்கான சோ.ச.க.வின் உரிமையை உத்தரவாதம் செய்யுமாறும் விடுதலைப் புலிகளைக் கோருவதற்காக உ.சோ.வ.த.வும் சோ.ச.க.வும் அடிப்படை ஜனநாயக உரிமைகளை போற்றும் அனைவருக்கும் மீண்டும் அழைப்பு விடுக்கின்றது.

கடிதங்களையும் அறிக்கைகளையும் தபால் செய்யவேண்டிய அல்லது மின்னஞ்சல் செய்யவேண்டிய முகவரிகள்:

யாழ்ப்பாணம்

இளம்பரிதி

தமிழீழ விடுதலைப புலிகள் யாழ்ப்பாணக் காரியாலயம்

பொட்பதி வீதி, கொக்குவில்

யாழ்ப்பாணம்

Sri Lanka

கொழும்பு

தமிழீழ விடுதலைப் புலிகள்

சி/- இலங்கை கண்காணிப்புக் குழு

த.பெ: 1930

காலி வீதி கொழும்பு 3

மின்னஞ்சல்: slmm-hq@mfa.no

அவை கீழ்வரும் முகவரிகளுக்கும் தபால் செய்ய அல்லது தொலைமடல் செய்ய முடியும்:

லண்டன்

The LTTE
c/- Eelam House
202 Long Lane
London SE1 4QB
United Kingdom
Telephone: 44-171-403-4554
Fax: 44-171-403-1653

தயவுசெய்து அனைத்து அறிக்கைகளின் பிரதிகளையும் உ.சோ.வ.த.வுக்கும் அனுப்பி வைக்கவும்:

Email: editor@wsws.org
Fax:
United States: 248-967-3023
Britain: 0114 244 0224
Australia: 02 9790 3501

இலங்கை சோசலிச சமத்துவக் கட்சி, த.பெ: 1270, கொழும்பு.
Fax: 01-735910

# இலங்கை சோசலிஸ்ட் மீதான தமிழீழ விடுதலைப் புலிகளின் வன்முறைத் தாக்குதலை கண்டனம் செய்!

உ.சோ.வ.த. ஆசிரியர் குழு
*11 அக்டோபர் 2002*

தமிழீழ விடுதலைப் புலிகள் (LTTE) இலங்கையின் வடக்கில் உள்ள ஊர்காவற்துறை தீவில் சோசலிச சமத்துவக் கட்சியின் (சோ.ச.க) உறுப்பினர்களுக்கும் ஆதரவாளர்களுக்கும் எதிரான அவர்களின் தாக்குதலை உக்கிரமாக்கியுள்ளனர்.

அக்டோபர் 8 செவ்வாய்க் கிழமை, நன்கு அறிந்த விடுதலைப் புலிகளின் ஊறுப்பினரான கார்த்திகேசு அமிர்தலிங்கம், சோ.ச.க. உறுப்பினரான நாகராஜா கோடீஸ்வரனை மூர்க்கமாகத் தாக்கினார். 27 வயதான கோடீஸ்வரன் மூன்று பிள்ளைகளின் தந்தையும் ஊர்காவற்துறையின் அம்பிகை நகர் கடற்தொழிலாளர் கூட்டுறவு சங்கத்தின் ஸ்தாபக அங்கத்தவரும் பொருளாளருமாவார். கோடீஸ்வரன் தப்பிக்கொள்ள முயற்சித்த போது அவர் தலையிலும் கழுத்திலும் தோள்களிலும் கடுமையான கத்தி குத்துக் காயங்களுக்கு உள்ளானார். ஆனால் உண்மையில் அவரால் ஒரு ஊள்ளூர் கடைக்குள் பாதுகாப்பு தேடிக்கொள்ள முடிந்திருக்காவிடில் நிச்சயமாக கொல்லப்பட்டிருப்பார்.

சம்பவத்தை அடுத்து, ஊர்காவற்துறையில் உள்ள சோ.ச.க அங்கத்தவர்கள் உள்ளூர் பொலிசுக்கு உடனடியாக அறிவித்திருந்த போதிலும் சம்பந்தப்பட்ட நபரைக் கைதுசெய்வதற்காக இதுவரையும் எந்தவொரு நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை. அவர் இன்னமும் சோ.ச.க. அங்கத்தவர்களுக்கும் ஆதரவாளர்களுக்கும் எதிராக வன்முறை அச்சுறுத்தல்களை விடுக்கின்றனர்.

செவ்வாய்க் கிழமை தாக்குதலானது சோ.ச.க.வை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடக்குவதற்கானதும் அமைதியடையச் செய்வதற்கானதுமான விடுதலைப் புலிகளின் முயற்சிகளின் அடுத்தகட்டத்தை இவ்வெதிர்ப்பு குறிக்கின்றது. ஒரு வாரத்துக்கும் முன்னதாக விடுதலைப் புலிகளின் அலுவலர்களை செம்மண்ணுர் அவரது பிரதிநிதியான அருந்தவனும் அம்பாறைதுறைசெல் சோ.ச.க. அங்கத்தவர்களுக்கு எதிராக வெட்டுப்பட்டவரால் விடுத்த மரண அச்சுறுத்தலை எதிர்த்து உலக சோசலிச வலைத் தளமும் மற்றும் சோ.ச.கவும் ஒரு அவசரத்தன்மையுள்ள பிரச்சாரத்தை முன்னெடுத்துள்ளன. இந்த மரண அச்சுறுத்தல்கள், விடுதலைப் புலிகளின் புதிய கட்டிடத்துக்காக நிதி கோரியபோது சோ.ச.க. தலைமையிலான கடற்தொழிலாளர் சங்கம் அதற்கு பணம் வழங்க மறுத்ததை அடுத்தே விடுக்கப்பட்டன. இந்த நிதி கோரிக்கையானது விடுதலைப் புலிகளின் எதிராளிகளுக்கு விரோதமான வன்முறைப் பிரச்சாரத்தை நியாயப்படுத்துவதன் பேரில் ஒழுங்கமைக்கப்பட்ட திட்டமிடப்பட்ட ஆத்திரமூட்டலாகும்.


கோடீஸ்வரன்

சோ.ச.க. மீதான தாக்குதல்கள், நடைபெறும் இலங்கை சமாதானப் பேச்சுவார்த்தைகளோடு பிணைக்கப்பட்டுள்ள புதிய அதிகாரப் பகிர்வு கொடுக்கல் வாங்கல்களுக்கான விடுதலைப் புலிகளின் தயாரிப்பை எடுத்துக் காட்டும் நடவடிக்கைகளில் அதன் தெளிவான தாக்குதலோடு இணைந்துகொண்டுள்ளன. கொழும்பு அரசாங்கத்துடனும் மற்றும் அதன் திறந்த சந்தைப் பொருளாதார திட்டத்துடனும் ஒரு கனிஷ்ட பங்காளியாக தன்னை கொடுக்கொண்ட முறையில் அர்ப்பணித்துவரும் விடுதலைப் புலிகள், தமிழ் மக்களின் நலன்களையும் ஜனநாயக உரிமைகளையும் பாதுகாக்கும் பாசாங்குகளை கைவிட்டுள்ளனர்.

அம்பாறைத்துறையில் இடம்பெற்ற விடுதலைப் புலிகளின் புதிய தாக்குதல் மிகப் பொருத்தமான அரசியல் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். சிறுபான்மைத் தமிழ் மக்களைப் பாதுகாப்பதில் அதன் சளைக்காத போராட்டத்தின் காரணமாக சோ.ச.க. (அதன் முன்னோடியான புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகமும்) இலங்கை முழுவதும் நன்கு அறியப்பட்டுள்ளது. 1958ல் உள்நாட்டு யுத்தம் ஆரம்பமானதிலிருந்து, சோ.ச.க. விடுதலைப் புலிகளைப் பாதுகாத்தும், தற்போது இடம்பெற்றுவரும் இராணுவத் தாக்குதல்களுக்கு எதிராகவும் மற்றும் வடக்குக் கிழக்கில் இருந்து இலங்கைத் துருப்புக்களை முற்றாக வெளியேற்றுமாறும் கோரி இலங்கை அரசாங்கத்துக்கு எதிராக கடுமையான சமரசமற்றப் போராட்டத்தை முன்னெடுத்து வந்துள்ளது. இலங்கை அரசின் மற்றும் அதன் அரசியல் ஏஜன்டுகளின் பதிலளிப்புகள் பல சோ.ச.க. அங்கத்தவர்களை படுகொலை செய்தல் மற்றும் ஏனையவர்களை சிறைவைத்தல் உட்பட்ட அரச ஒடுக்குமுறைகளைக் கொண்டிருந்தது.

சோ.ச.க. பல தசாப்தங்களில் விடுதலைப் புலிகளின் தேசியவாத மற்றும் பிரிவினைவாத வேலைத்திட்டத்துடனான தமது அடிப்படை அரசியல் வேறுபாடுகளை முழுமையாக தெளிவுபடுத்தி வந்துள்ளது. தற்போது விடுதலைப் புலிகள் இந்த வேறுபாடுகளுக்கு வன்முறைத் தாக்குதல்களோடு பிரதிபலிப்பதானது வடக்கில் அது ஸ்தாபிக்கத் தயார் செய்துகொண்டிருக்கும் அரசாங்கத்தின் மாதிரியை காட்டிக் காட்டுகிறது.

உலக சோசலிச வலைத் தளமும் (WSWS) சோ.ச.க.வும் விடுதலைப் புலிகளின் மரண அச்சுறுத்தல்களுக்கு எதிரான தமது பிரச்சாரத்துக்கு ஆதரவாக கடந்த வாரத்தில் மின்னஞ்சல் மற்றும் தொலை மடல் மூலம் அனுப்பி வைக்கப்பட்டிருந்த ஒரு தொகை கடிதங்களை வரவேற்கின்றது. ஆனால் இது தற்போது தீவிரமாக்கப்பட வேண்டியதுள்ளது. நாம் கோடீஸ்வரன் மீதான விடுதலைப் புலிகளின் கொலைகாரத்தனமான தாக்குதலை பகிரங்கமாக கண்டனம் செய்யவும், தமிழ்மக்களின் பிரச்சினையை குறைத்து மதிப்பிட வழிசெய்யும் இத்தகைய வழிமுறைகளை மறுத்து ஒரு தெளிவான அறிக்கையை வெளியிடுமாறு விடுதலைப் புலிகளை கோருவதற்கும் இலங்கையிலும் உலகம் பூராவும் உள்ள தமிழ் சமூகத்துக்கு அழைப்பு விடுக்கின்றோம். அமிர்தலிங்கம் உடனடியாக கைதுசெய்யப்பட வேண்டும். விடுதலைப் புலிகள் இந்த மரண அச்சுறுத்தல்களில் சம்பந்தப்பட்டவர்கள் அனைவரையும் ஒழுக்கத்துக்கும் கட்டுப்பாட்டுக்குள்ளும் கொண்டுவர வேண்டும்.

நாம் இந்த சுற்றிவளைப்புத் தாக்குதலை கண்டனம் செய்யுமாறும், தமது அரசியல் நடவடிக்கைகளை அடக்குமுறைகள் மற்றும் வன்முறைகளின்றி சுதந்திரமாக மேற்கொள்வதற்கான சோசலிச சமத்துவக் கட்சியின் உரிமையை காப்பாற்றுமாறும் அனைத்து மனித உரிமை அமைப்புகளுக்கும் ஜனநாயக உரிமைகளை பேணுவதில் அக்கறை கொண்ட அனைவருக்கும் மீண்டும் அழைப்பு விடுக்கின்றோம்.

# ஏசியன் ரிபியூன், விடுதலைப் புலி பரிந்துரையாளருக்கான உலக சோசலிச வலைத் தளத்தின் பதிலை பிரசுரிக்கிறது

ஆசிரியர் குழு
14 அக்டோபர் 2002

அக்டோபர் 12 அன்று, அவுஸ்திரேலியாவில் தமிழ் மக்கள் மத்தியில் வாசிக்கும் பலம்பெற்ற தளப் பிரசுரமான ஏசியன் ரிபியூன் (Asian Tribune), இலங்கையின் சோசலிச சமத்துவக் கட்சியை பாதுகாப்பதற்கான உலக சோசலிச வலைத் தளத்தின் (WSWS) பிரச்சாரத்தை தாக்கி எழுதப்பட்ட கடிதத்திற்கு, உ.சோ.வ.த ஆசிரியர் குழு தலைவர் டேவிட் நோர்த்தின் பதிலை பிரசுரித்துள்ளது. இலங்கையின் வடக்கில் உள்ள அம்பாறைத்துறை தீவின் தமிழீழ விடுதலைப் புலிகளின் அலுவலர்கள் சோசலிச சமத்துவக் கட்சியின் (சோ.ச.க) அங்கத்தவர்களுக்கு எதிராக அச்சுறுத்தல் விடுத்திருந்ததோடு, அக்டோபர் 6ம் திகதி நன்கு அறிந்த விடுதலைப் புலிகளின் ஒரு உறுப்பினர், அம்பாறைத்துறை கடற்தொழிலாளர் கூட்டுறவு சங்க அலுவலரான சோ.ச.க. அங்கத்தவர் மீது வன்முறைத் தாக்குதலும் தொடுத்தார்.

சோ.ச.க. க்கு எதிரான அச்சுறுத்தலை விளக்கியும் சோ.ச.க.வின் ஜனநாயக உரிமைகளைப் பேணும் அவசரத்துவப் பிரச்சாரத்துக்கு அழைப்புவிடுத்தும் முதல் முதல் உ.சோ.வ.த வெளியிட்ட அறிக்கையை அக்டோபர் 6 ஏசியன் ரிபியூன் பிரசுரித்திருந்தது. உ.சோ.வ.த. பிரச்சாரத்தை கண்டனம் செய்ததோடு தமது உறுப்பினர்களுக்கு எதிரான விடுதலைப் புலிகளின் அச்சுறுத்தலானது ஒரு புனைகதை என இலங்கை சோ.ச.க.வை குற்றம் சாட்டியும் ஒரு தமிழ் பத்திரிகையாளரான வி.தங்கவேலு எழுதிய கடிதத்தையும் அக்டோபர் 7 ரிபியூன் பிரசுரித்திருந்தது. வி.தங்கவேலு, அக்டோபர் 8ம் திகதி தனது கடிதத்தை உ.சோ.வ.த.க்கு அனுப்பியதோடு அதன் பிரதியை ஏசியன் ரிபியூனிற்கும் அனுப்பியிருந்தார்.

ரிபியூன் ஆசிரியர் கே.டி. ராஜசிங்கம், வி.தங்கவேலுவின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குற்றச் சாட்டுக்களுக்கு உ.சோ.வ.த. ஆசிரியர் குழுவிடமிருந்து ஒரு பதிலைக் கோரியிருந்தார். அக்டோபர் 12, டேவிட் நோர்த் பதில் அனுப்பியிருந்ததோடு அன்றைய தினமே அது "உலக சோசலிச வலைத் தள ஆசிரயர் குழு உச்ச திருப்தியளிக்கும் விதத்தில் எமக்கு விளக்கமளித்துள்ளது" என்ற தலைப்பில் பிரசுரமாகியிருந்தது. நோர்த்தின் கடிதமானது, "நாம் உலக சோசலிச வலைத் தள ஆசிரியர் குழுவின் விளக்கத்தில் திருப்தியும் நம்பிக்கையும் கொண்டோம்" என்பதை வலியுறுத்தும் பிற்குறிப்புடன் பிரசுரிக்கப்பட்டிருந்தது.

நாம் வீ.தங்கவேலுவின் கடிதத்தையும் டேவிட் நோர்த்தின் பதிலையும் கீழே பிரசுரிக்கின்றோம்.

அன்பின் ஆசிரிய ருக்கு,

தங்களது சோ.ச.க. மிகத் தெளிவாக குழம்பிய குட்டையில் மீன் பிடிக்கிறது. சோ.ச.க. பற்றியும் அதன் செயல்பாடு பற்றியும் வலைத் தளத்தின் மூலம் மாத்திரமே நான் அறிந்துள்ளேன். மொத்தத்தில் சோ.ச.க.யானது மிகத் தெளிவாக ஊர்காவற்துறையின் ஏழை தமிழ் மீனவர்களைச் சுரண்டும் ஓரத்தில் உள்ள ஒரு அமைப்பாகும். இது "வறிய தமிழ் தொழிலாளர் வர்க்கத்தைபிட்டு" முதலைக் கண்ணீர் வடிக்கும் ட்ரொட்ஸ்கிஸ்டுகளின் முதல் முயற்சியல்ல. உங்களுக்கு முன்னர் என்.எம்.பெரேரா மற்றும் கொல்வின் ஆர்.டி. சில்வா அன்ட் கம்பனியும் முயற்சித்து தோல்விகண்டனர்.

விடுதலைப் புலிகள் ஒரு தொங்கலில் உள்ள உங்களது அமைப்பினை முக்கியமானதாக கருதுவார்கள் என நான் நம்பவில்லை. கொலை அச்சுறுத்தல்களும் உங்கள் கற்பனையில் உருவான ஒரு கட்டுக்கதையாகும். விசேடமாக, செம்மனான் ராஜீவ் காந்தியின் பெயரால் மறைமுகமாகக் குறிப்பிட்டது! உங்கள் குற்றச்சாட்டின் உண்மை பற்றி ஆராய தயவு செய்து அம்பிகை நகர் கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்க நிர்வாகக் குழு உறுப்பினர்களது பெயர்களை எனக்குத் தருக.

தங்கவேலு

மதிப்பிற்குரிய திரு. ராஜசிங்கம் அவர்களுக்கு!

தங்களின் கடிதத்திற்கு நன்றி.

இலங்கையின் வடக்கில் யாழ்ப்பாணப் பிரதேசத்தில் உள்ள ஊர்காவற்துறை தீவில் சோசலிச சமத்துவக் கட்சி அங்கத்தவர்களுக்கு எதிரான விடுதலைப் புலிகளின் அச்சுறுத்தல் தொடர்பாக உலக *சோசலிச வலைத் தளத்தில்* பிரசுரிக்கப்பட்ட அறிக்கைகளின் உண்மை பற்றிய விடயத்தில் எந்தவொரு பிரச்சினையும் இருக்க முடியாது. எமது அறிக்கையில் எந்தவொரு தெளிவின்மையும் கிடையாது. நாம் சோ.ச.க.வுக்கு எதிராக அச்சுறுத்தல் விடுத்த விடுதலைப் புலி அலுவலரின் பெயரைக் குறிப்பிட்டுள்ளதோடு, அதே போல் நேரம், இடம், அச்சுறுத்தலின் சந்தர்ப்ப சூழ்நிலை போன்றவற்றையும் வழங்கியுள்ளோம். சோ.ச.க. அங்கத்தவர் ஒருவரை மூன்று தினங்களுக்கு முன் கொலை செய்ய முயற்சித்த கொலையாளியின் பெயரையும் கூட நாம் தந்துள்ளோம்.

> **தற்போது விடுதலைப் புலிகளே தமது நீண்டகால பிரிவினைவாத முன்நோக்கு வங்குரோத்தடைந்துள்ளதை தமது தத்துவவியல் பெரியவரான அன்டன் பாலசிங்கத்தின் கூற்றிலேயே ஏற்க நிர்ப்பந்திக்கப்பட்டுள்ள நிலைமையின் கீழ், அது தனக்கு எதிராக ஒப்புவிக்கப்பட்ட கண்டனங்களை தெரிவிப்போருக்கு எதிராக ஆத்திரத்துடன் பாய்ந்து விழுகின்றது. விடுதலைப் புலிகள் கொள்கைப் பற்றற்ற பயங்கரவாத செயல்முறைகளை கைவசம் கொண்டுள்ளதை அனைவரும் அறிவர்.**

மறுபுறத்தில் திரு. தங்கவேலு, "விடுதலைப் புலிகள் ஓரத்திலுள்ள உங்களது அமைப்பினை முக்கியமானதாக கருதுவார்கள் என நான் நம்பவில்லை" என்ற தனது சுய அகநிலைவாத பிரகடனத்தை தவிர உண்மையை மறுத்து நிறுவுவதற்கான முறயற்சியை மேற்கொள்ளவில்லை. "அவர் நம்புவாரோ அல்லது நம்பாதிருப்பாரோ அது அவரது விருப்பம்." ஆனால் வடக்கில் கடந்த காலங்களில் விடுதலைப் புலிகள் சோ.ச.க. அங்கத்தவர்களையும் ஆதரவாளரையும் தாக்கியது உண்மையாகும். 1998ல் சோ.ச.க. அங்கத்தவர்கள் நால்வர் விடுதலைப் புலிகளால் கைதுசெய்யப்பட்டனர். மூவர் இரு மாதங்களாக அடைத்து வைக்கப்பட்டிருந்தனர். ஒருவர் 13 தினங்கள் தடுத்து வைக்கப்பட்டிருந்தார். அவர்களைப் பாதுகாப்பதற்காக தொடுத்த அனைத்துலக பிரச்சாரத்தின் பெறுபேறாக மாத்திரமே அவர்களது விடுதலை சாத்தியமாகியது.

சோ.ச.க. அங்கத்தவருக்கு எதிராக அண்மையில் விடுக்கப்பட்ட அச்சுறுத்தல், எமது அபத்தமான கற்பனை என்று கூறும் திரு. தங்கேலுவின் ஆத்திரமூட்டும் குற்றச்சாட்டானது அக்டோபர் 8ம் திகதி விடுதலைப் புலிகளின் கொலைகாரனாகி இருக்கக்கூடிய ஒருவரால் நாகராஜா கோடீஸ்வரனுக்கு விளைவிக்கப்பட்ட கத்திக்குத்து காயங்களின் இரத்த வடுக்களால் பொய்யென நிரூபிக்கப்பட்டுள்ளது. இப்போது திரு. தங்கவேல், கோடீஸ்வரன் தன்னைத் தானே காயப்படுத்திக் கொண்டாரென கூறப்போகிறாரா?

தமது புறநிலைபாவத்தைப் பற்றிய திரு. தங்கவேலுவின் கருத்துக்கள் அவர் பயன்படுத்திய வார்த்தைகளாலேயே தகர்ந்துபோய்விட்டன. இலங்கை அரசியலில் பரிட்சியமற்ற மக்களை குழப்புவதன் பேரில் அவர் சோ.ச.க.வை "ஒரு ஓரத்தில் உள்ள அமைப்பு" என வர்ணிக்கின்றார். உண்மையில் ஒரு அரசியல் கட்சியான சோ.ச.க. வின் வரலாறானது 30 ஆண்டுகளுக்கும் மேற்பட்டதாகும். 40-ஆண்டுகாலம் இலங்கை தொழிலாளர் இயக்கத்துள் தலையீடுகளைக் கொண்டிருந்த நீண்ட வரலாற்றையுடைய பொதுச் செயலாளர் விஜேடயஸ் போன்ற பெருமதிப்புள்ள மார்க்சிச சோசலிச தலைவர்கள் அதன் சமஸ்தாபகர்களாகும். திரு தங்கவேலு இகழ்ச்சியுடன் ஆட்சேபிப்பது இலங்கையிலும் அனைத்துலக ரீதியிலும் சோ.ச.க. வின் ஆழமான வரலாற்று வேர்களையேயாகும் எனக் குறிப்பிடுவது சரியானதாகும். அவர் பின்வருமாறு எழுதுகிறார், " வறிய தமிழ் தொழிலாள வர்க்கத்துக்காக ட்ரொட்ஸ்கிஸ்டுகள் முதலைக் கண்ணீர் வடிப்பது இது முதற் தடவையல்ல." "உங்களுக்கும் முன்னர் என்.எம்.பெரேரா கொல்வின் ஆர்.டி செல்வா அன்ட் கம்பனியும் முயற்சித்து தோல்வி கண்டனர்!"

இந்த அறிக்கை சோ.ச.க. மீதான திரு தங்கவேலுவின் வெறுப்பின் பின்னணியில் உள்ள பேரினவாத அரசியலை தெளிவாக அம்பலப்படுத்துகிறது. என்.எம். பெரேரா மற்றும் கொல்வின் ஆர்.டி. சில்வா மீதான தாக்குதலில் அவரின் இலக்கு, தேசிய முதலாளித்துவத்துக்கு எதிராக சோசலிசத்துக்கான ஒரு ஐக்கியப் போராட்டத்துக்காக சிங்கள-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் தொழிலாள வர்க்கத்தை ஐக்கியப்படுத்துவதற்கான லே.ச.ச.க.வின் 1960களின் முன்னைய துணிகரமான முயற்சிகளைப்போலாகும். 1960களின் முற்பகுதியில் இடம்பெற்ற மாபெரும் ஹர்த்தாலானது சிங்கள, தமிழ் மக்களின் சக்தியாய்ந்த சமூக இயக்கத்தின் உயர்ந்த வரலாற்று அம்சமாக விளங்கியது. பின்னர் 1964ல் திருமதி பண்டாரநாயக்காவின் கூட்டரசாங்கத்தில் நுழைவதற்கான அதன் துன்பகரமான முடிவின் காரணமாக, லங்கா ச.ச.க. சிங்களத் தமிழ் மக்களின் ஐக்கியத்துக்கான போராட்டத்தில் அடித்தளமாக விளங்கிய அனைத்துலகவாத அடிப்படைகளை காட்டிக்கொடுத்தது.

முதலாளித்துவ தமிழ்க்கட்சிகளின் அரசியல் (லே.ச.ச.க. வின் முன்னோடி) அக்காட்டிக் கொடுப்புக்கு எதிராக நடத்திய போராட்டத்திலிருந்து உதயமானதாகும். அடுத்து வந்த தசாப்தங்களில் பு.க.க. வும் சோ.ச.க. வும் இலங்கையின் சகல பாகங்களிலும் தமிழ் மக்களின் ஜனநாயக உரிமைகளைப் பெறும் சளைக்காத பிரச்சாரத்தை தொடுத்திருந்தது. தமிழீழ விடுதலைப் புலிகளின் வங்குரோத்து மற்றும் பிற்போக்கான பிரிவினைவாத முன்நோக்கினை நிராகரித்து வந்த அதே வேளை சகல வடிவிலான சிங்கள பேரினவாதத்தையும் அது எதிர்த்து வந்துள்ளது.

தற்போது விடுதலைப் புலிகளே தமது நீண்டகால பிரிவினைவாத முன்நோக்கு வங்குரோத்தடைந்துள்ளதை தமது தத்துவாசிரியர் பேரியவரான அன்டன் பாலசிங்கத்தின் கூற்றிலேயே எங்க நிரூபிக்கப்பட்டுள்ள நிலைமையின் கீழ் அது தனக்கு எதிராக ஒப்புவிக்கப்பட்ட கண்டனங்களை தெரிவிப்போருக்கு எதிராக ஆத்திரத்துடன் பாய்ந்து விழுகின்றது. விடுதலைப் புலிகள் கொள்கைப் பற்றற்ற பயங்கரவாத செயல்முறைகளை கையாண்டுள்ளதை அனைவரும் அறிவர்.

திரு. தங்கவேலு, விடுதலைப் புலிகள் தமது அரசியல் எதிரிகளுக்கு எதிராக வன்முறைகளைப் பிரயோகிக்கின்றது என்ற குற்றச்சாட்டு ஒரு கட்டுக் கதை என, சோ.ச.க. அறிக்கைகளுக்கு எதிராக ஆவேசத்தைக் கொட்டுகிறார். ஆயினும் விடுதலைப் புலிகளின் வரலாற்றுடன் நன்கு பரிச்சயமானவர்கள் இது பற்றி நன்கறிவர். திரு.பிரபாகரன் இராணுவ உடைக்குப் பதில் தற்போது மூன்று-பகுதி ஆடை அணிபவராயினும் ஆளால் முழுவதில் ஆடை மாற்றம் அவரது அரசியல் செயல்முறையின் மாற்றமல்ல.

திரு. தங்கவேலு, தமிழ் மக்களின் ஜனநாயக உரிமைகளை நீண்ட காலமாக பேணி வந்த சோசலிச போராளிகளின் மீதான தாக்குதல்களை நியாயப்படுத்துவதிலும் பார்க்க, விடுதலைப் புலிகள் தனது அரசியல் எதிரிகள் மீது உடல் ரீதியான வன்முறைகளை மேற்கொள்வதை கண்டனம் செய்து ஒரு நேரடியானதும் உறுதியானதுமான அறிக்கையை வெளியிட வேண்டும்.

தங்கள் உண்மையுள்ள,

டேவிட் நோர்த்

உலக சோசலிச வலைத் தளம், விடுதலைப் புலிகளின் தாக்குதலை கண்டனம் செய்வதோடு, வன்முறை மற்றும் அடக்குமுறைகளின்றியும் சுதந்திரமாக தனது அரசியல் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான சோசலிச சமத்துவக் கட்சியின் உரிமையை பாதுகாக்கவும், அனைத்து மனித உரிமைகள் அமைப்புக்களுக்கும் ஜனநாயக உரிமைகளை பேணுவதில் அக்கறை கொண்ட தனிப்பட்டவர்களுக்கும் அழைப்பு விடுக்கின்றது.

# இலங்கை சமாதானப் பேச்சுவார்த்தைகள்: தமிழீழ விடுதலைப் புலிகள் அனைத்துலக மூலதனத்துக்கு தலைவணங்குகின்றனர்

ஆசிரியர் குழு
21 செப்டெம்பர் 2002

தாய்லாந்தில் நிகழ்ந்த முதல் சுற்று வாரம் இடம்பெற்ற இலங்கை சமாதானப் பேச்சுவார்த்தைகள் முதலாளித்துவ தேசியவாதத்தின் அரசியல் வங்குரோத்தில் ஒரு புதிய மைல்கல்லான படிப்பினையை வழங்கியது. தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம், அரசாங்க நிர்வாகத்துக்குள் கூட்டு அதிகாரிகளின் மாநாட்டு அங்கத்துவமான ஒரு நுழைவு சீட்டுக்காக, யுத்தத்தில் களைத்துப் போன தமது குழுப்புக்களை மாற்றிக் கொண்ட தேசிய விடுதலை இயக்கங்களின் நீண்ட வரிசையில் இணைந்துகொள்ளப் போவதாக உறுதிக்கு அறிவித்துள்ளது.

விடுதலைப் புலிகளின் பிரதான பேச்சுவார்த்தையாளரான அன்டன் பாலசிங்கம் தமது முதலாவது உரையில், விடுதலைப் புலிகள் அரசாங்கத்துடனான ஒரு கூட்டை விரும்புகின்றது எனப் பிரகடனம் செய்தபோது, அவர் பேச்சுவார்த்தைக்கான தளத்தை ஒழுங்கமைத்தார். "இலங்கை அரசாங்கத்தின் தலைவர்கள், நீங்கள் ஒரு வெற்றிகரமான புதிய பொருளாதாரத்துக்கு மாற்றியமைப்பதற்கான விருப்பத்தை வெளிப்படுத்தியுள்ளனர்' என அவர் குறிப்பிட்டார். 'நாங்கள் அவர்களின் எதிர்பார்ப்புகளை வரவேற்கிறோம். அவ்வாறான ஒரு எதிர்பார்ப்பு நாட்டின் பொருளாதார மீளமைப்புக்கான இலக்கில் அவர்களின் சம பங்காளிகளாக தமிழ் புலிகளை அனைத்துக்கொள்வதன் மூலம் எதிர்பார்த்ததை மிகவும் சிறந்த முறையில் பெற்றுக்கொள்ள முடியும்."

பொருளாதார வழக்கில், இந்த "புதிய பொருளாதார" முறை மிகவும் பொருத்தமானதாகும். அது ஆசியாவில் அமைக்கப்பட்டுள்ள மலிவு உழைப்பு மேடைக்கு, கழுத்தை வெட்டும் போட்டியின் ஊடாக வெளிநாட்டு மூலதனத்தை கவர்வதை குறிக்கின்றது. இலங்கையில், நாட்டை "மிகவும் போட்டிக்குரியதாக" ஆக்குவதன் பேரில் தனியார்மயத்தின் ஒழுங்கமைக்கப்பட்ட விபரங்களுடனான நிகழ்ச்சி நிரல் மற்றும் செலவு வெட்டுக்களின் அடுத்த கட்டம் ஏற்கனவே சர்வதேச நாணய நிதியத்தாலும், உலக வங்கியாலும் மற்றும் வர்த்தகத் தலைவர்களாலும் உருவாக்கப்பட்டுவிட்டது.

எவ்வாறெனினும் முதலீட்டுக்கு பிரதான தடையாக இருந்து வருவது, பொருளாதாரத்தை நெருக்கடிக்குள் தள்ளியதோடு ஆழமான கண்டுபிடிந்த சமூக மற்றும் அரசியல் பதட்ட நிலைமைகளை உருவாக்கி விட்ட 19 வருடகால உள்நாட்டு யுத்தமாகும். கொழும்பு அரசாங்கத்துடன் பங்காளியாவதற்கான பாலசிங்கத்தின் அர்ப்பணிப்பானது, யுத்தத்துக்கு முடிவுகட்டுவதோடு சர்வதேச நாணய நிதியத்தின் பொருளாதார மாற்றுத் திட்டங்களை அமுல் செய்வதற்காக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டுமல்லாமல் வளர்ச்சி கண்டுவரும் வறுமை, வேலையின்மை மற்றும் சமூக சமத்துவமின்மைக்கு எதிரான உழைக்கும் மக்களின் எதிர்ப்பை நசுக்குவதற்குமான உறுதிமொழியாகும்.

பாலசிங்கம் விடுதலைப் புலிகளின் நற்சாட்சிப் பத்திரங்களை காண்பிப்பதற்காக, தமது இராணுவ கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசங்களில் அவர்களது சாதனைகளை சுட்டிக்காட்டுகின்றார். "நாங்கள் 10 வருடங்களுக்கும் மேலாக, சமூக பிணைப்பும் சட்டம் மற்றும் ஒழுங்கும் உறுதிசெய்யப்பட்ட ஒரு சக்திவாய்ந்த நிர்வாக அமைப்பை கட்டியெழுப்பியுள்ளோம்." "ஆகவே விடுதலைப் புலிகள், நிர்வாகத்திலும் அதேபோல் வடக்குக் கிழக்கின் பொருளாதார அபிவிருத்தியிலும் ஒரு முக்கிய முன்னணி பாத்திரம் வகிக்க வேண்டும் என்பது தீர்க்கமானதாகும்," என அவர் பூதாகரப்படுத்தினார்.

இந்தச் செய்தி தெளிவானதாக இருக்க முடியாது. விடுதலைப் புலிகள் எதிரிகளுடனான கொடுக்கல் வாங்கல்களுக்கு பயன்படுத்தி வந்துள்ள வழிமுறைகளான - அச்சுறுத்தல், கொடுமையான தடுத்துவைப்பு, சரீர ரீதியான வன்முறை மற்றும் கொலை- இப்போது அனைத்துலக மூலதனத்தின் பேரில் பயன்படுத்தப்படவுள்ளன. இந்த இயக்கம் "சட்டம் மற்றும் ஒழுங்குக்காகவும்" "சமூக பிணைப்புக்காகவும்" இலங்கை அரசாங்கத்துடனும் அதனது அரச ஒடுக்குமுறை கருவியுடனும் ஒன்றன் பின் ஒன்றாக வேலை செய்யும்.

தாய்லாந்தின் சதாஹிப் கடற்படைத் தளத்தில் பாலசிங்கத்துக்கும் அரசாங்கத்தின் பிரதான பேச்சுவார்த்தையாளரான ஜீ.எல்.பீரிசுக்கும் இடையில் அடைக்கப்பட்ட கதவுகளுக்குள் இடம்பெற்ற மூன்று நாள் பேச்சுவார்த்தைகளின் சில விபரங்கள் வெளியிடப்பட்டுள்ளன. ஆனால், அரசாங்கம் பாலசிங்கத்தின் அர்ப்பணிப்பை நன்றியுடன் ஏற்றுக்கொண்டது என்பதில் சந்தேகத்துக்கு இடமில்லாத அதே வேளை ஒரு முடிவுக்கான அடிப்படை திட்டத்திலும் உடன்பாடு காணப்பட்டுள்ளது.

அங்கு ஏற்கனவே ஒரு தெளிவான நிகழ்ச்சி நிரல் இருந்துகொண்டுள்ளது. அடுத்த நான்கு மாதங்களில் மேலும் மூன்று பேச்சுவார்த்தை அமர்வுகள் அறிவிக்கப்பட்டுள்ளன. எல்லாவற்றுக்கும் மேலாக, இறுதி அறிவிப்பானது உடனடி உதவியை கோரி சர்வதேச நிதி வழங்குனர்களுக்கு ஒரு கூட்டு வேண்டுகோளை விடுத்தது. அது ஒரு மதிப்பீட்டின்படி யுத்தத்தால் இடம்பெயர்ந்த 1.6 மில்லியன் மக்களை மீளக் குடியமர்த்துவதற்கும், வடக்கிலும் கிழக்கிலுமான புனர்நிர்மாண நடவடிக்கைகளுக்கும் உதவுவதற்காக ஒரு கூட்டு நடவடிக்கை படையை ஸ்தாபிப்பதாகவும் அறிவித்தது. "அது எல்லாவகையான திட்டங்களையும் ஆரம்பிப்பதற்கு மிகவும் சாத்தியமானது," என பீரிஸ் பிரகடனம் செய்தார். "இங்கு முரண்பாடுகள் கிடையாது. நாட்டில் ஒரு கூட்டுழைப்பு இருக்கின்றது," எனவும் அவர் குறிப்பிட்டார்.

பாலசிங்கம் இந்த ஏற்பாடுகளுக்கு முத்திரை குத்துவதற்காக புதன்கிழமை இடம்பெற்ற ஒரு பத்திரிகையாளர் மாநாட்டில், விடுதலைப் புலிகள் ஒரு சுதந்திரத் தமிழ் ஈழத்துக்காக தொடர்ந்தும் அழைப்பு விடுக்கமாட்டார்கள் என அறிவித்தார். "விடுதலைப் புலிகள் ஒரு தனி அரசின் கொள்கையுடன் இயங்குவதில்லை." "நாங்கள் ஒரு தாயகம் மற்றும் சுயநிர்ணய உரிமை என்ற கொள்கையுடன் இயங்குவோம். தாயகம் என்பது ஒரு தனியான அரசை அர்த்தப்படுத்தாது; அது தமிழர்களும் முஸ்லிம்களும் வாழும் ஒரு பிரதேசமாகும். விடுதலைப் புலிகள் சுதந்திரத்துக்காகப் போராடுகின்றார்கள் எனக் குறிப்பிடுவது பொருத்தமானதல்ல," என அவர் குறிப்பிட்டார்.

இதற்கு முன்னர் அது ஒரு சுதந்திரத் தமிழ் அரசுக்கான தமது நீண்டகாலக் கோரிக்கையை கைவிடுவதற்கு தயாராகுவதாக விடுதலைப் புலிகளின் தலைமை சமிக்ஞை செய்தது. இது உண்மையில் பேச்சுவார்த்தைகளுக்கு சமூகமளிப்பதற்கான அதனது உடன்பாட்டில் தொக்கிநின்றது. பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, ஒரு தனி அரசு சம்பந்தமான விடயம் நிகழ்ச்சி நிரலில் கிடையாது என அமெரிக்கா, பிரிட்டன் மற்றும் ஏனைய பெரும் சக்திகளின் ஆதரவுடன் மீண்டும் மீண்டும் சுட்டிக்காட்டி வந்துள்ளார். எவ்வாறெனினும், பாலசிங்கம் கோரிக்கையை வெளிப்படையாக நிராகரித்தமையானது, தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு வர்த்தகத்துக்காக திறந்துவிடப்பட்டுள்ளதோடு இலங்கை முதலாளித்துவ அரசாங்கத்தின் திட்டவரம்புக்குள் தம்மை ஒன்று சேர்த்துக்கொள்ள விரும்புகிறது என்பதை உலகுக்கு ஒலிபரப்புவதற்காக நிச்சயிக்கப்பட்டிருந்த ஒன்றாகும்.

இந்த முன்னேற்றம் எல்லா எதிர்பார்ப்புகளையும் மிஞ்சுகிறது என குறிப்பிட்ட இலங்கை பேச்சுவார்த்தையாளர்கள் அவரது அறிக்கையை உடனடியாக வரவேற்றனர். ஐக்கிய நாடுகள் சபையில் உரையாற்றுவதற்காக நியூயோர்க்கில் தங்கியுள்ள விக்கிரமசிங்க, தாம் "உற்சாகமடைந்ததாக" தெரிவித்தார். சமாதான முன்னெடுப்புகள் மூன்று அல்லது நான்கு வருடங்களுக்கு நீடிக்கும் என எதிர்பார்த்ததாகவும், ஆனால் அது விரைவில் முடிவடையும் என நினைப்பதாகவும் அவர் குறிப்பிட்டார். வர்த்தக வட்டாரங்களின் மனோநிலையை பிரதிபலிக்கும் வகையில், கடந்த வாரம் கொழும்பு பங்குச் சந்தையின் வர்த்தகப் பதிவில் எல்லா பங்குகளினதும் விலைச் சுட்டெண் 5.3 சதவீதத்தை எட்டியது.

## முதலாளித்துவ் தேசியவாதத்தின் தாக்கம்

ஒரு சுதந்திர ஈழத்துக்கான கோரிக்கையை கைவிடுவதற்கான தலைமைத்துவத்தின் தீர்மானம், விடுதலைப் புலி உறுப்பினர்களின் சில பகுதியினர் மத்தியில் ஒரு காட்டிக்கொடுப்பாகக் கருதப்படும் என்பதில் சந்தேகம் கிடையாது. ஆனால் நிச்சயமாக, கொழும்புக்கான விடுதலைப்புலிகளின் விட்டுக்கொடுப்புகள் அதனது தேசியவாத முன்னோக்கின் தர்க்க முடிவுகளை பிரதிநிதித்துவம் செய்கின்றது.

ஒரு தனியான தமிழ் ஈழத்துக்கான கோரிக்கையானது, இலங்கை அரசின் திட்டமிடப்பட்ட வேறுபடுத்தல்களுக்கும் தொந்தரவுகளுக்கும் இலக்காகிக்கொண்டிருக்கும் தமிழ் தொழிலாளர்கள், சிறு விவசாயிகள் மற்றும் வியாபாரிகளைக் கொண்ட பரந்த மக்களின் நலன்களை வெளிப்படுத்தவில்லை. மாறாக அது தொழிலாளர் வர்க்கத்தை சுரண்டுவதற்கும் அனைத்துலக மூலதனத்துடன் அதனது சொந்த உறவுகளை ஸ்தாபித்துக்கொள்வதற்குமான சிறந்த நடவடிக்கையாக அதனது சொந்த அரசை நிறுவும் தமிழ் முதலாளித்துவவாதிகளின் இலட்சியங்களை உள்ளடக்கிக்கொண்டுள்ளது.

விடுதலைப் புலிகள் இலாப அமைப்பையோ அல்லது இலங்கை மீதான ஏகாதிபத்திய அழுத்தங்களையோ சவால் செய்வதில்லை. அதனது இலக்கு எப்பொழுதும் ஒரு தனித் தமிழ் ஈழத்துக்கான ஏகாதிபத்திய ஆதரவை தேடுவதாகவே இருந்து வந்துள்ளது. அதற்கு பிரதி உபகாரமாக விடுதலைப் புலிகள் அனைத்துலக முதலீட்டாளர்களுக்கு தீவின் வடக்கு கிழக்கை மலிவு உழைப்பு சுவர்க்கமாக திறந்துவிட மிகவும் தெளிவாக உறுதியளித்துள்ளனர்.

மத்திய கிழக்கில் பீ.எல்.ஓ. அயர்லாந்தில் ஐ.ஆர்.ஏ. மற்றும் தென் ஆபிரிக்காவில் ஏ.என்.சீ. போன்ற ஏனைய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலாளித்துவ தேசியவாத இயக்கங்களைப் போலவே, அனைத்துலக அரங்கில் தாக்கத்தை உண்டுபண்ணுவதற்கான விடுதலைப் புலிகளின் இயலாமையும் 1991ல் சோவியத் ஒன்றியத்தின் வீழ்ச்சியுடன் முடிவுக்கு வந்தது. 1990களின் நடுப்பகுதியில் இருந்து அது யுத்தத்துக்கு முடிவு கட்டுவதற்கும் கொழும்பு அரசாங்கத்துடன் ஒரு உடன்பாட்டுக்கு செல்வதற்குமான பெரும் வல்லரசுகளின் அதிகரித்து வந்த அழுத்தத்துக்கு உள்ளானது. இந்த தொடர்ச்சியான மோதல்கள் இலங்கையில் முதலீடு செய்வதற்கு ஒரு தடையாக இருந்து வந்தது மட்டுமல்லாமல், ஏற்கனவே ஸ்திரமற்றுள்ள இந்தியத் துணைக் கண்டத்தை மேலும் ஸ்திரமின்மைக்குள் இட்டுச் செல்வதற்கும் அச்சுறுத்தி வந்தது.

ஆனால் கடந்த இரண்டு தசாப்தங்களாக, இலங்கையினுள் சமாதானத்துக்கான எந்தவொரு நகர்வும் ஆட்சியிலிருந்த அரசாங்கங்களால் பாதுகாக்கப்பட்டு வந்த சிங்கள தீவிரவாத சக்திகளின் கடுமையான எதிர்ப்பை சந்தித்துள்ளது. பிரித்தானியாவாலும் நோர்வேயாலும் ஒழுங்கமைக்கப்பட்ட ஒரு தொடர் 'சமாதான முன்னெடுப்புகள்' சிங்கள பேரினவாதிகளின் 'காட்டிக்கொடுப்பு' எனும் கூச்சல்களால் தோல்வி கண்டது.

எவ்வாறெனினும் செப்டெம்பர் 11 அன்று அமெரிக்காவில் இடம்பெற்ற தாக்குதல்களை பின்தொடர்ந்த அனைத்துலக அரசியல் சூழ்நிலையின் மாற்றம் இலங்கையினுள்ளும் சக்திகளின் சமநிலையை சரிசெய்தது. புஷ் நிர்வாகம் இந்தியத் துணைக்கண்டத்திலான அமெரிக்க நலன்களின் இடையூறுகளை சகித்துக்கொள்ளாது என தெட்டத் தெளிவாக சுட்டிக் காட்டியது. இலங்கையின் அனைத்து பெரும் அரசியல் கட்சிகளும் இந்தப் போக்கினுள் விழுந்ததோடு ஆப்கானிஸ்தானில் அமெரிக்க தலைமையிலான ஆக்கிரமிப்புக்கு தமது உடன்பாட்டை சமிக்ஞை செய்தனர். ஐம்பது வருடங்களில் பிராந்தியத்தினுள் முதலாவது நேரடி ஏகாதிபத்திய இராணுவத் தலையீடு இதுவாகும்.

அமெரிக்கா, ஐரோப்பிய யூனியன் மற்றும் இந்தியாவின் ஆதரவுடன், கொழும்புக்கும் விடுதலைப் புலிகளுக்கும் மோதல்களுக்கு முடிவுகட்டுமாறு நெருக்குவாரம் கொடுக்க முன்வந்ததோடு, ஒரு தனித் தமிழ் அரசு மீதான தமது எதிர்ப்பை வலியுறுத்தியது. வாஷிங்டனின் கண்களில், இந்த மிகச் சிறிய தீவில் இடம்பெறும் யுத்தமானது பிராந்தியத்தில் அதனது பரந்த குறிக்கோள்களுக்கு அச்சுறுத்தலாக தெரிகின்றது. விடுதலைப் புலிகளின் கோரிக்கைக்கு சலுகையளிப்பதானது இந்தியத் துணைக்கண்டத்தினுள் விசேடமாக காஷ்மீரினுள் பிரிவினைவாத இயக்கங்களை மட்டுமே ஊக்குவிக்கும். இந்த சூழ்நிலைகளின் கீழ் இரு பகுதியினரும் யுத்தத்தை தொடர்வது சாத்தியமற்றது என்ற முடிவுக்கு வந்துள்ளனர்.

விடுதலைப் புலிகளின் தலைமையைப் பொறுத்தவரையில், தனிமைப்பட்டு முற்றாக அழிந்து போவதே பதிலீடாக இருந்து வந்தது. அமெரிக்காவும் பிரித்தானியாவும் ஏற்கனவே அவர்களை 'பயங்கரவாதிகள்' என முத்திரையிட்டுள்ள அதே வேளை ஏனைய ஐரோப்பிய சக்திகள் அவ்வமைப்புக்கான வெளிநாட்டு நிதி மற்றும் அரசியல் ஆதரவை வெட்டித்தள்ளியுள்ள போதிலும் தொடர்ந்தும் அச்சுறுத்தி வருகின்றன. கடந்த டிசம்பரில் பாலசிங்கம் கருத்து வெளியிடும் போது: "சர்வதேச சமூகம் கெடுத்தது போன்று, பின்லேடன் எனும் ஒரு பைத்தியக்காரன் அமெரிக்காவுடன் மோதிக்கொண்டதால் சில நாடுகள் அவர்களது பயங்கரவாதிகள் பட்டியலில் எங்களையும் சேர்த்துக்கொண்டுள்ளார்கள்."

யுத்தமானது இலங்கை வர்த்தகத்தில் ஒரு நம்பிக்கையற்ற பொருளாதார நிலைமையை உருவாக்கி விட்டிருந்தது. விடுதலைப் புலிகள் 2000 ஆண்டில் இலங்கை இராணுவத்துக்கு ஒரு தொடர்ச்சியான குறிப்பிடத்தக்க இராணுவ தோல்விகளை ஏற்படுத்தியது. இவை பெருந்தொகையான இராணுவத் தளபாடங்களை கொள்வனவு செய்வதை அவசியமாக்கியதோடு கடன் அதிகரித்ததுடன் அந்நிய செலாவணி நெருக்கடி உருவாகியது. 1948ல் சுதந்திரமடைந்ததில் இருந்து முதற்தடவையாக 2001ல் பொருளாதாரம் பாதகமான நிலைமையை கண்டது. செப்டெம்பர் 11ன் பின்னர், கூட்டுத்தாபன கும்பல் அரசாங்கம் விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட வேண்டுமென சுட்டிக்காட்டியதோடு, ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் பொதுஜன முன்னணி அரசாங்கம் அவர்களது கோரிக்கையை நிராகரித்ததையடுத்து புதிய தேர்தல்களுக்காக நெருக்கியது.

டிசம்பர் தேர்தலில் வெற்றிபெற்ற விக்கிரமசிங்க, பெப்பிரவரியில் விடுதலைப் புலிகளுடன் ஒரு யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை கைச்சாத்திட்டார். ஆனால் முதலில் மேமாதம் இடம்பெறவிருந்த பேச்சுவார்த்தை ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் சிங்களத் தீவிரவாதிகளின் அழுத்தத்துக்கு அடிபணிந்ததை அடுத்து மீண்டும் மீண்டும் ஒத்திவைக்கப்பட்டது. எவ்வாறெனினும், கடந்த ஜூலையில் விக்கிரமசிங்க வாஷிங்டனில் புஷ் சந்தித்தபோது தமது முன்நடவடிக்கைகளுக்கான ஆணைகளைப் பெற்றுக்கொண்டார். அவர் 20 வருடங்களின் பின்னர் வெள்ளை மாளிகைக்கு விஜயம் செய்த முதலாவது இலங்கைப் பிரதமராவார். தாய்லாந்து பேச்சுவார்த்தைகளுக்கான திகதிகளை அறிவித்ததையடுத்து, ஆகஸ்ட்டில் அவர் விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்குவதாக பிரகடனப்படுத்தினார். பேச்சுவார்த்தையின் ஆரம்பமாவதற்கு 12 நாட்களுக்கு முன்னர் விடுதலைப் புலிகள் மீதான தடை நீக்கப்பட்டது.

பேச்சுவார்த்தைகள் இலங்கையினுள் முன்கூட்டிய உயர்ந்த எதிர்பார்ப்புகளை தோற்றுவித்துள்ளது. சுமார் இரண்டு தசாப்தங்களாக இடம்பெற்ற யுத்தத்தில் 65,000 க்கும் மேற்பட்ட மக்கள் பலியாகியுள்ளதோடு, பெருந்தொகையானவர்கள் அங்கவீனர்களாகியுள்ளனர். 16 மில்லியன் முழு சனத்தொகையிலும் ஒரு மில்லியனுக்கும் மேற்பட்டவர்கள் உள்நாட்டில் இடம்பெயர்ந்துள்ளதோடு விசேடமாக வடக்குக் கிழக்கில் உட்கட்டமைப்பின் பெரும்பகுதி அழிவுக்குள்ளாகியுள்ளது.

ஆனால் ஒரு தெளிவான எச்சரிக்கையை விடுப்பது அவசியமானதாகும். இந்தப் பேச்சுவார்த்தைகள் நடத்தப்படுவது சாதாரண உழைக்கும் மக்களின் --பொதுவில் சிங்கள, தமிழ் மக்கள்-- மத்தியில் இருந்துகொண்டுள்ள சமாதானம் சம்பந்தமான நிஜ எதிர்பார்ப்புகளை எட்டுவதற்காக அல்ல. அவர்களின் நோக்கம் தொழிலாளர் வர்க்கத்தின் மீதான சுரண்டலை உக்கிரமாக்குவதற்காக ஆளும் கும்பல்களுக்கு மத்தியில் அதிகாரப்பகிர்வு ஏற்பாடுகளை மேற்கொள்வதேயாகும். 'பிராந்திய சுயாட்சிக்கும்' 'அதிகாரப் பகிர்வுக்குமான" முன்மொழிவுகள் முதலில் யுத்தத்தை தோற்றுவித்த அதே இனவாத பதட்டநிலைமைகளை அழியாமல் இருக்கச் செய்யும் அதே வேளை தவிர்க்க முடியாத வகையில் எதிர்கால மோதல்களுக்கும் வித்திடும். இலங்கையை "புலி பொருளாதாரத்துக்கு" மாற்றுவதற்கான திட்டமானது, கொழும்பிலும் சரி வடக்கிலும் சரி, ஜனநாயக முறையில் அமுல்படுத்தப்படமாட்டாது, அமுல்படுத்தவும் முடியாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாகிஸ்தான் பலவான் ஜனநாயக விரோத அரசியலமைப்பு மாற்றங்களை திணிக்கின்றார்

விலானி பீரிஸ்
5 செப்டெம்பர் 2002

பாகிஸ்தானின் இராணுவ ஆட்சியாளர் ஜெனரல் பேர்வஸ் முஷாரப் அக்டோபர் 10 இற்கு திகதியிடப்பட்டுள்ள பொதுத் தேர்தல்களுக்கூடாக நாட்டை ஜனநாயக ஆட்சிக்கு திருப்புதல் என்ற அவரது கூற் க்களை பரிகாசம் செய்கின்ற 29 அரசியலமைப்பு மாற்றங்களை விதித்துள்ளார். ஆகஸ்ட் 21 ஜனாதிபதி சாசனத்தால் விதிக்கப்பட்ட பிரேரணைகளின்படி வாக்களிப்பின் விளைவு என்னவாக இருந்தாலும் முஷாரப்பும் இராணுவமும் தொடர்ந்து நிறைவேற்று அதிகாரங்களை கொண்டிருப்பர்.

அரசியலமைப்பு மாற்றங்களின்படி முஷாரப் ஜனாதிபதி என்ற வகையில் தேர்ந்தெடுக்கப்பட்ட பாராளுமன்றம் மற்றும் மாகாண சட்டசபைகளை தனது விருப்பத்தின்படி கலைக்க மற்றும் மாகாண ஆளுநர்களை அமர்த்தவோ அல்லது நீக்கிவிடவோ முடியும். ஜனாதிபதியானவர் ஒன்றிணைந்த கூட்டுத்தலைமையகத் தலைவர் மற்றும் உயர்நீதிமன்ற நீதியரசர்கள் உட்பட மூன்று இராணுவ சேவை தலைவர்களை நியமிக்கும் அதிகாரங்களை கொண்டிருப்பார்.

தேர்தல்களைத் தொடர்ந்து நாடு பிரதம மந்திரி மற்றும் அமைச்சரவையை கொண்டிருக்கும் அதேவேளை தேசிய பாதுகாப்பு சபையின் (NSC) ஸ்தாபிதத்தின் மூலம் இராணுவமானது சகல பாரிய கொள்கை தீர்மானங்களினதும் அதிகாரங்களை தனது பிடிக்குள் வைத்திருக்கும். முஷாரப் இச்சபையின் தலைவராக பதவிவகிப்பார். ஊழியர்களின் இராணுவ தலைவர், இராணுவ கடற்படை மற்றும் விமானப்படை தலைவர், பிரதம மந்திரி, எதிர்க் கட்சித் தலைவர் மற்றும் நான்கு மாகாணங்களினதும் முதல் அமைச்சர் ஆகியவர்களும் இதனுள் அடங்குவர்.

அரசியலமைப்பு மாற்றங்கள் அடையாள ஆலோசனைக்கான காலத்தை வழங்கும் பொருட்டு ஜூனில் முதலில் அறிவிக்கப்பட்டன. அரசியல் கட்சிகள், மனித உரிமை குழுக்கள் மற்றும் ஊடகத்தினரின் பரந்த எதிர்ப்பிற்கு முகம் கொடுக்க வேண்டி ஏற்பட்டமையால், பாராளுமன்ற உறுப்பினர்களின் அலுவலக முறையை குறைப்பது உட்பட ஒரு சில பூர்வாங்க திட்டங்களோடு முஷாரப் முன் செல்லவில்லை. எனினும் இம்மாற்றங்கள் அதிகாரம் உறுதியாக அவரது கைகளில் தங்கியிருப்பது பற்றிய எந்த விடயத்துடனும் தொடர்புடையதல்ல.

முஷாரப் ஆகஸ்ட் 22 ஒரு பத்திரிகையாளர் மாநாட்டில், "எதிர்வரும் பாராளுமன்றம் இந்த பிரேரணைகளை மாற்றியமைக்க முனையுமாயின் அவர்கள் விலகவேண்டி நேரிடும் அல்லது நான் விலகுவேன்," என தெரிவித்தார். பிரேரணைகளின் சட்டத் தன்மைப் பற்றி வினவியபோது: "உயர் நீதிமன்றத்தால் எனக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களின் மூலம் நான் அதை அரசியலமைப்பின் ஒரு அங்கமாக சேர்த்துக் கொள்கின்றேன். எனக்கு சபையின் அனுமதி தேவையில்லை," என முஷாரப் தெரிவித்தார்.

அவரது சட்டங்களை சவால் செய்ய எவரும் அனுமதிக்கப்பட மாட்டார்கள் என்பதை அவர் தெளிவுபடுத்தினார். எதிர்கட்சியினர் தேர்தலில் வெற்றியீட்டினால் என்ன நடக்கும் என கேட்டபோது: "அவர்கள் பாகிஸ்தானுக்காக செயற்படுவது நன்மையைத் தரும். அவர்கள் என்னைத் தாக்க ஆரம்பிப்பார்களாயின் அல்லது திரும்பவும் அரசியல் நடவடிக்கைகளில் இறங்கி சதி மூலம் நாட்டை கீழே கொண்டு செல்வார்களாயின், அதை செய்ய அவர்கள் அனுமதிக்கப்பட மாட்டார்கள்," என அவர் தெரிவித்தார்.

## முஷாரப் தனிமைப்பட்டுள்ளார்

முஷாரப் தமது ஆட்சிக்கு முட்டுக் கொடுப்பதற்காக இந்த அரசியலமைப்பு திருத்தத்தை ஒருதலைப்பட்சமாக முடிவு செய்தமை, அவரது நிர்வாகத்தின் வளர்ச்சிகண்டுவரும் தனிமைப்படுத்தப்பட்ட நிலையை எடுத்துக் காட்டுகின்றது. 1999 இல் முன்நாள் பிரதமர் நவாஸ் ஷெரீப்பை விரட்டும்போது, மக்கள் அரசாங்கத்தின் பொருளாதார மறுசீரமைப்பு கொள்கைகள் மற்றும் ஊழல் நடவடிக்கைகள் மீதான பரந்த எதிர்ப்பை முஷாரப்பால் சுரண்டிக்கொள்ள முடிந்தது. அவர் ஜம்மு காஷ்மீரில் இந்தியத் துருப்புக்களுடன் போராடிக்கொண்டிருக்கும் இஸ்லாமிய ஆயுதப் போராளிகளை நசுக்குவதற்கான அமெரிக்காவின் அழுத்தங்களுக்கு ஷெரீப்பின் அடிபணிவையிட்டு ஆத்திரமுற்றிருந்த இஸ்லாமிய தீவிரவாத குழுக்களினதும் இராணுவத்தினதும் பின்னணியை கொண்டிருந்தார்.

கடந்த மூன்று ஆண்டுகளில் முஷாரப்பின் ஆதரவுகளில் பெரும்பாலானவை ஆவியாகிப்போயுள்ளன. ஆப்கானிஸ்தான் மீதான அமெரிக்கத் தலைமையிலான யுத்தத்திற்கு ஆதரவளிப்பதென்ற அவரது முடிவும், பாகிஸ்தானில் உள்ள இஸ்லாமிய அடிப்படைவாத குழுக்கள் மீது பாய்ந்துவிழுவதற்கான வாஷிங்கடனின் கோரிக்கைகளுடனான உடன்பாடும் இஸ்லாமியக் குழுக்களையும் இராணுவத்தின் சில பகுதிகளையும் அன்னியப்படுத்தியுள்ளன. மேலும் வரையறுக்கப்பட்ட நிதி உதவிக்கான பிரதி உபகாரமாக, முஷாரப் வறியவர்களுக்கும் செல்வந்தர்களுக்குமிடையிலான சமூக பிளவை ஆழமாக்கும் சந்தை சீர்திருத்தங்களை அமுலாக்குவதற்கு தள்ளப்பட்டுள்ளார்.

முஷாரப் ஏப்பிரலில் அவரது ஜனாதிபதி பதவி பற்றிய ஒரு கருத்துக் கணிப்பை நடத்துவதன் மூலமும், அக்டோபரில் பொதுத் தேர்தல்களுக்கு தயார் செய்வதன் மூலமும் தமது ஆட்சியை சட்டபூர்வமானதாக்க முனைந்தார். ஆனால் அந்த கருத்துக் கணிப்பின் பெறுபேறு பெருமளவில் மோசமானதாக கண்டனம் செய்யப்பட்டதுடன் அக்டோபர் தேர்தலும் பெரும் விமர்சனத்துக்குள்ளானது. ஆகஸ்டில் கராச்சியில் நிச்சயிக்கப்பட்டிருந்த ஒரு உரைநிகழ்வு, அவரது உளவுத் துறை தலைவர்களின் ஆலோசனையின் பேரில் இரத்துச் செய்யப்பட்டதை சுட்டிக்காட்டிய பிரித்தானியாவை தளமாகக் கொண்ட "எகோணமிஸ்ட்" (*Economist*) சஞ்சிகையானது, லமுஷாரப்பின் தனிப்பட்ட பாதுகாப்பு இனிமேலும் உறுதியானதாக- இல்லை என தெரிவித்திருந்தது.

முஷாரப்பின் தனிமைப்பட்டுள்ள நிலைமையின் அளவுகோலானது, 1999 சதி புரட்சிக்கு முன்னர் பரந்தளவில் செல்வாக்கிழந்து போயிருந்த முன்னாள் இரு பிரதம மந்திரிகளான பாகிஸ்தான் முஸ்லீம் கழக (PML) தலைவர் நவாஸ் ஷெரீப் மற்றும் பாகிஸ்தான் மக்கள் கட்சி தலைவர் பெனாசீர் பூட்டோ ஆகியோருக்காக புத்துயிர்பெறும் ஆதரவேயாகும். அரசியலமைப்பு திருத்தப் பிரேரணைகள் ஷெரீப்பும் பூட்டோவும் வேட்பாளர்களாக நிற்பதைத் தவிர்ப்பதை நோக்காகக் கொண்டவையாகும். வேறு பதிலீடுகள் இல்லாதவிடத்து, அவரது ஆட்சி மீதான வளர்ச்சி கண்டுவரும் எதிர்ப்பின் மையமாக அவர்கள் வரக்கூடும் என முஷாரப் அஞ்சுகின்றார்.

பாகிஸ்தான் சமூக விஞ்ஞானியான ஜபறுள்ள கான், தேர்தல்கள் "சுதந்திரமானதும் நியாயமானதுமாயின்" பெரும்பான்மையான ஆசனங்களை இரு எதிர்க் கட்சிகளும் வெல்லும் என ஆகஸ்டில் *நியூயோர்க் டைம்ஸ்* இற்குத் தெரிவித்தார். பாகிஸ்தான் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் இயக்குனரான ஏ.ரகுமான், அதே விதமாக எதிர்வு கூறும்போது: "தற்போது அரசியல் கட்சிகள் ஒழுங்கமைப்பின்றி இருக்கலாம். ஆனால், தம்மை புதுப்பித்துக்கொள்ள தளபதி அர்களுக்கு ஒரு குறிப்பிடத்தக்க மூலகங்களை வழிங்கியுள்ளார்," என குறிப்பிட்டார்.

தேர்தல் ஆணைக்குழுவானது ஆரம்பத்தில் அக்டோபர் தேர்தல்களில் பங்குபற்றுவதற்கான பூட்டோ மற்றும் ஷெரீப்பின் பத்திரங்களை நிராகரித்தது. பத்திரிகையாளர்கள் வினவியபோது, அந்த இருவரையும் கோபத்துடன் கண்டனம் செய்த முஷாரப்: "கொள்ளையடிப்பவர்கள் மற்றும் சூறையாடுபவர்கள் மக்களால் மன்னிக்கப்படுவது பற்றிய உங்களது கருத்து என்ன?" எனப் பிரகடனப்படுத்தினார். ஷெரீப்பும் பூட்டோவும் பாகிஸ்தானிற்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரும்ப ஏற்றுக்கொள்பவர்களையின் வைக்குமெய்யப்படுவோர்கள் என அவர் எச்சரித்தார்.

1988 இலும் மீண்டும் 1993 இலும் பிரதம மந்திரியாக இருந்த பூட்டோ பல ஆண்டுகளாக லண்டனிலும் துபாயிலும் சுய விருப்பத்தின் பேரின் தலைமறைவாக இருந்து வருகின்றார். கடந்த மாதம் ஊழல் குற்றச்சாட்டுகளிற்காக ஆஜராகாத காரணத்தால் மூன்று வருட சிறைத்தண்டனை வழங்கப்பட்டார். ஷெரீப் 1999 இராணுவப் புரட்சியை தொடர்ந்து ஒரு தொகை அதிகரிக்கப்பட்ட குற்றங்களுக்காக குற்றஞ்சாட்டப்பட்டு சிறையிலடைக்கப்பட்ட போதிலும், பின்னர் நாட்டை விட்டு வெளியேற அனுமதிக்கப்பட்டார். அவர் தற்போது சவுதி அரேபியாவில் தலைமறைவாக உள்ளார்.

தேர்தல் ஆணைக்குழுவானது எதிர்ப்பை பிளவுபடுத்தும் ஒரு முயற்சியில் ஆகஸ்ட் 30 ஷெரீப்பின் நியமனத்தை ஏற்றுக்கொண்டு பூட்டோவின் நியமனத்தை அடுத்த நாள் நிராகரித்ததன் மூலம், தனது முன்னைய முடிவை மாற்றிக் கொண்டது. ஆணைக்குழுவின் தீர்ப்புக்கு நீதிமன்றத்தில் மறுதாக்கல் செய்யும் பூட்டோவுடனான ஒருமைப்பாட்டினால், ஷெரீப் அவரது அபேட்சகத்தை வாபஸ் பெற்றுக்கொண்டுள்ளார். அவரது மனு செப்டெம்பர் 11 விசாரணைக்கு எடுக்கப்படும்.

பூட்டோ மற்றும் ஷெரீப் இருவரும் முஷாரப்பை எதிர்ப்பதுடன் ஜனநாயகத்திற்கான திரும்புதலுக்காக பிரச்சாரம் செய்யப் போவதாக பிரகடனம் செய்துள்ளனர். பூட்டோ முஷாரப்பை ஒரு "தகைப்பான சர்வாதிகாரி" என வர்ணித்ததுடன் தேவை ஏற்படின் பாகிஸ்தானுக்கு திரும்பி, ஜெயிலில் இருந்து ஜனாதிபதிக்கு எதிராக போராடுவதாக எச்சரித்துள்ளார். அதே வேளை, தேர்தல்களில் அவரது கட்சி வெற்றியீட்டினால் இராணுவ நிர்வாகத்துடன் ஒத்துழைப்பதாக ஏற்கனவே சுட்டிக் காட்டியுள்ளார். அவர் கடந்த மாதம் லண்டனில் இடம் பெற்ற ஒரு கூட்டத்தில், 'எமது கட்சியானது அதிகளவு ஆர்வத்துடன் பாகிஸ்தானை ஜனநாயகமயமாக்கும் நடவடிக்கைகளை அதிகரிப்பதற்காக இராணுவ ஆட்சியுடனான பேச்சுக்கான கதவுகளை திறந்து வைத்துள்ளது என விளக்கினார்.

புஷ் நிர்வாகத்தின் ஆதரவை முஷாரப் தொடர்ந்தும் பெற்றுவருவதை இவ் இரு தலைவர்களும் அடையாளங் கண்டுள்ளனர். பூட்டோ, அமெரிக்காவின் 'பயங்கரவாதத்துக்கு எதிரான பூகோள யுத்தத்திற்கு' தன்னை ஒரு உறுதியான ஆதரவாளராக அர்ப்பணிப்பதன் மூலம் வாஷிங்டனின் ஆதரவிற்கு தளம் அமைக்கின்றார். அவர், அமெரிக்க அழுத்தத்தின் கீழ் அரசியலாக்கப்பட்ட இஸ்லாமிய தீவிரவாத அமைப்புக்களின் அங்கத்தவர்களை விடுதலை செய்ததன் மூலம் அவர்கள் மீது அதிக கருணை காட்டுவதாக முஷாரப்பை சாடியுள்ளார். 'சுதந்திரமானதும் நியாயமானதுமான தேர்தல்கள் பாகிஸ்தானில் நடைபெறுவதை உறுதிப்படுத்துவதற்காக தலையீடு செய்யுமாறு அவர் அமெரிக்காவிற்கு அழைப்பு விடுத்துள்ளார்.

அமெரிக்க அரச திணைக்களம் அரசியலமைப்பு மாற்றங்கள் பற்றி சாந்தமாகவும் உத்தியோகபூர்வமாகவும் விமர்சனங்களை வெளியிட்டது. பேச்சாளர் பிலிப் ரீக்கர்: "அவருடைய அண்மைய முடிவுகள் பாகிஸ்தானில் ஒரு உறுதியான ஜனநாயக ஸ்தாபனங்களை கட்டியெழுப்புவதை மேலும் கடினமாக்கும் என நாம் நம்புகின்றோம்," என குறிப்பிட்டார். எவ்வாறெனினும் அமெரிக்க ஜனாதிபதி புஷ் இந்த கூற்றை சக்தியாய்ந்த முறையில் அசட்டை செய்தார். "முஷாரப் இன்னமும் பயங்கரவாதத்துக்கெதிரான யுத்தத்தில் எம்முடன் போராடிவருவதோடு, நான் இதையே மெச்சுகின்றேன்" என பத்திரிகையாளர்களுக்கு தெரிவித்தார்.

பாகிஸ்தானிய தலைவர் தொடர்ந்தும் சர்வதேச நிதி உதவிகளை பெற்று வருகின்றார். அவர் ஆகஸ்ட் 20 அன்று சர்வதேச நாணய நிதிய நிர்வாக இயக்குநர் ஹோர்ஸ் கொஹ்லரிடம், "அரசியலமைப்பு பிரேரணைகள், அரசாங்கம் முன்வைத்த தொடர்ச்சியான மறுசீரமைப்பிற்கு தேவையான கொள்கைகளையும் சீர்திருத்தங்களையும் அதே இடங்களில் இருத்துவதற்கு உதவும்" எனத் தெரிவித்தார். அத்துடன் "அரச துறை நிறுவனங்களின் மறுசீரமைப்பினை தொடர்வதுவதையும் வாக்குறுதி அளித்தார். மூன்று நாட்களுக்கு பின்னர், பாகிஸ்தானுக்கான அமெரிக்க உயர்ஸ்தானிகர் நாட்டை ஒன்றிணைக்கவும் மறுசீரமைக்கவும் 3 பில்லியன் டாலர் கடனை அனுமதிக்கும் ஒரு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டார்.

முஷாரப்பின் ஆதரவுக்கான தளம் தொடர்ச்சியாக சுருங்கிவருகையில், இந்த ஜனநாயக விரோத மற்றும் அதிகளவில் விரும்பப்படாத இராணுவ ஆட்சிக்கு ஆதாரமளிக்கும் முக்கிய காரணி, வாஷிங்டனில் இருந்து கிடைக்கும் அரசியல் மற்றும் பொருளாதார ஆதரவேயாகும்.

# குஜராத்தில் முன்கூட்டியே தேர்தல் நடத்துவதற்கான பி.ஜே.பி. யின் நெருக்குதலை இந்திய உச்சநீதிமன்றம் ஒதுக்கித்தள்ளியது

சரத் குமார
9 செப்டெம்பர் 2002

குஜராத்தில் முன்கூட்டிய தேர்தலுக்கான பாரதீய ஜனதாக் கட்சியின் (பி.ஜே.பி) அழைப்பை நிராகரித்து தேசிய தேர்தல் கமிஷனது முடிவை ஆதரித்து கடந்த வாரம் இந்தியாவின் உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்தது. குஜராத்திலும் தேசிய மட்டத்திலும் அதிகாரத்தில் இருக்கும் பி.ஜே.பி ஆனது இந்த ஆண்டின் தொடக்கத்தில் முஸ்லிம் விரோத வன்முறைதான் உருவான பிளவுபடுத்தப்பட்ட வகுப்புவாத சூழ்நிலையை சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ளும் பொருட்டு ஒரு முன்கூட்டிய தேர்தலுக்காக நெருக்கடி கொடுத்து வந்திருக்கிறது.

உச்சநீதி மன்றத்தின் மற்றும் தேர்தல் கமிஷனின் எதிர்ப்பானது செய்தி ஊடகங்களில் பெருமிதமாய் பகிர்ந்து கொள்ளப்பட்டது. பி.ஜே.பி மற்றும் அதன் இந்து தீவிரவாதக் கூட்டாளிகள் வேண்டுமென்றே பற்றவைத்த வகுப்புவாதப் படுகொலைகளின் விளைபயன்கள் பற்றி ஆளும் வட்டங்களில் உள்ள அக்கறைகளை எதிரொலிக்கின்றது. குஜராத்தில் முன்கூட்டிய தேர்தல்களுக்கு எதிராக ஏகமனதாக தீர்மானித்த, தேர்தல் கமிஷன், 'வன்முறைகளைத் தொடர்ந்துவந்த ஒழுங்கீனம் சீர்செய்யப்பட இன்னும் சிரமப்படுகின்றது' என்று அதன் 40 பக்க முடிவில் அறிவித்தது. தேர்தல் நவம்பர் அல்லது டிசம்பரில் சாத்தியமாகலாம் என அது அறிவித்தது.

இந்தத் தீர்ப்பானது பி.ஜே.பி- இடமிருந்து சீறுமட்டும் பதிலைத் தூண்டிவிட்டது. அது அதனை 'அரசியல் சட்ட நெறிமுறை' என வர்ணித்தது. காங்கிரசின் பேச்சாளர் முக்தார் நக்வி, 'குஜராத்தில் தேர்தல்களைத் தள்ளிப் போடுவதற்கு எந்தவொரு காரணமும் இல்லை" என வலியுறுத்தினார். பி.ஜே.பி இந்த முடிவைப் பற்றி இந்திய ஜனாதிபதி மூலமாக உச்சநீதி மன்றத்திற்கு அதனைப் பார்க்குமாறு அனுப்பியது.

முன்கூட்டிய தேர்தலுக்கு எதிரான உச்சநீதிமன்றத் தீர்ப்பு பி.ஜே.பி-ஐ நெருக்கடியில் ஆழ்த்தியுள்ளது. குஜராத்தில் உள்ள பி.ஜே.பி தலைவர் நரேந்திர மோடி, ஜூலை 19 அன்று, கிட்டத்தட்ட தேர்தலுக்கு 10 மாதங்களுக்கு முன்னதாக மாநில சட்டமன்றத்தை கலைத்ததுடன் அப்போதே தேர்தல்களுக்கு திட்டமிட்டார். இப்பொழுது தேர்தலும் பிரச்சாரமும் நீண்டு மாதங்கள் அல்லது வாரங்களுக்கு தாமதமாகும். அத்துடன் மோடி இடைக்கால முதலமைச்சராக புறக்கணிப்பின் விடப்பட்டுள்ளார்.

முன்னர் பி.ஜே.பி.யின் கோட்டையாகக் கருதப்பட்ட இந்தியாவின் மிகப் பெரிய மாநிலமான உத்தரப் பிரதேசம் உட்பட, பி.ஜே.பியின் தொடரான தேர்தல் இழப்புக்களைத் தொடர்ந்து மோடியின் முன்கூட்டிய தேர்தல் திட்டமானது ஆதரவுக்கான அதன் அடித்தளத்தை முண்டு கொடுத்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறுத்தும் ஒரு வழிமுறையாக, அதன் இந்து பேரினவாத நிகழ்ச்சி நிரலை, இந்துத்துவ வை ஆதரித்து மிகவும் உரத்த கடுங்குரலை எழுப்பும் பி.ஜே.பி.யின் தலைமையினது பகுதிகளின் ஆதரவை மோடி பெற்றிருந்தார். குஜராத் தொடக்கப் புள்ளியாக இருந்தது.

பெப்ரவரியில் கோத்ராவில் இந்து தீவிரவாதிகளை ஏற்றி வந்த இரயில் மீதான தாக்குதலுக்குப் பின்னர் முஸ்லீம் விரோத இன அழித்தொழிப்பில் அவர்களின் சம்பந்தப்படலுக்காக மோடியும் பி.ஜே.பி.யின் மாநில அரசாங்கமும் பரவலாக விமர்சனத்திற்கு உள்ளாகி இருக்கின்றன. பி.ஜே.பி. யும் அதன் கூட்டாளிகளான இந்து அடிப்படைவாத குழுக்களும் இரயிலில் 58 பேர்கள் இறப்புக்காக முஸ்லிம்கள் மீது குற்றம்சாட்டின ஷ அது சர்ச்சைக்குரிய ஒரு கூற்றுஷ மற்றும் முஸ்லிம் சிறுபான்மையினருக்கு எதிராக இந்து குண்டர்களைக் கட்டவிழ்த்து விட்டன. வன்முறையில் பெண்கள் மற்றும் குழந்தைகள் உட்பட, சுமார் 2,500 பேர் கொல்லப்பட்டனர் மற்றும் நூற்றுக்கணக்கான பெண்கள் பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டனர். வீடுகள் மற்றும் வர்த்தக நிறுவனங்கள் சூறையாடப்பட்டு அழிக்கப்பட்டதால் குறைந்த பட்சம் 150,000 பேர் இருப்பிடமற்றவர்களாயினர்.

பல மனித உரிமை அமைப்புக்கள் வன்முறையைத் தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுக்கத் தவறியதாக மோடியைக் குற்றம் சாட்டின. கலவரங்களின் நடுவில் மாநில அமைச்சர்களும் அதிகாரிகளும் இருந்தமை பற்றி அறிக்கைகள் சுட்டிக்காட்டின. பல சம்பவங்களில், குண்டர்கள் தங்களின் தாக்குதல்களை நடத்திய அதேவேளையில் போலீசானது அருகில் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தது. புது டில்லியில் பிரதமர் அடல் பிகாரி வாஜ்பாயின் பி.ஜே.பி தலைமையிலான அரசாங்கம் வன்முறையைத் தலையிட்டு தடுத்து நிறுத்தத்தவறியமை தொடர்பாக ஒரு தணிக்கை (வெட்டுத்) தீர்மானத்தை எதிர் கொண்ட அளவுக்கு மோடி நிர்வாகத்தின் சம்பந்தம் அந்த அளவு அப்பட்டமாக இருந்தது.

அப்போதிலிருந்து, மோடியின் நோக்கம் தான் மீண்டும் தேர்ந்தெடுக்கப்படுவதற்காக ஆதரவை ஈட்டுவதற்கு வகுப்புவாத பிளவுகளை சுரண்டிக் கொள்வதாக இருந்தது. அவரது அமைச்சரவை அமைச்சர்களுள் ஒருவர் ஜூலையில் *டைம்ஸ் ஆப் இந்தியா* விடம் மொட்டையாக கூறினார்: "முன்னதாகவே தேர்தல்களை நடத்துவதற்கு நம்மால் இயலவில்லை என்றால், சட்டமன்றத்தை முன்கூட்டியே கலைத்த முழு நோக்கமும் வீணாகிவிடும். கடந்த பல மாதங்களான இந்துத்துவ எழுச்சியை பயன்படுத்திக்கொள்ள நாங்கள் விரும்புகிறோம்."

வகுப்புவாதத்தைத் தட்டி எழுப்புவதன் மூலம், இந்துக்களும் அதேபோல முஸ்லிம்களும் எதிர்கொண்டிருக்கும் சமூக நெருக்கடியை அரசாங்கம் தணிக்கத் தவறியதிலிருந்து திசைதிருப்ப இயலும் என்று மோடி கணக்குப் போடுகிறார். ஜனவரி 2001ல் அழிவுகரமான பூகம்பத்தின் பாதிப்பிலிருந்து குஜராத் இன்னும் இயல்புநிலைக்குத் திரும்பிக் கொண்டிருக்கிறது. மாநில அரசாங்கம் கடன்களாக 900 மில்லியன் அமெரிக்க டாலர்களை பெற்றது அதேவேளை இதற்கு மாறாக புனரமைப்புப்பணி சிறிதளவே நிறைவேற்றப்பட்டிருக்கிறது மற்றும் அங்கு உத்தியோக ரீதியிலான ஊழல் இருப்பதாக குற்றச்சாட்டுக்களும் இருக்கின்றன. பல்வேறு அரசாங்க திட்டப்பணிகளுக்காக ஒப்பந்தக்காரர்களுக்கு 200 மில்லியன் டாலர்கள் செலுத்தப்பட வேண்டியிருக்கிறது.

கடந்த மாதம் *புரண்ட் லைன்* இதழில் ஒரு தொழிலதிபர் விவரித்ததாவது: "வகுப்புவாத வன்முறையால் பொருளாதாரம் அழிவதற்கு முன்னரே, மாநிலமானது பொருளாதாரப் பின்னடைவிற்குள் வழுக்கிச் சென்று விட்டது. வெளிநாட்டு நேரடி முதலீடு பற்றியும் ரிலையன்ஸ் போன்ற பெரும்பாலான கம்பெனிகள் இங்கு முதலீடு செய்கின்றன என்றும் மோடி பகட்டாகக் கூறுகின்ற அதேவேளை, மாநிலத்தின் சொந்த தொழில்துறையின் அடித்தளம் ஒரு குழப்பத்தில் இருக்கிறது. குஜராத்தின் முன்னேற்றத்திற்காக அடித்தளமிட்ட சிறு மற்றும் நடுத்தர தொழிற்சாலைகள், சுமார் 60 சதவீதமானவை ஒன்றில் நலிவடைந்தோ அல்லது மூடப்பட்டோ, ஆபத்தில் உள்ளன." சிறு வர்த்தகங்கள் மூடப்பட்டதன் விளைவாக சுமார் ஐந்து லட்சம் தொழிலாளர்கள் தங்களின் வேலைகளை இழந்திருப்பதாக மதிப்பிடப்படுகிறது. அரச நிறுவனங்கள் பல மூடப்படும் நிலையில் இருக்கின்றன.

வகுப்புவாத குரோதத்தை விசிறிவிடும் அதன் முயற்சியின் ஒரு பகுதியாக, மாநில பி.ஜே.பி, இந்துக்கள் மத்தியில் "தன்முனைப்பின் புதிய மனோநிலையை" கொண்டாடுவதற்கு குஜராத் முழுவதும் இந்து மத ஊர்வலம் அல்லது கௌரவ யாத்திரையை ஆத்திரமூட்டும் விதமாக திட்டமிட்டிருக்கிறது. யாத்திரை ஜூலை 4ல் தொடங்குவதற்கான ஆரம்ப முன்மொழிவை தள்ளிப் போடப்படுவதற்கு கடைசி நிமிடத்தில் வாஜ்பாயி தலையிட்டார்.

முஸ்லீம் விரோத வன்முறை தொடர்ந்துகொண்டிருக்கிறது. இந்து அடிப்படைவாத உலக இந்துசபை (வி.எச்.பி) மற்றும் அதன் இளைஞர் அமைப்பான பஜ்ரங்தளம் ஆகியன குஜராத்தில் முஸ்லீம்களின் உடைமைகளா வீடுகளையும் கடைகளையும் தாக்கி உள்ளனர். முஸ்லிம்கள் அகதிகளாக புகுந்துள்ள பல முகாம்கள் மோடி அரசாங்கம் ரேஷன் அளிப்பின் அளவை வெட்டியதற்குப் பின்னர் மூடும்படி நிர்பந்திக்கப்பட்டன.

கடந்த மாதம் இந்திய இதழான *புரண்ட் லைன்*- இடம் ஒரு முஸ்லிம் கூறினார்: "எங்களிடம் பேசத்துணிபவர் எவரும் பயமுறுத்தப்படுவதோடு ரூபாய் 500 ($US10.29) அபராதம் கட்டுமாறு அச்சுறுத்தப்படுகிறார். உணவையும் மளிகைச் சாமான்களையும் வாங்குவதற்கு நாங்கள் 14 கிலோமீட்டர்கள் நடக்க வேண்டி இருக்கிறது. நான் வேறெங்கும் எனது கடையை திரும்பவும் கூடத் திறக்க முடியாது. எனக்கு கடையை வாடகைக்கு விடுவதற்கு ஒருவரும் விரும்புகினறார்கள் இல்லை."

## பி.ஜே.பி. யில் பிளவுகள்

காங்கிரசால் பின்பற்றப்பட்ட பொருளாதார மறுசீரமைப்புக் கொள்கைகளுக்கு வளர்ந்து வந்த குரோதத்தை சுரண்டிக்கொள்வதன் மூலம் பி.ஜே.பி ஆனது, புதுடில்லியில் தேசிய ஜனநாயகக் கூட்டணி (ஜிஞிகி) அரசாங்கத்தில் பிரதான கட்சியாக 1998ல் அதிகாரத்துக்கு வந்தது. ஆனால் ஆட்சிப் பொறுப்பை ஏற்றதும், வாஜ்பாயி இந்தியப் பொருளாதாரத்தை சர்வதேச முதலீட்டாளர்களுக்கு மேலும் திறந்து விடுவதற்கான பெரு முதலாளிகளின் நிலைப்பாட்டுக்குள் விரைந்தே விழுந்து விட்டார்.

பி.ஜே.பி ஆனது நல்ல ஆட்சிக்கு, ஊழலை ஒழிப்பதற்கு மற்றும் வாழ்க்கை நிலைமைகளை முன்னேற்றுவதற்கு வாக்குக் கொடுத்திருந்தது, ஆனால் அதன் கொள்கைகள் சமூக துருவ முனைப்படலை மட்டுமே உயர்வாக்கியது மற்றும் முன்னர் அதனை ஆதரித்த சிறு வர்த்தகர்கள், விவசாயிகள் மற்றும் தொழிலாளர்கள் ஆகிய தட்டினர் மத்தியில் மோதலை உருவாக்கியது. அதிகரித்து வரும் சமூக நெருக்கடியால் தன்னை ஈடுபடுத்திக் கொள்ள திராணி அற்ற பி.ஜே.பி அதன் அரசியல் நல்வாய்ப்புக்களை அழியாது காப்பாற்ற தேசியவாதத்தையும் இந்து பேரினவாதத்தையும் துணையாக நாடியிருக்கிறது.

பாக்கிஸ்தானுக்கு எதிராக இந்தியாவின் வலுச்சண்டைக்குப் போகும் தன்மைக்கான பிரதான காரணம் உள்நாட்டில் அதன் கொள்கைகளின் விளைபயன்களில் இருந்து கவனத்தைத் திசை திருப்புவதாகும். புதுடில்லியில் மீது ஆயுதம் தாங்கிய காஷ்மீர் பிரிவினைவாதிகளால் இந்தியப் பாராளுமன்ற கட்டிடத்தின் மீது கடந்த டிசம்பரில் நடத்தப்பட்ட தாக்குதல்களுக்குப் பின்னர், வாஜ்பாயும் அவரது அமைச்சர்களும் இஸ்லாமிய தீவிரவாதக் குழுக்கள் மூலம் இந்தியாவுக்குள் தாக்குதல்களை பாக்கிஸ்தான் ஒழுங்கு செய்வதாக திரும்பத் திரும்ப குற்றம் சாட்டினர். பாக்கிஸ்தானுடனான எல்லை நெடுகிலும் 750,000 துருப்புக்கள் உயர்ந்த பட்ச உசார் நிலையில் வைக்கப்பட்டிருக்கின்றன.

இருப்பினும், வாஜ்பாயி, மோடியையும் வாஜ்பாயியின் சொந்த துணைப் பிரதமரும் கட்சியின் இந்துத்துவ நிகழ்ச்சிநிரலுக்குத் திரும்புமாறு வலியுறுத்திக் கொண்டு வருபவருமான, எல்.கே. அத்வானி உட்பட பி.ஜே.பி. யின் ஏனைய பகுதியினரையும் ஆதரிப்பது பற்றி எச்சரிக்கையாக இருக்கிறார். ஜூலை பின்பகுதியில் ஒரு புத்தக வெளியீட்டு விழாவில், உலகத்திற்கும் இந்தியாவிற்கும் முன்னர் ஒரு போதும் இல்லாதளவு அதிகமான "ஒன்றுசேரல்" மற்றும் "சகிப்புத் தன்மை" தேவைப்படுவதாக அறிவித்தார். குஜராத் வன்முறையை மறைமுகமாகக் குறிப்பிட்டு, "காட்டுமிராண்டித்தனம் அதன் மரண நாட்டியத்தை இருந்தாற்போல் விட்டுவிட்டு ஆடுவது ஏன்?" என கூக்குரல் எழுப்பினார்.

குஜராத் தேர்தலை தாமதப்படுத்தும் தேர்தல் கமிஷனின் கடந்த மாதத்து முடிவுக்கு தேர்தல் கமிஷனர் ஒரு கிறித்தவர், பக்கம் சார்ந்திருந்தார் என்று மறைமுகமாகக் குறிப்பிட்டதன் மூலம் மோடி எதிர்ச் செயலாற்றினார். உடனே வாஜ்பாயி அமைதியாக இருக்குமாறு அழைப்பு விடுத்தார். "குஜராத்தில் சட்டமன்ற தேர்தல்கள் தொடர்பான தேர்தல் கமிஷனின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடிவு அல்லது உடனிருந்து கவனித்த அதைமனிப்பதற்கான தொடர்பான நோக்கத்துக்கு பொறுப்பாடுகள் இருக்கலாம்' என்றார் அவர், "ஆனால் நீங்களின் கருத்துக்களை வெளியிடுவதில் ஒருவரும் தகாத வார்த்தைகளை பயன்படுத்துவதோ அல்லது முறையீடாக மறைமுகமாய் குறிப்பிடவோ கூடாது... இந்த முடிவுறாத சர்ச்சைக்கு உடனடியாக முடிவு கட்டுமாறு நான் அனைவரையும் கேட்டுக்கொள்கிறேன்' என்றார்.

இந்து பேரினவாத ராஷ்டிரிய சுயம் சேவக் சங்கத்தின் (ஆர்.எஸ்.எஸ்) வாழ்நாள் உறுப்பினரான வாஜ்பாயிக்கு, மோடியுடனும் அத்வானியுடனும் அடிப்படையில் உடன்பாடின்மை எதுவும் இல்லை. அவரது உடனடிக் கவலை 20க்கும் மேற்பட்ட பிராந்திய கட்சிகளைக் கொண்ட, ஆளும் தேசிய ஜனநாயகக் கூட்டணி தப்பிப் பிழைப்பது பற்றியதாகும். பி.ஜே.பி தனது இந்துத்துவா நிகழ்ச்சி நிரலை மாற்றி அமைப்பதற்கு உடன்பட்ட பிறகு மட்டுமே தேசிய ஜனநாயகக் கூட்டணியில் சேர்ந்த அவரது கூட்டாளிகள், வகுப்புவாதத்தை எந்த வகையிலும் நாடுவது முஸ்லிம்களின் வாக்குகளைப் பறியாக்கிவிடும் என அஞ்சினர்.

தேர்தல் கமிஷன் மற்றும் உச்ச நீதிமன்றம் ஆகியவற்றின் முடிவுகளுக்கு செய்தி ஊடகங்கள் ஆதரவில் எதிரொலித்தவாறு, ஆளும் வட்டங்களில் உள்ள எதிர்ப்புக்கு வாஜ்பாயும் கூட கூருணர்வு கொண்டவராய் இருந்தார். காங்கிரஸ் கட்சிக்கான ஆதரவு சீர்குலைந்து பிராந்திய மற்றும் சாதி அடிப்படையிலான கட்சிகள் மிக நிலையாய்த் தோன்றிக் கொண்டிருந்த சூழ்நிலைகளில், 1990களில் பெரு முதலாளிகளின் பகுதிகள் பி.ஜே.பி பக்கம் திரும்பின. தனியார்மயமாக்கலை, கட்டுப்பாடுகளைத் தளர்த்தலை மற்றும் சமூக செலவினங்களில், விலைகளைக் கட்டுப்படுத்துவதில் மற்றும் மானியங்களில் வெட்டுக்களை முன்னுக்கு எடுப்பதை வலியுறுத்தும், சாதனமாக பி.ஜே.பி பார்க்கப்பட்டது. இருப்பினும், இந்துத்துவத்தை முன்னுக்குக் கொணர்தல் அரசியல் மற்றும் சமூக ஸ்திரமின்மையை உண்டு பண்ணும் மற்றும் இலாபங்களுக்கு எதிராகப் பாதிக்கும் என்று அங்கு தெளிவான பதட்டம் இருந்தது.

எதிர்க்கட்சியான காங்கிரஸ் கட்சி குஜராத்தில் உள்ள மோடியின் நிகழ்ச்சிநிரலை வாயளவில் எதிர்க்கின்றது. குஜராத் மாநில சட்டமன்றத்தைக் கலைப்பது தொடர்பான விவாதத்தில், காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினர் மன்மோகன் சிங் அவையத்தாரை 'பாஸிசத்தை நடைமுறைப்படுத்துவதன் மூலம் நாட்டின் அரசியலை மோசமானதாக செய்வதற்கு நாடுகிறது' என குற்றம் சாட்டினார். ஆயினும், 'மதச்சார்பற்ற' இப்புகழ்ச்சி கூறும் அதன் அனைத்துக் கூற்றுக்களையும் பொறுத்தவரை, காங்கிரஸ் இந்து பேரினவாத புதைசேற்றில் சிக்கி இருக்கிறது. குஜராத்தின் கட்சியின் பிரச்சாரம், முன்னாள் பி.ஜே.பி. யின் மாநில தலைவரும் ஆர்.எஸ்.எஸ் உறுப்பினருமான எஸ். வகேலாவினால் வழி நடத்தப்பட்டது. வகேலாவின் பிரதான போட்டியாளர் கேசுபாய் பட்டேல் முதலமைச்சராக நியமிக்கப்பட்ட பின்னர்தான், வகேலா 1995ல் பி.ஜே.பியை விட்டு விலகினார்.

குஜராத்தில் காங்கிரஸ் கட்சிக் கூட்டங்களுக்கான குறிக்கோள் 'கலவரங்களைப் பற்றிப் பேசாதே' எனக் காணப்படுவதாய் ஒரு வர்ணனையாளர் அவதானித்தார். காங்கிரஸ் பேச்சாளர்கள் மோடி நிர்வாகத்தை ஊழல் தொடர்பாகவும் மாநில பொருளாதாரத்தை சீருலைத்ததற்காகவும் தாக்கி இருக்கும் அதேவேளை, அதன் இந்துத்துவ நிகழ்ச்சி நிரலை விமர்சிப்பதிலிருந்து விலகி இருக்கின்றனர். உண்மையில், இந்து வாக்குகளை நாடும் வேண்டும் முயற்சியில், கட்சியானது அதன் தலைவர்கள் இந்துக் கோவில்களுக்கு விஜயம் மேற்கொள்வார்கள் என்று அறிவித்திருக்கின்றது.

காங்கிரசை விமர்சிப்பதிலிருந்து விலகி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி-மார்க்சிஸ்ட் (சிபிஐ-எம்) அ அனைத்தையும் இந்து தீவிரவாதத்தை எதிர்த்துப் போராடுவோம் என்ற பெயரில் குஜராத்திலும் மற்றெங்கிலும் எதிர்க்கட்சிகளுடன் ஒரு பேரம் பேசிக்கொள்வதற்கான அதன் விருப்பத்தை சுட்டிக் காட்டியிருக்கின்றது. சிபிஐ (எம்) பொதுச் செயலாளர் ஹர்கிஷன் சுர்ஜித் அறிவித்ததாவது 'இந்துத்துவ சக்திகளுக்கு எதிராக ஒன்றாகத் ஒற்றுமையாய் நின்று போராடுவதை உறுதிப்படுத்துவதற்கு நாம் காங்கிரஸ் அல்லது வேறு எந்த கட்சியையும் ஆதரிப்போம்.'

இந்த அனைத்துக் கட்சிகளாலும் இந்து பேரினவாதம் அலையைத் தொல்லாலாதது, இந்தியாவில் உள்ள பரந்த சாதாரண உழைக்கும் மக்கள் எதிர் கொள்ளும் ஆழமாகி வரும் சமூக நெருக்கடிக்கு எந்தத் தீர்வும் அவர்கள் ஒருவரிடமும் இல்லை என்பதன் கூர்மையான குறிகாட்டல் ஆகும்.

# போபால் பேரழிவு பற்றிய மனிதக் கொலைக் குற்றச்சாட்டுக்களைக் குறைப்பதற்கு இந்திய நீதிமன்றம் மறுக்கின்றது

பிரியதர்ஷன மதவத்த
12 செப்டெம்பர் 2002

ஆயிரக்கணக்கானோரின் உயிரைப் பலி கொண்ட போபாலில் உள்ள அமெரிக்க பூச்சிக் கொல்லி மருந்து நிறுவனத்தில் 1984ல் ஏற்பட்ட இரசாயன பேரழிவு தொடர்பாக, முன்னாள் யூனியன் கார்பைட் தலைமை செயலக அதிகாரி வாரன் ஆண்டர்சனுக்கு எதிரான குற்றச்சாட்டுக்களைக் குறைக்கும் அதன் முயற்சியில் இந்திய அரசாங்கமானது ஒரு பின்னடைவால் பாதிக்கப்பட்டிருக்கின்றது.

குற்றத்திற்குரிய மனிதக் கொலையிலிருந்து 'கவனக் குறைவால் மரணம் நேர்ந்ததாக' ஆண்டர்சனுக்கு எதிரான குற்றச்சாட்டுக்களைக் குறைக்கவும் இவ்வாறு உயர்ந்த பட்ச சிறைவாசம் 20 வருடத்திலிருந்து வெறும் இரண்டு ஆண்டுகளாக அதனைக் குறைப்பதற்கும், மத்திய புலனாய்வு நிறுவனத்தால் (சிபிஐ) கேட்கப்பட்ட வேண்டுதலை, போபால் குற்றவியல் நடுவர் நீதிமன்றம் நிராகரித்தது.

இந்திய வெளியுறவு அலுவல்கள் அமைச்சின் தூண்டுதலின்பேரில், இந்த மாற்றம் அமெரிக்காவிலிருந்து ஆண்டர்சனின் ஒப்படைப்புக்கு வாய்ப்புவழி அளிக்கும் என்று சிபிஐ வாதிட்டது. ஆனால் விஷயம் நேர்மாறாக இருக்கிறது. அந்த மனு ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்தால், ஆண்டர்சன் தன்னை வைத்து மாற்றப்பட்டிருந்திருப்பார், அதுதான் இந்திய அரசாங்கத்தின் உண்மையான நோக்கமாக இருந்தது.

கடந்த மாத இறுதியில் அவரது தீர்ப்பில், தலைமைக் குற்றவியல் நீதிமன்ற நடுவர் ரமேஷ்வர் கோத்தாரி அறிவித்ததாவது: 'வாரன் ஆண்டர்சன் தலைமறைவாகிவிட்டவர் என்று அறிவிக்கப்பட்டிருப்பதாலும் எந்த நீதிமன்றத்திலும் தோன்றி இருக்காத, அவருக்கு எதிராக நிரந்தர கைது ஆணை பிறப்பிக்கப்பட்டிருப்பதாலும், குற்றங்களைக் குறைப்பதில் எந்த அர்த்தமும் இல்லை.' அவர் வழக்குத் தொடுநர்களை, ஒப்படைப்பு நடவடிக்கைகளை முன்னெடுத்து செல்லுமாறு வலியுறுத்தினர். அது 18 ஆண்டுகள் ஆகியும், தொடங்கப்படாமல் இருக்கிறது.

இப்பேரழிவில் தப்பிப்பிழைத்தவர்களை பிரதிநிதித்துவம் செய்யும் வழக்கறிஞர்கள் வாஷிங்டனிலிருந்து வரும் அழுத்தத்திற்கு அடிபணிந்துவிட்டதாக பிரதமர் அடல்பிகாரி வாஜ்பாய் மீது குற்றம் சாட்டுகின்றனர். குற்றச்சாட்டுக்களைக் குறைப்பதற்கான மனுவானது, 'வெளிநாட்டு முதலீட்டாளராக வரக்கூடியவர்களுக்கு, அவர்கள் இந்தியாவில் சுதந்திரமாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடப்படுவதை எதிர்பார்க்க முடியும் என்று ஒரு சமிக்கை கொடுக்கும் பொருட்டு விஷயத்தைப் புதைப்பதை நோக்கமாகக் கொண்ட சூழ்ச்சி ஆகும்.

நீதிமன்ற முடிவை அடுத்து, ஆண்டர்சனின் வழக்கறிஞர் வில்லியம் க்ரோஹ்லி தனது கட்சிக்காரரை இந்தியாவில் விசாரிப்பதற்கான எந்த முயற்சியையும் எதிர்த்தார்: "இந்திய நீதிமன்றங்களின் குற்றவியல் சட்ட அதிகாரத்திற்கு எம்மை ஒப்படைப்பதற்கு நாங்கள் ஒருபோதும் ஒப்புக்கொள்ள மாட்டோம். குற்றவியல் சாராத வழக்கு நீண்டகாலத்திற்கு முன்பே தீர்க்கப்பட்டுவிட்டது. நீங்கள் காயத்தை அழித்துவிட முடியாது. சிறப்பாகச் செய்யக் கூடியது செய்யப்பட்டு விட்டது."

க்ரோஹ்லி கூற்றே இந்திய அரசாங்கம் மற்றும் யூனியன் கார்பைடு இவற்றின் பொய்மைத் தன்மையைக் கோடிட்டுக்காட்டுகிறது. இந்தியாவில் எந்தவிதமான குற்றவியல் வழக்கையும் எதிர்க்கும் அதேவேளை, கம்பெனியானது உரிமை சம்பந்தமான வழக்கு நடவடிக்கைகள் இந்தியாவுக்கு மாற்றப்பட வேண்டும் என்று வலியுறுத்தியது. அங்கு நஷ்ட ஈட்டிற்கான கோரல்கள் அமெரிக்காவில் எதிர்பார்த்திருப்பதைக் காட்டிலும் சிறு பின்ன அளவையாக இருந்தது. 1989ல் உரிமை சம்பந்தப்பட்ட வழக்கின் வெளிப்பாடு 470 மில்லியன் டாலர்கள் கொண்ட அற்பமான தீர்வாக இருந்தது.

போபால் துயரத்தில் உயிர்பிழைத்தவர்களும் இந்தியாவிலும் சர்வதேசரீதியாகவும் உள்ள அவர்களின் ஆதரவாளர்களும் நீதிக்கான அவர்களின் பிரச்சாரத்தைத் தொடர்ந்திருக்கிறார்கள். அவர்கள் போபால் நீதிமன்றத்திற்கு வெளியேயும் இந்தியா எங்கிலும் ஆண்டர்சனுக்கு எதிரான குற்றச்சாட்டுக்களின் கடுமையைக் குறைப்பதற்கான அரசாங்கத்தின் முயற்சிகளை எதிர்ப்பதற்கு எதிர்ப்புக்களை ஒழுங்கு செய்தனர்.

அவர்களின் ஏனைய கோரிக்கைகள் பாதிக்கப்பட்டவர்களுக்கு நஷ்ட ஈடு வழங்குவது மற்றும் 2001ல் யூனியன் கார்பைடை முயன்று பெற்ற டௌ கெமிக்கலில் இருந்து, கம்பெனியின் கடன் பொறுப்புக்களை, அது அமெரிக்காவில் செய்திருந்ததுபோல, இந்தியாவிலும் ஏற்கும் என உத்தரவாதம் பெறுவதற்கானதுமாகும்.

நீதிமன்றத் தீர்ப்புக்குப் பின்னர், போபால் விஷவாயுவால் பாதிக்கப்பட்ட பெண்கள் அமைப்பின் ஒழுங்கமைப்பாளர், ரஷிதா பீ, கூறினார்: "எங்களது யுத்தம் வெற்றி பெற்றிருக்கிறது மற்றும் நாங்கள் ஆண்டர்சனை நீதிமன்றத்திற்குக் கொண்டு வருவதற்கும் குற்றவாளியைத் தண்டிப்பதற்கும் தொடர்ந்து போராட இருக்கிறோம். போபால் இன்னொருமுறை ஒருபோதும் ஏற்படக்கூடாது." என்றார் அவர். 46 வயதான ரஷிதா அவரது குடும்ப உறுப்பினர்கள் ஐவரை புற்றுநோய் பாதிப்பால் இழந்தவர் மற்றும் அவர் பகுதி அளவு பார்வை இழப்பாலும் நரம்புக் கோளாறாலும் பாதிக்கப்பட்டிருக்கிறார்.

பேரழிவின் போது இளஞ் சிறுமியாக இருந்த சைதா, மிகவும் ஐயுறவாதத்தில் இருந்தாள். "அவர்கள் அவரை கடந்த 18 வருடங்களாக நீதிமன்றத்திற்குக் கொண்டு வருவதற்கு ஏற்பாடு செய்திருக்கவில்லை மற்றும் நீதிமன்றத்தின் தீர்ப்பைப் பொருட்படுத்தாமல், இப்பொழுது அவ்வாறு செய்வதை அவர்கள் விரும்பவில்லை. நீதிமன்றத் தீர்ப்பில் நாம் மகிழ்ச்சி அடைகிறோம் ஆனால் ஆண்டர்சன் ஒப்படைக்கப்படுவார் என்பது உறுதி இல்லை. பாதிக்கப்பட்டவர்களை ஒரு முறை எதிர்கொள்ளுவதற்காகவாவது அவர் போபாலில் உள்ள நீதிமன்றத்திற்கு கொண்டு வரப்பட வேண்டும்."

## உலகின் மிகப் பெரிய தொழிற்சாலைப் பேரழிவு

பத்தாயிரக்கணக்கான போபால் வாசிகள் உலகின் மிகப் பெரிய தொழிற்சாலைப் பேரழிவினால் பாதிக்கப்பட்டனர். 1984, டிசம்பர்3 காலை நேரத்தில், யூனியன் கார்பைடு நிறுவனத்தில், விரைவில் ஆவியாகக் கூடிய, மரண ஆபத்தான 40 தொன்கள் எடையுள்ள, இரசாயனப் பொருளான மெதைல் ஐசோசயனைடைக் (Methyl isocyanate) கொண்டிருந்த கொள்கலம் ஒன்று வெடித்து, அடுத்த மூன்று மணிநேரத்தில் போபால் சுற்று வட்டாரம் முழுவதும் வாயுக்களின் மேகப்படலமாக கசிந்து வெளியேறியது. உத்தியோக ரீதியிலான புள்ளிவிவரப்படி, குறைந்த பட்சம் 4,000 பேர் சில மணி நேரத்திற்குள்ளேயே கொல்லப்பட்டனர். விஷவாயுவால் பாதிக்கப்பட்டு இறந்த வகையில், வருடக் கணக்கில் இறப்பு எண்ணிக்கை 14,410 க்கு உயர்ந்தது.

கம்பெனியானது, கவனக் குறைவு என பணியாளர் மீது குற்றம் சாட்ட முயன்ற அதேவேளை, அதற்கு அடிப்படைப்பாதுகாப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் அலட்சியம் செய்யப்பட்டதே பொறுப்பு என தெளிவாகியது, அது பேரழிவுக்கு வழிவகுத்தது. கம்பெனியானது அந்த நிறுவனத்தை 1969ல் கட்டியது மற்றும் 1980ல் செவின் எனும் பூச்சிக்கொல்லி மருந்தை உற்பத்தி செய்தது ஆனால் அதன் இந்திய உற்பத்தி நடவடிக்கைக்கு அமெரிக்க தர அளவுகளை பிரயோகிக்கவில்லை. அமெரிக்கா போல் அல்லாமல், அங்கு மெதைல் ஐசோசயனைடு ஆபத்து நேர்வைக் குறைப்பதற்கு சிறிய அளவிலான அடர்த்தியில் சேமிக்கப்படும், இந்திய நிறுவனமோ ஒரேயொரு பெரிய மெதைல் ஐசோசயனைடு கொள்கலத்தைக் கொண்டிருந்தது. மேலும், எச்சரிக்கை விதிகளுக்கு மாறாக, நிறுவனமானது இந்திய மாநிலமான மத்தியப் பிரதேசத்தின் மக்கள் தொகை செறிந்த தலைநகரான போபாலின் மையத்தில் இருந்தது.

1984க்கு முன்னர் போபால் தொழிற்சாலையில் குறைந்த பட்சம் மூன்று விபத்துக்கள் நடந்திருந்தன. 1981 டிசம்பரில் அந்தப் பகுதியை இயக்குபவர் (plant operator) பொஸ்ஜீன் அல்லது கடுகுப் புகை கசிவினால் இறந்தார் மற்றும் 1982 அக்டோபரில் மெதைல் ஐசோசயனைடு பெரிய அளவில் கசிந்ததை அடுத்துள்ள வசிப்பிடங்களில் இருந்து வெளியேறும்படி பலர் நிர்பந்திக்கப்பட்டனர். 1983 பெப்ரவரியில் விஷவாயுவை சுவாசித்த பின்னர் பல தொழிலாளர்கள் நோய்வாய்ப்பட்டனர். 1982 நடுப்பகுதியில், தொழிற்சாலையை ஆய்வு செய்த அமெரிக்க வல்லுநர் பின்வருமாறு சுட்டிக்காட்ட இருந்தார்: "இந்தத் தொழிற்சாலை பெரும் விபத்துக்கான ஆபத்து நேர்வின் கீழ் இயங்குகிறது."

பிரிட்டனை தளமாகக் கொண்ட இண்டிபென்டென்ட் செய்தித்தாளில், "18 வருடங்களுக்குப் பின்னர் போபால் இன்னும் நீதிக்காகக் காத்திருக்கிறது" என்று தலைப்பிடப்பட்ட ஒரு கட்டுரையில், 1984ல் அந்த நிறுவனமானது அதன் பூச்சிக் கொல்லி மருந்துக்கான தேவையை வறட்சியானது குறைத்ததன் பின்னர், அது "கவனித்தல் மற்றும் பராமரித்தல்" செயல்பாட்டில் வைக்கப்பட்டிருந்தது என்று விவரித்தது. "அவர்கள் பணியாளர்களைக் குறைத்தனர், மற்றும் பாதுகாப்பு முதல் பலியாக இருந்தது. டிசம்பர் 1984 அளவில், மரண ஆபத்தான மெதைல் ஐசோசயனைடு கொள்கலம் விஷயத்தில் ஆபத்தான வகையில் சமரசம் செய்யப்பட்டு இருந்தது. அது அரைவாசிக்கு மேல் ஒரு போதும் நிரப்பப்படக் கூடாது என்ற விதிமுறை இருப்பினும், அது 90 சதவீதம் நிரப்பப்பட்டு இருந்தது. அது ஒன்று பட்டுக் கலக்க ஆரம்பித்தாலும் கூட பாதுகாப்பாக இருக்கும் என்பதால், அதன் உள்ளிருப்பதை 0 சென்டிகிரேடு வெப்பநிலையில் (32F) வைத்திருப்பதற்காக வடிவமைக்கப்பட்ட, குளிரேற்று அமைப்பு தொடர்பு அறுக்கப்பட்டு இருந்தது. கசிந்து வரும் விஷவாயுவை சமநிலைப்படுத்தும் ஒரு தெளிப்பான் செயல்படாதிருந்தது; அதனை எரித்து இல்லாதாக்கும் தீச்சுவாலைக் கோபுரம் பழுதுபார்ப்பில் இருந்தது. அதனைப் பராமரிக்கும் பணியாளர்கள் ஆறு பேர்கள் இருவராகக் குறைக்கப்பட்டிருந்தனர், மற்றும் இரவு பராமரிப்பு மேற்பார்வையாளர் பணி அழிக்கப்பட்டிருந்தது."

நள்ளிரவுக்குப் பிறகு விஷவாயு கசிவு நிகழ்ந்ததும் உடனே, பிரதான எச்சரிக்கை ஒலி (சங்கு) செயல்படவில்லை. நிர்வாகமானது சிறிய விபத்துக்களை வழக்கமாகக் குறிப்பதில் தொடர்புடைய சிறிய ஒலிஎழுப்பியை மட்டும்தான் இயக்கினர், அதற்கு நகர மக்கள் குறிப்பிட்ட கவனத்தை அளிக்கவில்லை. விளைவு தொழிற்சாலையிலிருந்து வந்த கீழ்நோக்கி அடித்த காற்று உறங்கிக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொல்லப்படுவதற்கு குடிமக்களுக்கும் விஷவாயுவை வெளியேற்ற நீடி விட்டதால் சேதம் ஏற்பட்டது.

பேரழிவிற்குப் பின்னரும் பதினேழு வருடங்கள் கழிந்தும் அதன் பயங்கரமான பாதிப்பு இன்னும் உணரப்படுகிறது. 120,000க்கும் அதிகமான போபால்வாசிகள் நச்சு வாயு தொடர்பான நோய்களால் பாதிக்கப்பட்டிருக்கின்றனர், ஒவ்வொரு மாதமும் 10 முதல் 15 வரையிலான பேர் அதில் இறக்கின்றனர். மெதைல் ஐசோசயனைடு, இழைய தோல்களிலும் உள்ள புரதங்களை மாற்றுவதன் மூலம், அது தாக்கியோரின் நுரையீரல்களை நிரந்தரமாகப் பாதித்தது.

இந்திய மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத்தினால் அளிக்கப்பட்ட அறிக்கையின்படி பாதிக்கப்பட்டோரின் மொத்த எண்ணிக்கை 521,262. இவற்றுள் 10 சதவீதம் பேர் உறுப்புக்கள் மற்றும் மனநலமின்மை பிரச்சனைகளாலும் பாதிக்கப்படுகின்றனர். பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள பெண்கள் மற்ற பகுதிகளில் உள்ளவர்களை விடவும் மூன்று மடங்கு அதிகம் கருச்சிதைவால் பாதிக்கப்படும் வாய்ப்பு உள்ளது. நலன்புரி ஆணையாளர் அலுவலகம் புற்று நோயாலும் ஏனைய உடல் நலிவாலும் 1992 அளவில் 6,325 பேர் இறந்திருந்ததாக அறிவிக்கிறது.

இந்தப் பகுதியில் பிறந்த குழந்தைகளில் பலர் மனோரீதியாகவும் உடல் ரீதியாகவும் மந்தமானவர்களாக இருக்கின்றனர். 1987-88ம் ஆண்டு ஆய்வு ஒன்று, விஷவாயு கசிந்த நேரம் ஐந்து வயதிற்கும் குறைவாக இருந்தவர்களை ஏனைய பகுதிகளில் உள்ளவர்களுடன் ஒப்பிடுகையில், இருமல் காய்ச்சல், ஆஸ்த்மா, வாந்தி எடுத்தல், இருமல் மற்றும் ஏனைய நோய்களுக்கு இரண்டிலிருந்து நான்கு மடங்குகள் வரை மிகவும் பாதிக்கப்படக் கூடியவர்களாக இருக்கின்றனர் என்கிறது.

போபால் தொழிற்சாலைப் பகுதியில் உள்ள 1993-ம் ஆண்டு மக்கள் தொகையினரில் 65.7 சதவீதத்தினர் ஆஸ்த்மா மற்றும் சுவாசக் கோளாறுகளால் பாதிக்கப்பட்டிருக்கின்றனர், 65.4 சதவீதத்தினர் கடும் தலைவலிகளாலும் மற்றும் 49 சதவீதம் கண்நோய்களால் பாதிக்கப்படுகின்றனர். அத்துடன், 43.2 சதவீத பாலியல் ரீதியாக பருவமடைந்த பெண்கள் இனவிருத்தி கோளாறுகளால் பாதிக்கப்படுகின்றனர்.

## அரசாங்கத்தின் பாத்திரம்

கடந்த 15 ஆண்டுகளாக, மத்திய மற்றும் மாநில அரசாங்கங்கள் அவை பாரதிய ஜனதாக் கட்சி பி.ஜே.பி ஆக இருந்தாலும் சரி காங்கிரஸ் கட்சியாக இருந்தாலும் சரி யூனியன் கார்பைடு நிறுவனத்தின் பக்கம் சார்ந்து அதன் நலன்களைப் பாதுகாத்தன. இந்த அநியாயத்திற்கு எதிராக எதிர்ப்பாளர் போலீசாரால் தாக்கப்பட்டு சிறையிலிடப்படும் அதேவேளை, அரசாங்கங்கள் குற்றவாளிகளை விசாரிக்கத் தரப் பணிப்பதற்கு அல்லது பாதிக்கப்பட்டோர் குடும்பங்களுக்கு இழப்பீட்டுத் தொகை செலுத்துவதில் இரக்கத்தொகையை விட அதிகம் செலுத்துவதற்கு குற்றவாளிகளைக் கொண்டுவரத் தவறி விட்டிருக்கின்றன.

1995ல், பாதிக்கப்பட்டோரை ஆதரிக்கும் செயல்பாட்டாளர்களால் நடத்தப்படும் மருத்துவப் பரிசோதனை நிலையத்திற்கு பொலிஸ் திடீரென்று நுழைந்து ஆறு தொண்டர் ஊழிய மருத்துவர்களைக் கைது செய்தனர் மற்றும் மருத்துவ குறிப்பேடுகளை பறிமுதல் செய்தனர். 100க்கும் மேற்பட்ட செயல்பாட்டாளர்கள் மீது போலிக் குற்றச்சாட்டுக்களின் அடிப்படையில் குறைந்த பட்சம் 10 குற்றவியல் வழக்குகள் போடப்பட்டிருக்கின்றன. போபாலில் உள்ள முக்கிய ஆதரவு குழுவினரின் உறுப்பினர்கள் மீது போடப்பட்ட உத்தியோக ரீதியான இரகசியச் சட்டத்தை மீறியதான குற்றச்சாட்டுக்கள், 1986 செப்டம்பரிலிருந்து இன்னும் நிலுவையில் இருக்கின்றன.

விஷவாயு கசிவுக்கு முன்னால் கூட, ஆரம்பகால விபத்துக்களின் தொடர்ச்சிக்குப் பின்னர் வசிப்பிடத்தில் உள்ளோரால் வந்த எதிர்ப்புக்களை மாநில அரசாங்கம் அலட்சியம் செய்தது. மத்தியப் பிரதேச தொழில் அமைச்சர் அவையில் அந்த நிறுவனம் இடமாற்றம் செய்யப்பட வேண்டும் என்ற கோரிக்கைகளை வெளிப்படையாக எதிர்த்தார் 'இந்தத் தொழிற்சாலை 25 மில்லியன் ரூபாய்கள் செலவில் கட்டப்பட்டது ஒரு சிறு கல் அல்ல இது அதை இடம் மாற்றுவதற்கு' என்றார். 1982ல் அவர், தொழிற்சாலை போபாலுக்கு பேரழிவைத் தரும் மூலமாக இருக்கவில்லை என்று அறிவித்ததாகக் கூறினார்.

எதிர்ப்புக்களின் அண்மைய சுற்றின்போது, எதிர்க்கட்சியான காங்கிரஸ் கட்சி போபால் பாதிப்புக்கு ஆளானோருக்கான ஆதரவை வெளிப்படுத்தியது. காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி ஆர்ப்பாட்டக்காரர்களுடன் நின்றிருந்து வருகை தந்து நீதி பெற்றுத் தருவதாக உறுதி கொடுத்தார். இருப்பினும், காங்கிரஸ் அரசாங்கம் 1969ல் அறிவிக்கப்பட்ட அதன் சொந்தக் கொள்கைகளை மீறி போபால் மத்தியில் அபாயமான இந்த நிறுவனத்தைக் கட்டுவதற்கு அனுமதித்தது.

யூனியன் கார்பைடு நிறுவனத்தை வழக்குத் தொடுப்பதில் இருந்து விலக்களிப்பதற்கும் நிதி ரீதியான தண்டத்தொகைகளைக் குறைப்பதற்கும் அனுமதித்தற்கு காங்கிரஸ் கட்சியும் கூட நேரடிப் பொறுப்பானதாகும். பேரழிவிற்குப் பின்னரான நாளில் போபாலுக்கு வருகை தந்தபோது ஆண்டர்சன் கைது செய்யப்பட்டார், நாட்டை விட்டு தப்பித்துச்செல்வதற்கு அனுமதிக்கப்பட்டார் மற்றும் வழக்குத்தொடுப்பதைத் தவிர்க்கவும் அனுமதிக்கப்பட்டார். வாயு கசிந்து பல மாதங்களுக்குப் பிறகு அரசாங்கமானது உயிர்பிழைத்தவர்களின் நலன்களைப் பிரதிநிதித்துவப்படுத்த முழு அதிகாரத்தையும் எடுத்துக் கொள்ள அதனை அனுமதிக்கும் போபால் சட்டத்தை நிறைவேற்றியது. 1989ல் சட்டரீதியான வழக்கை முடிவுக்குக் கொண்டுவர யூனியன் கார்பைடு நிறுவனத்துடன் செய்த அதன் கொடுக்கல் வாங்கலானது உண்மையாகக் கோரிய இழப்பீட்டில் ஏழில் ஒரு பங்கிற்கும் குறைவான தொகையான 470 மில்லியன் அமெரிக்க டாலர்களுக்குப் பதிலாக, அனைத்து நடந்த கால, நிகழ்கால மற்றும் எதிர்கால கடன் பொறுப்புக்களிலிருந்து விடுவித்தது.

1990ல் மத்தியப் பிரதேசத்தில் ஆட்சிக்கு வந்த, இந்து பேரினவாத பி.ஜே.பி. அந்தப் பேரழிவைத் தொடர்ந்து காங்கிரசின் நடவடிக்கைகள் பற்றி விமர்சித்திருந்தது. ஆனால் ஆட்சிக்கு வந்ததும், மாநில அரசாங்கமானது பாதிக்கப்பட்டோரைத் துன்புறுத்தியது. அவர்களில் பலர் ஏழ்மையான முஸ்லீம்கள் ஆவர். 'நகரை அழகுபடுத்தல்' எனும் பெயரில், பாதிக்கப்பட்டோருக்கு உதவ இருந்த சொற்பமான நிதியையும் அவர்களின் 'சட்டவிரோத' குடிசைகளிலிருந்து வெளியேற்றும் மற்றும் பூங்காக்களை அழகுபடுத்தல், புதிய வீதிகளை நிர்மாணித்தல் மற்றும் நினைவுச்சின்னங்களை புனருத்தாரணம் செய்தல் மூலம் அப்பகுதிகளைப் புதுப்பிக்கும் திட்டத்திற்கு திசைதிருப்பி விட்டது.

1998ல் தேசிய மட்டத்தில் அதிகாரத்தை எடுத்த, பி.ஜே.பி தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி அரசாங்கம், முன்னைய அரசாங்கங்களைப் போல, தொழிற்சாலைப் பாதுகாப்பு உட்பட, அனைத்து கார்ப்பொரேட் ஒழுங்குமுறைக் கட்டுப்பாடு இன்மை பற்றி விளம்பரம் செய்வதன் மூலம் வெளிநாட்டு முதலீட்டை ஊக்குவிக்க நாடி இருக்கிறது. வாஜ்பாயி அரசாங்கம் 2001ல் டௌ கெமிக்கல்ஸ் நிறுவனத்தால் யூனியன் கார்பைடு எடுக்கப்படுவதை வரவேற்றது. இந்தியக் கம்பெனிகளின் 100 சதவீத உடைமையை வெளிநாட்டு நலன்களுக்கு அனுமதிக்கும் அதன் முடிவின் ஒரு நிரூபணமாகும்.

முன்னாள் யூனியன் கார்பைடு தலைவர் வாரன் ஆண்டர்சனுக்கு எதிரான குற்றச்சாட்டுக்களைக் குறைப்பதற்கு பி.ஜே.பியால் எடுக்கப்பட்ட அண்மைய நகர்வு, பாதிக்கப்பட்டோரின் நலனைப் பலியிட்டு கம்பெனியோட்டுக்காது நலன்களைப் பாதுகாப்பதில் அனைத்து அரசாங்கங்களின் 18 ஆண்டு கால பதிவுச்சான்றுகளின் வழியில் பொருந்தி நிற்கிறது. பாதுகாப்பு மற்றும் சாதாரண உழைக்கும் மக்களின் வாழ்க்கை தொடர்பான அவர்களின் அப்பட்டமான அலட்சியம், ஒரு பேரழிவினைத்தரும் பெறுபேறல்ல மற்றும் அதே அளவு அல்லது மோசமான தொழிற்சாலைப் பேரழிவுகளுக்கான சூழ்நிலைமைகள் நிலவுகின்றன என்பதன் ஒரு உறுதியான அடையாளமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேல்ட் கொம் அம்பலப்படுத்தலின் படிப்பினைகள்

நிக் பீம்ஸ்
2 ஜூலை 2002

புஷ் நிர்வாகமும் நிதி ஆய்வாளர்களும் ஊடகவியலாளர்களும் சேர்ந்து, அமெரிக்க நிதி நெருக்கடியை பேராசை பிடித்த கூட்டுத்தாபன நிர்வாகிகளதும் கணக்காளர்களதும் ஒரு தவறுதலாலான மோசடி என சாதாரணமாக காட்டிவிட முயற்சிக்கும் அவநம்பிக்கையான பிரசாரமொன்றில் ஈடுபட்டுள்ளனர்.

வேல்ட் கொம் அம்பலப்படுத்தல்களின் வெளிச்சத்திலிருந்தும் மற்றும் "உருவாக்கப்பட்ட கணக்குகள்" என நீண்டகாலமாக சந்தேகிக்கப்பட்டு வந்த, காட்டப்பட்ட 6.4 மில்லியன்களுக்கு அதிகமானதாக காட்டப்பட்ட செரொக்ஸ் கம்பனியின் வருமானம் சம்பந்தமாகவும், சம்பந்தப்பட்ட பொறுப்பான நிர்வாகிகளுக்கு தண்டனை வழங்குவதாகவும் அவர்களை சிறைத் தண்டனைக்கு உட்படுத்துவதாகவும், "பொது மக்களின் நம்பிக்கையை தகர்ப்பதை சகித்துக் கொண்டிருக்கப் போவதில்லை" எனவும் அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ புஷ் சபதம் செய்யவும் தள்ளப்பட்டார். இவர்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கைகளை எடுப்பது பற்றி, புஷ் ஜூலை 9 நிகழ்த்தவுள்ள உரையில் அறிவிப்பாரென எதிர்பார்க்கப்படுகின்றது.

கடந்த வெள்ளியன்று வேல்ட் கொம்மின் பிரதம நிர்வாகி ஜோன் சிட்மோர் புஷ்சுக்கு எழுதிய கடிதத்தில், தற்போதைய நிர்வாகமானது "இதற்கு சமமானளவு அதிசயத்திலும் ஆத்திரத்திலும் ஆழ்ந்துள்ளதாக" பிரகடனம் செய்தார். இந்தக் காரணத்தினாலேயே அவர்கள் சுமார் 4 மில்லியன் செலவுகளுக்கான தவறான கணக்குகளை உடனடியாக கடன் பத்திர பாதுகாப்பு நாணயமாற்றல் சபை யின் (எஸ்.ஈ.சி) கவனத்துக்கு கொண்டுவந்தார்களெனவும் அவர் விளக்கம் தெரிவித்தார்.

இந்த நெருக்கடி, ஊழல் மிக்க ஒரு சில நபர்களால் விளைந்ததே தவிர முதலாளித்துவ பொருளாதாரத்தில் ஆழமக வேரூன்றிய பிரச்சினைகளால் ஏற்பட்ட ஒன்றல்ல எனக் காட்டும் இத்தகைய அறிவித்தல்கள் உலகம் பூராவும் பிரகடனப்படுத்தப்பட்டு வருகின்றன.

லண்டன் டெலிகிராப் பத்திரிகையின் பொருளியல் பகுதி ஆசிரியர் ஜோர்ஜ் ரெப்கார்ன்னியினால் எழுதப்பட்டு, ஜூலை 1 சிட்னி மோர்னிங் ஹெரால்ட் பத்திரிகையில் வெளியான கட்டுரை, இந்த பிரச்சாரத்தின் நோக்கத்தை மிகத் தெளிவாக அம்பலப்படுத்துகிறது.

"எதிர்வரும் பல ஆண்டுகளாக ஊகிக்கப்படும் பைத்தியகாரத்தனமானதும் தற்போது அதி உக்கிரமான மட்டத்தில் காணப்படும் மிகப்பாரிய அழிவிலான வீழ்ச்சியாக" குறிப்பிட்டு இந்த வேல்ட் கொம், என்ரொன் விழ்ச்சி மிக ஆழமான அரசியல் மாற்றத்தினை சுட்டிக்காட்டுவதாக கூறுகிறார்.

இந்த அமைப்பு சரியல்ல என தற்போதைய பீதியை தமக்கு சாதகமாக்கியவாறு, உலக பொருளாதார அமைப்பு நிலைத்துள்ளமை பற்றி, சில புத்திஜீவிகளான பண்டிதர்களும் இடதுசாரி தீவிரவாதிகளும் பலவித வினாக்களை எழுப்புவது தவறில்லைதான்" என அவர் மேலும் எழுதுகிறார்.

"வர்த்தக சந்தையில் தங்கியுள்ள எம்போன்றோர் இது குறித்து அச்சம் கொள்ளாதிருப்பதுடன், பேராசை, அச்சம் போன்ற குணநலன்களுடன் இருப்பது மனிதப் பண்பாகும். ஆகையினால், இதுவும் (வர்த்தக சந்தையும்) இதற்கு ஆட்பட்டுள்ளதை நாம் விளங்கிக்கொள்ள வேண்டும்" என ரெம்கார்னி சுட்டிக்காட்டுகிறார். வர்த்தக சந்தைகள் அசாத்தியமாக சரியவில்லை. அவை இயங்கிக் கொண்டே உள்ளன. பொறிந்து விழும் வர்த்தக சந்தை போன்றவை "உருவாக்கப்படும் அழிவு" என்று அவர் விளக்குகிறார். இதன் மூலம் தவறாக பயன்படுத்தப்படும் மூலதனம் அழிந்து போய், புதியவற்றுக்கு இடமளிக்கிறது எனக் குறிப்பிடப்படுகிறது.

இவ்வாறு மனதை தேற்றிக் கொண்ட ரெம்கார்னி, "இந்த அமைப்பு பிரச்சினைக்குரியதாகும் என்று சொன்னால், பிரச்சினை என்பது என்ன? இதற்கான பதில், அண்மையில் வர்த்தக சந்தைகள் எதிர் கொண்ட சகல பிரச்சினைகளுக்கும் மோசடி, ஊழல் மற்றும் நேர்மையற்ற நிர்வாகம் நடத்தும் தனிநபர்களே காரணமாகும், என்பதேயாகும்."

இத்தகைய நியாயப்படுத்துதல்களான மதரீதியானதும் மனித இயல்பானதும் மனப்பாங்கானதுமான கூற்றுகள், பொருளாதாரத்தை புற நிலையாக ஆய்வு செய்து, இந்த சரிவைப் பற்றி அடிப்படையான சில வினாக்கள் கேட்கப்படும் போது தோல்வியடைகின்றன. பலகாலங்களாக ஊகிக்கப்பட்டு வந்த பைத்தியக்காரத்தனமான பாரிய அழிவு, சீராகி பின்னர் ஒரு சில தீய தனி நபர்களால் மேற்கொள்ளப்பட்ட "சில தீய செய்கைகளால்" வீழ்ச்சியடைந்தது எனக் கூறும்போது அது அந்த அமைப்பினுள்ளேயே காணப்படும் பலவீனத்தை எடுத்துக் காட்டுகிறதல்லவா? பிரச்சினைகள் ஊழல் மோசடிகளால் தோன்றுவதாயின், அது முன்னரே எழாமல் இப்போது எழுவது ஏன்?

பொருளாதாரம் பற்றி நாம் "கெட்ட ஹிட்லர்" தத்துவத்தை முன்வைக்காதிருப்பின், அண்மைக்காலத்தில் காணப்பட்ட கணக்கியல் பயிற்சி வகையின் உருவாக்கமே முழுப் பொருளாதார நிலைமையுடன் சம்பந்தப்பட்டுள்ளது என்பது தெளிவாகிறது. அது தங்களுக்குள்ளேயே கண்டுபிடித்து அறியப்பட வேண்டியதாகும். ஆனால் ரெப்கார்னியும் ஏனைய பண்டிதர்களும், நிதிச்சந்தை நெருக்கடியானது முதலாளித்துவத்துடன் ஊற்றெடுத்த ஆழமாக வேரூன்றிய பிரச்சினைகளது வெளிப்பாடு என்பது ஒரு சுருக்கமான ஆய்விலேயே தெளிவாகிவிடும் என்பதை அறிந்திருப்பதால் அவ்வழியில் சென்று ஆராய விரும்பவில்லை.

வர்த்தக சந்தை மாற்றம் தீர்கமானதாக விளங்குவதற்கு சில முக்கிய அம்சங்களை கவனத்தில் எடுக்க வேண்டும். முதலாளித்துவ பொருளாதாரத்தின் உந்து சக்தியாக விளங்குவது இலாபத்தை திரட்டுவதே தவிர வெறும் செல்வம், பொருள் செல்வ உற்பத்தி அல்ல. இந்த இலாபத் திரட்டலுக்கான முக்கிய ஊற்றான உபரி மதிப்பு, சேவைகளிலும், உற்பத்தியிலும் ஈடுபட்டுள்ள தொழிலாள வர்க்கத்திடமிருந்தே (வெள்ளை ஆடை, கூலி தொழிலாளரன இரு சாரார்களிடமிருந்தும்) உறிஞ்சப்படுகின்றது.

உபரி மதிப்பு உறிஞ்சி எடுக்கப்பட்டு முதலாளித்துவ பொருளாதாரத்தின் அத்திவாரம் உருவானதும், அதிலிருந்து ஒரு பலமான நிதிக் கட்டுமானம், பங்கு சந்தை உள்ளடங்கியவை அங்கிருந்து எழுகின்றன. அது (பங்குச் சந்தை) இலாபத்திரட்டலுக்கான களமாகிறது. இப்பங்குச் சந்தை மூலதனத்துக்கான உரிமையாளரையும் உள்ளடக்கியுள்ளது. இறுதி ஆய்வில் ஒவ்வொரு பங்கு மதிப்பும் அதற்கு கிடைக்கப் போகும் இலாப சேர்க்கையுடன் சம்பந்தப்பட்டதாக விளங்குகிறது.

ஆனால் முதலாளித்துவ பொருளாதாரத்தின் உண்மையான அத்திவாரமான -உறிஞ்சப்படும் உபரிமதிப்பு- நிதிக் கட்டுமானம்- ஆகியவற்றுக்கிடையிலான உறவு நேரடியான ஒன்று என்பதை இது அர்த்தப்படுத்துகிறது என்பதல்ல. இதற்கு முரண்பாடாக இது மாறுபட்ட வடிவத்தை கொண்டமையும். அதாவது சராசரி இலாப வீதம் உயர்வடைந்திருக்கும் ஒரு கட்டத்தில் பங்கு சந்தை நடவடிக்கைகள் கீழ் மட்டத்தில் நிலவும் போக்கு காணப்படுவதுடன் இலாபம் குறைந்தோ, அதே மட்டத்தில் தேங்கியோ நிதி பரிமாற்றனூடாக இலாபத்தை சேர்க்கும் கவனத்தை உயர் மட்டத்தில் கொண்டதாகவோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணப்படவில்லை.

யுத்தத்தின் பின்னைய அமெரிக்க பொருளாதார வரலாறு இப்போக்கினை பிரதிபலிக்கிறது. 1950, 1960 ஆண்டுகளில் சராசரி இலாப விகிதம் உயர்ந்ததாக விளங்குகையில், பங்குச் சந்தை சார்பீதியாக தொடர்ந்து தளர்ந்தது. 1980 ஆரம்பத்தில் அது தனது படிப்படியான வளர்ச்சியை ஆரம்பித்து 1987 பங்குச் சந்தை பொறிவில் தடைப்பட்டு 1990ல் தான் தனது உயர்ந்த மட்டப் போக்கை பெற்றுக்கொண்டது. 1995ன் பின் படிப்படியாக வேகமாக வளர்ச்சி கண்டது.

எவ்வாறாயினும் அமெரிக்க பொருளாதார வளர்ச்சி -சராசரி இலாப விகிதத்தின் பிரதிபலிப்பு- ஓர் வித்தியாசமான ஒழுக்கில் தொடர்ந்தது. 1990ன் முதல் அரைப் பகுதிகளில் யுத்தத்துக்கு பின்னைய கால கட்டம் முழுவதிலும் வேறு ஐந்தாண்டுகளுக்குள் தான் வளர்ச்சி வேகத்திலும் பார்க்க குறைந்து காணப்பட்டது.

எவ்வாறாயினும் அது அப்பத்தாண்டுகளின் நடுப்பகுதியில் சிறிதளவு புத்துயிரளிக்கப்பட்டது. எனினும் அமெரிக்கா உயர் மட்டத்தில் ஏற்ற்பதுடன், 1990 இன் முக்கிய முதலாளித்துவ நாடுகளின் பொருளாதார அபிவிருத்தி வேகமானது, 1950, 1960 காலத்தின் யுத்தத்தின் பின்னைய செழிப்புக்கால கட்டத்தில் நிலவிய மட்டத்திலிருப்பினும் 1970 - 1980ல் காணப்பட்ட மட்டத்தில் கூட விளங்கவில்லை.

## மார்க்ஸ்கும் சராசரி இலாப விகிதமும்

கடந்த காலத்தில் "உருவாக்கப்பட்ட கணக்கியல்" செயல்முறைகளின் மூலங்கள் இத்தகைய புறநிலையான போக்குகளிலேயே தங்கியிருந்தன.

பொதுவான அல்லது சராசரி இலாப விகிதத்தின் தோற்றம் பற்றிய தனது ஆய்வில் மார்க்ஸ், பல்வேறுபட்ட மூலதனப் பிரிவுகளிடையிலான போட்டியான போராட்டமானது தொழிலாள வர்க்கத்திடமிருந்து உறிஞ்சப்பட்ட மொத்தமான உபரி மதிப்பு இலாப உருவத்தில் அவர்களுக்குள் பகிர்ந்து கொள்ளும் வழியாக உள்ளதென விளக்குகிறார்.

இவை சரியாக இடம்பெற்றுக் கொண்டிருக்கும் வரை போட்டிகள் முதலாளித்துவ வர்க்கத்தின் செயல் ரீதியான தோழமையை ஏற்படுத்துவதுடன், அதனூடாக சகலரும் தனது முதலீட்டுக்கு சமமான பொதுக் கொள்ளையடிப்பை தத்தமக்குள் பகிர்ந்து கொள்ளுகின்றது. எனினும் மேலும் இலாப பகிர்வு செய்யப்படாது நஷ்டத்தை பகிர்ந்து கொள்ள வேண்டியதாக மாறும் போது; சகலரும் செய்வதென்னவெனில் தத்தமது பங்கினை ஆகக் குறைந்த பட்சத்துக்காவது குறைத்து, மிகுதியை மற்றவரிடம் தள்ளிவிடப் பார்ப்பதேயாகும். அத்தகைய கட்டத்தின் தவிர்க்க முடியாதளவு நட்டத்தை விளைவிக்கும். தனியொரு முதலாளி எவ்வளவுக்கு நட்டத்தை தாங்கிக் கொள்வார் அதனை பகிர்ந்து கொள்ளுவார் என்பது செல்வாக்கு, கபடத்தனம் என்பனவற்றின் அடிப்படையிலேயே தீர்மானிக்கப்படுகிறது. இவ்விடத்தில் போட்டியானது, ஒருவருக்கொருவர் எதிரியாக மாறும் சகோதரர்களுக்கிடையே நிகழும் போராட்டமாக மாறிவிடும்.' (மார்க்ஸ்- மூலதனம் தொகுதி மூன்று. பக்கம் 248)

விலை என்பது போட்டியை ஏற்படுத்தும் ஒரு உருவமைப்பாக மட்டுமே உள்ளது. மற்றொரு வடிவமென்னவெனில், மூலதனத்தின் ஒரு பிரிவு மற்றொன்றைத் தொலைத்துக் கட்ட அல்லது அச்சொத்துக்களின் ஆதாரமையை வசப்படுத்தி பொருளாதார அளவை பெருக்கிக் கொள்ள செலவு செய்யும் முயற்சியினூடாக மென்மேலும் கைப்பற்றிக் கொள்ள நிதியை பாய்ச்சுவதும், பெறுகொண்டு வேறொன்றை கைப்பற்றுவதும் உள்ளன.

சகலருக்கும் எதிராகவுள்ள இந்த ஒவ்வொரு யுத்தமும் பங்கு பரிமாற்றங்களால் நிதியிடப்படுகின்றது. அல்லது வங்கிகள், ஏனைய நிதி நிறுவனங்களிடமிருந்து பெற்ற கடன்கள் மார்க்கமாக நிதியிடப்படுகிறது. இந்த இரு சந்தர்ப்பங்களிலுமே ஓர் உயர்ந்த பங்கு மதிப்பை பேணிக்கொள்வது -சந்தை எதிர்பார்ப்புக்களுக்கு' ஏற்புடையதாக- மிக அவசியமானதாகும். இதனை செய்யத்தவறும் பட்சத்தில், அது குறிப்பிட்ட கூட்டுத்தாபனம் ஒன்றை தன்னுடன் இணைக்கவோ வசப்படுத்துவதற்கோ முயற்சிப்பதற்கு பதிலாக ஏனைய நிறுவனங்களுக்கு தன்னையே இலக்காக்கி இரையாக்கிக் கொள்ளுவதாக அர்த்தப்படுத்தப்படுகின்றது.

ஆனால் 1990ல் இத்தகைய போட்டியில் ஈடுபட்ட அமெரிக்க கூட்டுத்தாபனங்களுக்கு ஓர் பிரதான பிரச்சினை காணப்பட்டது. பங்குச் சந்தையில் நெருக்கெடுத்தோடிய நலையம், பெடரல் ரிசேவ் அமெரிக்க வங்கி கொள்கைகளின் பயனாக பிரதான அம்சங்களுக்கு பாய்ச்சப்பட்டதுடன் உலகின் ஏனைய பாகத்தின் மூலதன ஊடுருவல் பங்கு விலையை பேணிக்கொள்ள மேலதிக 10 சதவீத இலாபத்தை அறிவிக்க வேண்டியிருக்கும் என்பதே இதன் அர்த்தமாகும். பொருளாதாரமும் முழுமையாக வருடாந்தம் கிட்டத்தட்ட 10 சதவீதமாக வளர்ச்சியுறும்.

இத்தகைய நிலைமைகளுள் வளர்ச்சியை காட்டுவதிலும் பார்க்க துரிதமான இலாப அதிகரிப்புக்கான ஒரே ஒரு வழியாக "பக்கபலமளிப்பது" எனக் கூறப்படும் போக்கில் ஈடுபடுவது விளங்கியது. இந்த வழிமுறைப்படி, கணக்கியல் நடவடிக்கைகளின் இறுதி விளைவாக உருவெடுக்கும் இலாப எல்லைக்கைக்கு பதிலாக, அதுவே ஒரு ஆரம்ப முறையாக மாறியது. "சந்தை எதிர்பார்ப்புகளை" சந்திக்க தேவையான இலாப மட்டத்தில் ஆரம்பித்து, பங்கு விலைகளை அதிகரிப்பது, அல்லது பேணுவது என்ற இலக்கினை அடைய கம்பெனிகள் பின்னாலிருந்து தமது ஆஸ்தி பொறுப்பு அட்டவணையை (பலன்ஸ் ஷீட்டை) தயாரிக்க வேலை பார்த்தன.

என்ரோன் கம்பெனி விடயத்தில், இலாப மட்டத்தை குறைக்க வேண்டிய பரிமாற்றங்கள் ஆஸ்தி பொறுப்பு அட்டவணையிலிருந்தும் மாற்றப்பட்டன அல்லது வேர்ல்ட் கொம் விடயத்தில் செலவினங்கள் முதலீடுகளாக வடிவெடுத்தன. அல்லது உண்மையில் பெறப்படுவதற்கு முன்னரே வரிகள் என்ரோன் விடயத்தில், அங்கீகரிக்கப்பட்டிருந்தன. அத்துடன் இத்தகைய செயல்கள் வெளிச்சத்துக்கு கொண்டுவராதிருப்பின் - அதாவது ஒழுங்கு செய்யவிருந்தவர்கள் இந்த மலையளவு விடயத்தை கணிப்பிட்டுப் பார்க்க தவறியமைக்கு அவை மிகவும் சாத்துப்பட்டமைக்கதே காரணமாகியது.

தனி நபர்களது மோசடி ஊழல் என்பனவே குற்றம் சாட்டப்பட வேண்டும் என்ற முடிவுக்கு வருவதானது இந்த இலாப அமைப்பினுள்ளேயே காணப்படும் ஓர் நெருக்கடியேயாகும். இது சாதாரண மக்களை தமது தொழில், ஓய்வூதிய நிதி சேமிப்பு, ஓய்வுக்கால நன்மைகள் ஆகியன அழிக்கப்பட்டு இந்த அனுபவங்களில் இருந்து அரசியல் படிப்பினைகளை பெற்றுவிடாதபடி தடுத்து விடும் நோக்குடன் அமைந்த ஒன்றாகும்.

கடந்த நால் நூற்றாண்டு காலமானது, வாழ்க்கைத் தரம் சமூக நிலைமைகளில் தொடர்ச்சியான தாக்குதல்களை ஏற்படுத்திய, முதலாளித்துவ சந்தை இலாப அமைப்பு பற்றிய தன்மைகளையிட்டு ஓயாது புகழ்ப்பிரச்சாரம் செய்த அனுபவங்களை கொண்டு விளங்குகிறது.

வரலாற்றில் முன்னொரு போதும் இல்லாத வகையில் சந்தை தவறாது தனது செயலை தொடர்ந்து நடத்தியது. ஊழல்கள் தற்போது அதன் ஒவ்வொரு துளையிலிருந்தும் நெருக்கெடுத்து ஓடுவதுடன் மிக உயர் மட்டத்திலான கொள்ளை, வஞ்சகம் என்பன நடைபெறுவதனூடாக இலட்சக் கணக்கான மக்கள் மீது "கெட்ட நபர்களால்" நடத்தப்படும் கொடுமை சகிக்கமுடியாதளவு தொடர்கிறது. உண்மையில் தனிநபர்கள் தீர்மானமெடுத்து அமுல் செய்கிறார்கள். ஆனால் அவர்களது செயல்கள் அவ்வமைப்பின் புறநிலை போக்குகளில் இருந்து எழுந்ததாகும். மனித தேவைகளுக்கேற்ப அன்றி இலாபத்துக்கல்ல எனும் அடிப்படையிலான சமூக கட்டமைப்பினால் இந்த அமைப்பு மாற்றப்பட வேண்டியுள்ளது மிகத் தெளிவாக உணர்த்தப்படுவதுடன் வரலாறு கடந்தாழ்த்தப்பட்ட காரணத்தை தெளிவாக புலப்படுத்துகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜேர்மன் தேர்தல்: சமூக ஜனநாயகக் கட்சியும் பசுமைக் கட்சியும் குறைந்த பெரும்பான்மையுடன் அதிகாரத்தை பாதுகாத்துக்கொண்டனர்

உள்ரிச் ரிப்பர்ட், பீட்டர் சுவார்ட்ஸ்
24 செப்டெம்பர் 2002

பிரதமர் ஹெகார்ட் ஷ்ரோடரினது சமூக ஜனநாயகக் கட்சியினதும் பசுமைக் கட்சியினதும் கூட்டரசாங்கமானது, மிகவும் குறைந்த ஆனால் தெளிவான பெரும்பான்மையுடன் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடந்த தேர்தலில் அதிகாரத்தை பாதுகாத்துக்கொண்டது.

புதிய பாராளுமன்றத்தில் இவ் இரு கட்சிகளும் மொத்தமாக 306 உறுப்பினர்களை கொண்டிருக்கும். இது அறுதிப்பெரும்பான்மைக்கு தேவையானதைவிட 4 அதிகமானதுடன், பழமைவாத எதிர் கட்சிகளான கிறிஸ்தவ ஜனநாயக கட்சியினதும் (CDU), கிறிஸ்தவ சமூகக் கட்சியினதும் (CSU) கூட்டுக் கட்சியான தாராளவாத ஜனநாயகக் கட்சியின் (FDP) 295 மொத்த இருக்கைகளைவிட 11 அதிகமாகும். ஜனநாய சோசலிசக் கட்சி (PDS- முன்னாள் கிழக்கு ஜேர்மனியின் ஸ்ராலினிச கட்சியான SED இல் இருந்து உருவாகியது) 2 ஆசனங்களை மட்டுமே பெற்றது. இதனால் அது 1990 இல் ஜேர்மன் மறுஇணைப்பின் பின்னர் பாராளுமன்றத்தில் முதல் தடவையாக தனது பிரிவை கொண்டிருக்காது. இவ்விருவரும் தனி உறுப்பினர்களாகவே கருதப்படுவர்.

வாக்கு எண்ணிக்கையின் முடிவில் சமூக ஜனநாயக கட்சியும் எதிர்க்கட்சியான யூனியனும் ஒரேயளவான வாக்குகளை, 38.5% இனை பெற்றிருந்தன. ஆகக்குறைந்தளவான பெரும்பான்மையான 8,864 வாக்குகளால் சமூக ஜனநாயக கட்சி பலமான கட்சியாக இருப்பதுடன், விஷேடமான ஜேர்மன் வாக்களிப்பு முறைகளால் பெற்ற 4மேலதிக ஆசனங்களுடன், பாராளுமன்றத்தில் பலம்கூடிய கட்சியாகவுள்ளது. ஆனால் கடந்த 1998 இன் தேர்தலுடன் ஒப்பிட்டால் சமூக ஜனநாயக கட்சி 2.4% வாக்குகளை இழந்துள்ளது. யூனியன் கட்சிகள் 3.4% வாக்கு அதிகரிப்பை பெற்றுள்ளன.

சமூக ஜனநாயகக் கட்சியினதும் பசுமைக் கட்சியினது பெரும்பான்மைக்கான முக்கிய காரணம் பசுமைக் கட்சிக்கு கிடைத்த வாக்குகளாகும். இது 1998 தேர்தலில் 6.7% ஆக இருந்தது தற்போதைய தேர்தலில் 8.6% ஆகியுள்ளது. இது க்'சுதந்திர சந்தை'' தாராளவாத ஜனநாயகக் கட்சியை பின்தள்ளிவிட்டது. தாராளவாத ஜனநாயகக் கட்சியின் வாக்குகள் 1%ஆல் அதிகரித்துள்ளது. ஆனாலும் இது அவர்கள் பெறப்போவதாக கூறிய 18% இலும் மிகக்குறைவான 7.2% இனை பெற்றுள்ளது.

ஜனநாய சோசலிசக் கட்சியின் (PDS) வாக்குகள் 1998 இருந்த 5.1 இருந்து 4% ஆககுறைந்துள்ளது. இதனால் புதிய பாராளுமன்றத்தில் உத்தியோகபூர்வமான அந்தஸ்த்தை பெறுவதற்கான ஆகக்குறைந்த தகமையை (ஆகக்குறைந்தது மொத்தவாக்குகளில் 5% இனை, அல்லது 3நேரடி அங்கத்தவர்களை பெறாததால்) இழந்துள்ளது. அவர்கள் கிழக்கு பேர்லினில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட 2 ஆசனங்களை மட்டுமே பெற்றுள்ளனர்.

அதிதீவிர வலதுசாரிச் கட்சிகளான குடியரசுக்கட்சி, ஜேர்மன் தேசிய கட்சி (NPD), ஸ்கில் (Schill) கட்சி (ஹம்பேர்க் நகர மாநகரசபை தலைவரான ரொனால்ட் ஸ்கில் (Ronald Schill) இனால் தலைமை தாங்கப்படும் கட்சி) போன்றவை ஒவ்வொன்றும் 1% இற்கு குறைவான வாக்குகளையே பெற்றுள்ளன. இம் மூன்றும் இணைந்து 1.8% இனை மட்டுமே பெற்றன.

வாக்களித்த மொத்தவாக்காளர்களின் தொகை 79.1% ஆகும். இது 1998 இலும் பார்க்க சற்று குறைவாகும்.

## ஸ்ரோய்பர் தேர்தல் முடிவினை ஏற்றுக்கொள்ளவில்லை

இறுதியான தேர்தல் முடிவுகள் நீண்ட, பரபரப்பான இரவின் முடிவிலேயே வெளிவந்தது. வழமையாக தேர்தல் நாளன்று மாலை 6மணியளவிலேயே பெரும்பாலும் யார் வெற்றிபெறுவார் என்பது ஓரளவு உறுதியாக தெரியவந்துவிடும். இம்முறை, முடிவுகளை தீர்மானிப்பதற்கு முன்னர் பல மணித்தியாங்கள் வாக்கு எண்ணுதல் நடைபெற்றது. உத்தியோகபூர்வமான முடிவுகளானது முதலில் திங்கட்கிழமை அதிகாலை 4மணியளவிலேயே வெளிவந்தது.

நள்ளிரவுவரை தேர்தல் முடிவுகள் அங்குமிங்குமாக மாறிக்கொண்டிருந்தது. முக்கிய தொலைக்காட்சி நிலையங்களான ARD உம் ZDF உம் பாரியளவில் வித்தியாசப்பட்டுக் கொண்டிருந்தன. மாலை 6மணியளவில் ZDF இரண்டு முக்கிய கட்சிகளுக்கும் இடையில் நெருக்கமான போட்டியிருப்பதாக குறிப்பிடுகையில், ARD எதிர்க்கட்சிகள் 3% இனால் முன்னணியில் இருப்பதாக குறிப்பிட்டது.

இறுதி முடிவுள் தெளிவற்றதாக இருந்தபோதிலும், தொலைக்காட்சி கமராக்களின் பரிபாலனத்தில் எதிர்க்கட்சிகள் நீண்ட, களியாட்டத்துடனான கொண்டாட்டங்களை நடாத்திக்கொண்டிருந்தன. பவாரியா மாநிலத்தினை அடித்தளமாகக் கொண்ட கிறிஸ்தவ சமூகக் கட்சியினதும் (CSU) இன் தலைவரும் எதிர்க்கட்சிகளின் வேட்பாளரான எட்முண்ட் ஸ்ரொய்பர் (Edmund Stoiber) முதலில் கிறிஸ்தவ ஜனநாயகக் கட்சியினது (CDU) தலைவியான அங்கலா மெயர்க்கலுடன் (Angela Merkel) இணைந்து முதலில் பேர்லின் நகரிலும், பின்னர் மூனிச் நகரத்திலும் தொலைக்காட்சி கமராக்களின் முன்னர் தோன்றினார். இவ்விரு காட்சிகளிலும் விசர்த்தனமான ஆதரவாளர்கள் குவிந்திருந்தனர். மாலை கடந்து செல்கையில் சமூக ஜனநாயகக் கட்சியினது வாக்குகள் எதிர்க் கட்சியினதை அண்மித்துக்கொண்டிருக்கையிலும், ஸ்ரொய்பர் தனது கட்சி பெரும்பான்மையான கட்சியாகவும், பாராளுமன்றத்தில் உறுதியானதாகவும் இருப்பதாக குறிப்பிட்டு வந்தார். தொடர்ச்சியான முடிவுகள் இவ்விரு அறிக்கைகளும் பிழையானது என்பதை உறுதிப்படுத்தின.

யூனியன் கட்சிகளின் வெற்றிக்கொண்டாட்டங்களுக்கு மத்தியில், 1998இல் பெற்றவாக்குகளை விட அது அதிகமாக பெற்றிருந்தபோதிலும் அதனது வரலாற்றில் இரண்டாவது மோசமான முடிவுகளை பெற்றுக்கொண்டுள்ளது என்பதை தேர்தல் விமர்சகர்கள் கவனிக்க தவறிவிட்டனர். கடந்த தேர்தலை தவிர கிறிஸ்தவ சமூகக் கட்சியினர் 1953 இல் இருந்து இடம்பெற்ற தேர்தல்கள் அனைத்திலும் 40% ஆன வாக்குகளுக்கு மேல் பெற்றுள்ளனர். 1972 இலும் 1998 இலும் மாத்திரமே சமூக ஜனநாயகக் கட்சி கூடுதலான வாக்குகளை பெற்றிருந்தது.

திங்கட்கிழமை காலை ஸ்ரோய்பரின் தோல்வி உறுதிப்படுத்தப்பட்டதும், அவர் வெற்றியாளனாக காட்டிக்கொண்டது தவறான விளக்கத்தினால் அல்ல என்பது தெளிவானது. ஆனால் தன்னை 4வருடங்களுக்கு எதிர்க்கட்சிக்கு தள்ளிவிட்ட வாக்காளர்களின் தீர்ப்பை அவர் ஏற்றுக்கொள்ள மறுத்தார். ZDF தொலைக்காட்சிக்கு வழங்கிய செவ்வியில் ஸ்ரோய்பர், 'சமூக ஜனநாயகக் கட்சியினதும் பசுமைக் கட்சியினது ஒரு சிறிய பெரும்பான்மையை அடித்தளமாக கொண்டு அரசாங்கமானது ஜேர்மனியின் பொருளாதார பிரச்சனைகளை தீர்க்க முடியாது'' எனவும், ஈராக் மீதான யுத்த திட்டம் தொடர்பாக ஷ்ரோடரிற்கும் புஷ் இற்கும் இடையாலான வெளிப்படையான முரண்பாட்டை சுட்டிக்காட்டி சிவப்பு-பச்சை கூட்டு என குறிப்பிடப்படும் அரசாங்கத்திற்கு ஆதரவு இல்லை'' எனக்குறிப்பிட்டார்.

ஸ்ரோய்பர் தொடர்ந்தும், 'இவ் அரசாங்கமானது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலைப்பாட்டைக் கொண்டிருந்தார் என நான் நம்பவில்லை எனவும், யூனியன் கட்சிகள் முக்கிய வெற்றி பெற்றுள்ளதையும், ஒரு வருடத்திலும் இல்லாதவாறு புதியதால் மீளமைக்கப்படும் எனவும் குறிப்பிட்டார். சமூக ஜனநாயகக் கட்சியும் பசுமைக் கட்சியும் காலத்திற்கு முன்னர் பதவியிலிருந்து விலகப்படுகையில் தான் பிரதமர் பதவியை ஏற்கவுள்ளதாக அவர் ARD இற்கு தெரிவித்தார்.

அவரது கருத்துக்கள் புதிதாக தெரிவு செய்யப்பட்டுள்ள அரசாங்கத்தை விரைவாக உறுதியற்றதாக்குவதற்கும், கலைப்பதற்கும் பகிரங்கமான எச்சரிக்கையாகும். பெரும்பான்மை இல்லாமை யுத்தத்திற்கு பின்னரான ஜேர்மனியிலோ அல்லது மறு இணைப்பின் பின்னரான 12 வருடத்திலோ இல்லாத ஒன்றல்ல. தற்போதைய தேர்தலில் சமூக ஜனநாயகக் கட்சியும் பசுமைக் கட்சியும் பெற்றுள்ள பெரும்பான்மையை விட குறைந்த பெரும்பான்மையுடன் கடந்த காலத்தில் யூனியன் கட்சியின் அரசாங்கங்கள் பிரச்சனையின்றி ஆட்சி புரிந்துள்ளன. முன்னாள் பிரதமரான கொன்ராட் அடினோவரின் (Konrad Adenauer) யூனியன் கட்சியினர் 1 பெரும்பான்மை ஆசனத்துடனும், அவ்வமைப்பின் ஹெல்முட் கோலின் கீழ் 4 பெரும்பான்மை ஆசனத்துடனும் அரசுகள் ஆட்சிபுரிந்துள்ளனர்.

ஸ்ரொய்பர் இவ்வளவு மிகுந்த நம்பிக்கைத்தனத்துடன் பேசுவதற்கு காரணம், அவரது ஆக்கிரமிப்பு நிலைப்பாட்டிற்கு பெரும் முதலாளித்துவத்திடமிருந்தும், அமெரிக்க அரசாங்கத்திடம் இருந்தும் கிடைத்த ஆதரவாகும்.

தேர்தல் நாட்களுக்கு சற்று முன்னர், அமெரிக்க அரசாங்கமானது ஸ்ரொய்பருக்கு ஆதரவாக தலையிடு செய்தது. ஷ்ரோடரின் அரசாங்கத்தின் நீதி அமைச்சரான ஹேர்டா டப்லர்-குமெலின் (Herta Däubler-Gmelin) புஷ் இனை ஹிட்லருடன் ஒப்பிட்டதாக கூறப்பட்ட கருத்துக்களை அடிப்படையாக கொண்டு ஷ்ரோடரின் அரசாங்கத்தின் மீது தாக்குதலை செய்தது. திங்கட்கிழமை புஷ் நிர்வாகம் பேர்லினின் புதிதாக தெரிவு செய்யப்பட்ட அரசாங்கத்தின் மீதான தனது எதிர்ப்பை தெளிவாக காட்டியது. திங்கட்கிழமை மாலை வெற்றிபெற்ற வேட்பாளருக்கு தனது வாழ்த்து செய்தியை அனுப்ப வாஷிங்டன் மறுத்ததை, Süddeutsche Zeitung பத்திரிகை, 'வழமையான இராஜதந்திர முறையிலிருந்து விலகிய மற்றும் ஷ்ரோடரின் முகத்தில் அடித்தது போலாகும்' என குறிப்பிட்டது.

திங்கட்கிழமை வார்சோவில் இடம்பெற்ற நேட்டோ கூட்டத்தில் ஜேர்மனியின் பாதுகாப்பு அமைச்சரை சந்திக்க அமெரிக்க பாதுகாப்பு அமைச்சரான டொனால்ட் ரம்ஸ்பெல்ட் மறுத்துவிட்டதுடன், கடந்த வாரங்களில் ஈராக் மீதான அமெரிக்காவின் யுத்த திட்டங்களுக்கு ஷ்ரோடரின் எதிர்ப்பை தாக்கி, இது இரண்டு நாடுகளுக்கு இடையிலான உறவில் நச்சு சூழ்நிலையை உருவாக்கிவிட்டது எனக் குறிப்பிட்டார்.

முக்கிய வர்த்தக பிரதிநிதிகளும் இத்தேர்தல் முடிவு பற்றி எதிர்ப்பை காட்டியுள்ளனர். Spiegel செய்தி ஸ்தாபனமானது அதனை பின்வருமாறு தொகுத்து கூறியுள்ளது : ஒரு வங்கியாளரின் ஆய்வாளர் ஒருவர் 'இதைவிட மோசமாக ஒன்றும் வரமுடியாது' எனவும் பங்குச் சந்தையின் நிலைப்பாட்டில் இருந்து பார்த்தால் இது ஒரு சிக்கலான "நிலை" எனவும் கூறியுள்ளதாக அது குறிப்பிட்டது. அவர் மேலும் எதிர்கால அரசாங்கத்தின் இச்சிறிய பெரும்பான்மையானது பலவீனமான பொருளாதாரத்தை இன்னும் மோசமாக்கும் எனவும், பங்குச்சந்தை நிலையாமையை சீரழிக்கும் எனவும் குறிப்பிட்டார். திங்கட்கிழமை ஜேர்மன் பங்குச்சந்தையான DAX 5% இறக்கத்தை சந்தித்தது.

யுத்தத்திற்கான விரோத மதிப்பு

சில கிழமைகளுக்கு முன்னர் முக்கிய கருத்துக்கணிப்பு நிறுவனங்கள் அனைத்தும் ஸ்ரொய்பர் வெற்றி பெறுவார் என கூறியிருந்தன. எவ்வாறிருந்தபோதிலும், ஷ்ரோடர் ஈராக் மீதான அமெரிக்காவின் யுத்தத்திற்கு தனது எதிர்ப்பை தெரிவித்தவுடன் நிலைமை திடீரென மாற்றமடைந்தது. சமூக ஜனநாயகக் கட்சிக்கும் பசுமைக் கட்சிக்கும் கிடைத்த வாக்குகள் புஷ் நிர்வாகத்தின் யுத்த கொள்கைக்கான ஜேர்மன் வாக்காளர்களின் எதிர்ப்பாகும்.

இவ்விடயம் தொடர்பாக ஷ்ரோடரின் எதிராளிகள் தெளிவாக உள்ளனர். ஸ்ரொய்பரின் உள்நாட்டு கொள்கைகளை விசேட நபரான Günther Beckstein என்பவர் தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றில் பொதுமக்கள் யூனியன் கட்சிகளுக்கான வாக்கு யுத்தத்திற்கான வாக்கு என கேட்டபோது, தேர்தல் நிலைமையின் கூடுதலாக முக்கியமானதாக இது உள்ளதாக முறையிட்டார்.

சமூக ஜனநாயகக் கட்சியினதும் பசுமைக் கட்சியினதும் வலதுசாரி, இராணுவ கொள்கைகள் மீது வெறுப்படைந்து தாமது முதலாளித்துவ உறுதியான வாக்காளர்களை யுத்தமானது, தமது எதிர்ப்பை தெரிவிப்பதற்காக ஷ்ரோடருக்கு சாதகமாக வாக்களிக்க செய்துள்ளது. அத்துடன் தேர்தல் முடிவுகளானது இரு கட்சிகளதும் முதலாளித்துவ சார்பான கொள்கைகள் மீதான மிகுந்த எதிர்ப்பையும் பிரதிபலித்துள்ளது. ஆனால் இது கூடுதலாக யூனியன் கட்சிகளுடனும், தாராளவாத கட்சியுடனும் பொதுவான ஒன்றிணைப்பை காட்டுகின்றது.

தேர்தல் தொடர்பான வரைபடமானது, ஜேர்மனியின் சமூக சீரழிவினை எடுத்துக்காட்டுகின்றது. கிழக்கிற்கும் மேற்கிற்கும் இடையில் மட்டுமல்லாது, வடக்கிற்கும் தெற்கிற்கும் இடையிலான சமூக துருவப்படுத்தலானது அதிகரித்துள்ளது.

வருமானம் அதிகமாகவும், வேலையின்மை குறைவாகவும் உள்ள தெற்கில் நேரடி வாக்குகள் கூடுதலாக யூனியன் கட்சிக்கு சாதகமாக வழங்கப்பட்டுள்ளது. பவேரியா மாநிலத்தில் கிறிஸ்தவ சமூக கட்சியானது 1998 உடன் ஒப்பிடுகையில் 11% அதிகரிப்பை பெற்றுள்ளது. இது அப்பகுதியில் வழங்கப்பட்ட வாக்குகளில் 60% ஆனதை வென்றுள்ளது.

ARD தொலைக்காட்சியுடனான கலந்துரையாடலின் சமூக ஜனநாயகக் கட்சியினது உள்நாட்டு அமைச்சரான ஒட்டோ ஷில்லி (Otto Schily) பவேரியா மாநிலத்தில் வாக்கு மோசடிகள் நிகழ்ந்திருக்கலாம் என்ற சந்தேகத்தை எழுப்பியிருந்தார். இது கடந்த ஏப்ரலில் இடம்பெற்ற மாநகராட்சி தேர்தலில் Dachau என்னும் நகரத்தில் பாரிய வாக்கு மோசடிகள் செய்ததாக கிறிஸ்தவ சமூக கட்சி (CSU) மீது குற்றம் சாட்டப்பட்டிருந்ததை அடுத்ததாக கொண்டதாகும்.

தெற்கு ஜேர்மனியில் இரண்டாவது பாரிய மாநிலமான Baden-Württemberg இல் எதிர்பார்த்ததுபோல் யூனியன் கட்சிக்கு 43% ஆன வாக்குகள் கிடைத்தது. ஆனால் அங்கும் நேரடியாக தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்கள் கிறிஸ்தவ ஜனநாயகக் கட்சியை சேர்ந்தவர்களாகும்.

மேற்கின் ஏனைய மாநிலங்கள் சமூக ஜனநாயகக் கட்சியினது பிடியில் உள்ளபோதும், கிராமப்புறங்களில் கிறிஸ்தவ ஜனநாயகக் கட்சி ஆதரவை பெற்றுள்ளது. பாரிய தொழிற்துறை பிராந்தியமான ரூர் (Ruhr) இல் கடந்த காலத்தில் சமூக ஜனநாயகக் கட்சி, கிறிஸ்தவ ஜனநாயக கட்சியிடம் உள்ளூராட்சி தேர்தலில் தோல்வியை சந்தித்திருந்தது. இங்கும் 1998 உடன் ஒப்பிடுகையில் சமூக ஜனநாயகக் கட்சி பெரியளவிலான இழப்பை சந்தித்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனாலும் 50-60% ஆன வாக்குகளை அவர்கள் பெற்றுள்ளனர். கடந்த கால சமூக ஜனநாயகக் கட்சியின் அரசியலுடன் அதிருப்தி அடைந்திருந்தவர்களும் மீண்டும் அவர்களுக்கு வாக்களித்திருந்தனர். Hessen மாநிலத்தில், மாநில தேர்தலில் சமூக ஜனநாயகக் கட்சி- பசுமைக் கட்சி கூட்டரசாங்கத்தை கிறிஸ்தவ ஜனநாயகக் கட்சி-தாராளவாதக் கட்சி அதிகாரமிழக்க செய்திருந்போதிலும், அங்கு மீண்டும் சமூக ஜனநாயகக் கட்சி-பசுமைக்கட்சி 50% இற்கு அதிகமான வாக்குகளை பெற்றுள்ளது.

பாரிய நகரங்களில் பசுமைக் கட்சி தனது வாக்குகளை அதிகரித்துள்ளது. அத்துடன் ஜேர்மனியின் இரண்டாவது வாக்கு முறையாலும் அவர்கள் இலாபமடைந்துள்ளனர். (ஒரு வாக்காளருக்கு இரண்டு வாக்குகள் உள்ளது, இம்முறையின்படி முதலாவது வாக்கு ஒரு கட்சிக்கு வழங்கப்பட்டாலும், இரண்டாவது வாக்கு வேறு கட்சியை சேர்ந்தவருக்கும் வழங்கலாம்) ஈராக் மீதான யுத்தத்திற்கான எதிர்ப்பை காட்ட பாரிய நகரங்களில் உள்ள மத்திய தட்டினர் பசுமைக் கட்சிக்கு வாக்களித்துள்ளனர். அவர்களின் முக்கிய தேர்தல் பிரச்சார நபர் வெளிநாட்டு அமைச்சரான ஜோஸ்கா பிஸ்ஸராகும்.

பசுமைக் கட்சியின் முக்கிய தலைவர்களில் ஒருவரான Hans-Christian Ströbele இற்கு கிடைத்த வாக்குகள் குறிப்பிடப்படவேண்டியதாகும். அக்கட்சியின் வரலாற்றில் முதல்தரமாக பேர்லினின் தேர்தல் தொகுதி ஒன்றான Friedrichshain-Kreuzberg இல் நேரடியாக தெரிவு செய்யப்பட்டுள்ளார். இவர் கடந்த காலத்தில் பசுமைக் கட்சியின் பாராளுமன்ற குழுவில் கொசவோ மற்றும் ஆப்கானிஸ்தான் யுத்தத்திற்கு எதிராக வாக்களித்தவராகும். இவர் கட்சித் தலைமையால் நம்பிக்கையற்ற பட்டியலில் இடப்பட்டவராகும்.

கிழக்கு ஜேர்மனியில் Saxony மாநிலத்தையும், மற்றும் ஒரு சில கரையோர தொகுதிகளையும் தவிர வடக்கிலும் கிழக்கிலும் உள்ள மற்றய தொகுதிகள் சமூக ஜனநாயக கட்சிக்கு கிடைத்துள்ளது. கிழக்கில் சமூக ஜனநாயகக் கட்சி 4.6% ஆல் தனது வாக்கினை அதிகரித்து, 40% இனை பெற்றுள்ளது. இது மேற்கில் அது இழந்த 4% இற்கு எதிர்மாறானதாகும். யூனியன் கட்சிகள் பலமான கட்சியாகியுள்ள வடக்கில் 40% உடன் ஒப்பிடுகையில், கிழக்கில் 28% வாக்குகளையே பெற்றுள்ளன.

ஜனநாய சோசலிசக் கட்சி (பிடிஎஸ்) மேற்கில் தன்னை ஸ்தாபித்துக்கொள்ள முடியாது போயுள்ளது. இது விதிவிலக்கல்ல. மேற்கில் அது 1.1% வாக்குகளையே பெற்றுள்ளது. இதேவேளை, கிழக்கில் தனது வாக்காளர்களில் 25% இனை இழந்துள்ளது. அங்கு 16.8% இனை பெற்றுள்ளது. அவர்களின் 300.000 வாக்காளர்கள் சமூக ஜனநாயக கட்சியை நோக்கி திரும்பியுள்ளனர். கிழக்கு ஜேர்மனியில் மாநில அரசாங்கங்களில் இணைந்து கொண்ட பின்னர், அது சமூக சேவைகளில் வெட்டுக்களை ஆதரித்துள்ளதுடன், ஒரு தீவிரமான சமூக சேவை வெட்டுகளுக்கு எதிரான கட்சி என்ற மரியாதையை இழந்துள்ளது. அது அண்மையில் பதவி ஏற்றுக்கொண்ட இரு மாநிலங்களான Sachsen-Anhalt இலும் Mecklenburg-Vorpommern இலும் கூடிய இழப்பை சந்தித்துள்ளது.

ஒரு பிளவுபட்ட சமூகம்

இத்தேர்தல் முடிவுகள் ஏற்கனவே பிளவுபட்ட ஒரு சமுதாயத்தை காட்டுகின்றது. வாக்களிப்பால் பிரதிபலித்த பிராந்திய மற்றும் அரசியல் ரீதியாக முரண்பாடுகள், உள்வர்க்க முரண்பாடுகளை ஒரு ஒழுங்கற்ற முறையில் பிரதிபலிக்கின்றது. தேர்தல் பிரச்சாரத்தில் யுத்தம் பற்றிய கேள்வியை அறிமுகப்படுத்தியதன் மூலம், அவர்களால் நிறைவு செய்யமுடியாத குறிப்பிட்ட எதிர்பார்ப்புக்களை சமூக ஜனநாயகக் கட்சியும் பசுமைக் கட்சியும் உருவாக்கியுள்ளது. ஆனால் யுத்த எதிர்ப்பு மனநிலையானது இதனை அடக்குவது கடினமானது என்பதை காட்டும்.

கடந்த நான்கு வருடங்களின் நிகழ்வுகளின் பின்னர், முதலாளித்துவத்தின் தேவைகளை பூர்த்தி செய்வதற்கான சாத்தியமான நடவடிக்கைகள் அனைத்தையும் சமூக ஜனநாயகக் கட்சியும் பசுமைக் கட்சியும் எடுக்கும் என்பதில் ஐயுறவு எதுவுமில்லை என்பதை காட்டுகின்றது. தேர்தல் அன்று மாலைப்பொழுது இரண்டு கட்சிகளினதும் முக்கிய பிரதிநிதிகள் 'ஒழுங்கு'' என்ற வார்த்தையை அதிகமாக பிரயோகித்தது தற்செயலானதல்ல. அவர்கள் குறிப்பிடுவதுபோல் ஒரு குறைந்த பெரும்பான்மை என்பது பாதிப்பானதல்ல, மாறாக இது பாராளுமன்ற பிரிவுகளை கட்டுப்படுத்த உதவும்.

திங்கட்கிழமை நிதியமைச்சரான Herta Däubler-Gmelin தனது இராஜினாமா தொடர்பான அறிக்கையை விடுத்தார். இது புஷ் நிர்வாகத்தை சமாதானப்படுத்தும் முயற்சியாகும். இதேவேளை இராணுவ தலைவர் மாதிரியான சமூக ஜனநாயகக் கட்சியின் செயலாளரான Franz Müntefering, சமூக ஜனநாயகக் கட்சியின் பாராளுமன்ற பிரிவின் ஒழுங்கினை கட்டுப்படுத்தும் பொறுப்பிற்கு நியமிக்கப்பட்டுள்ளார். அரசாங்கத்தினால் உருவாக்கப்பட்டிருக்கும் இப்புதிய கூட்டரசாங்கத்திற்கான திட்டமானது தேர்தலின் முன்னர் பிற்போடப்பட்ட நாட்டின் சமூக பாதுகாப்பு திட்டங்களின் மீது பாரிய வெட்டுக்களை கொண்டிருக்கும் என்பது தெளிவாகும்.

# "பங்க்ட்டில் ஐரோப்பா": ஆப்கான் யுத்தமும் ஐரோப்பிய முதலாளித்துவத்தின் தடுமாற்றமும்

பீட்டர் சுவாட்ஸ்
*19 மார்ச் 2002*

*உலக சோசலிச வலைத் தளத்தின் அனைத்துலக ஆசிரியர் குழுவின் உறுப்பினரான பீட்டர் சுவாட்ஸ் ஜனவரி 17, 2002 அன்று வழங்கிய விரிவுரையின் முதலாவது பகுதியை இங்கு பிரசுரிக்கின்றோம். இந்த விரிவுரை அவுஸ்திரேலிய சோசலிச சமத்துவக் கட்சியால் சிட்னி நகரில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த அனைத்துலகப் பாடசாலையில் வழங்கப்பட்டது.*

ஐரோப்பாவின் பன்னிரண்டு நாடுகளில் கடந்த ஜனவரி 1ம் திகதி புதிய நாணயம் அறிமுகப்படுத்தப்பட்டது. பிஸ்டாஸ், லிரா, ட்ரெச்மா, பிராங்க், மார்க் ஆகிய நாணயங்களுக்குப் பதிலாக, ஏறத்தாள 300 மில்லியன் ஐரோப்பியர்கள் தற்போது ஒரு பொது நாணயமான யூரோவைப் பயன்படுத்துகின்றனர்.

யூரோ வலையமானது தெற்கில் போர்த்துக்கள், ஸ்பெயின் இத்தாலி மற்றும் கிரீசில் இருந்து மத்திய பிரதேசமான பிரான்ஸ், பெல்ஜியம், லக்சம்போர்க், ஒல்லாந்து, ஜேர்மனி மற்றும் ஆஸ்திரியா ஊடாக வடக்கில் பின்லாந்துவரை நீண்டுள்ளது. ஐரோப்பிய ஒன்றியத்தில் அங்கம் வகிக்கும் பதினைந்து நாடுகளில் பிரித்தானியா, டென்மார்க் மற்றும் சுவீடன் ஆகிய நாடுகள் மாத்திரம் இதில் இணைந்து கொள்ளவில்லை.

யூரோவின் அறிமுகமானது கண்டத்தின் பொருளாதார ஒருங்கிணைப்பின் ஊடாக ஒரு பாரிய நகர்வை பிரதிநிதித்துவம் செய்வதோடு அந்த விதத்தில் இது சந்தேகத்துக்கிடமின்றி முற்போக்கானதாகும். எடுத்த எடுப்பில் இந்த நகர்வுகளுக்கும் தற்போது ஆப்கானிஸ்தானில் நிகழும் யுத்தத்துக்குமிடையில் சிறிதளவே தொடர்புள்ளதாக தோன்றலாம். எவ்வாறெனினும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உற்பத்தியாகின.

ஐரோப்பாவானது யுத்தத்தில் உருக்குலைந்து சிதைவுற்றதுடன், பல எல்லைகளாக பிரிக்கப்பட்டதுடன், அமெரிக்க கடன்களில் தங்கியிருப்பதாக அதே சமயம் அதன் அழுத்தத்தினால் சுகப்படுத்தப்படும் ஒன்றாயும் மாறியது. முதலாளித்துவத்தின் கீழ் இதைனத் தவிர வேறெந்த வழியுமே எஞ்சியிருப்பதில்லை. ஏனெனில் தொழிலாளர் இயக்கம் அதன் தலைமைத்துவ நெருக்கடியினால் ஸ்தம்பிதமடைந்திருந்தது. ஐரோப்பிய முதலாளித்துவம் பாசிசமென்ற வியாதியை நோக்கி அபிவிருத்தியுற்றது. இந்த பாசிசம் என்றதன் பணி இரு அம்சம் கொண்டது. தொழிலாளர் அமைப்பினை சிதைப்பது ஒன்று. மற்றது முதலாளித்துவ மரண முடிவிலிருந்தும் இராணுவ சக்தியினால் வெளியேறுதல் என்பதாகும். 1918ல் ஐரோப்பாவை மீளக் கட்டியெழுப்புதலில் தோல்வி கண்ட ஜேர்மனி 1947ல் மீண்டுமொரு முறை முயற்சித்து மேலும் ஒரு தடவை தோல்வி கண்டது.

அமெரிக்காவின் பொருளாதார வளங்கள் உள்நாட்டில் சமூக நெருக்கடியை ஒரு "புதிய தொடர்பினால்" தீர்க்குமளவு பலம் கொண்டிருந்தமையினால் நாஸி ஜேர்மனிக்கும், ஜப்பானுக்கும் எதிராக திடமாக யுத்தத்தில் தலையீடு செய்தது. யுத்தத்தின் முக்கிய பங்கினை பொறுப்பேற்று நடத்தியது, ஸ்டாலினிசத்தின் துரோகப் பாத்திரத்தின் மத்தியிலும் பாசிசத்துக்கு எதிரான போராட்டத்தின் சகல வீரம் மிக்க மக்களையும் அணிதிரட்டியது சோவியத் யூனியனேயாகும். ஆனால் இறுதி வெளிப்பாடாக அமெரிக்க பணம், படைகள், ஆயுதங்கள் என்பன பெரும் பங்கை வகித்தன யுத்தத்தின் பின் அமெரிக்காவின் மேலாதிக்க நிலையானது முன்னரிந்ததிலும் பார்க்க பலம் மிக்கதாக மாற்றமடைந்தது.

யுத்தத்தின் பின்னர் அமெரிக்காவின் பொருளாதார, இராணுவ மற்றும் அரசியல் ஆதிக்கம் முன்னரிலும் பார்க்க சக்திவாய்ந்ததாக இருந்தது. எவ்வாறெனினும் ஐரோப்பாவில் சமூகப் புரட்சி ஒன்று ஏற்படுவதை தவிர்க்கும் முகமாகவும் தனது பண்ட, மூலதன ஏற்றுமதிகளின் நலன் கருதியும் அமெரிக்கா தனது எதிரிகளான ஐரோப்பா, ஜப்பானியர்களுக்கு உதவி வழங்கி அவர்களது பொருளாதாரத்தை மீளக் கட்ட உதவியது.

1960 களின் இறுதியில் அமெரிக்கா உற்பத்தி மற்றும் வர்த்தகத் துறையில், தான் வகித்த மேலாதிக்க நிலையை பெருமளவில் இழந்தது. உலக வர்த்தகத்தில் வகித்த பங்குக்கு சமமாக பொருளாதார நடவடிக்கைகளுகரும் ஐரோப்பிய ஒன்றியம் அமெரிக்காவிற்கு சமமான நிலையை அடைந்திருந்தது. ஜப்பான் அரைவாசிக்கும் மேல் உற்பத்தி செய்து ஏற்றுமதியும் செய்தது. ஒருவர் தற்காலிக தளர்வுகள் ஏற்பட்டதை மனங்கொண்டாலும் கூட இதுவரை இத்தகைய நிலையிலேயே விளங்குவதை தவிர்த்துக் கொள்ள முடியாது.

இத்தகைய உலக பொருளாதாரத்தின் மாற்றத்தை ஏற்படுத்திய சக்திகள் தமது பாரிய அரசியல் வெளிப்பாட்டினை, 1971 ஆகஸ்ட் மாதம் அமெரிக்க ஜனாதிபதி நிக்சன் ஒரு தலைப் பட்சமான நடவடிக்கையாக பிரிட்டன்வூட் ஒப்பந்தத்தை இல்லாதொழித்த சமயம் வெளிப்படுத்தி காட்டின. இந்த நடவடிக்கையானது யுத்தத்தின் இறுதியில் யுத்தத்தின் பின்னைய பொருளாதார அமைப்பின் அடித்தளமாக அமைந்து அமெரிக்க மேலாதிக்க நிலையை பேணி வந்துள்ளது.

சோவியத் ஒன்றியத்துடன் மோதலைத் தவிர்க்க ஆரம்பத்திலிருந்து ஐரோப்பாவுக்கும் அமெரிக்காவிற்கும் இடையிலான பதட்டநிலை குறிப்பிடத்தக்களவு அதிகரித்தது. ஜேர்மன் முதலாளித்துவத்தின் சில பிரிவுகள் முக்கியமாக எஸ்.பி.டி.யின் பிரிவுகள் மொஸ்கோவுடனும் கிழக்கு ஜேர்மனுடனும் நெருங்கிய உறவை நிறுவியதானது அமெரிக்காவிடம் இருந்து மேலதிக சுதந்திரத்தை பெற்றுக் கொள்ளும் ஒரு வாய்ப்பாகலாம் என்று கருதின.

1973ல் இருந்து ஒரு புதிய அத்லாந்திக் சாட்டர் பற்றிய பலத்த விவாதங்கள் ஒராண்டு காலமாக நீடித்தன. அமெரிக்க வெளியுறவு அமைச்சர் ஹென்றி கீசிங்கர் ஐரோப்பாவிற்கான வருங்கால அமெரிக்க பாதுகாப்பு உத்தரவாதம் பொருளாதார துறையில் ஐரோப்பாவிற்கான சலுகைகளுடன் தொடர்புள்ளதாக கட்டாயம் விளங்க வேண்டுமென வற்புறுத்தினார். இறுதியாக 1974ன் அத்லாந்திக் பிரகடனத்தின் பிரகாரம், உடன்படிக்கையின் ஐரோப்பிய அங்கத்தவர்கள் அத்தகைய தொடர்பினை ஏற்றுக் கொண்டனர். "தமது பாதுகாப்பு உறவுகள் அரசியல் பொருளாதாரம் சார்ந்த துறைகளில் அமைதியான உறவுகளால் பலப்படுத்தப்பட வேண்டுமென" அவர்கள் இறைஞ்சிக் கேட்டனர்.

அந்த சமயம் அமெரிக்க அழுத்தத்தின் முயற்சியானது ஐரோப்பிய ஒன்று சேர்தலில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது.

தனது மேலாதிக்க நிலைக்கு சவாலாயிருக்காத பட்சத்தில் அமெரிக்கா 20ம் நூற்றாண்டின் அரசியல் நெருக்கடி சமூக கிளர்ச்சிகளின் மீள் எழுச்சியை தவிர்க்கும் முகமாக ஐரோப்பிய ஒன்று சேர்தலுக்கு ஊக்குமளித்து வந்தது. அத்துடன் எல்லைகள் மற்றும் சுங்க வரிகள் அகற்றுதல் காரணமாக அமெரிக்க பண்டங்கள் மூலதனம் என்பன் கண்டத்துள் சுலபமாக ஊடுருவக் கூடியதாக இருந்தது. இப்போது ஐரோப்பிய முதலாளித்துவத்தின் பிரதான பிரிவுகள் ஐரோப்பிய ஒன்று சேர்தல் அமெரிக்க மேலாதிக்க நிலையுடன் போட்டியிடவைக்கும் என எண்ணத் தலைப்பட்டன.

1970களில் ஐரோப்பிய யூனியன் கணிசமான அளவில் அபிவிருத்தியடைந்தது. பிரித்தானிய அங்கத்துவத்துக்கு பிரான்ஸ் வழங்கிய எதிர்ப்பை கைவிட்டது. அங்கத்துவ எண்ணிக்கை ஒன்பதிலிருந்து பன்னிரண்டாகி பின்னர் பதினைந்தாகியது. ஐரோப்பிய பொருளாதார சமூகமானது ஐரோப்பிய சமூகமாக பலதுறைகளில் அதிகரித்த பெருமையுடையதாக மாற்றம் கண்டது. ஐரோப்பிய நாணயங்களை நெருங்கி ஒருங்கமைப்பது முதல் முயற்சியாக அமைந்தது.

பிரான்ஸ் ஜனாதிபதி வலரி கிஸ்கார்ட் எஸ்டிங்கும் மற்றும் ஜேர்மனிய சான்சலர் ஹெல்மட் ஷிமிட்டும் தம்மை பெரும் பொருளியலாளராக கருதும் இருவர்- இதில் முன் நின்றுழைத்தனர்.

எவ்வாறெனினும், எவ்வளவு தூரம் அமெரிக்காவுடனான மோதல் இட்டுச் செல்லும் என்பதில் ஒரு நிச்சயமான வரையறை காணப்பட்டது. கெடுபிடி தளர்த்தல் கொள்கைகள் காணப்பட்டாலும் சோவியத் ஒன்றியத்துக்கு விரோதமாயிருப்பது இன்றும் உலக அரசியலில் ஆதிக்கம் செலுத்திய காரணியாக காணப்பட்டது. ஐரோப்பிய முதலாளித்துவத்துவத்தின் இராணுவ பாதுகாப்பிற்கு அமெரிக்கா தேவையாயிருந்தது. அமெரிக்கா இப்போதும் "தயவுள்ள தலைவன்" உதாரணமாக அதன் இராணுவ மேலாதிக்க நிலையானது ஐரோப்பாவின் நலன்களுக்காகவே உள்ளதென கருதக் கூடிய வகையிலுள்ளது.

சோவியத் யூனியனின் சிதைவும் இறுதியில் அதன் வீழ்ச்சியும் இந்த வரையறையை அகற்றி அமெரிக்கா, ஐரோப்பா இடையிலான உறவுகளில் அடிப்படை மாற்றத்தை கொண்டுவந்தது.

## சோவியத் ஒன்றிய வீழச்சியின் தாக்கங்கள்

ஒரு புறத்தில் அமெரிக் ஆளும் வர்க்கத்தின் கணிசமானளவு கனவான்கள் சோவியத் ஒன்றியத்தின் வீழ்ச்சியை சவாலற்ற பூகோள மேலாதிக்க நிலைக்கான ஒரு வாய்ப்பாக கருதினர். "1990 களின் நடுப்பகுதியுடன் இதுவரை மேற்குலகின் மேலாதிக்க நிலை தலைமைத்துவத்துக்கான உரிமை கோரல் பூகோள ரீதியிலான ஆட்சிக்கான உரிமை கோரலாக விரிவடைந்தது," என ஒரு ஜேர்மன் வரலாற்றறிஞர் கூறுகிறார்.

மறுபுறத்தில் ஐரோப்பிய கனவான்கள் இனிமேலும் அமெரிக்க மேலாதிக்க நிலைக்கு கீழ் தாம் கட்டுண்டிருப்பது அவசியமற்றதென கண்டனர். "அமெரிக்க மேலாதிக்க நிலைக்குள் ஐரோப்பா ஒருங்கு சேர்தல் சோவியத் யூனியனுடனான முரண்பாட்டுடன் பிணைக்கப்பட்டுள்ளதுடன் அதன் முடிவுடன் இது பயனற்றதாகி விட்டது." ஐரோப்பிய முதலாளி வர்க்கம், அத்திலாந்திக் பங்காளருடன் சமத்துவத்தை வேண்டுகின்றது. அமெரிக்கா அதற்கு தயாராக இல்லை.

மொத்தத்தில் இன்றும் தீர்க்கப்படாத ஒரு தொடர்ச்சியான மோதல்கள் உடனடியாக அபிவிருத்தி கண்டன.

பொருளாதார ரீதியில் பார்ப்பின் ஒரு புறத்தில் ஐரோப்பா அமெரிக்காவின் ஆளுமை நிலையை தொடர்ந்து வைத்திருப்பதில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமமாக இருப்பதுடன் உலக முக்கிய நாணயமாக டொலர் வகிக்கும் பாத்திரமும் சவாலாகின்றது.

இரண்டாம் உலகப் போரிலிருந்து டொலரினது மதிப்பு, பரிமாற்றல் பெறுமானம், உத்தியோகபூர்வ கணிப்பிட்ட பண்டமாற்றுகளின் புள்ளிவிபர அலகு என்றதில் வேறெந்த ஒரு நாணயமும் கொண்டிராத முக்கிய பாகத்தை வகித்து வருகின்றது.

1990ன் நடுப்பகுதியின் இறுதியில் டாலரின் மதிப்பு சர்வதேச சந்தைகளில் உலக மொத்த தேசிய உற்பத்தியினதும் வர்த்தகத்தினதும் அமெரிக்க பொருளாதாரம் வழங்கும் பங்களிப்பின் இருமடங்காகியது. 1996ல் டொலர் உலக வர்த்தகத்தின் 50% விலைப்படுத்த நாணயமாகவும் ஐரோப்பிய உள்ளார்ந்த வர்த்தகத்தின் மூன்றிலொன்றாகவும் விளங்கியது. டொலரானது சர்வதேச வங்கி கடன்களில் ஆதிக்கம் செலுத்தும் நாணயமாக 77% தனியதாகவும் 45% சர்வதேச கடன்பத்திர விடயங்கள் கொண்டதாகவும் 41 சதவீத பூகோள நாணய வைப்புகளாயும் 62% பூகோள ரீதியான நாணய வளங்களை கொண்டதாயும் காணப்பட்டது. இத்துடன் ஒப்பிடுகையில் ஐரோப்பிய ஒன்றிய நாணயங்கள் 26% மட்டுமே ஆகும்.

டொலரின் ஆதிக்கப் பங்கு அமெரிக்காவின் முதலாளித்துவ வர்க்கத்திற்கு கணிசமானளவு வாய்ப்புக்களை வழங்கியது. சர்வதேச சொத்து முதலீடுகளுக்கான வளர்ச்சியை ஊட்ட அது வசதி செய்தது. அமெரிக்க அதிகாரத்துவத்துக்கு ஒரு அகன்ற பொது வரிக் கொள்கைகளை தேர்ந்தெடுக்கும் உரிமை காணப்பட்டது. அத்துடன் வெளிநாட்டு அரசாங்கங்களும் டாலரின் ஸ்திரத்தன்மையின் நம்பிக்கையில் அக்கறை காட்டின.

## ஐரோப்பிய நாணய சங்கம்

1991 டிசம்பரில் அதாவது சோவியத் ஒன்றியம் கலைக்கப்பட்ட அதே மாதத்தில் ஐரோப்பிய யூனியனின் சகல அரச, அரசாங்கத் தலைவர்களும் மாஸ்ரிச்டில் கூடி டொலருக்கு எதிராக பாரிய சவாலை தொடுத்தன. அவர்கள் 1999ம் ஆண்டளவில் ஐரோப்பிய நாணயச் சங்கம் ஒன்று நிறுவுவதாக தீர்மானித்தனர்.

இந்த முடிவுக்கு பின்னாலுள்ள உந்து சக்தியாக பிரான்சிய ஜனாதிபதி மித்திரோண்டும், ஜேர்மனிய சான்சலர் ஹெல்மட் கோலும் விளங்கினர்.

பேர்லின் சுவர் பொறிந்ததையடுத்து, மீள் இணைக்கப்பட்ட பின் ஐரோப்பாவில் பெரியதும் பொருளாதார பலம் வாய்ந்ததுமாக காணப்பட்ட ஜேர்மனியை கட்டுப்பாட்டில் வைக்கும் சாதனமாக அது விளங்கியது. மறு புறத்தில் கோல் நாணய சங்க உருவாக்கமானது ஐரோப்பாவில் ஆதிக்கம் கொண்டதாக ஜேர்மனியை மாற்றிவிடும் என நம்பிக்கை கொண்டிருந்தார். கொன்ராட் அடினோவரின் சிந்தனைப்படி ஜேர்மனி மீண்டும் ஒரு முறை தனிமைப்படுத்தப்பட்டு தனது ஐரோப்பிய அயலவர்களுடன் நெருங்கி ஒன்று சேர ஆர்வம் காட்டாமலோ என அவர் அஞ்சினார். மித்திரோண்ட் கோல் ஆகிய இருவருமே நாணய சங்கம் டாலரின் ஆதிக்க நிலைக்கு சவாலான ஒன்றாக விளங்கும் என்பதை ஏற்றுக் கொண்டிருந்தனர்.

ஐரோப்பிய ஒன்றியத்தினால் தீர்மானிக்கப்பட்ட நீண்ட கால விடயங்கள் மைல்கல்லை போன்ற முறையான விதத்தில் நாணயச் சங்கமானது குறித்த நேரத்தில் அமுலுக்கு கொண்டு வரப்பட்டது. மாஸ்ரிச்சில் திட்டமிடப்பட்டபடி, யூரோ தொடரின் அட்டவணையானது அந்தந்த ஐரோப்பிய யூனியன் நாணயங்களுக்கு பதிலீடாக 1999ல் அமைந்தது. மூன்றாண்டுகளுக்குப் பின் 2002 ஜனவரியின் ஆரம்பத்தில் வங்கி நோட்டுகளுக்கும், நாணயங்களுக்கும் பதிலீடாக அமைந்து ஐரோப்பிய ஒன்றியத் தொகையில் ஒரு விருப்ப வடிவிலான நிஜமான பொருளாதாரமாக யூரோ மாற்றமெடுத்துள்ளது.

இந்த நடவடிக்கையானது பெரிய அரசியல் கருத்துக்கள் கொண்டதாகும். ஒரு ஜேர்மன் அவதானி கூறியது போல், "அத்திலாந்திக் உடன்படிக்கைத்தன்மை அதிகாரப் பகிர்வில் இது குறிப்பிடத்தக்களவு மாற்றமேற்படுத்தும். மாஸ்ரிச்சின் ஒரு வெறும் கருத்தாக பிரகடனப்படுத்தப்பட்டது போலன்றி, இது தற்போது ஒரு முக்கிய நிலையில் நிச்சயமான ஒன்றாக மாறியுள்ளது. இதன் பின்விளைவு அங்கத்தவர்களை டாலர் வலயத்திலிருந்து விலகிவிட்டது மட்டுமல்ல, ஓர் இரண்டாவது உலக முக்கியத்துவம் வாய்ந்த நாணயமாக யூரோவை கட்டியெழுப்பியும் உள்ளனர். அமெரிக்காவில் தங்கியிருக்கும் தன்மையிலிருந்தும் மேற்கு ஐரோப்பாவின் (விடுவிப்புடன்) விடுபடுதல் நிலையானது ஓர் புதிய அதிகாரத்தை பெற்றுள்ளது. இது வலைத்தளங்களில் மிக தெளிவாக பதிவு செய்யப்பட்டுள்ளது."

இராணுவரீதியில் பார்க்குமிடத்து அமெரிக்க மேலாதிக்க நிலையை சவாலுக்குள்ளாக்குவது ஐரோப்பாவிற்கு பெரிதும் கஷ்டமானது. இவ்விடத்தில் அமெரிக்காவிற்குள்ள வாய்ப்புகள் மேலதிகமானதும்.

அதன் 283 பில்லியன் டாலர்களுடன் பார்க்கையில் அமெரிக்காவின் முழு நேட்டோ செலவீனத்திற்கான பங்களிப்பு 50% மாகவும் அதாவது முழு ஐரோப்பிய நேட்டோ அங்கத்தவர்களும் கூட்டாக வழங்கும் பங்களிப்புடன் பார்க்கையில் அதி உயர் விகிதமும் உள்ளது. அத்துடன் சராசரி ஐரோப்பிய நாடுகளின் மொத்த தேசிய உற்பத்தியில் இராணுவ செலவு 2.2 % மும் ஜேர்மனியில் சராசரி 1.5% மாகவும் விளங்கும் அதே சமயம் அமெரிக்கா தனது மொத்த தேசிய உற்பத்தியில் 3.1% தை இராணுவ நடவடிக்கைக்காக பயன்படுத்துவதை காணலாம்.

எவ்வாறெனினும் இந்த தரவுகள் உண்மையான பலத்தின் அளவை பிரதிபலிப்பனவாக விளங்காது. அமெரிக்க பாதுகாப்பு அமைச்சின் ஆய்வின்படி ஐரோப்பிய நேட்டோ படைகளின் தகுதி அமெரிக்க சகபாடிகளிலும் பார்க்க பத்தில் இரண்டு பகுதியே எனத் தெரியவந்துள்ளது. இதற்கான காரணமாக ஒவ்வொரு ஐரோப்பிய நாடும் தன் சுய கட்டமைப்பை நிதியிடல் சுய ஆய்வு அபிவிருத்தி என்பவற்றை தவிர்க்கவியலாக கொண்டிருப்பது விளங்குகிறது. அதிக செலவினம் சம்பளமாகவும் கூலியாகவும் செலவிடப்படுகிறது. ஐரோப்பா அநேகமாக குறைந்தளவு பயிற்சி திறனுடைய ஆயுதப்படையினரான 2.3 மில்லியன் படைகளை கொண்டுள்ளது. இதற்கு மாறாக அமெரிக்க பயிற்சி பெற்ற உத்தியோகபூர்வமான 1.4 மில்லியன் படையணியை வைத்துள்ளது. இதனால் அமெரிக்கா தனது இராணுவ வரவு செலவுத் திட்டத்தில் சம்பளம் கூலிக்காக 39% தையே செலவிடுகிறது. இத்துடன் ஒப்பிடும் போது ஜேர்மனி தனது வரவு செலவுத் திட்டத்தில் இதற்காக 60% தையும் போர்த்துக்கல் 79% தையும் செலவிடுகிறது. இதே போல் ஒரு படையாளனுக்கான இராணுவத் தளபாடத்துக்கான செலவினம் ஜேர்மனிய ஐரோப்பிய சராசரியுடன் ஒப்பிடுகையில் மூன்று மடங்கு அதிகரித்ததாக அமெரிக்காவில் காணப்படுகிறது.

இதன் பிரகாரம், இராணுவ சீர்திருத்தங்களுக்கான ஐரோப்பாவின் முயற்சிகள் கூட்டுக் கட்டளை அமைப்பு, அமெரிக்காவின் ஆயுத உற்பத்தியாளரிடம் இருந்தும் விலகிய சுதந்திரமான (புதிய ஏயர் பஸ் இராணுவ போக்குவரத்து விமானம் போல) கூட்டு ஆயுத கொள்வனவுகளை அபிவிருத்தி செய்தல், படைகளின் எண்ணிக்கையை குறைத்து குறைப்பயிற்சியுள்ள படையினரை உயர்ந்த மட்டத்தில் பயிற்சியளிக்கப்பட்ட படையினராக மாற்றுதல் ஆகிய கருத்தினை கொண்டுள்ளன.

இது எவ்வாறாயினும் மிகவும் செலவு கூடிய காலதாமதப்படுத்தும் நீண்ட திட்டமாக அதாவது சகல ஐரோப்பிய அரசாங்கங்களும் பாரிய வரவு செலவுத் திட்ட பற்றாக்குறை கொண்டும், இராணுவ செலவினங்கள் பெரிதும் கூடியதாகவும் முக்கியமாக சமூக சேவை நலன்புரி சேவைகளின் பாரிய வெட்டுக்கள் கொண்டதுமான போராட்டத்திலுள்ள நிலைமைகளில், அசாத்தியமான கடின திட்டமாயுள்ளது. இதற்கும் மேலாக உள்ளார்ந்த ஐரோப்பிய எதிரிகள்-குறிப்பாக ஜேர்மனி, பிரான்ஸ் மற்றும் பிரிட்டன் என்பன அமெரிக்கா ஐரோப்பாவில் அழுத்தம் கொண்டுவரும் போது -இன்னும் பிரதான பங்கினை வகிக்கும் சுயாதீனமான பூகோளத்தை எவ்வாறு வரைந்து பொது நிகழ்ச்சி நிரலுக்கு வருவது என்பதை குறித்து ஐரோப்பிய முதலாளித்துவத்துக்கு மிகவும் கஷ்டமான நிலை காணப்படுகிறது.

1990 இலிருந்து உலக அரங்கில் ஐரோப்பாவிற்கு ஒரு சுதந்திரமான இராணுவ அரசியல் பங்கினை வழங்கும் நோக்குடனான முனைவு அமுலாக்கப்பட்டதும் திட்டமிடப்பட்டதுமான தீர்மானங்கள் எடுக்கப்பட்டன. அவற்றுள் மிக முக்கியமானதாக 1992ல் கைச்சாத்திடப்பட்ட மாஸ்ட்ரிச்ட் ஒப்பந்தம் சந்தேகத்துக்கு இடமின்றி விளங்குகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு ஐரோப்பிய நாணய சங்கத்துக்கு வழி வகுத்தது மட்டுமன்றி ஒரு பொது வெளிநாட்டு கொள்கைகளுக்கும் வழிகோலியது. அத்துடன் நீண்ட கால கட்டத்தில் ஆபத்தை எதிர்த்து நிற்கின்ற ஒரு அரசியல் ஒன்றியமாக அமையவும் இடமளித்தது.

அதே வருடத்தில், முன்னர் ஜேர்மனிய பிரான்சிய படையணியாக நிறுவப்பட்ட படை சகல ஐரோப்பிய படைவீரரை கொண்டதாக மாற்றப்பட்டது. அத்துடன் உலக யுத்தத்தின் பிற்பட்ட காலப்பகுதியில் சோம்பியிருந்த விரிவான மேற்கு ஐரோப்பிய ஒன்றியத்தின் பாதுகாப்பு ஒன்றாக புனரமைக்கப்பட்டது. இந்த இரண்டு நடவடிக்கைகளின் நோக்காக பிரான்சிய ஜனாதிபதி மித்தரண்ட் ஜேர்மனிய சான்சலர் ஹெல்மட் கோல் இருவரது கூற்றுப்படி "ஐரோப்பிய ஒன்றியத்தை சுதந்திர இராணுவ செயல்களுக்கான அடிப்படையிலமைப்பது" என்பது விளங்கியது.

பிரித்தானியாவின் ஆதரவைப் பெற்ற அமெரிக் அரசாங்கம் ஆரம்பத்தின் சுதந்திரமான ஐரோப்பிய இராணுவத் திட்டத்தினை கடுமையாக எதிர்த்தது. ஜனாதிபதி புஷ் மேற்கைரோப்பிய யூனியனை ஐரோப்பிய ஒன்றியத்தின் பாதுகாப்பு அலகாக மாற்றுவதையும் யூரோ படைகளை சுதந்திர ஐரோப்பிய இராணுவ அமைப்பின் மையமாக்குவதையும் பலமாக எதிர்த்தார்.

பெப்பிரவரி *1991*ன் அமெரிக்க அரசாங்கத்தால் வெளியிடப்பட்ட ராஜதந்திர அறிக்கை பின்வருமாறு குறிப்பிடுகிறது. "எமது கருத்து என்னவென்றால் நேட்டோவின் பங்கினை வரையறைக்குட்படுத்தி மீளமைத்து ஒரு ஐரோப்பிய தூண் ஒன்றை நிறுவுவதான முயற்சியானது அதன் அமைப்பினை பலவீனப்படுத்தவும் சிற்பம் போன்ற குறிப்பிட்ட அங்கத்தவர்களை கொண்ட தவறான பாதைக்கு இட்டுச் செல்லும் முயற்சிகள் வன்மையாக எதிர்க்கப்பட வேண்டும் என்று நாம் கருதுகிறோம்."

வேறுமோர் அமெரிக்க கட்டுரையான "*1994-1999* க்கான வரி ஆண்டுக்கான பாதுகாப்பு திட்ட வழிகாட்டி" தெரிவிக்கின்றது. "ஐரோப்பிய ஒருங்கு சேர்த்தல் இலக்கினை அமெரிக்கா ஆதரிக்கும் அதே சமயம் நேட்டோவை குறைத்து மதிக்கும் குறிப்பாக ஒப்பந்தங்களின் ஒன்றிணைந்த கட்டளை அமைப்பினை குறைத்து மதிக்கும் ஐரோப்பா மட்டும் என்ற பாதுகாப்பு நடவடிக்கைகளின் உருவாக்கத்தை நாம் தடுக்க வேண்டியுமுள்ளோம்."

நேட்டோ இராணுவ கட்டமைப்புக்களு பிரான்ஸ் மீண்டும் இணைவதற்கு இணங்கியதினை தொடர்ந்து கிளின்டன் நிர்வாகமானது மிகவும் சிநேக நோக்குடையதான போக்கை கையாண்டு ஓர் சமரசத்தை எட்டியது. மகாநாடு மேற்கைரோப்பிய யூனியனின் ஆசியின் கீழ் சுதந்திர இராணுவ நடவடிக்கைக்கு இடமளிக்கப்படலாம் என்ற ஒப்பந்த மீள் அமைப்புக்கு பச்சைக் கொடி காட்டியது. எவ்வாறாயினும் ஓர் முக்கிய நிபந்தனை ஒன்று காணப்பட்டது. அதாவது இத்தகைய நடவடிக்கைகள் நேட்டோ கவுன்சிலில் ஏகமனதாக தீர்மானிக்கபட்ட வேண்டும் என்பதாகும். இது அமெரிக்காவுக்கு வீட்டோ பலத்தை வழங்கியது.

இந்த அரச விவகாரங்களில் தாங்களாக விலகிக்கொள்ள ஐரோப்பிய அரசாங்கங்கள் தயாராக இல்லை. *1997*ன் அம்ஸ்டர்டாம் ஒப்பந்தப்படி ஐரோப்பிய யூனியன் ஒரு பொதுவான வெளியுறவு பாதுகாப்பு கொள்கையை அபிவிருத்தி செய்வதாக தனது திட்டங்களை ஸ்திரப்படுத்தியது. இத்தீர்மானத்தின் அமுலாக்கத்திற்கு பிரித்தானிய நிலைப்பாட்டில் ஒரு திருப்பம் காரணம். முன்னர் பிரித்தானிய அரசாங்கம் சுதந்திரமான இராணுவ பங்கினை வகிக்க பிரான்ஸ், ஜேர்மனி எடுத்த முயிற்சிகளுக்கு முட்டுக்கட்டையாக இருந்தது. டோனி பேளேயர் பிரதமரான காலத்தில் *1998* டிசம்பரில் செனட் மாலோவில் கூடிய பிரான்ஸ், பிரித்தானிய உச்சி மகாநாட்டில் பிளேயர் ஐரோப்பிய இராணுவத்தின் சுய பங்களிப்புக்கு முழு ஆதரவு வழங்கினார்.

பிளேயரும் பிரான்ஸ் ஜனாதிபதி ஜக்குலிஸ் சிராக்கும் உடன்பட்டு விடுத்த கூட்டு அறிக்கை பின்வமாறு: "சர்வதேச நெருக்கடிகளுக்கு பதிலளிக்க இந்த யூனியன் கணிசமான இராணுவ பக்க பலத்துடன் அவற்றை பயன்படுத்தவும் தயாராயிருக்கவும் தேவையான நடவடிக்கைக்கான சுய சக்தியை கொண்டிருக்கும்."

பிரித்தானிய நிலைப்பாட்டின் மாற்றத்திற்கு இராணுவ சுதந்திரத்தை நோக்கிய ஐரோப்பிய முயற்சிகளுக்கு ஓர் திருப்பமாக அமைவதற்கு கொசோவா யுத்தம் பின்னணியாக அமைந்தது.

ஒரு ஐரோப்பிய விமர்சகரது கருத்துப்படி "அமெரிக்கா இச்சந்தர்ப்பத்தை பயன்படுத்தி ஐரோப்பாவின் ஒரே ஒரு பாதுகாப்பு சக்தியாக அமெரிக்க ஆதிக்கத்திலுள்ள நேட்டோ படையை அனுப்பி தனது எதிரிகளை விரட்டிவிட பார்க்கும்", "சேர்பிய போரின்போது" "ஐரோப்பிய இராணுவம் மிகவும் பின் தங்கிய தகுதியற்ற பழைய பாணியிலான நடவடிக்கைகளை கையாண்டது," என அவர் குற்றம் சாட்டி சேர்பியாவுக்கு எதிரான போரின் தீர்மானம் ராம்ஸ்டானிலுள்ள விமானத்தள கூட்டுத்தலைமை காரியாலயத்தில் தீர்மானிக்கப்படாது அமெரிக் பென்டகனால் தீர்மானிக்கப்பட்டு நேட்டோவிற்கு அமுல் படுத்துமாறு அனுப்பப்பட்டது. நேட்டோ கூட்டாளிகளுக்கு அமெரிக்காவின் நீண்டதூர குண்டு வீச்சு பற்றி திட்டம் அறிவிக்கப்பட்டிருக்கவில்லை," என அவர் தெரிவிக்கின்றார்.

ஐரோப்பிய ஒன்றியம் இந்தக் கேள்விக்கு பதிலளித்தது. மேற்கூறிய ஆசிரியர் குறிப்பிட்டபடி 1999 ஜூனில் கொலோனில் கூடிய உச்சி மகாநாட்டில் தனது சுய இராணுவப் படை ஒன்றை நிறுவும் நடவடிக்களைக்காண ஒரு சில தீர்க்கமான முடிவுகள் தீர்மானிக்கப்பட்டன. 2003ம் ஆண்டுக்குள் தயாரான நிலையில் 50,000- 60,000 வரையிலான ஒரு யூரோ படையொன்றை நிறுவுவதெனவும் அங்கு முடிவெடுக்கப்பட்டது. இந்த யூரோப் படைகள் சுதந்திரமானவையாகவும் தொழில் நுட்ப ரீதியில் அமெரிக்க படைகளின் மட்டத்தில் அமைந்ததாகவும் விளங்கும்.

அதே ஆண்டில் ஹெல்சிங்கியில் கூடிய உச்சி மாகாநாட்டில் இந்த கொலான் உச்சி மகாநாட்டு தீர்மானம் மேலும் உறுதிப்படுத்தப்பட்டது. பெய்ராவில் 2000 ஜூனில் கூடிய உச்சமகாநாட்டில் டிராஸ் அட்லான்டிக் உறவுகளிடையே ஒரு குறிப்பிடத் தக்க திருப்புமுனை ஏற்பட்டு இராணுவ பங்காளர், இராணுவ போட்டியாளாராக மாற்றமெடுத்தனர். இந்த நடவடிக்கையின் அரசியல் நோக்கு மிகவும் தீர்க்கமானது. "உண்மையான சமத்துவம்" என ஜேர்மன் பாதுகாப்பு அமைச்சர் ருடோல்வ் சார்பில் முன்வைத்ததான அடிப்படையிலமைந்த அமெரிக்காவுக்கு ஐரோப்பாவுக்கும் புதிய சம்பவத்தை உருவாக்குதல் அதன் இலக்காக அமைந்தது.

*1999*ன் கொலோன் உச்சிமகாநாட்டிலும் யூரோவின் உருவாக்கத்தில் பின்னருமான அபிவிருத்திகள் அமெரிக்க மேலாதிக்கத்தை சவாலுக்குள்ளாக்க ஐரோப்பா எடுத்த முயற்சிகள் அதிகளவு பயனளிக்கவில்லை என சுட்டிக்காட்டுகின்றார். யூரோ தனது தோற்றத்துக்கான எதிர்ப்புகளை பூர்த்தி செய்யவில்லை. அத்லாந்திக்குள் இரு புறத்திலிலுள்ள விசேட நிபுணர்களால் எதிர்பார்க்கப்பட்டபடி அமெரிக்க டாலருக்கு எதிராக உயர்வதற்கு பதிலாக யூரோ தனது மதிப்பிலிருந்தும் கால் பங்கு குறைவடைந்த நிலையையே அறிமுகப்படுத்தப்பட்ட மூன்றாண்டுகளுக்குள் அடைந்துள்ளது. சர்வதேச முதலீட்டின் பாய்ச்சலை கவருமளவிற்கு டாலர் பலமிக்கதென்பதை நிருபித்துள்ளது. அமெரிக்க பொருளாதாரத்தின் பலம் இதற்கு காரணமல்ல. அமெரிக்காவில் ஏற்படும் பாரிய நெருக்கடியின்போது யூரோ திட்டவட்டமாக மீண்டும் உயரும் என்பதை மறுப்பதற்கில்லை. எவ்வாறெனினும், அதன் ஆரம்ப வீழ்ச்சியானது, ஐரோப்பிய முதலாளித்துவத்தின் ஆழமான முரண்பாடுகளையும், பிரச்சினைகளையும் எடுத்துக் காட்டுவதுடன் அமெரிக்காவுடனான மோதல் உக்கிரமடையும் போது இது மேலும் அதிகரிக்கும்.

## ஐரோப்பாவும் ஆப்கானிஸ்தானில் யுத்தமும்

இராணுவ மட்டத்தில் ஆப்கானிஸ்தானிய யுத்தமானது முன்னர் நிகழ்ந்த சேர்பிய யுத்தம் போன்றே, அமெரிக்க யுத்த தந்திரத்தின் முன் ஐரோப்பிய இராணுவத்தின் தாழ்ந்த நிலையையே மீண்டும் அம்பலப்படுத்தியுள்ளது.

இந்த யுத்தத்தின் ஒரே இலக்கு அமெரிக்க மேலாதிக்க நிலைக்கு சவாலாக இருந்து கொண்டுள்ள அமெரிக்காவின் ஐரோப்பிய எதிரிகளை பலவீனப்படுத்துவதே என்ற கூறுவது சற்று மிகைப்படுத்தலாக கருதக் கூடியதாகும். ஆனால் நிச்சயமாக அதுவொரு பிரதான குறிக்கோளாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமெரிக்காவின் யுத்த முயற்சியின் முக்கிய அடிப்படை நோக்கை நாம் பார்க்கும் போது, இது புலப்படும். சிபிக்னியூ பிரேசின்ஸ்கியின் கருத்துப்படி, உலகின் முக்கிய எரிபொருள் வளங்களை கட்டுப்பாட்டில் வைத்திருப்பதும் அப்பகுதியில் இராணுவ முகாம்களை அமைப்பதும் 21ம் நூற்றாண்டின் உலக அதிகாரத்துக்கான திறவுகோலாக விளங்குகிறது. ஆகவேதான் உடனடியாக பார்க்கின் அமெரிக்காவுக்கு சவாலாக ஐரோப்பிய முயற்சிகளை அடக்கி வைப்பது யுத்தத்தின் நோக்கமும், மறைமுக வழியில் அது ஐரோப்பாவை கைப்பற்றுவதுமே.

யுத்தம் ஆரம்பமானதும் ஒரு பொதுவான ஐரோப்பிய வெளியுறவு கொள்கை உருவாக்கும் முயற்சி துண்டு துண்டானது. கொசோவோ யுத்தத்தின் பின் ஐரோப்பிய வெளியுறவு கொள்கைப் பிரதிநிதியாக நியமிக்கப்பட்ட ஜேவியர் சொலானா, வெளிவிவகார நடவடிக்கை ஆணையாளரான கிறிஸ் பட்டென் என்ற இருவரது பெயர்கள் தலைப்பிலிருந்தும் விலக்கப்பட்டன. வெளியுறவு கொள்கை, செயற்பட்டது லண்டன், பாரிஸ், ஜேர்மனி கைகளினால் திடமாக ஆதரிக்கப்பட்டது. ஆப்கானிஸ்தான் புஷ் நிர்வாகத்துக்கு நிபந்தனையற்ற ஆதரவை வழங்கும் டோனி பிளேயரது விரைந்த நடவடிக்கைகளாக ஒரு பொதுவான ஐரோப்பிய பதிலொன்றினை விரக்தி நிலைக்குள்ளாக்கியது.

படிப்படியாக சில ஐரோப்பிய அரசாங்கங்களும் அமெரிக்க அரசாங்கத்தின் மொழிக்கு குறைந்தோ, கூடியோ நிபந்தனையற்ற ஆதரவை பிரகடனம் செய்தன. இதன் பின்னணியில் தமது எண்ணெய் வள முதலீட்டாளர் நலன்களுக்கான மாபெரும் விளையாட்டிலிருந்தும் முற்றாக விலக்கப்படலாம் என்ற அச்சம், அமெரிக்காவின் கடினபோக்கின் அச்சுறுத்தல் என்பன காரணமாக விளங்கியது.

புஷ் நிர்வாகத்துக்கு ஒதுக்கிய அறிக்கை வெளியிட்டமையானது அமெரிக்காவுக்கும் ஐரோப்பாவுக்கும் இடையிலான பதட்ட நிலைமை குறைந்தது என்ற முடிவுக்கு வருதல், முழுமையான தவறாகும். சமூகத்திய ரீதியில் பொதுவாக உத்தியோக பூர்வ அறிக்கைகளை மத்தியஸ்தமாக அரசாங்கப் பிரதிநிதிகள் வெளியிட்டாலும் நேரடியான அரசாங்கப் பொறுப்புகள் அற்ற அரசியல்வாதிகளின் அறிக்கைகளும், பத்திரிகை வெளியீடுகளும் ஐரோப்பிய வல்லரசுகளின் உண்மை மனப்பான்மை வெளிப்படுத்தியதுடன் யுத்தத்தின் ஐரோப்பாவின் பிரதிபலிப்பு பற்றிய குறிப்பிடத்தக்க அம்சங்களை புலப்படுத்தின.

ஒரு அரசியல் புள்ளியான முன்னைய ஜேர்மனிய சான்சலர் ஹெல்முட் தனது எண்பதாவது வயதை எட்டியுள்ள ஹெல்முட் ஷெமிட் அமெரிக்க வெளியுறவு கொள்கையின் உந்துவிசை பற்றிய ஐரோப்பிய தலைவர்களின் உணர்வுகளை நன்கு புலப்படுத்தி காட்டினார். செப்டெம்பர் 11ம் திகதி சம்பவத்திற்கு ஒரு வருடத்திற்கு முன் அவர் ஹம்பேர்க் பல்கலைக் கழகத்தில் 'புதிய நூற்றாண்டில் ஐரோப்பாவின் சுய வலியுறுத்தல்' என்ற தலைப்பிலான பேச்சொன்றில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

அமெரிக்கர்கள் சோவியத் ஒன்றியம் கலைக்கப்பட்ட பின் நாமே உலகின் ஒரே ஒரு வல்லரசு பலம் கொண்டவர்கள் என்று கருதுகின்றனர். அது உண்மையாயிருக்கலாம். சிலர் இதற்கு மேலாக சென்று முழு உலகமும் ஆளுபவர்கள் நாமே என்றும் கருதுகின்றனர். இது தவறாகும். அவர்கள் விரும்புவதைப் போல் தான் இல்லை என்பதை அறியாமல் உள்ளார்கள். அமெரிக்காவின் அரசியல் வர்க்கத்திற்கு ஒரு மிகவும் வரையறுக்கப்பட்ட விளக்கங்களை காலாகாலம் கொண்டிருப்பினும் இன்றைய உலக சம்பவங்கள் முன்னரைப் போலில்லை."

ஷெமிட் 1999ல் இணைக்கப்பட்ட நேட்டோ கொள்கை அறிக்கையை மிகப் பலமாக தாக்குகிறார். அது நேட்டோ கூட்டு நாடுகளின் எல்லைக்கப்பால் சென்று உலக ரீதியில் தலையீடு செய்யும் பணியினைக் குறித்ததை எதிர்க்கிறது. 'இதற்கு பின்னணியிலுள்ள நோக்கம்' அமெரிக்கா ஜெனரல்களையும் விமானங்களையும் ஏவுகணைகளையும் வழங்குகிறது ஐரோப்பா படையினர்களை வழங்குகிறதா? எனக் குறிப்பிட்டார்.

இவர் தற்போதைய போரின் பின்னாலுள்ள நிபுணர் ஒருவரான ஸ்பிக்னியூ பிரேசின்ஸ்கி பற்றி குறிப்பாக சுட்டிக் காட்டுகிறார் - தொடர்ந்து குறிப்பிடுகையில் 'ஒரு புத்தகத்தில் ஒரு பிரதான கட்டுரையானது வெளிப்படையாக அமெரிக்கா ஒரே வல்லரசாக 'ஐரோப்பிய ஆசிய கண்டத்தை தனது கட்டுப்பாட்டில் வைத்திருக்கும்' பண்புகொண்டதாக கருதிக் கொண்டிருக்கின்றது.' இந்த எல்லைகள் பெண்டகோனையுமீறி உள்ளன.

'இது ஒன்றும் அதிசயமானதல்ல,' ஷெமிட் முடிவுரையாக கூறுகிறார். 'அதாவது ஐரோப்பிய அரசாங்கத் தலைவர்கள் அண்மையில் கூடி ஆழமாக விமர்சிக்கையில், பொஸ்னியா, கொசோவோ சம்பவங்களின் அனுபவங்களின் பின் ஒரு பொதுவான வெளியுறவு பாதுகாப்பு கொள்கை நிறுவப்பட வேண்டுமென தீர்மானித்தனர். பத்தாண்டுகளுக்கு முன் ஒரு பிரான்ஸ் குடிமகனுக்கு இத்தகைய எண்ணம் இருந்திருக்கக் கூடும். ஆனால் வேறெந்த ஐரோப்பியருக்கும் இருந்திருக்கவில்லை. வாஷிங்டனின் அதிகார சக்திக்கு பதில் விளைவாயுள்ள இன்றைய பொது கருத்து இதுவாக அமைந்துவிட்டது.'

## ஐரோப்பிய பத்திரிகைகளில் அமெரிக்கா மீதான தாக்குதல்கள்

யுத்தம் ஆரம்பமானதும் பிரான்ஸ் ஜேர்மனிய பிரித்தானிய பத்திரிகைகள் பல வெளிப்படையாக அமெரிக்காவை தாக்கின. ஜேர்மனிய அரசாங்கத்தின் உள் வட்டாரத்தில் கூடிய நெருங்கிய தொடர்பு கொண்டதாயும் ஏறத்தாழ இரண்டு மில்லியனுக்கு மேற்பட்ட பிரதிகள் விற்பனை செய்வதுமான ஜேர்மனிய டெர் ஸ்பீகல் செய்திச் சஞ்சிகை விளங்குகிறது. அது யுத்தத்தைப் பற்றிக் குறிப்பிடுகையில் அகமட் ராசிட்டின், 'தலிபான், இஸ்லாம், எண்ணெய் என்பனவும் மத்திய ஆசியாவின் புதிய பெரும் விளையாட்டும்' என்ற இந்த யுத்தத்தின் உண்மை நோக்கை சுட்டிக் காட்டும் புத்தகத்தை தொடராக வெளியிட்டார்.

தனது ஒரு கட்டுரையில் டெர் ஸ்பீகல் வாஷிங்டனின் 'புதிய சாம்ராஜ்ஜிய கனவு' என்று கார்ட்டூக் குறிப்பிட்டுக் கண்டிக்கிறது. 'கட்டுப்பாடற்ற ஆரம்ப நம்பிக்கை "முற்றாக சிதைக்கப்பட்டுவிட்டது' என அது எழுதுகிறது. செப்டெம்பர் 11ம் திகதிய தாக்குதலின் பின் நிபந்தனையின்றி அமெரிக்க பக்கம் சார்ந்த பல ஐரோப்பியர்கள் இது பற்றி சிந்திக்க தலைப்பட்டுள்ளனர்' என அது குறிப்பிடுகிறது.

இது மேலும் குறிப்பாக அமெரிக்கா சர்வதேச கடப்பாட்டை நிராகரித்த பாவனைமுறையும் ஏ.பி.எம். உடன்படிக்கையை ஒரு தலைப்பட்சமாகக் கலைத்துக் கொண்டமைந்தன. ஆயுதப் பரிசோதனத்தில் சர்வதேசக் கட்டுப்பாட்டை ஏற்க மறுத்தமை, டென்ஹேக்கின் சர்வதேச நீதிமன்றத்துக்கு ஆதரவளிக்க மறுத்தமை, அமெரிக்காவிலேயே நடமாட்டத்துக்கு அமெரிக்க போர்மன்றங்களை உருவாக்கியமை என்பன போன்ற விடயங்களை சுட்டிக் காட்டுகிறது.

அதே சமயம் அத்திலாந்திக்கின் மறு பக்க நிர்வாகம் கிளின்டனின் கீழ் காணப்பட்டிருந்த வெளிப்படையான தனது வெளியுறவு கொள்கையின் வழிகாட்டிய கோட்பாடாக அமெரிக்க தேசிய நலன்களின் மேலான் என்றதை வகையாண்டது. இத்தகைய முன்னையைப் பலர்களிடையே காணப்பட்டன. இந்தக் கண்ணோட்டத்தை மிகக் கூடுதலாக விளங்க வைக்க ஒரு உதாரணத்தை எடுத்துக்காட்ட என்னை அனுமதியுங்கள்.

ஜனாதிபதி தேர்தலுக்கு சற்று முன்னதாக ஜனாதிபதியின் பாதுகாப்பு ஆலோசகரான கொண்டலீசா ரைஸ் வெளியுறவுத் துறை பற்றிய கட்டுரை ஒன்றை எழுதியிருந்தார். அதில் அவர் இந்த உண்மையை அதாவது 'அமெரிக்காவிலுள்ள அநேகர் (எப்போதும் போல்) அதிகார அரசியல், பெரிய அதிகாரம் சமபல அதிகாரங்களைக்கையாள்வது பற்றி கிலேசமடைந்துள்ளனர். சற்று கூடிய வகையில் அவர் மேலும் 'இத்தகைய கிலேசமானது அநேக அரசுகளால் ஆதரிக்கப்பட்டும், குறிப்பாக ஐக்கிய நாடுகளால் ஆதரிக்கப்படும் நம்பிக்கையான, சட்ட பூர்வமான அதிகார பிரயோகம் அவசியம் என்பதற்கு இட்டுச் செல்லக்கூடியது. 'தேசிய நலன்' என்பது மனிதாபிமான 'நலன்' அல்லது 'சர்வதேச சமூகத்தின் நலன்' என மாற்றியமைக்கப்பட்டுள்ளது. பல சிந்தனைகளில் ஆழமாக வேரூன்றிய ஒன்று அல்லது ஒருவருக்காக அமெரிக்கா சட்டபூர்வமாக அதிகாரத்தை பிரயோகிப்பது என்ற நம்பிக்கை கிளின்டன் நிர்வாகத்திலும் பலமாக ஒலித்தது. உண்மையில் சகல சமூகங்களுக்கும் நலன் புரியும் ஏதாவதொன்றை செய்வதில் தவறொன்றுமில்லை. ஆனால் அது இரண்டாவதானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமெரிக்காவின் தேசிய நலன்களுக்கான நடவடிக்கை ஆனது சுதந்திரம், சந்தை மற்றும் சமாதானத்தை முன்னேற்றும் நிபந்தனைகளை உருவாக்கும்" என்று எழுதுகிறார்.

நாம் இத்தகைய அறிக்கைகளையும் அண்மைக்கால அரசியல் அபிவிருத்திகளையும், அமெரிக்க, ஐரோப்பிய உறவுகள் அதன் கீழுள்ள பொருளாதார காரணிகளை கவனிப்பின் நாம் நிச்சயமாக அமெரிக்க, ஐரோப்பிய உறவுகள் அதன் கீழுள்ள பொருளாதார காரணிகளை கவனிப்பின் நாம் நிச்சயமாக அமெரிக்க, ஐரோப்பா இடையிலான மோதலானது எதிர்கால அரசியல் அபிவிருத்திகளில் அதிகரித்த ஆதிக்க பங்கினை வகிக்கப் போகிறதென முன்கூட்டியே யோசனை சொல்ல முடியும். இதுவரை அரசியல் விவாதத்தின் பின்னணியாயிருப்பது நிச்சயமாக தவிர்க்கமுடியாத விதத்தில் வெளிப்படையாக வெடித்தெழுவதுடன் அரசியலை நிர்ணயிக்கும் காரணியாகவும் அமையும்.

இந்த போக்கினை பற்றிய தெளிவான விளக்கமும் இதையிட்ட தெளிவான கருத்தும் இல்லாவிடில் தொழிலாள வர்க்கத்தில் அரசியல சூயாதீனத்தை நிறுவுவதென்பது அசாத்தியமாகும். அமெரிக்க ஏகாதிபத்தியத்துக்கு எதிர்ப்பளிப்பதை விட்டுக் கொடாது இருப்பதுடன் அதே சமமாக ஐரோப்பிய முதலாளித்துவத்தின், ஏகாதிபத்திய சண்டைக்கும் எதிராஇக இருப்பது எமது கடமையாகும்.

ஐரோப்பாவின் பொருளாதார அரசியல் பிரச்சினைகளுக்கு ஐரோப்பிய மக்கள், குறிப்பாக மத்தியதரவர்க்கம் அமெரிக்காவை குறை கூறுவதற்கான முயற்சிக்கு குறைவே இல்லை. இவர்கள் அமெரிக்காவுக்கு எதிர்ப்பு என்ற போர்வையின் கீழ் தமது அரசாங்கத்தின் பின்னால் செல்லுகின்றார்கள்.

தற்போதுகூட இத்தகைய முயற்சிகள் குட்டிமுதலாளித்துவ ரடிக்கல்வாத பிரிவினரிடையே வரவேற்பைப் பெற்றுள்ளன. மிக விரைவில் ஜேர்மன் பசுமை கட்சியினர் அமைதிவாத போக்கை விட்டு ஏகாதிபத்திய யுத்த முகாமில் நுழைந்தமை புறநிலை முக்கியத்துவம் உடையது. அவர்களது தேர்தல் மேடைகளில், ஜேர்மனிய படைகள் பிரதேசத்துக்கு வெளியே உதாரணமாக நேட்டோ பிரதேசத்துக்கு வெளியே நிறுத்தப்படுவதை எதிர்த்து வந்தனர். அதன் பின் வெளியுறவு அமைச்சர் ஜொஸ்கா பின்பசர் தலைமையில் அவர்கள் ஜேர்மன் படை கொசோவோ மிசிடோனியாவுக்குள் நிலை நிறுத்தப்படுவதை ஆதரித்துடன், சோமாலியாவுக்கும் அண்மையில் காபூலுக்கும் அனுப்பப்படுவதையும் ஆதரித்துள்ளனர்.

## லெனினுடைய ஏகாதிபத்தியம்

முதலாம் உலகப் போரின்போது லெனின் தனது ஏகாதிபத்தியம் என்ற நூலில் தம்மிடமுள்ள மொத்த வர்க்கங்களையும் ஏகாதிபத்திய வழிக்குள் கொண்டு செல்லும் வாயில் என விபரிக்கிறார். ஏகாதிபத்திய சகாப்தத்தில் இது ஒரு பண்பாகும் என்றார். தொழிலாள வர்க்கம் இதிலிருந்தும் விடுபட வேண்டும் என அவர் எச்சரித்தார். "ஏனையவர்களில் இருந்தும் அதனை எந்தவொரு சீனட் பெருஞ்சுவருமே பிரித்துவைக்காது" என லெனின் விபரித்துள்ளார். லெனின் கூறியதற்கொப்ப சந்தர்ப்பவாதமானது, தொழிலாள வர்க்கத்தின் பிரிவினரை ஏகாதிபத்திய பக்கம் இழுத்துச் செல்லும் அரசியல் தத்துவார்த்த தொழில் நுட்பமாக சேவையாற்றுகிறது.

ஐரோப்பாவின் பொருளாதார அரசியல் பிரச்சினைகளுக்கு ஐரோப்பிய மக்கள், குறிப்பாக மத்திய தரவர்க்கம் அமெரிக்காவை குறை கூறுவதற்கான முயற்சிக்கு குறைவே இல்லை. இவர்கள் அமெரிக்காவுக்கு எதிர்ப்பு என்ற போர்வையின் கீழ் தமது அரசாங்கத்தின் பின்னால் செல்லுகின்றார்கள். லெனின் கூறியதற்கொப்ப சந்தர்ப்பவாதமானது, தொழிலாள வர்க்கத்தின் ஒரு பிரிவினரை ஏகாதிபத்திம் பக்கம் இழுத்துச் செல்உம் அரசியல் தத்துவார்த்த பொறிமுறையாக சேவையாற்றுகிறது.

பூகோளமயமாக்கலுக்கு எதிரான இயக்கங்கள் என்று சொல்லப்படுகின்ற இயக்கத்தின் மத்தியிலும் குட்டி முதலாளித்துவ தீவிரவாதிகள் மத்தியுல்ம, சமூகஜனநாயக வாதிகளின் இடதுசாரி பிரிவினரிடமும், தொழிற்சங்க பழைய ஸ்டாலினிச அதிகாரத்தின் மத்தியிலும் தொழிலாளர்களின் சமூக நலன்களுக்காக கோசம் எழுப்புவதையும், ஐரோப்பிய அல்லது இனவெறியையும் ஏதோ ஒரு விதத்தில் ஏற்கனவே பல போக்குகள் உள்ளன, என அமெரிக்காவுடன் ஒப்பிட்டு கூறி அடையாளம் காட்டுகின்றனர். அமெரிக்க மேலாதிக்கத்துக்கு எதிரான போராட்டத்தில் தத்தமது அரசாங்கங்களுடன் பொதுவான அம்சத்தை ஏற்படுத்திக் கொள்ளவே விரும்புகின்றனர்.

ஜேர்மனியில் இந்த அடிப்படையில் புதிய அரசியல் இயக்கத்தை கட்டியெழுப்பும் முயற்சி முன்னேறியுள்ளது. அட்டாக் என்ற இயக்கம், முன்னாள் சமூக ஜனநாயக கட்சிகள் தலைவர் ஒகார் லாபென்சைனுக்கு பி.எஸ்.டி. தலைவர் ஜெகோனசகி, முன்னால் அச்சக யூனியன் தலைவர் டெட்லெவ் ஹென்சி, கிரின்ஸி என்பனவருக்கு அரங்கையமைத்துக் கொடுத்துள்ளது. நன்கு கூட்டப்பட்ட பொது மேடைகளில் அவர்கள் தோள்களை உரசி, ஒருவரை ஒருவர் மோப்பமிட்டு, தமது வேறுபாடுகளை, விவாதித்து பார்வையாளரது இயல்பினை பரீட்சித்து பார்க்கின்றனர்.

இந்த நிறுவனத்தின் வெற்றி நிச்சயமல்ல. ஆளும் கனவான்களுக்கு அடிபணியும் நிகழ்வுப்போக்கில் அவர்கள் விரைவாக வலது பக்கமாக நகர்ந்து கொண்டுள்ள சமயத்தில் சக்திவாய்ந்த புறநிலை நிலைமைகள் மக்களை இடது பக்கம் இழுத்துச் செல்கின்றன. எமது பக்கத்தில் இருந்து செய்யும் பலமான அரசியல் தலையீடே தொழிலாளர் வர்க்கத்துக்கு புதிய மத்தியவாத பொறிக்கிடங்கை உருவாக்கும் இவர்களது முயற்சிகளை முறியடிக்க வல்லது.

1924ல் வெளியிட்ட "உலக அபிவிருத்திக்கான முன்நோக்குகள்" என்ற உரையில் லியோன் ட்றொட்ஸ்கி அமெரிக்காவானது "ஐரோப்பாவை பங்கீட்டில் வைக்கின்றது" என்றார்.

அமெரிக்க முதலாளித்துவமானது ஐரோப்பாவை போட்டியிடும் தகுதியுடன் இருப்பதற்கு இடமளிக்காதிருக்கு கட்டாயப்படுத்தப்பட்டுள்ளது. அது இங்கிலாந்தைப் போல பிரான்ஸ், ஜேர்மனி, குறிப்பாக ஜேர்மனியை, அமெரிக்க முதலாளித்தும் தான் தேடியுள்ள அனைத்துலக சந்தைகளை மீளப்பெறுவதை மதிக்காது. ஏனெனில் அது தற்போது ஏற்றுமதி முதலாளித்துவமாக பண்ட முலீட்டு ஏற்றுமதிக்கான-முலாளிதத்துவமாகியுள்ளது." அமெரிக்க முதலாளித்துவம் உலக ஆதிக்கத்துக்கான நிலையை தேடி அலைகிறது. எமது கண்டத்தில் ஓர் அமெரிக்க ஏகாதிபத்திய எதேச்சதிகாரத்தை நிறுவ விரும்புகிறது அதுதான் அதன் விருப்பமாகும்."

ட்றொட்ஸ்கி எழுதுகிறார்: "அது முதலாளித்துவ ஐரோப்பாவை பங்கீட்டில் தள்ளிவிட விரும்புகிறது." அது சந்தைகளை பிரிவுகளாக்கும் அது ஐரோப்பிய நிதியிடல் கைத்தொழில் துறை நடவடிக்கைகளை முறைப்படுத்தும் தொன்கள் எவ்வளவு, லீட்டர் எவ்வளவு கிலோ கிராம் எவ்வளவு என வகுக்கும். அத்துடன் ஐரோப்பா எந்த பொருளை வாங்கவோ விற்கவோ உரிமை கொண்டதென தெரிவிக்கும்."

இரு ஆண்டுகளுக்குப் பின் இந்த உரைக்கு முகவுரையாய் எழுதிய கடித சேர்க்கையில் ட்றொட்ஸ்கி எழுதுகிறார், "அமெரிக்காவின் ஸ்தூலமான ஆதிக்க பலத்தின் தள்ளாட்டமானது, முதலாளித்துவ ஐரோப்பாவிற்கான சீர்திருத்தத்திற்கும் பொருளாதார மேன்மைக்குமான சாத்தியப்பாடுகளை தன்னிச்சையாக அகற்றியுள்ளது. முன்னைய காலங்களில் உலகின் பின்தங்கிய பிரிவுகளை புரட்சிகரமாக்கியது ஐரோப்பிய முதலாளித்துவமேயாயின், இன்று அதி முதிர்ச்சியுள்ள ஐரோப்பாவை புரட்சிகரமாக்குவது அமெரிக்க முதலாளித்துவமேயாகும். பாட்டாளி வர்க்க புரட்சியைத் தவிர்ந்த, சுங்கவரிகள், அரச எல்லைகளைத் தவிர்த்தல் ஐக்கிய சோவியற் அரசுகளை ஐரோப்பாவில் உருவாக்குதல், ஐக்கிய சோசலிச சோவியற் ருஷ்யாவுடனும், சுதந்திர ஆசிய மக்களுடனுமான கூட்டுறவுடனான ஐக்கியம், இதனைத் தவிர்த்து பொருளாதாரக் குருட்டுத்தன்மையான கூட்டாளிகளிடமிருந்தும் விலக்கிக் கொள்ள அவளுக்கு வேறு வழியெதுவுமே கிடையாது. இத்தகைய பிரமாண்டமான போராட்டத்தின் தீர்க்கமான அபிவிருத்தியானது தவறற்று தற்போதைய முதலாளித்துவ அதி உயர் கனவானரான அமெரிக்காவுக்கு மாறான புரட்சிகர சகாப்பதத்தை தோற்றுவிக்கும்".

இந்த ஆய்வானது குறிப்பிட்ட சில சாத்தியமான திருத்தங்களுடன் இன்றும் அதன் பெறுமதியை பேணிவருகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமெரிக்க பொருளாதார காப்பு பலம் 75 வருடங்களுக்கு முன்னர் இருந்ததிலும் பார்க்க குறைந்துள்ளது. லேன்கஸ்டரின் படிக்கையின் பின் காணப்பட்ட ஐரோப்பிய சிறுவலயமும் நகர்வும் மிக குறைந்தளவானது என்று காணப்படுகிறது. உலக ஆதிக்கப் பலப் போராட்டமானது மேலும் கொடியதாகவும் பரந்துபட்ட பல்தரப்பட்டதாகவும் இடம் பெறுவதுடன் பாட்டாளி வர்க்கப் புரட்சி ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் மேலும் நெருங்கிய தொடர்பை அதாவது 1920ல் ட்ரொட்ஸ்கி தொலை நோக்காக கண்ட புரட்சியிலும் பார்க்க நெருங்கிய தொடர்புடையதாக அமையப் போகின்றது என்பதையே உணர்த்துகின்றது.'

தற்போது 1920களின் காணப்பட்டதைப் போன்று அமெரிக்காவுடனான மோதல் முதலாளித்துவ ஐரோப்பாவை பாட்டாளி வர்க்கப் புரட்சியைத் தவிர்த்த வேறெந்த வழியுமே இல்லை என்பதையும் குருட்டாம் போக்கான பாதைக்கே அது தள்ளப்பட்டிருக்கிறதென்பதையும் காட்டி நிற்கிறது. இது பழைய கண்டத்தில் பொருளாதார, சமூக, தேசிய மோதல்களை அதிகரிக்கச் செய்யும்.

இது குறித்து பல அறிகுறிகள் காணப்படுகின்றன. யூரோ நாணயத்தின் வெற்றி அத்துணை நிச்சயமில்லை என ஏற்கனவே ஆக்கிரமிப்பான எச்சரிக்கைக் குரல்கள் ஒலித்திருந்தன. பொருளாதாரக் கொள்கை, வரிக் கொள்கை, சமூகக் கொள்கை, வெளியுறவு கொள்கை என்பன பன்னிரண்டு தனிப்பட்ட அரசாங்கங்களின் கைகளில் இருக்கும் போது பொதுவான நாணயமொன்று எவ்வாறு நடைமுறைப்படுத்தப்படலாம் என அவர்கள் கேட்டனர். 'கொள்கைகளிலிருந்து நாணயத்தை பிரிப்பதென்பது ஒரு கீழ்த்தரமான வேலை' என அண்மையில் "சூடொச்சே செய்டுங்" அதன் ஆசிரியர் தலையங்கத்தில் எழுதியது. 'அரசியல் நெருக்கடியினால் அரசுகள் பிளவுபடும்போது அல்லது அவை ஒன்றுக்கு ஒன்று எதிராக வரும்போது, வெவ்வேறு நாடுகளையெல்லாம் கூட்டாக கட்டிவைக்கும் நாணயம் துண்டுகளாக உடைக்கப்படும் என வரலாறு எங்களுக்குக் கற்பிக்கின்றது.' என அது எச்சரிக்கை செய்தது.

நாடுகளுக்கும் ஐரோப்பிய ஒன்றியத்துக்கும் இடையே சமநிலைக்கான புதிய விதிகள் அங்கீகரிக்கப்படாது இருப்பின், 'முதலில் ஒன்றியம் ஸ்தம்பிதம் அடைந்து முடமாக்கப்படும். இது அதன் ஸ்தாபனப்படுத்தலையாகி ஒரு அரசியல் எல்லைத்தின் முடிவாக அமையும். ஆகிய நடைமுறைப்படுத்தப்பட்ட பின் பிரச்சினைகள் பெருக்கெடுக்கும். ஐரோப்பா ஆழமான நெருக்கடியை நோக்கி தள்ளப்படும்' என்று அது எச்சரிக்கிறது.

ஆப்கானிஸ்தானிய யுத்தத்துக்கு ஒரு பொதுவான பதிலை வழங்க ஐரோப்பிய அரசாங்கங்கள் இலாயக்கற்றுப் போனமையும் யூரோ நாணயத்துக்குரிய தனது கடமைகளின் அலட்சியப் போக்குகளின் காரணத்தால் தனது அரசாங்கத்திலிருந்து இத்தாலிய வெளிவிவகார அமைச்சர் ரெனாடோ ருகியேரோ இராஜினாமா செய்தமையும் ஐரோப்பிய வர்த்தக வட்டாரங்களில் ஏற்கனவே அபாய மணியை ஒலிக்கச் செய்திருக்கின்றது. ஐரோப்பா தகர்க்கப்பட்டு பேரினவாதத்திற்கு பலவீனப்படுத்தப்படும் என்ற அச்சம் இப்புயாமிடையே தெளிவாக்கப்படுகிறது. ஆடஸ்திரா மட்டுமல்ல பழைய தேசியவாத உணர்வு தலைதூக்கியமை மீண்டும் காட்டப்பட்டதாக பிரதேசவாத இயக்கங்கள் இத்தாலிய லெகாநோர்ட், ஆஸ்திரிய யோர்க்ஹைடர், இயக்கம், பிரதேச அடிப்படையில் எல்லைகளைப் பிரித்து செல்லவேண்டுமென்பதையும் காணக் கூடியதாயுள்ளது.

இதுவும் மேலாக சமூக சேவைகள் ஓய்வூதியம், நலன்புரி சேவைகள், அமெரிக்க தரத்திற்கு பூச்சியத்திற்கிட்டமாக வெட்டப்பட்டால்தான், யூரோ நாணயம் வெற்றியளிக்க முடியும் என சகல பொருளியலாளர், நிபுணர்களும் ஏற்றுக் கொண்டுள்ளனர். அதாவது ஆய்வாளர் தகவல்படி யூரோவுக்கு எதிரான டொலரின் உயர்ச்சியானது இரு தசாப்தங்களாக அமெரிக்க வரவுசெலவு திட்டத்தில் அமுலாக்கப்பட்ட பாரிய வெட்டுக்களே காரணமாகும். என்றும் அதற்கு சமனாக ஐரோப்பாவிலும் நடைபெற வேண்டும் எனவும் கூறுகிறார். அமெரிக்க அரச செலவீனம் ஐரோப்பாவின் மொத்த தேசிய உற்பத்தியின் 16 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் மொத்த தேசிய உற்பத்தியின் 30 சதவீதத்தையே அமெரிக்கா கொண்டுள்ளது.

ஏற்கனவே வேலையில்லாப் பிரச்சினை 10 வீதமாகவும் தெளிவான பின்னடைவுக்கான அறிகுறிகள் தென்படும் வேளையிலும் இத்தகைய வெட்டுக்கள் அமுல் செய்யப்பட்டால் அவை கோடிக்கணக்கான மக்களை பாதித்து பிரமாண்டமான சமூக வெடிப்பினை பெருந்தளவில் உருவாக்கிவிடும்.

## ஐரோப்பிய ஒன்றியத்தின் விரிவாக்கம்

இக்கால பிரச்சினைகளும் ஐரோப்பிய ஒன்றியத்தின் கிழக்கு நோக்கிய விரிவாக்கத்துடன் மேலும் மோசமடையும்.

தற்போதுள்ள திட்டப்படி, அநேகமாக முன்னாள் ஸ்டாலினிச கிழக்கைரோப்பா நாடுகளை கூடுதலாகக் கொண்ட புதிய பத்து அங்கத்தவர்கள் 2004ம் ஆண்டில் ஐரோப்பிய ஒன்றியத்தில் சேருவார்கள். கூடுதலானவை மிகவும் வறிய நாடுகளாகும். இவற்றில் சில மேற்கைரோப்பிய மட்டத்தில் பார்க்கையில், இவற்றில் சில தமது வாழ்க்கைத் தரத்தில் 1/10 பங்கினையாகும். இந்த ஒன்றியத்துக்குள்ளான அவர்களது அனுமதிக்கா நிபந்தனைகளான அவற்றின் வாழ்க்கை தரத்தை மேலும் கீழே தள்ளும் அத்துடன் கோடிக்கணக்கான சிறிய விவசாயிகள், சிறிய வியாபாரிகள் தொழிற்சாலையின் உள்ள தொழிலாளர்கள் பன்பலர்களை உலக சந்தையில் போட்டியிட முடியாத நிலையில் அழித்தொழிக்கும்.

ஆளும் வர்க்க வட்டாரங்களின் மத்தியில் குறிப்பாக ஜேர்மனியில் கிழக்கு ஐரோப்பிய விரிவாக்கம் தொடரப்பட வேண்டும் என்ற பரந்த ஒருமைப்பாடு காணப்படுகிறது. அவர்களுக்கு இது மூலோபாயப் பிரச்சினையாகும். கிழக்கைரோப்பா விலக்கப்பட்டால் அது அமெரிக்காவின் கீழ்செல்வாக்கு அல்லது மீண்டும் ரஷ்ய அதிகாரத்தின் கீழ் வரலாம். அது யூகோஸ்லாவியா போல உள்நாட்டு போருக்குட்பட்டு பிளவுபடலாம் அத்துடன் 'பாதுகாப்பு பிரச்சினை'' உருவாகலாம்.

ஆனால் இத்தகைய பாரிய புதிய இணைப்பினை சமாளிக்குமளவில் ஐரோப்பிய ஒன்றியம் தயார் நிலையில் இல்லை. முன்னைய கிழக்கு ஜேர்மனியின் பெற்ற அனுபவத்தில் நிலைமைகள் அப்போது அங்கு சாதகமாயிருந்தன. முதலாளித்துவ ஐரோப்பாவிற்கு அத்தகைய நாடுகளில் அவற்றின் பிரச்சினைகளை தீர்க்குமளவு வல்லமை இருக்கவில்லை. ஜேர்மனியில் ஒருங்கிணைப்பின் பின் பன்னிரண்டு ஆண்டு கழிந்த பின்னரும் கிழக்கைரோப்பிய வேலையில்லாப் பிரச்சினையானது மேற்கிலும் பார்க்க இருமடங்கு உயர்ந்தும் பெருமளவு சனமும் சிறந்த வேலை தேடிச் சென்றுவிட்ட காரணத்தால் முன்னாள் ஜேர்மனிய ஜனநாயக குடியரசின் முழுப் பிரதேசமும் வெறிச்சோடியும் காணப்படுகிறது.

ஐரோப்பிய ஒன்றியத்தின் கிழக்கை நோக்கிய விரிவாக்கமானது, கிழக்கில் ஓர் சமூக அழிவை உண்டுபண்ணுவது மட்டுமல்ல, மேற்கிலும் சமூக பதட்ட நிலைமையும் உருவாக்கும். கோடிக்கணக்கான பயிற்சி பெற்ற ஆனால் குறைவாக ஊதியம் பெறும் தொழிலாளர்கள் ஐரோப்பிய ஒன்றியத்தில் பிரவேசிப்பது தற்போதுள்ள சம்பள வேலை நிலைமைகளை மேலும் கீழ் நோக்கி தள்ளும் உந்து விசையாக அமையலாம்.

ஐரோப்பிய ஒன்றியம் 15 அங்கத்துவத்திலிருந்து 25 அங்கத்தவராக விரிவாக்கப்படுவது அனைத்துலக மட்டத்தில் தீர்க்கமானது என ஐரோப்பிய நிறுவனத்தின் மறுசீரமைப்பு கருதுகின்றது. ஆனால் இதுவரை எந்தவொரு முன்னேற்றமுமே காணப்படவில்லை. அது ஜேர்மனி, பிரித்தானியா, பிரான்சுக்கிடையிலான பகைமையாலும் பெரிய சிறிய நாடுகளது பகைமைகளாலும் பிளவுபட்டு வருகிறது.

பொருளாதார ரீதியில் பார்க்கின், தற்போதுள்ள மட்டத்தில் விவசாயிகள் வறிய பிரிவினருக்கான மானியம் வழங்கப்பட்டால் கிழக்கு விரிவாக்கத்தினால் ஐரோப்பிய ஒன்றியமானது வங்குரோத்தடைய நேரும். உதவி தொகை குறைக்கப்படின் மேலதிக சமூக பதட்ட நிலையை உருவாக்குவதுடன் தற்போதைய அங்கத்தவரின் மத்தியில் மேலும் பிளவுகளை உருவாக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஐரோப்பிய பயங்கரவாத எதிர்ப்பு சட்டம்

தவிர்க்க முடியாத தீர்க்கமான சமூக முரண்பாடுகளை எதிர்பார்த்து ஐரோப்பிய அரசாங்கங்களினது முக்கிய தயாரிப்பாக, பாரிய அடக்குமுறை இயந்திரத்தினை கட்டியெழுப்புவதே விளங்குகிறது. இந்த அடிப்படையிலேயே செப்டெம்பர் 11ம் திகதி சம்பவங்களின் பின் அவர்களது பிரதிபலிப்பு நடவடிக்கை காணப்படுகிறது. இதுவரை பாரிய ஒரு இதுபோன்ற தாக்குதல் ஐரோப்பாவில் இடம்பெறாதிருப்பினும், அவர்கள் அதற்கான அம்சத்தை புஷ் நிர்வாகத்திடமிருந்து பெற்று ஜனநாயக உரிமைகளின் மீதான பாரிய ஒரு தாக்குதலை தூண்டியுள்ளனர். ஒரே விதமானவகையில் அநேக ஐரோப்பிய பாராளுமன்றங்களில் புதிய, பயங்கரவாத எதிர்ப்பு சட்டங்கள் என்ற பெயரிலான சட்டங்கள் விரைந்து கொண்டுவரப்பட்டன. பொலிசாருக்கும் இரகசிய சேவைகளுக்கும் மேலதிக அதிகாரங்கள் வழங்கப்பட்டன. அதே சமயம் சிவில் உரிமைகள் முக்கியமாக வெளிநாட்டவரது சிவில் உரிமைகள் பாரியளவு தடைப்பட்டுள்ளன. உதாரணமாக ஜேர்மனியை எடுத்துக் கொண்டால், பொலிஸ், இரகசிய சேவைகளுக்கு இடையேயிருந்த கடுமையாக பிரிந்திருத்தல் முற்றாக ஒழிக்கப்பட்டுள்ளது. இந்த வேறுபாடு ஹிட்லரின் சகல அதிகார பலமுள்ள இரகசிய அரச பொலிசான கெஸடவோ வீற்றின் நாசி ஆட்சியின் வீழ்ச்சியின் பின் நிறுவப்பட்டிருந்த ஒன்றாகும்.

இத்தகைய சகல நடவடிக்கைகளும் ஒரு தனி நபராலோ அல்லது நிறுவனத்தினாலோ செய்யப்பட உள்ள பயங்கரவாத செயலுக்கெதிராக தொடுக்கப்பட்டவையாக அல்லாது தற்போது ஆட்டம் கண்டுள்ள ஆட்சி முறைக்கு எதிராக உருவாகியுள்ள சமூக அல்லது அரசியல் மக்கள் இயக்கத்துக்கு எதிராக கொண்டுவரலப்பட்டவையே என்பது மிகவும் தெளிவானதாகும்.

இராணுவமயமாக்கலுக்கும் யுத்தத்திற்கும் எதிர்ப்பு ஜனநாயக உரிமைகளின் தாக்கதலுக்கு எதிர்ப்பு சீரழியும் சமூக நிலைமைகளுக்கு எதிர்ப்பு என்பன ஐரோப்பா பூராவும் பிரபல மக்கள் கிளர்ச்சி இயக்கங்களை உருவாக்கும் என்பதில் எதுவித ஐயமுமே கிடையாது. இச்சகல விடயங்களிலும் நாம் முன்னணியில் நிற்கவேண்டும்.

நான்காம் அகிலத்தின் அனைத்துலக குழுவின் முன்நோக்கிலிருந்தும், உலக சோசலிசப் புரட்சி மூலோபாயத்தில் இருந்தும் பிரிந்து கொண்டு யுத்தத்திற்கு எதிராகவும், சமூக நிலைமைகள், ஜனநாயக உரிமைகளை பாதுகாக்கும் தொடர்ச்சியான போராட்டத்தை நடத்த முடியாது.

ஐரோப்பிய முதலாளித்துவத்தை பாதுகாப்பவர்களிடம் தவிர்க்க முடியாத தர்க்கம் உள்ளது. ஏனென்றால்- அது மிகவும் சமூகமயமானது, மிகவும் கலாச்சாரமுடையது, மிகவும் நியாயமானது- அமெரிக்க மேலாதிக்கத்துக்கு எதிரானது. பூகோளமயமாக்கத்திற்கு எதிரான இயக்கத்தினை -"சமூக சந்தை பொருளாதாரத்திற்கு எதிராக புதிய தாராண்மை பூகோளமயமாக்கத்தை" இவர்கள் பாதுகாக்கிறார்கள். அமெரிக்காவுக்கு எதிரான போராட்டத்தில் ஐரோப்பிய முதலாளித்துவம் உள்நாட்டில் தொழிலாளர் வர்க்கத்துக்கு தாக்குதல் நடத்தும் போது அமெரிக்க எதிர்ப்பு போராட்டங்களில் ஐரோப்பிய முதலாளித்துவத்தின் பக்கம் சார்வதும் அசாத்தியமாகும். ஐரோப்பாவின் சமூக அல்லது அரசியல் மக்கள் இயக்கம், அமெரிக்காவுடனான மூலதன போட்டியில் ஐரோப்பிய மூலதனத்தை தீர்க்மாக குறைத்து மதிப்பிடுகிறது. அமெரிக்க மேலாதிக்கத்திற்கு எதிரான போராட்டத்திற்கு இதனால் இத்தகைய இயக்கங்களை அடக்கும் அல்லது நடுநிலைப்படுத்தி வைக்க முதலாம் உலக போரின் போது ஜேர்மனிய சமூக ஜனநாயகவாதிகள் கையாண்ட "பேர்க் பிரிடன்" என்ற கொள்கை தேவைப்படுகிறது.

நாம் குட்டிமுதலாளித்துவ தீவிரவாதிகளது அநாகரிகமான அமெரிக்க எதிர்ப்பியக்கத்தினை நிராகரிக்கின்றோம். இரு அமெரிக்கா (இரு ஐரோப்பா) உள்ளது என்பது எமது நிலைப்பாடாகும். முதலாளித்துவத்தின் அமெரிக்கா ஒன்று. தொழிலாளர் வர்க்க அமெரிக்கா மற்றொன்று. நாம் அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கு எதிராக அனைத்துலக தொழிலாளர் வர்க்கத்தை அணிதிரட்டுவதற்கான போராட்டத்தையே அடிப்படையாக கொண்டுள்ளோமே அன்றி ஐரோப்பிய முதலாளித்துவ பிரிவினர் அல்லது அவர்களது நடுத்தரவர்க்க ஆதரவாளரையோ அடிப்படையாக கொண்டல்ல.

அமெரிக்க- ஐரோப்பிய மோதல் தீவிரமாகவும் பரந்துபட்டதாக்கப்படும் போது இந்த கேள்வி நிச்சயமாக முன்னுக்கு கொண்டுவரப்படுவதுடன் சகலவிதமான சதந்தர்ப்பவாத போக்குகளையும் சோசலிசத்தையும் பிரித்துக் காட்டும் கோடொன்றாகவும் அது விளங்கும்.

கடந்த தசாப்தத்தில் ஆழமான மாற்றங்கள் ஐரோப்பாவின் நிலப்பரப்பின் அரசியலில் தமது அறிகுறிகளை விட்டுச் சென்றுள்ளன. பழைய சகல கட்சிகளுமே ஆழ்ந்த நெருக்கடியிலுள்ளன. மரபுரீதியான முதலாளித்துவ வலதுசாரியின் சீரழிவு சீர்குலைவிலிருந்து இது ஆரம்பமாகிறது. இத்தாலிய கிறிஸ்தவ ஜனநாயகவாதிகள் அரசியல் அரங்கிலிருந்தும் அகன்றுவிட்டார்கள். பிரான்சிய கோல்வாதிகளும் தாராண்மைவாதிகளும் அநேக பிளவு பிரிவுகளுக்குள்ளாகியுள்ளனர். பிரித்தானிய டோரிகள் கடந்த தேர்தலில் ஒட்டப்பட்டுவிட்டனர். கடைசியாக 1998ல் அதிகாரத்தை இழந்த பின் உட்பிரிவுகள், நிதி ஊழல்களுக்குட்பட்ட கிறீஸ்தவ ஜனநாயகவாதிகள் மறைந்து போயுள்ளனர்.

இந்தக் கட்சிகள் மரபுரீதியாக தங்கியிருந்த மத்தியதரவர்க்கத்தின் முனைவாக்கமே இந்நெருக்கடிக்கான முக்கிய காரணமாகும். பெரிய பகுதியான மத்தியதர வர்க்கத்திற்கும் தொழிலாள வர்க்கத்திற்கும் பெரிய வர்த்தகர்களின் நலன்களையும் இனியும் ஒன்றிணைப்பது சாத்தியமாகாது.

பழமைபேணும் கட்சிகளின் நெருக்கடி சமூக ஜனநாயகவாதிகளின் மீள் எழுச்சிக்கு வழிகோலியது. 1998ல் சகல பிரதான ஐரோப்பிய நாடுகளும் ஸ்பெயினை தவிர்த்து, சமூக ஜனநாயகவாதிகளின் ஆட்சியிலிருந்தன. சற்று குறைந்த தீங்கு விளைவிக்கக் கூடியதாக தொழிலாள வர்க்கம் அவர்களை கருதியதால் ஓரளவுக்கு தொழிலாளர்களின் ஆதரவை அவர்கள் பெற்றிருந்தனர். பழமை பேண்வாதிகளிடம் இருந்து விலகிய சில மத்திய தரவர்க்க பரிவினரது ஆதரவையும் ஓரளவிற்கு அவர்களால் பெற முடிந்தது. அதுதான் பிளேயரின் சுலோகமான "மூன்றாது பாதை"க்கு பின்னால் இருந்தது. இது ஜேர்மனியில் ஸ்குறுடரினின் சுலோகமாக "நியூமிட்ரி" என்றும் 'புதிய' நடுவழி பிரதேசம் என மொழி பெயர்க்கப்பட்டிருந்தது. பிளேயரும் ஸ்குறூடரும் தாங்கள் அடிப்டையாக கொண்ட நடுவழி பிரதேசம் படிப்படியாக அற்று போகின்றது என்பதை கவனிக்கத் தவறிவிட்டனர்.

சமூக ஜனநாயகவாதிகள் பதவியிலிருக்கையில் வெகுவிரைவில் அவர்கள் பழமைபேண்வாதிகளுக்கு எந்தவொரு மாற்றீடாகவும் விளங்கவில்லை எனக் காண்பிக்கப்பட்டதுடன் அவர்களது வீழ்ச்சி ஆரம்பமாகியது. இத்தாலியில் பதவிக்கு வர ஐம்பதாண்டுகள் தேவைப்பட்ட முன்னால் ஸ்டாலினிஸ்டுகளுக்கு, அதனை இழக்க மூன்றாண்டுகளே தேவைப்பட்டது. பிரான்சில் கோல்வாதிகளான ஜக்குவிஸ் ஷிராக் ஏப்ரல் ஜனாதிபதி தேர்தலில் வெல்ல வாய்ப்பிருந்ததுடன் இரண்டாவது தடவையாக ஸ்குருடர் வர வாய்ப்புள்ளதாக இருவாரங்களுக்கு முன் தென்பட்டது. ஜேர்மனியில் கார்கால சமஷ்டி தேர்தல் முடிவுகள் தற்போது வெளிப்படையாக தென்பட ஆரம்பித்துள்ளது.

நான் முன்பு குறிப்பிட்டதை போல, ஜேர்மனிய பசுமைக்கட்சி படிப்படியாக ஏகாதிபத்திய இராணுவமயமாக்கல் முகாமுக்குள் நுழைந்ததானது, குறிப்பிடத்தக்க முரண்பாடாகும். அவர்கள் எப்போதும் தூய மத்தியதர வர்க்க கட்சியாவர். அது 68ன் எதிர்ப்பு இயக்கதிலிருந்தும் உருவானதாகும். தமது முன்னைய நிலைப்பாடுகளை அவர்கள் கைவிட்ட வேகமானது அதன் ஆழ்ந்த பரந்த வெடித்தெழும் முரண்பாடுகளுக்கான அளவுகோலாகும். சமுதாயத்தை ஒரு புறமாக கிழித்தெறிவதை விட, அவர்களுக்க எத்தவொரு அரைகுறை வழிக்கான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடமிருக்கவில்லை.

## அதிதீவிர வலதுசாரி அரசியல் உருவாக்கத்தின் பங்கு

கடந்த முந்நூற்றாண்டுகளுக்கும் மேலாக மரபுவழிக் கட்சிகளின் சீரழிவினால் ஏற்பட்ட வெற்றிடத்தை தீவிரவாத வலதுசாரி அமைப்புக்களினால் மீண்டும் மீண்டும் நிரப்பும் பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. ஒரு விதியாக இக்குழுக்கள் சமூக பிரச்சினைகளுக்கு அந்நிய நாட்டினரிடம் காட்டும் வெறுப்பு வளர்ச்சியுடனான இக்குழுக் கூட்டாக முழக்கமிட்டன. ஒரு சில விடயங்களில் பொதுவான அதிருப்தியிலிருந்து இலாபத்தை பெற அவர்களுக்கு முடிந்ததுடன் கணிசமானளவு வாக்குகளையும் பெற்றனர். ஆனால் அரசாங்கத்தினுள் நுழைந்ததும் அவர்கள் ஸ்திரமற்றும் ஊழல் மோசடிகளுக்கு உட்பட்டவர்களாகின்றனர். ஆஸ்திரிய ஹெய்டர் சுதந்திரக் கட்சி போல தாராண்மை பொருளாதார கொள்கையை அமுல்படுத்துபவர்களுக்கும், மக்களிடையேயுள்ள பிரபல வேலைத்திட்டங்களுக்கு செவிசாய்ப்போர் இடையேயும் பிளவுகள் ஏற்பட்டன.

இது அவர்களை புது முயற்சிகளை உருவாக்குவதிலிருந்தும் தடுக்காததுடன் ஆளும் அதிகாரப் பிரிவில் பரந்த பகுதியினரின் மத்தியில் கணிசமானளவு ஆதரவையும் பெறவைத்தது. முதலாளித்துவத்தின் கணிசமானளவு பிரிவினருடனான ஆதரவுடன் இத்தாலியின் பெர்லுஸ்கோனி அரசாங்கம் நிறுவப்பட்டமை நிச்சயமாக இத்திசையிலான ஒரு தகுதிவாய்ந்த புதிய நடவடிக்கை ஆகும். பெர்லுஸ்கோனி தீவிர வலதுசாரி சக்திகளில் தங்கியிருந்தனர். தேசிய கூட்டமைப்பின் பாசிஸ்டுகள் லேகா நார்ட்டின் அந்நிய நாட்டினரிடம் வெறுப்பு காட்டும் பிரிவினைவாதிகள் அடங்கியிருந்தனர். தனது கூட்டணி போன்று இத்தாலிய அரசையும் தனது சுயவர்த்தக நலன்களின் கருவியாக கொண்டார் 'எல்லாம் ஒன்றுக்கு ஒன்று தனக்கு' என இதன் போக்கு பற்றி ஜேர்மன் பத்திரிகை ஒன்று இவ்வாரம் குறிப்பிட்டது. இந்த அரசாங்கப் பிரதிநிதித்துவம் செய்த தீவிரவாத துறவிய நபர்களும் வலதுசாரி சக்திகள் இதன் மீது பிரயோகித்த செல்வாக்கும் புஷ் நிர்வாகத்துக்கு சமமான ஒன்றாக இதை நிச்சயமாக காட்டும்.

பெர்லுஸ்கோனி அரசாங்கமானது ஐரோப்பாவின் புதுப்பிக்கப்பட்ட உடைவு ஒன்றின் ஆபத்தினை புலப்படுத்துகிறது. அண்மைக்கால ஐரோப்பிய பிடி வாரந்துக்கான கைது மோதல் ஸ்திரமற்ற ஒன்றாக மாறியது. பெர்லுஸ்கோனியின் இஸ்லாமிய மறுப்பு யூரோ நாணயம் தொடர்பாக அரசாங்க அங்கத்தவருடனான தாக்குதல்கள், வெளிவிவகார அமைச்சர் ரெனாட்டோ ருகியேரோவின் இராஜினாமா என்பன புலப்படுத்துவதை இதுவேயாகும்.

ஆஸ்திரியாவில் ஹெய்டரின் சுதந்திர கட்சியானது டெமலின் செக் அணுவலையம் மூடப்பட வேண்டும் என்பது செக் குடியரசை ஐரோப்பிய ஒன்றியத்தில் நுழைய இடமளிக்கும் முன் நிபந்தனையாக வேண்டும் என்ற கருத்துக் கணிப்பை நடத்த கோரியது. கிழக்கு நோக்கி ஐரோப்பிய ஒன்றியம் விரிவாக்கப்படுவதை தடுக்க அணுவாயுத அழிவுபற்றிய நியாயமான அச்சத்தை அணிதிரட்டிக் கொள்ள அவர் முயற்சிக்கிறார்.

ஜேர்மனியில் சான்சலர் ஷ்ரோடருக்கு உத்தியோக பூர்வ சவாலாக வரப்போகும் சமஷ்டி தேர்தலில் பவேரியன் சீ.எஸ்.யூ. எட்மண்ட்' ஸ்டொய்பரை அபேட்சகராக்கியது என்பது இதே திசையிலான ஒரு அபிவிருத்தியையே சுட்டிக் காட்டுகிறது. ஸ்டொய்பரது நியமனமானது அங்கலா மேர்கலுடனான நீண்டபூசலினை தொடர்ந்து ஏற்பட்டதாகும். சீ.டீ.யூ.வின் தலைவரான மேர்கல் முன்னாள் சான்சலர் ஹெல்முட் கோலினால் ஆதிக்கமுடைய ஸ்டொய்பரைவிட பார்க்க மத்தியவாத சமரசவாத மரபுவழி கொள்கையுடையவராகும் கிறிஸ்தவ ஜனநாயகவாதிகளினும் கூடிய வலதுசாரியானவருமாவர்.

ஸ்டொய்பர் சட்டமும் ஒழுங்கும் உள்ள ஒரு மனிதனாக புகழ் பெற்றவர். ஹெய்டரின் சுதந்திர கட்சியின் ஆஸ்திரிய அரசாங்கத்துடனான கூட்டுக்கு ஐரோப்பிய [illegible] பகிஷ்கரிப்பு செய்தபோது பகிரங்கமாக ஆதரவு வழங்கினார். இத்தாலியில் பெர்லுஸ்கோனியின் போர்சா இட்டாலியாவுடன் நெருக்கிய தொடர்புடையவர். அத்துடன் 'பிரதேசங்களின் ஐரோப்பா' என்ற உதாரணமாக பிரதேச ரீதியில் ஐரோப்பாவை பிளவுபடுத்த ஆதரவு கொடுத்தவர்.

இந்தவகை வலதுசாரி சக்திகளின் உறுதிப் நிலைமையானவை ஆதரவு பொதுமக்கள் மத்தியில், அவர்களுக்கு கிடைத்ததால் ஏற்படவில்லை. அவர்களை தொடர்ந்து சமூக ஜனநாயகவாதிகள், பசுமை கட்சியினர் மற்றும் ஸ்டாலினிஸ்டுகள் ஆகிய சக்திகளின் முழுமையான வங்குரோத்தே இதற்கு காரணமாக அமைந்தது. மிகவும் ஆரம்ப நிலையிலான ஜனநாயக உரிமைகளை தன்னும் கூட வாழ்க்கைத் தர உரிமைகளை தன்னும் கூட பாதுகாப்பதற்கு முற்றாக இலாயக்கற்றவர்கள் இவர்கள் என்பது நன்கு நிரூபிக்கப்பட்டிருந்தது. அந்நிய நாட்டினரை வெறுக்கும் மனப்பான்மை முன்னெடுத்து செல்லும் தம்மிடையே சட்டம் ஒழுங்கு கொள்கைகளை தழுவியமையும் இவர்கள் இத்தகைய வலதுசாரி சக்திகளுக்கு வழியமைத்து கொடுத்துள்ளனர். இவற்றின் விளைவாக ஜனநாயக சமூக உரிமைகளை பேணும் பணி முற்றாக தொழிலாள வர்க்கத்திடமே ஒப்படைக்கப்பட்டுள்ளதை காணலாம்.

இவற்றைத் தொகுத்துப் பார்ப்பின் ஐரோப்பா எங்கு செல்கிறது? ஏகாதிபத்தியங்களிடையே மோதல்கள் அதிகரிப்பதானது தற்போதைய ஆப்கானிஸ்தானிய போருக்கு பின்னணியாக அமைந்ததுடன் ஐரோப்பாவிற்குள் சகல பொருளாதார சமூக பூசல்களையும் கிளப்பியுள்ளது. அமெரிக்காவுடனான கூர்மையான மோதல் இராணுவமயமாக்கல், அதிகாரத்துவமயமாக்கலின் தோற்றத்துக்கு வழி கோலியுள்ளது. அது அரசியல் அபிவிருத்திகளை விரைவுபடுத்தி ஒரு பாரியளவிலான சமூக எழுச்சியை தூண்டும். அது ஐரோப்பாவை புரட்சிகர மையமாக்கும் என ட்ரொட்ஸ்கியின் வார்த்தைகளின்படி கூறலாம். இதற்கான எமது பதில் யாது? நாம் எப்படி இதற்கு தயாராக வேண்டும். மேலெழுந்த பிரச்சார மட்டத்திலும் அணுக முடியாது. அரசியல் திசை அவசியம்.

இது செயல்முறைவாதத்தின் ரீதியில் அதாவது தொழிலாளர் புரட்சிக கட்சியுடனான பிளவின் முன்னர் எமது இயக்கத்தில் ஊக்குவிக்கப்பட்டிருந்த எந்தவொரு அரசியல் சம்பவத்தையும் செயல்முறை ரீதியான உள்ளடக்க நிலைப்பாட்டின் அணுகுமுறையே அதுவாகும். தொழிலாள வர்க்கத்தை அணிதிரட்ட இதனை நான் எப்படி பயன்படுத்துவேன்? செயல் ரீதியான நடவடிக்கையை, வேலையை ஒழுங்கு செய்வதற்காக இதனை எப்படி பயன்படுத்துவேன்?

இதுதான் மிலிட்டன் அல்லது அரச முதலாளிகள் போன்ற திரிபுவாத பிரிவினரது கண்ணோட்டமாகும். அவர்கள் தம்மை அட்டாக், ஸ்டாலினிஸ்டுகள் இடதுசாரி சோசலிஸ்டுகள், பசுமைவாதிகள், தொழிலாள வர்க்கத்தினர் என்போருடன் கூட்டுச் சேர்த்து கொண்டுள்ளனர். அமெரிக்க யுத்த கொள்கையை எதிர்க்கும் பலவற்றையுமே அவர்கள் வரவேற்பர். இது அவர்களை நேரடியாக ஐரோப்பிய ஏகாதிபத்திய முகாமுக்குள் சேர்க்கும்.

நாம் இந்த யுத்தத்தை முழுமையான இந்த முதலாளித்துவ அமைப்பின் வளமற்ற முரண்பாடுகளின் வெளிப்பாடாகவே விளங்கிக் கொண்டுள்ளோம். ஐரோப்பா மற்றும் அமெரிக்கா இடையில் வளர்ந்து வரும் 'மோதல்களுக்கு எமது பதிலாக ஐரோப்பிய, அமெரிக்க தொழிலாளர் வர்க்கத்தின் ஐக்கியமே விளங்குகின்றது.

இந்த வழியில் தேசிய சுயாதீனம், என்ற அடிப்படையில் ஐரோப்பிய ஒன்றியத்தை எதிர்ப்பவர்களுடன் ஒத்துப் போகவில்லை, அத்துடன் மேற்கின் தொழில் தரத்தை பாதுகாப்பது என்ற அடிப்படையில் கிழக்கின் ஒன்றிணைவை எதிர்க்கும் தொழிற் சங்க அதிகாரத்துவத்தின் நிலைப்பாட்டுடனும் நாம் ஒத்துப்போகவில்லை. வியாபார நலன்களும் மற்றும் பெரும் ஐரோப்பிய வல்லரசுகளும் செல்வாக்குச் செலுத்தும் ஐரோப்பிய ஒன்றியத்துக்கு எமது பதில் ஐரோப்பிய ஐக்கிய சோசலிச அரசுகளேயாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இஸ்ரேலிய கல்விமான்களை பகிஷ்கரிப்பதற்கு எதிராக

உலக சோசலிச வலைத் தள அறிக்கை
*12 ஜூலை 2002*

*உலக சோசலிச வலைத் தளமானது இஸ்ரேலிய* கல்விமான்களைப் பகிஷ்கரிக்க வேண்டும் எனக் கோரும் அனைத்துலக பிரச்சாரத்தினை முற்றாகக் கண்டிக்கிறது. பிரித்தானிய திறந்த பல்கலைக் கழகப் பேராசிரியர் ஸ்டெபென் ரோஸினால் ( Steven Rose) முதன்முதலாக முன்னெடுக்கப்பட்ட கல்விமான்கள் மீதான பகிஷ்கரிப்பானது, இதுவரை சுமார் 700 கல்விமான்களால் கையெழுத்திடப்பட்டுள்ளது. இது பார்வையளவில் காசா கரையோரப்பகுதியிலும், மேற்குக்கரை பகுதியிலும் உள்ள பாலஸ்தீனப் பிரதேசங்களை மீளக் கைப்பற்றும் இஸ்ரேலியர்களின் முயற்சிக்கு எதிர்ப்பளிப்பதாக தெரிந்தாலும், நன்கு உற்று நோக்கினால் அது புத்திஜீவிகள் தொழிலாளர்கள், இளைஞர்களிடையே அரசியல் குழப்பத்திற்கான விதையை ஊன்றி விடச் செயலாற்றுவதைக் காணலாம்.

இதற்கு ஆதரவு பெற உயர்மட்டில் செயலாற்றுவதைத் தவிர இதில் அடங்கியுள்ள அரசியல் ஆபத்துபற்றிய விளக்கம் எதுவுமே இங்கு அடக்கப்படவில்லை. இம்மாதம் மன்செஸ்டர் விஞ்ஞான தொழில்நுட்ப நிறுவன (Manchester Institute of Science and Technology) பேராசிரியரும் வெளியீட்டாளருமான பேராசிரியர் மோனா பேக்கர் (Mona Baker) மொழித்துறை பத்திரிகைகளுக்கு பங்களிப்பவர்களும், மொழிபெயர்ப்பு மற்றும் மொழிபெயர்ப்பு கலைப்படிப்புக்கு பொறுப்பானவர்களுமான டெல் அவிவ் பல்கலைக்கழகத்தை சேர்ந்த பேராசிரியர் கிடிலுன் டுரி (Gideon Toury) இனையும், பார்-இலான் (Bar-Ilan) பல்கலைக் கழகத்தை சேர்ந்த கலாநிதி. மிரியம் ஸ்கெல்சிங்கர் (Dr. Miriam Schlesinger) இனையும் தனது சஞ்சிகையில் பங்களிப்பதிலிருந்தும் விலக்கியுள்ளார்.

பேக்கர் தனது தீர்வானது "தனிப்பட்டதல்ல அரசியல் ரீதியானது" என்பதை தெளிவுபடுத்துவதில் ஆழ்ந்த கவனமெடுத்துள்ளார். எவ்வாறாயினும் இவ்விருவரும் இஸ்ரேலியப் பிரஜைகள் என்ற காரணத்தால் மட்டும் பதவியில் இருந்து தூக்கிவீசப்பட்டிருக்கிறார்கள் என்ற உண்மை இங்குள்ளது. கலாநிதி ஸ்கெல்சிங்கர் இஸ்ரேலுக்கான சர்வதேச மன்னிப்பு சபையின் தலைவர் பதவியிலிருந்து இப்போது சமாதானம் (Peace Now group) என்ற குழுவின் நடவடிக்கையில் சம்பந்தப்பட்டுள்ளதுடன், மேற்குகரையின் பாலஸ்தீன நகரங்களில் பண்ட வழங்கல்களை விநியோகிப்பதை இஸ்ரேலியப்படை தடுத்துள்ளதை எதிர்த்துள்ளார். ஆனால் அவர்கள் முற்போக்கான அரசியல் நோக்கத்தினை கொண்டிருக்காதிருப்பினும்கூட ஒருவரும் தமது இனம் அல்லது மதம் அல்லது தேசியம் என்பதன் பேரால் தண்டிக்கப்படும் அச்சத்துக்கு உட்படுத்தப்படலாகாது.

கல்விமான்களின் புறக்கணிப்பானது ஓர் சீரழிந்த வெளிப்பாட்டை காட்டுகின்றது. அது இஸ்ரேலிய மக்களை ஆளும் தட்டினது கொள்கைகளில் இருந்து உடைத்து, ஒரு சுதந்திரமான வழியை காட்டாததுடன், அரசியல் விரக்தியினால் மிகவும் பலவீனமான இலக்கை நோக்கி தள்ளும் ஒரு முற்றான மிதவாதப் போக்காகும். ஷரோன் அரசாங்கத்தின் கொள்கைகளுக்கு எந்தவொரு பொறுப்பையுமே கொண்டிராத அவற்றை சிலவேளை அதனை எதிர்ப்பவருமாயுள்ள தனிப்பட்ட இஸ்ரேலிய நபர்களுக்கு இலக்கு வைப்பதானது அநியாயமானதும் அரசியல் ஆபத்தானதுமான செயலாகும்

இஸ்ரேலில் சியோனிச எதிர்ப்பு பார்வையாளரை உருவாக்க இத்தகைய வழிமுறைகள் பெரிதும் உதவலாம் என்பதையிட்டு எவரொருவரும் பலத்த விவாதத்தில் ஈடுபடமாட்டார். இது உண்மையில் மாறானது. இஸ்ரேல் அரசின் குற்றங்களுக்கும் மற்றும் அவ்வரசுடனும் யூத கல்விமான்களின் அமைப்பினை முரட்டுத்தனமாக ஒப்பிடுவதன் மூலம், இந்த கல்விமான்கள் மீதான புறக்கணிப்பானது சியோனிச தத்துவவாதிகளின் கைகளை பலப்படுத்துகின்றது. இதன் நடவடிக்கைகள் சாதாரண இஸ்ரேலிய பிரஜைகளை சியோனிச மீள் எழுச்சி முயற்சிக்கு இலக்காக்கி, முழு உலகுமே யூத மக்களுக்கு எதிர்ப்பாகவுள்ளது என்றும், இஸ்ரேலிய அரசு மட்டுமே அவர்களுக்கு ஒரே ஒரு பாதுகாப்பானதாக உள்ளது என்ற ஆழ்ந்த பிற்போக்குத்தனமான ஐயுறவுமிக்க கருத்தினை உருவாக்குகின்றது.

பாலஸ்தீனியர்களுக்கு எதிரான இஸ்ரேலியரின் ஆக்கிரமிப்பை எதிர்க்க கல்விமான்கள் எடுக்க வேண்டிய சரியான செயல்முறை இத்தகைய புறக்கணிப்பிற்கு முற்றிலும் நேர்மாறானதாகும். அது தமது இஸ்ரேலிய மற்றும் பாலஸ்தீனிய நாட்டு சகபாடிகளுடன் அதிகம் நெருக்கமான தொடர்பு கொண்டு தேசிய பிரிவுகளுக்கு ஊக்கமளிக்காத, அப்பிரிவினைகளை இல்லாதொழிக்கக் கூடிய முக்கிய விடயங்கள் குறித்த ஆழமான கலந்துரையாடலுக்காக ஊக்கமளித்தலாகும். இவையே கல்விமான்களால் எடுக்கப்படவேண்டிய செயல்முறையாகும். இதற்கு மேலதிகமாக பாலஸ்தீனிய அராபிய வரலாற்றின் முக்கிய ஆய்வுகள் உள்ளடக்கிய ஓர் விஞ்ஞானபூர்வமான விளக்கத்துக்கான சில குறிப்பிடத்தக்க பங்களிப்புகள் இஸ்ரேலிய கல்விமான்களால் வழங்கப்பட்டுள்ளன. இத்தகைய செயல்கள் பற்றியவை பலமாக முன்வைக்கப்பட்டு விவாதிக்கப்படவேண்டும். சியோனிச அரசினை நோக்கித்தள்ளும் சிந்தனாரீதியான தணிக்கை செய்வதாக இவ்விவாதம் கட்டுப்படாது, சுதந்திரமான சிந்தனையை ஊக்குவிப்பதாக இருக்கவேண்டும்.

கல்விமான்களின் பகிஷ்கரிப்பானது ஓர் சீரழிந்த வெளிப்பாட்டை காட்டுகின்றது. அது இஸ்ரேலிய மக்களை ஆளும் தட்டினது கொள்கைகளில் இருந்து உடைத்து, ஒரு சுதந்திரமான வழியை காட்டாததுடன், அரசியல் விரக்தியினால் மிகவும் பலவீனமான இலக்கை நோக்கி தள்ளும் ஒரு முற்றான மிதவாதப் போக்காகும். ஷரோன் அரசாங்கத்தின் கொள்கைகளுக்கு எந்தவொரு பொறுப்பையுமே கொண்டிராத அவற்றை சிலவேளை அதனை எதிர்ப்பவருமாயுள்ள தனிப்பட்ட இஸ்ரேலிய நபர்களுக்கு இலக்கு வைப்பதானது அநியாயமானதும் அரசியல் ஆபத்தானதுமான செயலாகும். அத்தகைய செயல்களுக்கு ஆதரவாயுள்ளவர்களைப் பார்த்து நாம் இவ்வாறு கேட்போம் : மிகவும் கவனமாக இப்போது வெளிக்காட்டப்படும் சமிக்ஞைகளை கவனியுங்கள். ஐரோப்பாவில் இப்போது பாலஸ்தீனியருக்கு ஆதரவுகாட்டும் சட்டபூர்வ நடவடிக்கையாகும் என்று கருதி அராபிய இளைஞரால் நடத்தப்படும் யூதர்களுக்கு எதிரான உடல் ரீதியான தாக்குதல்களையும், அவர்களது வழிபாட்டுதலங்கள் மீதானதும் மற்றும் மயானங்கள் மீதானதுமான தாக்குதல்களையும் நாம் ஏற்கனவே கண்டுள்ளோம். இத்தகைய பிற்போக்கான செயல்களை சிறியளவு நியாயப்படுத்தலை வழங்குவதற்கு எதுவும் செய்யத்தேவையில்லை.

இரு கல்விமான்களுக்கு எதிரான நடவடிக்கையானது, வெறுமனே ஒரு தனிப்பட்டவர்களின் நடத்தை பற்றிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேள்விமான வைப்பதுடன், ஐரோப்பிய யூதர்களுக்கு துன்பகர விளைவுகளை விளைவித்ததற்கு மூலகாரணமாக இருந்த அரசியல் போக்கின் ஆதிக்கத்தை விளங்கிக்கொள்வதற்கும், அதற்கு எதிரான பூரண போராட்டத்தையும் எவ்விதத்திலும் விளங்கிக்கொள்ளாததையும் காட்டுகின்றது. மத்திய கிழக்கில் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் ஆயுதபாணி காவல்நாயான இஸ்ரேலிய அரசின் செயலுக்கு எதிரான வெற்றிகரமான போராட்டம் ஒன்றுக்கு தேவையானது என்ன என்பதை விளங்கிக்கொள்வதில் ஆர்வமில்லாததையும் இது காட்டுகின்றது.

இது சம்பந்தமான ஒருவர், இக்கூட்டுக் குற்றம் இஸ்ரேலிய மக்களுக்கு மட்டுமா சுமத்தப்பட வேண்டும்? என்று கேட்கலாம். அமெரிக்க, பிரித்தானிய ஏகாதிபத்தியங்கள் உலகில் ஒடுக்கப்பட்ட மக்கள் மீது இஸ்ரேலிலும் பார்க்க மோசமான முறையில் கொடூர குற்றமிழைத்துள்ளமைக்கு வரலாற்றுப் பதிவுண்டு. அவர்கள் தற்போது ஆப்கானிஸ்தானிலும் ஈராக்கிலும் ஓயாத குண்டுமாரி நடத்திக்கொண்டிருப்பதுடன், மிக நீண்டகாலமாக பாதிக்கப்பட்டுள்ள நாட்டு மக்களுக்கு எதிராக மீண்டும் ஒரு தடவை போர் செய்யும் தயாரிப்புகளையும் மேற்கொண்டுள்ளனர். இதற்கும் மேலாக, அரசியல் சிந்தனையுள்ள எல்லோருமே ஷரோனின் யுத்தப் பேரிகைக்குப் பின்னர் புஷ், நிர்வாகமும் பிளேயரின் தொழிற்கட்சி அரசாங்கமும் காணப்படுகின்றது என்பதை நன்கு உணர்ந்துகொண்டுள்ளனர். ஆகவே ஏன் பிரித்தானிய அமெரிக்க கல்விமான்களையும் புறக்கணிக்குமாறு கோரவில்லை. இத்தகைய கேள்வியை எழுப்புவதானது இரு இஸ்ரேலியக் கல்விமான்களுக்கும் எதிராக எடுத்த ஜனநாயக ரீதியிலான செயலின் பண்பை நன்கு விளக்குவதற்கு உதவும். இத்தகைய ஒரு பகிஷ்கரிக்குமாறு கோரப்பட்டிருக்கின் தவறாக தமது வலைப்பக்கங்களை நடவடிக்கைகள் மனுவின் இட்டவர்கள் எந்தவித பதிலளித்திருப்பர்? என்பதைப் பற்றி ஒருவர் நினைத்துப் பார்க்கவேண்டும்.

உலக சோசலிச வலைத் தளமானது பாலஸ்தீனியரை கொடுமைப்படுத்துவதற்கு இஸ்ரேலிய மக்கள் கூட்டாக பொறுப்பேற்க வேண்டும் என்பதற்குரிய சகல முயற்சிகளையும் நிராகரிக்கின்றது. தேசியரீதியாக குற்றம்சாட்டும் அத்தகைய குற்றச்சாட்டுகளும் அத்தகைய உத்திகளில் இருந்து எழும் விளைவுகளும் ஒவ்வொரு அம்சத்திலும் படு பிற்போக்கானதேயாகும்.

அமெரிக்கா, பிரித்தானியா மற்றும் ஏனைய நாடுகளைப் போலவே இஸ்ரேலும் மிகவும் ஆழமான சமூக வர்க்க வேறுபாடுகளைப் பிளவுபட்டுள்ளது. இவை யாவும் ஏற்கனவே சியோனிய அமைப்புக்கெதிரானதும் மற்றும் அதனது யுத்தக் குற்றங்களுக்கும் எதிரான மனோபாவங்களால் தனது அரசியல் வெளிப்பாட்டை காட்டியுள்ளது. இது எதிர்காலத்தில் மேலும் பாரிய வடிவத்தை எடுக்கும். இதனை நிராகரிப்பது, சியோனிசத்திற்கு எதிரான அரசியல் மாற்றீடு ஒன்றிற்கு யூத தொழிலாளர், கல்விமான்களை நம்பிக்கையும் தேவையை மறுக்கிறது. இந்த பகிஷ்கரிப்பின் ஆதரவாளர் பக்கம் சாருவதாக அமையும்.

பகிஷ்கரிப்பதற்கு வக்காலத்து வாங்குவோர் தென்னாபிரிக்காவுக்கு எதிரான இனவாத எதிர்ப்பு இயக்கத்தை தமது வரலாற்று முன்னோடியாக எடுத்துக் காட்டுகின்றனர். இது ஓர் பதிலை வேண்டி நிற்கிறது. தென்னாபிரிக்காவில் முதலீட மறுப்பதும் பகிரங்க வேலை மறிப்பு ஒன்றாயிருப்பதை வரவேற்பதில் மறுப்பு தெரிவிப்பதும் இனவாதத்துக்கு எதிர்ப்பாளிக்கும் அரசியல் ரீதியான சட்ட ரீதியானதாயினும் இஸ்ரேலிய கல்விமான்களை கறுப்பாடுகளாகக் காட்டி வெளியேற்றுவதற்கும் அதற்குமிடையிலும் குறிப்பிடத்தக்க வேறுபாடுண்டு. மறுபுறத்தில் ஒரு பிரித்தானிய கல்விமான் இஸ்ரேலியப் பல்கலைக்கழகத்தில் விரிவுரையாற்ற அழைக்கப்படுகையில், தமது சொந்த விருப்பு வெறுப்பின் அடிப்படையில் மறுப்பாராயின் அது முற்றிலும் வேறான விடயமே. இதனூடாக நாம் அவர்களை இஸ்ரேலிய அரசாங்கத்தின் கொள்கைகளை பகிரங்கமாக தாக்கும் பதிலீடான ஒன்றாக இதனை சிந்திக்குமாறு கேட்கலாம்.

பாலஸ்தீனியர்களைத் துன்புறுத்தும் தற்போதைய நிலைமைக்கு எதிராக எதிர்ப்பை திரட்ட எடுக்கும் சரியாக சிந்தித்தெடுக்கும் முயற்சிகளுக்கு நாம் திடமான ஒத்துழைப்பு வழங்குவோம். ஷரோன் அரசாங்கத்தை தனிமைப்படுத்தும் எதிர்ப்பு நடவடிக்கைகளான, இராணுவ தளபாடங்களின் போக்குவரத்து மற்றும் ஏனைய நடவடிக்கைகளை தடைப்படுத்தும் செயல்களுக்கு வேலைக்கை விடுக்கும் எதிர்ப்பு நடவடிக்கைகள் மேற்குக்கரையிலும், காசா கரைபோரப்பகுதியிலும் குற்றம் செய்பவர்களுக்கு எதிராகவும் மற்றும் புஷ் நிர்வாகம் மற்றும் பிளேயர் அரசாங்கத்திற்கெதிரான ஒரு பரந்த அரசியல் போராட்டமாக விளங்கிக்கொள்ளவேண்டும்.

உலக சோசலிச வலைத் தளம் சியோனிசத்துக்கு எதிராக வெவ்வேறு ரீதியான எதிர்ப்பை கொண்டுள்ளது. ஆனால் நாம் அது போலவே வர்க்கப் போராட்ட முறைகளினூடான சோசலிச அனைத்துலகவாத வேலைத்திட்டத்தின் அடித்தளமாக காணுகின்றோம். நாம் இஸ்ரேலிய தொழிலாளர், புத்திஜீவிகளை நவமான அரசியல் முன்னோக்கு மற்றும் சித்தாந்தம் என்பவற்றை நிராகரிக்க வேண்டுமென நம்பிக்கையுடன் முன்வைக்கின்றோம். அதாவது யூத மக்களுக்கு ஒரு பாதுகாப்பான செழிப்பான எதிர்காலம் எரியல் ஷரோனால் வக்காலத்து வாங்கப்படும் இராணுவ கொள்கைகளில் அல்ல, மாறாக அரபியர்களும், யூதர்களும் சமமானவர்களாக ஒருமித்தவர்களாகவுள்ள சமுதாயத்தின் உருவாக்கத்தினுடாக, அதாவது ஒரு மத்திய கிழக்கின் ஐக்கிய சோசலிச அரசுகளில் மட்டுமே தங்கியுள்ளது என அவர்களுக்கு உணர்த்த வேண்டும். சியோனிசத்திற்கு எதிரான போராட்டத்தில் இவ் வழிமுறைகளே அனுமதிக்கப்படக் கூடியவையாயுள்ளதுடன், அவையே தமது பொது எதிரிக்கு எதிராக யூத, அராபிய தொழிலாளர்களின் ஐக்கியத்துக்கும் சுயாதீனமான தொழிலாள வர்க்க அரசியல் அணிதிரட்டலுக்கும் வழிசமைத்துக்கொடுக்கும்.

# இஸ்ரேலிய கல்விமான்களை பகிஷ்கரித்தல் சம்பந்தமான கடிதங்களுக்கு உலக சோசலிச வலைத்தளம் பதிலளிக்கிறது

பில் வான்
30 ஜூலை 2002

இஸ்ரேலியக் கல்விமான்களை பகிஷ்கரிப்பதற்கு எதிர்ப்பு என்ற ஜூலை 12ம் திகதி பில் வானின் கட்டுரைக்கு அவை பெற்ற பெருமளவிலான கடிதங்களுக்கு உலக சோசலிச வலைத் தளம் பின்வரும் பதிலை வழங்குகிறது. இந்த வரி எழுத்தையிட்டு எமது வாசகர்களிடமிருந்து கிடைத்த கடிதங்களில் இருந்து தேர்ந்தெடுத்த கடிதங்களுக்கான பில் வானின் பதில் பின்வருமாறு.

மேற்குக்கரை, காசா பகுதிகளை இஸ்ரேலிய அரசாங்கம் மீளக் கைப்பற்றியதற்கு முடிவுகட்ட நிர்ப்பந்திக்கவும், பாலஸ்தீனிய அதிகாரத்துடன் பேச்சுவார்த்தைகளை தொடரவும் தமது இஸ்ரேலிய சகபாடிகள் நெருக்குதலை செய்யவேண்டுமென்றும், ஐரோப்பிய கல்விமான்களை தமது இஸ்ரேலிய சகபாடிகளுடனான தொடர்புகளை இல்லாதொழிக்குமாறும் பிரித்தானிய பேராசிரியர் ஸ்டீவன் ரோஸ் (Steven Rose) ஆரம்பித்த அழைப்புக்கு பதிலாக ஜூலை 12ம் திகதி அறிக்கை எழுதப்பட்டிருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புறக்கணிப்பை நடைமுறைப்படுத்துவதில் டெல் அவிவ் பல்கலைக்கழக பேராசிரியர் கிடியோன் டோரி (Gideon Toury), பார் இலான் பல்கலைக்கழக மிரியம் ஷிலேசிங்கர் (Miriam Schlesinger) என்ற இரு இஸ்ரேலிய கல்விமான்களை பிரித்தானிய இதழ்களுக்கு மொழிபெயர்ப்பதை அகற்றி விடுவது என்ற பிரித்தானிய வெளியீட்டாளர்களின் முடிவு சம்பந்தப்பட்டிருந்தது.

உ.சோ.வ. தளத்தின் பூர்வாங்க அறிக்கை ஜூலை 17ல் வெளியிடப்பட்ட இஸ்ரேலிய கல்விமான்களின் பகிஷ்கரிப்பு தொடர்பான கடிதப் பரிமாற்றல் விளக்குகிறது. நாம் அக்கட்டுரையில் ஒரு வாசகரால் பகிஷ்கரிப்பை ஆதரித்து வழங்கப்பட்ட விவாதத்துக்கு எமது பதிலை வழங்கியிருந்தோம்.

அன்று தொட்டு, நமது ஜூலை 12 அறிக்கை ஜூலை 17 கடித பரிமாறல் இரண்டுக்கும் சமர்ப்பிக்கப்பட்ட மேலதிக கடிதங்களுக்கான பதில்களை நாம் பெற்றுள்ளோம். இது மத்தியகிழக்கு தொடர்பான உடனடியான தந்திரோபாயங்களுக்கு மிகவும் அப்பாற்பட்டதாக பிரச்சினைக்குரிய விடயங்கள் செல்கின்றது. அவை சர்வதேச தொழிலாளர் இயக்கம் எதிர்கொள்ளும் வரலாற்று, தத்துவார்த்த அரசியல் பிரச்சினைகளை தமது அணுகுமுறைகளான தேசியவாத அல்லது இடதுசாரி என பொதுவாக குறிப்பிடப்படுபவனற்றுக்கும் மார்க்சிசத்துக்கும் இடையிலான அடிப்படையான வேறுபாடுகளை விரிவாக எடுத்துக்காட்டுகின்றன.

எமது ஆரம்ப கட்டுரையில் நாம் தெளிவாக குறிப்பிட்டதைப் போல, உலக சோசலிச வலைத் தளம் தேசிய இனம் என்ற ரீதியினை மட்டும் அடிப்படையாக கொண்டு மக்களை பாரபட்சப்படுத்தும் செயல்களை மறுப்பதுடன், தனிப்பட்ட வகையில் இஸ்ரேலிய கல்விமான்களுக்கு எதிராக சர்வதேச ரீதியில் வியூகம் வகுக்கும் முயற்சியில் ஈடுபடுவதற்கு, உதாரணமாக அவர்களை மாநாடுகள், வெளியீடுகள், ஆராய்ச்சி ஒத்துழைப்புகளில் இருந்தும் தடை செய்தற்கு எதிராபாக உள்ளது.

> பாலஸ்தீனிய மக்கள் மீதான ஒடுக்குமுறைகளுக்கு எதிரான போராட்டம், ஒரு குட்டி பாலஸ்தீன அரசு உருவாக்குதலினால் தீர்க்கப்படலாம் என நாம் நம்பவில்லை. அரை நூற்றாண்டுக்கு மேல் இத் தேசியப் பிரச்சினை அநேக மத்திய கிழக்கு பிரச்சினையின் மத்தியாக இருந்தது கண்கூடு. ஆனால் பொதுமக்கள், தமது அரசியல் வங்குரோத்தை நிருபித்த சகல தேசிய இயக்கங்களினது கசப்பான அனுபவங்களை கடந்து வந்துள்ளனர். சகல இடங்களிலுமே ஏகாதிபத்தியத்திடமிருந்து நியாயமான சுதந்திரம் பெற்றுவிடவோ அல்லது தொழிலாள ஒடுக்கப்பட்ட பெரும்பாலான மக்களது பொருளாதார அபிவிருத்திக்கான அத்திவாரத்தை கட்டியெழுப்வோ தேசிய முதலாளித்துவம் இலாயக்கற்றது என்பதை வரலாறு எடுத்துக்காட்டியுள்ளது.

இதன் நடவடிக்கைகள், சாதாரண இஸ்ரேலிய பிரஜைகளை சியோனிச மீள் எழுச்சி முயற்சிக்கு இலக்காக்கி, முழு உலகுமே யூத மக்களுக்கு எதிர்ப்பாகவுள்ளது என்றும், இஸ்ரேலிய அரசு மட்டுமே அவர்களுக்கு ஒரே ஒரு பாதுகாப்பானதாக உள்ளது என்ற ஆழ்ந்த பிற்போக்குத்தனமான ஐயுறவுமிக்க பிரமைகளுக்குள் மூழ்கடிக்கும் முயற்சிக்குள் தள்ளவிடும் ஒன்று என நாம் முன்பு எழுதியிருந்தோம்.

எமது சில வாசகர்களின் கருத்துப்படி, ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகளில் நாளாந்தம் கோடிக்கணக்கான மக்கள் முகம்கொடுக்கும் பயங்கரமான நிலைமைகளுடன் ஒப்பிடுகையில் கையளவிலான சிறு இஸ்ரேலிய கல்விமான்களின் தலைவிதிக்கான கவனம் சற்று அப்பாற்பட்ட விடயமே. இந்த ரீதியிலான விவாதங்கள் இஸ்ரேலிய அரசுக்கெதிராக நெறிப்படுத்தப்படும் எச்செயலையுமே இஸ்ரேலிய பேராசிரியர்களை கருங்காலிகளாக்குவதுடன், டெல்அவிவ் பிரதேச தொழிலாள வர்க்க பிரதேசங்களில் தற்கொலை குண்டுதாரி தாக்குல்களை நியாயப்படுத்துவதில் கொண்டுபோய்விடும்.

இஸ்ரேலிய பாதுகாப்பு படையினரால் நடாத்தப்படும் கொடுமைகளையிட்டு ஆக்ரோஷமடைவது எதிர்ப்பு அம்சங்களில் அடங்கியுள்ள அரசியல் அடக்கத்தை கவனமாக கருத்தில் கொள்ளப்பட வேண்டியதில்லை என அர்த்தப்படவில்லை. தொழிலாள வர்க்கத்தை குழப்பும் அல்லது அவ்வர்க்கத்தின் சுயாதீனமான புரட்சிகர அணிதிரட்டலின்றி ஓர் முற்போக்கான சமுதாய மாற்றத்தை அடைந்துவிடலாம் என்ற கருத்தினை முன்வைக்கும் அத்தகைய செயல்முறைகளை நாம் நிராகரிக்கிறோம்.

பாலஸ்தீனிய மக்களை கொன்றொழிக்கும் இஸ்ரேலுக்கு எதிரான பல்வேறுபட்ட வடிவங்களிலான எதிர்ப்புக்களான, இஸ்ரேலுக்கான உதவிகளுக்கு முடிவு கட்டும் கோரிக்கை, முதலீடுகளுக்கு இடமளியாமை உட்பட்ட சகலவற்றின் நியாயபூர்வமான தன்மையை நாம் அங்கீகரிக்கிறோம். ஆனால் எமது நிலைப்பாட்டின் அடிப்படைப் பிரச்சினை என்னவெனில், இத்தகைய கோரிக்கைகள் இஸ்ரேலிலும், ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகளினதும் யூத அராபிய தொழிலாள வர்க்கம் இரண்டினதும், மற்றும் தொழிலாள வர்க்கத்தின் அனைத்துலக ஐக்கியத்துக்குமான சோசலிச நனவை அபிவிருத்தி செய்ய எங்ஙனம் சேவையாற்றுகின்றது என்பதேயாகும்.

உலக சோசலிச வலைத் தளத்திற்கு கிடைத்த சில கடிதங்கள் மிகக் கபடமாக எமது நிலைப்பாட்டை திரிபுபடுத்தி அதனை சியோனிச ஆதரவாக கொச்சைப்படுத்தியும், பாலஸ்தீன மக்களின் ஒடுக்குமுறை தொடர்பாக கவனமற்றதாகவும் சித்தரிக்கின்றன. இத்தகைய நேர்மையற்ற குற்றச்சாட்டுகள், கல்விமான்களின் பகிஷ்கரிப்பை தமது செல்வாக்கினை விரிவுபடுத்தும் ஒன்றாக கருதும் இத்தகைய குட்டி முதலாளித்துவ இடது எதிர்ப்பு இயக்கங்களினது தன்மையில் இருந்து ஊற்றெடுத்தமையால் அவை எம்மை எதிர்ப்பதற்கு இன்றியமையாததாய் விளங்குவதாகவும் உள்ளன.

ஏனைய வாசகர்கள் மிகத்தெளிவாக, ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகளில் நடக்கும் சம்பவங்களான கோடிக்கணக்கானோரை வீட்டில் அடைத்து அப்பாவி மக்களை கொல்லும், பாலஸ்தீனிய உள்கட்டமைப்பின் எஞ்சிய சொற்பங்களையும் அழிக்கும் செயல்களையிட்டு பயமடைந்து சியோனிச ஆட்சியின் குற்றங்களுக்கு எதிராக எடுக்கப்படும் எதிர்ப்புச் செயல்களுக்கு ஏன் ஒருவர் மறுப்பாயிருக்க வேண்டும்? என கேள்வி எழுப்புகின்றனர்.

எவ்வாறிருந்தபோதும், இதில் அநேகமாக வெளிப்படும் தன்மை ஒன்று என்னவெனில், சியோனிசத்துக்கும் இஸ்ரேலிய அரசுக்கும் எதிரான தொழிலாள வர்க்கத்தையும் சர்வதேசியத்தையும் அடிப்படையாக கொண்ட எந்தவொரு போராட்டத்துக்குமான அவசியத்தை அடிப்படையாக நிராகரித்துவிடும் ஒழுங்கீனமான அணுகுமுறை ஒன்றே காணப்படுகிறது. சில கடிதங்கள் இஸ்ரேலிய தொழிலாள வர்க்கம் என்ற ஒன்று கிடையாது என வற்புறுத்துகின்றன. ஏனையவர்கள் அராபிய, யூத தொழிலாளர்களிடையே உள்ள கூர்மையான சமூக அரசியல் பிரிவினைகளால் அவர்களை ஐக்கியப்படுத்துவது சாத்தியமற்றதென பிரகடனம் செய்கின்றனர்.

வேறுசிலர் இன்று ஓர் அரசியல் அமைப்பில் ஐக்கியப்பட்ட தொழிலாள வர்க்கம் ஒன்று உருவாகாதுயு என்பதால் மத்திய கிழக்கில் ஓர் முற்போக்கான மாற்றம் ஏற்படுத்தப்பட வழிகாண வேண்டும் அதனால் பாலஸ்தீனிய மக்களின் துயரங்களுக்கு முடிவுகட்டப்படலாம் என்கின்றனர்.

இது விசேடமாக முதலாளித்துவ தேசியத்திற்கு அடிபணிவதையே அர்த்தப்படுத்துகின்றது. இந்த புறக்கணிப்பும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அளவில் வளரும் நிலைமைகளே அதாவது மூன்றிலொரு பங்கு ஜனத்தொகை வேலையற்றதாயும் நான்கில் ஒரு பகுதியினர் எயிட்ஸ் நோயால் பாதிக்கப்பட்டும் காணப்படுகின்றனர். இத்தகைய நிலைமைகள் பொதுவாக நிறவெறியின் நியாயபூர்வமாக எடுத்துக்காட்டப்பட்ட அதேவேளை அவை முதலாளித்துவத்தில் இருந்தும் அதனை நிலைக்கச் செய்த புறக்கணிப்பு பிரச்சாரத்தினூடாக விளைந்த அம்சமான ஒரு மாற்றமாகிய அதிகார பலத்தினையும் கூட நியாயப்படுத்துகின்றது.

எமது அறிக்கையை மறுக்கும் எவருமே இந்த *பகிஷ்கரிப்பு* இஸ்ரேலிய கல்விமான்களுடன் மட்டும் ஏன் கட்டுப்படுத்தப்பட்டிருக்கவேண்டும் என்ற கேள்விக்கு பதிலளிக்கவில்லை. பாலஸ்தீனியரை ஒடுக்கவும், கொல்லவும் பயன்படுத்தப்படும் குண்டுகள், ரவைகள், பணம் என்பவற்றை வழங்கிய வாஷிங்டன், லண்டன் சார்ந்த அமெரிக்க பிரித்தானிய கல்விமான்கள் ஏன் (இ)தில் உள்ளடக்கப்படவில்லை? அத்துடன் அவ்வரசாங்கங்கள் இஸ்ரேலினால் இழைக்கப்பட்ட குற்றங்களிலும் பார்க்க மோசமான குற்றச் செயல்களுக்கான பொறுப்புள்ளவர்கள். எம்மை சிலர் இஸ்ரேலிய கொடுங்கோன்மையாளருடன் பக்கச்சார்புள்ளதாக குற்றம்சாட்டி, அல்லது உலகச் சந்தையில் அமெரிக்கா வகிக்கும் பங்கின் அளவு காரணமாக அமெரிக்காவை விட இஸ்ரேலை *பகிஷ்கரிப்பது* சுலபமானது எனவும் வாதாடுகின்றனர்.

ஆனால் உண்மைகளை எடுத்துப் பார்ப்பின் இஸ்ரேலிய கல்விமான்கள் உலகின் ஏனைய பாகத்தில் உள்ள அவர்களது சகபாடிகளை விட மோசமானவர்கள் அல்ல. புஷ் நிர்வாகத்தின் உலகளாவிய இராணுவமயமாக்கல்; ஆப்கானிஸ்தானில் மேற்கொண்ட போர் குற்றங்கள், வரப்போகும் ஈராக்கிற்கு எதிரான போர் அல்லது உள்நாட்டில் ஜனநாயக உரிமைகள் மீதான ஒடுக்குமுறை என்பன பற்றி அமெரிக்க கல்விமான்களுள் எத்தனை எதிர்ப்பு குரல்கள் இதுவரை வெளிவந்துள்ளன?

இறுதியாக, சில பிரித்தானிய ஏனைய ஐரோப்பிய கல்விமான்கள் இப்பிச்சாரத்தை தமது அமெரிக்க சகபாடிகளை போலவே இதன்மூலம் மத்திய கிழக்கு சமாதானத்தை கொண்டுவருவதில் ஒரு பங்கினை வகிக்கலாம் என கருதலாம். அவர்களது நோக்கம் என்னவாயிருப்பினும், தொழிலாள வர்க்கத்தின் அணிதிரட்டலாகிய நியாயமானதற்கு வெளியே உள்ள இந்த உணர்வை அவர்கள் உணர்ந்து கொள்ளும் அளவிற்கு அவர்கள் சுதந்திரமாக செயலாற்றமாட்டார்கள். அத்துடன் தமது தேசிய ஆளும் தட்டினது நலன்களை பிரதிநிதித்துவப்படுத்தி முதலீட்டின் தேவைக்கேற்ப மத்திய கிழக்கை மீள் ஒழுங்குபடுத்துவதற்கு உதவுவதே அவர்களின் பணியாகும்.

அனைத்துலக சோசலிச (வேலைத் திட்டத்தை அடிப்படையாகக் கொண்ட ஓர் புரட்சிகர தொழிலாள இயக்கத்தை கட்டியெழுப்புவதில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டளவில் மட்டுமே சமூகத்தின் மாற்றமொன்றுக்கான முன்னேற்றமான பங்கினை இந்த புத்திஜீவிகளாலும் கல்விமன்களாலும் வழங்க முடியும் என்பதே எமது நம்பிக்கையாகும். தற்போதைய *பகிஷ்கரிப்பு* பிரச்சாரம் இந்த இயக்கத்திற்கு எதிரிடையானதாகும்.

பில் வான்

உலக சோசலிச வலைத்தள ஆசிரியர் குழுவின் சார்பில்

* * *

ஒருகாலத்தில் புகழ்ந்துரைக்கப்பட்ட ஆயுதப் போராட்டத்தினதுயு இறுதிமுடிவான வெளிப்பாடே இன்று தற்கொலை குண்டு தாக்குதலுக்கான பக்கபலமளிப்பதாகும். இது இத்தகைய தேசிய இயக்கங்கள் அடைந்த அரசியல் முட்டுச்சந்தியின் வெளிப்பாடாகும். தசாப்த காலமான ஒடுக்குமுறைகளால் இறுதியாக எஞ்சியுள்ள நம்பிக்கையீனமான நிலைமைகளும், இந்த தேசியவாத வேலைத்திட்டத்தின் தோல்வியும் இணைந்து இளம் பாலஸ்தீனிய தட்டினரை, இவ்வகையில் தமது உயிர்களை கொடுக்க தயாராகும் துயரமான நிலையை தோற்றுவித்துள்ளது. இந்த நடைமுறையை முன்னெடுத்தவர்களின் அரசியலும் முற்றாக பிற்போக்கு தன்மையானதாகும்.

அன்பார்ந்த தோழர்களே,

நான் உங்களது வலைத் தளத்தில் மிகக் குறுகிய காலத்துக்குள்ளேயே சந்தாதாரராகி இருப்பினும் அதனால் நான் அடைந்த தாக்கமானது மிகவும் பிரமாண்டமானது. நான் கூறவேண்டிய சகலதும் நன்றாக செய்துள்ளீர்கள். இந்த சிறந்த வேலையை தொடர்ந்தும் கடைப்பிடியுங்கள் என்பதே. விரைவில் உ.சோ.வ. தளம் பற்றி மிகக் கூடுதலாக நான் அறியப் போகிறேன் என்று மட்டும் நான் கூற விரும்புகிறேன். சிலகாலம் முன் நான் மார்க்சிச சோசலிச தத்துவத்தையும் பதிலீடான ஊடகங்களையும் படித்துள்ளேன். உங்களது வலைத் தளம் அதனது செழிப்பான வார்த்தை பிரயோக போக்கினால் உண்மையாக ஆழ்ந்த கருத்தையும் சிந்தனை அறிவையும் கொண்டுள்ளது. மிகவும் வியப்பானது!

எவ்வாறாயினும் நான் உங்களுக்கு வாழ்த்துக்கள்யு என்ற சிறு குறிப்பை வழங்க விரும்புகிறேன். அத்துடன் இச் சிறந்த போராட்டத்தை ஒரு போதுமே நிறுத்தவேண்டாம். ஏனெனில் அனைத்து இடங்களிலும் உள்ள படிப்பறிவற்ற மக்களுக்கும் அறிவார்ந்த புத்திஜீவிகளாகிய இருவருக்குமே உங்களை போன்றவரது கருத்துக்கள் மிகத் திட்டவட்டமாக விலைமதிப்புமிக்கது.

சமாதானமும் நல்வாழ்த்துக்களும்,

MD

பி.கு: இஸ்ரேலிய கல்விமான்கள் *பகிஷ்கரிப்புக்கு* எதிர்ப்பதில் நீங்கள் நூற்றுக்கு நூறு சரியானவர்கள். சோசலிசமானது அதனது ஆதரவாளர்கள் என கூறுபவர்கள், இத்தகைய இனவாத நோக்குகளை கொண்டவராகவும், தேசியங்கள் தேசங்களிடையே மேலதிக பிரிவினைகளை ஏற்படுத்த ஆதரவாளராக இருக்கும் பட்சத்தில், உலக மக்களை எங்ஙனம் வெற்றி கொள்ளும் என எதிர்பார்க்க முடியும்? இது தொடர்பாகவும் ஏனைய செய்தி கட்டுரைகளிலும் உ.சோ.வ.தளத்தின் ஆசிரியர்கள்/எழுத்தாளர்களின் பரந்து பட்ட தன்மை உண்மையில் கவர்ச்சியானதும் உயர்ந்த தாக்கமளிப்பதுமாகும். தொடர்ந்து பேணுக!

22 ஜூலை 2002

* * *

ஹலோ,

உங்களது இஸ்ரேலிய கல்விமான்களின் *பகிஷ்கரிப்பு* பற்றிய கட்டுரையை வாசித்ததுடன் அது மட்டும்தான் இஸ்ரேலிய கொள்கை சம்பந்தமாக நான் கண்ட மிகத் தெளிவானதும் தீர்க்கமான மனப்பாக்குடனுமான கட்டுரையென்று உங்கள் பக்கமாக நின்று சில வரிகளை கூற விரும்புகிறேன். இந்த *பகிஷ்கரிப்பானது* பிழையானது. ஏனெனில் என்னைப் பொறுத்தமட்டில் 20 நாடுகள் இடம்பெற வேண்டியதாக நான் கருதும் மனிதாபிமானமற்ற சகல நாடுகளை ஆழ்ந்த பரிசீலனைக்கும் தனிமைப்படுத்தலுக்கும் ஆளாக்காத வகையிலான ஓர் கெட்ட இரசனை கொண்டதாக என்னால் கண்டறியப்பட்டுள்ளது.

இந்த *பகிஷ்கரிக்கும்* ஆதரிக்கும் மனுவை நான் பார்த்தவுடன் அதில் பல அராபிய பெயர்கள் கைச்சாத்திடப்பட்டுள்ளதையும அவதானித்தேன். இந்த புறக்கணிப்பு சவூதி அரேபியா (நிச்சயமாக இஸ்ரேலைப் போல நீதியற்ற பாரபட்சமான ஆட்சியான) இற்கு எதிராயிருப்பின் அவர்கள் இதில் கைச்சாத்திட மறுப்பது முஸ்லிம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எஃவ். பி. ஐ யும் அல்பேர்ட் ஐன்ஸ்ரைனும்

ஐன்ஸ்ரைன் பதிவுக் கோப்பு; பிரெட் ஜெரோம் (Fred Jerome) எழுதிய, *மிகப் புகழ்பெற்ற விஞ்ஞானிக்கு எதிரான ஜே.எட்கார் ஹூவெரின் (J. Edgar Hoover) இரகசிய யுத்தம்.* சென் மார்டின் பதிப்பகம், 2002. 348 பக்கங்கள். ISBN 0-312-28856-5.

அலன் வைட், பீட்டர் டானியல்ஸ்
3 செப்டெம்பர் 2002

அல்பேர்ட் ஐன்ஸ்ரைன் இற்கு எதிராக எஃவ்.பி. ஐ இனது உளவுபார்ப்பு 22 வருடகால மற்றும் அவதூறான பிரச்சார நடவடிக்கைகள் அண்மையில் வெளியான புத்தகத்தில் ஆராயப்பட்டுள்ளன.

கலைஞர்கள், இசைஞர்கள், விஞ்ஞானிகள் மற்றும் கல்விமான்கள் உள்ளடங்கலாக மிக பிரபல்யமான மனிதர்களை எவ்.பி. ஐ உளவுபார்த்து வருவதென்பது பல தசாப்தங்களாக நன்கு அறியப்பட்ட விடயமாகும். இருபதாம் நூற்றாண்டின் மாபெரும் விஞ்ஞானியான ஐன்ஸ்ரைன் மீதான எஃவ். பி. ஐ இன் பதிவுக் கோப்பு பற்றிய விடயம் புளொரிடா சர்வதேசப் பல்கலைக் கழகத்தின் விரிவுரையாளர் ரொபர்ட் அலன் சுவாட்ஸ் (Robert Alan Schwartz) *1983* இல் *த நேஷன் (The Nation)* என்னும் சஞ்சிகைக்கு இவ் விடையம் பற்றி எழுதியபோது முதன்முதலாக வெளிச்சத்திற்கு வந்தது.

25 வீதம் வரையிலான ஐன்ஸ்ரைன் பதிவுக்கோப்பு அதிகாரக் குழுவினால் இருட்டடிக்கப்பட்டு விட்டன அல்லது தடுக்கப்பட்டுள்ளன. படைப்பாளர் பிரெட் ஜெரோம் (Fred Jerome) சுதந்திர தகவல் சட்டத்தின் (Freedom of Information Act) கீழ் வழக்குத் தொடர்ந்து எஞ்சியிருந்த மிக அதிகளவிலான ஆவணங்களை வெற்றிகரமாக பெற்றுக்கொண்டார். இதன் விளைவு, தசாப்தங்களாக ஐன்ஸ்ரைனுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டுவந்த நடவடிக்கைகளினை உள்ளடக்கிய 1,800 பக்கங்கள் கொண்ட கோப்பினை இன்னும் அதிகளவில் விவரமான முறையில் பரிசீலிக்க இட்டுச்சென்றது.

இப் புத்தகம் ஒரு முழுமையான வாசிப்பிற்கு மிக பெறுமதியானதாகும். இது ஐன்ஸ்ரைனினது செயற்பாடுகள் பற்றிய அதனது சொந்த பரிசீலனையில், ஐன்ஸ்ரைன் இறந்ததிலிருந்து தசாப்தங்களாக பரந்துபட்ட வாசகர்களினால் மிக குறைந்தளவில் அறியப்பட்டிருந்துவந்த ஐன்ஸ்ரைன் கோப்பினை அவர்களுக்கு மிக விபரப்படுத்தியுள்ளது; முழு உலகையும் மாற்றியமைத்ததோடு, விசேடமான பொது சார்புக் கோட்பாட்டை முன்வைத்த, விஞ்ஞான மேதைகளின் வரிசையில் இடம்பெற்றுள்ள, நோபல் பரிசு பெற்ற இயற்பியல் விஞ்ஞானி, யுத்தத்துக்கு எதிராக ஜனநாயக உரிமைகளுக்கும் பொதுச் சுதந்திரத்திற்குமான போராட்டத்திற்காக தன்னை முழுமையாக அர்ப்பணித்திருந்தார். அவர் ஒரு சமூக சமத்துவமின்மையின் வெளிப்படையான எதிர்ப்பாளராகவும் திட்டமிட்ட சோசலிச பொருளாதாரத்தின் பரிந்துரைபாளராகவும் விளங்கினார்.

ஐன்ஸ்ரைன் கோப்பு எஃவ்.பி.ஐ இன் உளவுவேலையினை தெளிவுபடுத்திக்காட்டும் மிக உபயோகமான நினைவூட்டலாகும். பாரம்பரிய மற்றும் சுயதிருப்தி தாராளவாதிகள் (liberals), மெக் கார்த்தி (McCarthy) சகாப்தத்தின் "தகாத செயல்கள்" பற்றி அடிக்கடி குறிப்பிடுகின்றனர். ஐன்ஸ்ரைனுக்கு எதிரான பிரச்சாரம் காட்டுவதுபோல், இம்முறைகளின் பிரயோகம் குளிர் யுத்தம் மற்றும் மக்கார்த்தி காலத்திற்கு முன்னரான காலப்பகுதிக்கும் நீண்டு செல்வதுடன், 1950 களின் ஆரம்பத்தில் அதியுயர் வடிவத்தையும் எடுத்திருந்தது.

குளிர் யுத்த காலப்பகுதிக்கு முன்னர் ஸ்மித் சட்டப்படி (Smith Act) கம்யூனிஸ்ட் கட்சி தலைவர்களுக்கு எதிரான சட்ட நடவடிக்கைகளுக்கும் முன்பிருந்தே, பிரபல்யமான மனிதரின் சோசலிச அல்லது தீவிரவாத (Radical) நோக்கு ஒன்றே ஒரு எஃவ்.பி.ஐ விசாரணைக்கு போதுமான அடிப்படையாக கருதப்பட்டது. ஐன்ஸ்ரைனுக்கு எதிராக பிரயோகிக்கப்பட்ட செயல்முறைகள் அவரது கடிதங்களை சட்டவிரோதமான முறையில் திறத்தல், அவரது தொலைபேசி அழைப்புகளை கண்காணித்தல் மற்றும் அவரது அரசியல் நோக்கு மற்றும் செயற்பாடுகள் சார்ந்த விபரப் பிரிவுகளை குற்றமாக்கும் நோக்கத்துடன் சேகரித்தல் போன்றன யாவும் வழமையான செயல்முறைகளுக்கான நடைமுறைகளாக இருந்தன.

எஃவ்.பி.ஐ (FBI) இனது ஜனநாயக உரிமைகள் மீதான தாக்குதல்கள் மெக் கார்த்தி (McCarthy) இன் வீழ்ச்சியுடனோ அல்லது 50 வருடங்களாக உளவு அமைப்பில் ஆட்சி செலுத்திய ஜே.எட்கார் ஹூவெர் (J. Edgar Hoover) 1972 இல் இறந்ததுடனோ நின்றுவிடவில்லை என்பதனையும் தொடர்ந்து வந்த வரலாறு காட்டியுள்ளது.

ஐன்ஸ்ரைனுக்கு எதிரான அதிகாரப்பூர்வமான நடவடிக்கைகள் அவர் *1933* ஹிட்லரிடம் இருந்து அகதியாகி ஐக்கிய அமெரிக்காவுக்கு சென்று வசிப்பதற்கு முன்னராகவே தொடங்கப்பட்டுவிட்டது. முன்னர் பலமுறை சென்றுவந்தது போல, 1932 இல் அவர் கலிபோர்னியாவில் உள்ள ஒரு பல்கலைக் கழகத்தில் கற்பிப்பதற்காக விசா விண்ணப்பம் செய்தபோது, தேசபக்த பெண்கள் சங்கம் எனப்படும் ஒரு அதிதீவிர வலதுசாரி குழுவினால் வெளிநாட்டு அமைச்சகத்திற்கு அவரை நாட்டுக்குள் அனுமதிக்கக் கூடாது எனக் கோரி 16 பக்கங்கள் கொண்ட ஒரு கடிதம் எழுதப்பட்டது. இக்குழு குறிப்பிடுவதன்படி, ஐன்ஸ்ரைனின் "நன்கு அறிந்த யுத்த எதிர்ப்பு அனைத்துலகவாத நோக்கு "கம்யூனிச, மற்றும் அராஜகவாத கம்யூனிச இயக்கங்களுடனும் குழுக்களுடனும்" தொடர்புபட்டது.

அலுவலக முறையில் எழுதப்பட்ட நீண்ட கடிதத்தை பெற்றுக் கொண்ட அரச திணைக்களம், பேர்லினில் உள்ள அமெரிக்க தூதரகத்தில் ஐயன்ஸ்ரீனின் அரசியல் கண்ணோட்டம் தொடர்பாக விசாரடணையை தொடர்ந்தது. அன்றைய அசோசியேடட் பிரஸ்சின் (Associated Press) கருத்துப்படி; இந்நிகழ்வின்போது, "பேராசிரியர் ஐன்ஸ்ரைன் பொறுமை இழந்தார். வழக்கமாய் அமைதியாய் காணப்படும் அவர் முகம் கடுகடுப்பாகியது, சாதாரணமான அவரது இனிய குரல் கடுமையாகியது, அவர் கத்தினார்: 'என்ன இது, பிறர் விடையங்களில் அத்துமீறி தலையிடல்? இது ஒரு சதிக்கான முயற்சியா? இப்படியான மடமைத்தனமான வினாக்களுக்கு விடையளிக்க நான் முன்மொழியவில்லை. அமெரிக்காவிற்கு போவதற்காக நான் கேட்கவில்லை. உங்கள் நாட்டவரே என்னை வரவேற்றிருக்கின்றனர்; ஆம், என்னை கெஞ்சினர். நான் ஒரு சந்தேகநபராக உங்கள் நாட்டிற்கு செல்லவேண்டுமானால், நான் ஒருபோதும் போக விரும்பவில்லை. நீங்கள் எனக்கு விசா வழங்க விரும்பாவிடின், தயவுசெய்து முடியாது என்று கூறுங்கள்.. அப்போது நான் எங்கு நிற்கின்றேன் என்பது எனக்குத் தெரியும்.'
"

இதற்குப் பின் ஒரு மணிநேரத்திலேயே பத்திரிகைகள் இச் சம்பவத்தினைப் பற்றி அறிவித்தன, பின்னர் மறுநாளே ஐன்ஸ்ரைனுக்கும் அவரது மனைவிக்கும் வெளிநாட்டுத் திணைக்களம் விசா வழங்குவதை அறிவித்தது. டிசம்பர் 10, 1932 இல் அவர் கப்பல் ஏறி, ஜனவரி 12, 1933 இல் அமெரிக்கா வந்தடைந்தார். இதற்குப்பின் இரண்டு வாரத்திற்கு சற்று பின்னர் அடோல்ஃப் ஹிட்லர் ஜேர்மனியில் அதிகாரத்தைக் கைப்பற்றினார். அதேபோது அமெரிக்காவில் ஐன்ஸ்ரைனின் இருப்பும் நிரந்தரமானது.

அதிகாரிகள் சடுதியாக இறங்கி வந்ததானது ஒருபோதும் கண்காணிப்பினதும் தொந்தரவினதும் முடிவாக இருக்கவில்லை மாறாக அது தொடக்கமாகவே இருந்தது. தேசபக்த பெண்கள் சங்கத்தின் தாக்குதலே ஐன்ஸ்ரைன் கோப்பின் தொடக்கமாக அமைந்தது. 1930 களில் எஃவ்.பி.ஐ. இதற்கு பெரும்பாலும் சிறு குறிப்புகள் மற்றும் தகவல் அறிக்கை குறிப்புகளாக, ஐன்ஸ்ரைன் உள்நாட்டு யுத்தத்தின்போது பாசிச பிராங்கோவிற்கு எதிராக அப்போதைய ஸ்பானிய அரசாங்கத்திற்கு ஆதரவளித்தார் என்பது போன்றவற்றை சேர்த்துக்கொண்டது. இக்காலப்பகுதியில் ஐன்ஸ்ரைன் நாசி ஆட்சியில் இருந்து அகதியாக வெளியேறி அமெரிக்காவினுள் மட்டுப்படுத்தப்பட்ட வெற்றியுடனே நுழைய முடிந்தது.

## மன்ஹாட்டன் திட்டம்

ஆவணத்தின் அடுத்த பெரும் குறிப்பு, அதாவது நாசிகளுக்கு முன்னரே அணு ஆயுதங்களை அபிவிருத்தி செய்யவேண்டும் என்ற போட்டியில், மன்ஹாட்டன் திட்டமென எது வந்ததோ அதனது தொடக்கத்ததினைப் பற்றிப் பேசுகின்றது. வாழ்வு முழுவதுமே ஒரு அஹிம்சாவாதியாக இருந்த ஐன்ஸ்ரைன், அப்போதைய ஜனாதிபதியான ருஸ்வெல்டிற்கு, ஹிட்லர் ஆட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐன்ஸ்ரைனுக்கு பாதிப்பான எந்தவொரு தகவலையும் ஒன்றும் விடாமல்" சேகரித்து தரும்படி எஃவ்.பி.ஐ. யிடம் கேட்கப்பட்டிருந்தது. பின்னர் தொடர்துவந்த ஒன்றில் குடிவரவு மற்றும் குடியுரிமைத் திணைக்களம், "...இக் குடியுரிமை வழங்கப்பட்ட நபர், உலகரீதியில் ஒரு விஞ்ஞானி என்னும் அபிப்பிராயத்துடன் இருந்ததாலும், குடியுரிமையை இல்லாதொழிப்பதை சாத்தியமாக்கும் வகையில் ஒரு தெளிவான விசாரணை நடாத்தப்படவேண்டும்" எனக் குறிப்பிட்டிருந்தது. ஐன்ஸ்ரைன் தொடர்பாக ஒரு ஐந்து வருட விசாரணை தொடர்ந்து நடந்தது.

ஐன்ஸ்ரைன் சாதாரணமாக இழிவுபடுத்தும் நடவடிக்கைகளினால் பாதிக்கப்பட்ட ஒரு சாதாரண பலியாள் அல்ல. இது பெருமளவில் இரகசியமாக நடாத்தப்பட்டாலும், இப்பின்னணிகள் மக்கள் மத்தியில் தெரிந்துகொள்ளப்படும் என அதிகாரிகள் மிகவும் பத்துடன் இருந்தனர். ஐன்ஸ்ரைனும் தான் தொடர்ந்து கண்காணிப்பின் கீழ் இருந்து வந்ததனை நன்கு அறிந்திருந்தார். 1948 இல் ஒரு இரவு விருந்தின்போது அவர் அமெரிக்காவிற்கான போலந்து தூதுவருடன் உரையாடுகையில், "அமெரிக்கா இன்னும் ஒரு சுதந்திரமான நாடு அல்ல என்பதனை நீங்கள் கட்டாயமாக உணர்ந்திருப்பீர்கள் என நான் எண்ணுகின்றேன், சந்தேகத்திற்கு இடமற்றமுறையில் எமது உரையாடல்கள் பதிவு செய்யப்பட்டுக் கொண்டிருக்கின்றன. இந்த அறை தொலைத்தொடர்பு இணைப்புகளினால் இணைக்கப்பட்டிருக்கின்றது, எனது வீடு கவனமாக அவதானிக்கப்படுகின்றது." எனக் கூறினார். ஐன்ஸ்ரைன் கோப்பில் இக் கலந்துரையாடல் காணப்படுவதானது இந்த எச்சரிக்கையினை சரியாக உறுதிப்படுத்துகின்றது.

## ஜனநாயகக் கொள்கைகள்

முதுமையுடனும் கடுமையான நோயுடனும் போராடியபோதிலும், ஐஸ்ன்ரைன் இறக்கும் வரைக்கும் ஜனநாயக அடிப்படைக்காகவே வாதிட்டார். பலதரப்பட்ட சம்பவங்களில் ஏனய பிரபல்யமான பல புத்திஜீவிகளின் மௌனத்தினால் விளைந்த வெற்றிடத்தினை அவர் நிரப்பினார் என்றால் அது மிகையாகாது. இதற்கு மிகச்சிறந்த உதாரணங்களில் ஒன்று மே 1953 இல் அவர் புருகளின் (Brooklyn) ஆசிரியர் வில்லியம் ப்ரவுன்கிளாஸ் (William Frauenglass) இற்கு எழுதிய கடிதமாகும். வழங்கப்பட்டிருந்த எழுத்து வடிவ சாட்சியத்தை உறுதிப்படுத்துமாறு ப்ரவுன்கிளாஸ் அப்போதிருந்த காங்கிரசினது சதிசெய்யும் குழுவான செனட் உள்ளக பாதுகாப்பு உப கமிட்டியினால் கேட்கப்பட்டிருந்தார்.

ப்ரவுன்கிளாஸ் ஆலோசனையும் ஆதரவும் வேண்டியதற்குப் பதிலாக, ஐன்ஸ்ரைன் தனது 74 ஆவது வயதில் ஒரு கடிதத்தினை அனுப்பினார். அவர்கள் அதனை *நியூ யோர்க. டைம்ஸ்* பத்திரிகைக்கு அனுப்புவதற்கு சம்மதித்தனர், அங்கு அது ஜூன் 12 இல் பிரசுரிக்கப்பட்டது. இது " 'உறுதிப்படுத்துவதற்கு மறுப்பு', அறிவுஜீவிகளுக்கு காங்கிரசினால் விடுக்கப்பட்ட வேண்டுகோளுக்கு ஐன்ஸ்ரைன் அறிவுரை" என தலைப்பிடப்பட்டு, முதற்பக்க செய்தியாக வெளிவந்தது, இதற்கு டைம்ஸ் பத்திரிகை ஆசிரியர் "சட்டத்துக்குப் புறம்பான" "இயல்புக்கு மாறான" "புத்திசாதுரியமற்ற" செயலிலிருந்து பாதுகாக்கும் அழைப்பு என முத்திரையிட்டார்.

ஐன்ஸ்ரைன் தொடர்பான பொது அபிப்பிராயம், மிகப் புத்திசாதுரியமான ஆனால் குறிப்பிட்ட மட்டத்தில் ஞாபக மறதியான விஞ்ஞானி, எம் நாட்டில் பௌதீகத் தத்துவார்த்தத்தின் உச்சியில் உள்ள மனிதன் ஆனால் இன்றைய நடைமுறை உலகத்தவனல்ல என வளர்க்கப்பட்டதுடன், இக்கருத்து அவரது சுயசரிதை எழுதுபவர்களால் பெருமளவு ஏற்றுக்கொள்ளப்பட்டதாகவும் இருந்தது. அவருக்கு ஒரு நினைவுச்சின்னமாக மாற்றப்பட்டதுடன், அவரது அரசியல் நோக்கு வெளித்தெரியாத வண்ணம் கவனமாக மறைத்திருக்கும் வகையில் அவர் வைக்கப்பட்டார். சில வருடங்களுக்கு முன்னர் டைம்ஸ் இதழ் இவரை இந்த "நூற்றாண்டு மனிதன்" ஆக தெரிவு செய்தபோது, அது அவரது சோசலிச கண்ணோட்டத்தின் எல்லா அம்சங்களையும் புறந்தள்ளி விட்டிருந்தது.

இப் பொதுஅபிப்பிராயம் பொய்யானதாகும். ஐன்ஸ்ரைன் ஜேர்மன் மற்றம் ஐரோப்பிய கலாச்சாரத்தில் ஊறியவராக இருந்தார். அவர் 1879 இல் பிறந்தார், அவர் மார்க்ஸ்-எங்கல்ஸ் இனால் உருவாக்கப்பட்ட சோசலிச தொழிலாளர் இயக்கத்தின் விளைநிலமான நாட்டில் வளர்ந்தார், அவர் முழுவதுமாக மாக்சிசத்தை தழுவாவிடினும், அவர் அதனால் ஆழமாக செல்வாக்குச் செலுத்தப்பட்டிருந்தார். இளம் பருவம் தொட்டே ஐன்ஸ்ரைன் சர்வதேச வாதத்திற்கும் மனிதாபிமானத்துக்கும் அடிபணிந்தவராக இருந்ததுடன், இதுவே அவரது முழுவாழ்வினதும் பண்பினை எடுத்துக்காட்டியது.

1895 இல் அவர் படிப்பதற்கும் வேலைபார்ப்பதற்குமாக ஜேர்மனியில் இருந்து புறப்பட்டு சுவிற்சர்லாந்து சென்றார், அங்குதான் அவர் சார்பியல் கோட்பாட்டிற்கு (Relativity) அவரது பிரபல்யமான ஆரம்பகால பணியினைச் செய்தார். அவர் 1914 இல் முதலாம் உலக யுத்தம் ஆரம்பிப்பதற்கு சில மாதங்கள் இருக்கும்போதுதான் ஜேர்மனிக்கு திரும்பினார். ஜேர்மன் சமூக ஜனநாயகமும், பெரும்பான்மையான புத்திஜீகளும் பேரினவாதத்திற்கு கட்டுண்டு அடிபணிந்துபோன அந்த நேரத்தில், ஐன்ஸ்ரைன் ஆகர்ஷிக்கத்தக்க அறிவுஜீவிகளில் ஒரு மார்க்சிச நிலைப்பாட்டில் இல்லாவிட்டாலும் ஒரு அகிம்சாவாத நிலையிலிருந்து யுத்தத்தினை எதிர்த்த ஒருவராகத் திகழ்ந்தார்.

ஐன்ஸ்ரைன் அறியாமையினதும், அறிவொளிதடையினதும், விசேடமாக எல்லா வகையான சோவினிசத்தினதும் இனவாதத்தினதும் ஓர் எதிர்ப்பாளராக அவரது வாழ்நாள் முழுவதும் திகழ்ந்தார். 1930 களின் காலப்பகுதியில், அப்பொழுதுதான் புதிதாக அமெரிக்காவிற்கு குடிபெயர்ந்திருந்தார் எனினும், அல்பமா மாநிலத்தில் ஸ்கொட்ஸ்பரோ என்னுமிடத்தில் இனவாதச் சதியினால் பாதிக்கப்பட்ட ஒன்பது பேர் சம்பந்தப்பட்ட வழக்கு விசாரணையில் ஸ்கொட்ஸ்பரோ போயஸ்சை ("Scottsboro Boys") பாதுகாக்க முன்வந்தார். 1946 இல் இரண்டாம் உலக யுத்தம் முடிவடைந்து, ஒரு குரூரம் மிக்க இனவாத கலவையாக இருந்தது. இதில் வழக்கு விசாரணையின்றி மரணதண்டனை அளிக்கும் முறைகளும் அடங்கும், அவர் அமெரிக்காவில் வழக்கு விசாரணையின்றி மரணதண்டனை அளிப்பதனை எதிர்க்கும் (American Crusade Against Lynching ) அமைப்பினை உருவாக்க போல. ரொபேசன் (Paul Robeson) உடன் இணைந்துகொண்டார், இவ்வமைப்பே வாஷிங்டனில் நடந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தினைப் பொறுப்பேற்றிருந்தது.

அவர் நீண்டகாலமாக யூத ஆதரவு அமைப்பினராக (Zionist) இருந்தபோதிலும், ஐன்ஸ்ரைன் (1938 இல்) "யூத அரசினை அமைப்பதனைவிட அரேபியர்களுடன் அமைதியான முறையில் சேர்ந்து வாழத்தக்க ஒரு ஏற்றுக்கொள்ளக்கூடிய உடன்பாட்டினைக் காண்பது மிகவிரும்பத்தக்கது" என குறிப்பிட்டிருந்தார்.

ஐன்ஸ்ரைன், கம்யூனிஸ்ட் கட்சியினை பாதுகாத்தார் என்றால் அது ஸ்ராலினிசத்திற்கான மறைமுகமான ஆதரவில் அவரது பங்கு அல்ல. அவர் ஜனநாயக உரிமைகள் மீதான ஸ்ராலினிசத்தின் தாக்குதலின் கடும் விமர்சகராக இருந்தார், ஆனால் அவர் அமெரிக்காவின் கம்யூனிஸ்ட் கட்சி வெறுமனே மொஸ்கோவின் ஒரு கருவி என்னும் பொய்வாதங்களையும் அதனது அங்கத்தவர் கருத்துக்களை வெளிப்படுத்தும் மற்றும் ஸ்தாபனமயமாகும் உரிமைகளை மறுப்பதனையும் எதிர்த்து நின்றார். ஐன்ஸ்ரைன் நிலைப்பாடு இன்று குறிப்பிடத்தக்க மதிப்புள்ளதாகும், ஸ்ராலினிசத்தின் உடைவுக்குப்பின், முதலாளித்துவத்திற்கு வக்காலத்து வாங்கும் சிந்தனையாளர்கள் அனைவரும் அமெரிக்காவினுள்ளும் அத்துடன் சர்வதேச ரீதியிலும் சோசலிசத்திற்கான போராட்டத்தின் வரலாற்று ரீதியான அத்தியாவசியத்தினை நிராகரிப்பதற்காக மொஸ்கோவின் குற்றங்களை பயன்படுத்துவதனையே கடைப்பிடிக்கின்றனர்.

இதன்போதில் ரஷ்யப் புரட்சியின் சீரழிவின் மத்தியில் எழுப்பப்பட்ட வரலாற்று விடையங்கள் சம்பந்தமாகவும் மற்றும் லியோன் ட்ரொட்ஸ்கியின் ஸ்ராலினிசத்திற்கு எதிரான போராட்டத்தையிட்டும் ஐன்ஸ்ரைன் கவனத்தை கொண்டிருந்தார் என்பதற்கான அறிகுறி எதுவுமில்லை, அவர் தன்னை ஒரு சோசலிஸ்ட்டாகவே கருதினார். இது 1949 இல் புதிதாக உருவான சஞ்சிகையில் *மன்த்லி ரிவீவ் (Monthly Review)* சஞ்சிகையில் அவர் எழுதிய கட்டுரையினூடு நன்கு புலப்பட்டது. அக் கட்டுரை "சோசலிசம் எதற்காக?" என தலைப்பிடப்பட்டிருந்தது, இதிலிருந்து சில விபரங்களை மேற்கோள்காட்டுவது பயனுள்ளது.

முதலாளித்துவ சமுதாயத்தின் இன்றுள்ளது போன்ற பொருளாதார அராஜகமானது, என்னப் பொறுத்தவரை, அழிவிற்கான உண்மை காரணமாகும்.

"... உற்பத்திச் சாதனத்தினை உடமையாய்க் கொள்வதில் யார் எல்லாம் பங்கற்றவர்களோ அவர்களை நான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'தொழிலாளர்கள்' என அழைக்கப்படுபவர்கள் எந்த அளவுக்கு உண்மையான உடன்பாடுகளை 'சுதந்திர' மனதுடன் இருக்கின்றனரோ அந்த அளவிற்கு, தொழிலாளி உற்பத்தி செய்யும் பொருட்களின் உண்மையான பெறுமதியினைச் சமமாகக் கொடுப்பனவுகள் தீர்மானிக்கப்படுவதில்லை, மாறாக அவரது ஆகக் குறைந்தபட்ச தேவையின் (Minimum Needs) அளவினாலும் அத்துடன் வெளியில் எவ்வளவு எண்ணிக்கையான தொழிலாளர்கள் வேலைக்காக போட்டி போட்டுக் கொண்டிருக்கின்றார்கள் என்பதுடன் தொடர்புபட்டிருக்கும் முதலாளிகளது உழைப்பு சக்திக்கான தேவைகளின் அளவினாலுமே அது தீர்மானிக்கப்படுகின்றது.

'...நடப்பிலுள்ள நிலைமைகளின் கீழ், தனிப்பட்ட முதலாளிகள் தவிர்க்கமுடியாதவாறு நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ, முக்கிய தகவல் சாதனங்களை (பத்திரிகை, வானொலி, கல்வி) கட்டுப்படுத்துகின்றனர். இதனாலேயே இது தனிப்பட்ட குடிமகனுக்கு உண்மையில் அநேக விடயங்களில் மிகவும் கடினமானதாக இருப்பதுடன், அவர் புறநிலையிலான முடிவுகளை எடுப்பதனையும் தனது அரசியல் உரிமைகளை விவேகமான முறையில் உபயோகிப்பதனையும் மிகவும் சாத்தியமற்றதாக ஆக்கியுள்ளது.

'உற்பத்தி செய்யப்படுவது இலாபத்துக்காகவே அன்றி பயன்பாட்டுக்காக அல்ல. வேலைசெய்வதில் நாட்டமும் இயலும் தன்மையுமுள்ள அனைவருக்கும் எப்பொழுதும் வேலைதேடிக்கொள்ளக்கூடிய சாத்தியமான நிலைமை இங்கு இல்லை, ஒரு 'வேலையற்றோர் பட்டாளம்' அனேகமாக எப்பொழுதுமே இருந்துகொண்டிருக்கின்றது...

'இந்த தனிநபர்களை முடமாக்கும் தன்மையினை நான் முதலாளித்துவத்தின் மிகக் கேடுகெட்ட பேய்த்தனம் என்கின்றேன்... மாணவர்களது மனநிலையில் ஒரு மிகையான போட்டிபோடும் போக்கு உள்ளது, அவர்கள் வெற்றிகளின் பெறுமதிகளை வழிபடுவதற்கு பயிற்றுவிக்கப்பட்டுள்ளனர்...

"இந்த கொடூரமான கேடுகெட்ட பேய்த்தனத்தினை ஒழிப்பதற்கு ஒரேயொரு (அழுத்தம் அசைவால் வழங்கப்பட்டது) வழி மாத்திரமே உள்ளது, அதாவது ஒரு சோசலிச பொருளாதாரத்தினை ஸ்தாபிப்பதன் ஊடாகவே இது தனை பெறமுடியும், இத்துடன் சமூக இலக்குகளை அடையக்கூடிய வகையில் தலைமையேற்கப்பட்ட ஒரு கல்வி அமைப்புமுறை ஒருங்கமைக்கப்படவேண்டும் என நான் உறுதிப்பட்டு நிற்கின்றேன். இப்படியான ஒரு பொருளாதாரத்தில், உற்பத்தி சாதனங்களை சமுதாயம் தன்னகத்தே உரிமையாக்கிக் கொள்வதுடன், அங்கே அவை திட்டமிட்ட முறையில் பயன்படுத்தப்படும். ஒரு திட்டமிட்ட பொருளாதாரமானது உற்பத்தியினை சமுதாயத்தினரின் தேவைக்கு ஏற்ற வகையில் ஒழுங்கமைக்கின்றது. அது செய்யவேண்டிய வேலைகளினை வேலை செய்ய இயலுமானோர் அனைவருக்கும் பகிர்ந்தளிக்கும் அத்துடன் அது ஆண், பெண் குழந்தைகள் அனைவரது வாழ்வுக்கும் தேவையான அனைத்துக்கும் உத்தரவாதமளிக்கின்றது. தனிமனிதனது கல்வியானது இன்னும் அதிகப்படியாக அவனது இயற்கையான செயற்திறனை அதிகரிக்க வைக்கின்றது. இது நம் இன்றைய சமுதாயத்தில் காணப்படும் அதிகார புகழ்ச்சி மற்றும் அதிகாரத்தை வழிபடுவதற்குப் பதிலாக, அவனுக்குள் அவனது சகமனிதர்களுக்காக பொறுப்பேற்கும் ஓர் உணர்வினை வளர்க்கும் சக்தியாக இருக்கும்.'

1951 அளவில் ஐன்ஸ்டைனுக்கு எதிரான நடவடிக்கைகள் ஆரம்பமாகி மறைமுகத்தொடங்கின. செனட்டில் மெக் கார்த்தி நடைசெய்யப்பட்டது உள்ளார்ந்த அரசியல் காரியமாகியது. விசாரணைகளுக்கான ஆதரவுச் சக்திகள் குறைந்துசெல்லத் தொடங்கியமை வழிவகுத்தது. இருப்பினும் இவ் விசாரணை ஏறத்தாழ 1955 இல் அவர் தனது 76 வயதில் மரணமான பின்னர் சில நாட்கள் வரையும் முடிவுக்கு வரவில்லை.

ஐன்ஸ்டைன் மீதான இந் தாக்குதல் இதுபோன்ற பல விசாரணைகளில் ஒன்றுபோன்றதாகும். இக்காலகட்டத்தில் மிக முக்கியத்துவம் வாய்ந்த அமெரிக்க அறிவுஜீவிகளின் பெரும்பான்மையானோரைப் பற்றி ஒரு விடயத்திலோ அல்லது மற்றொன்றிலோ எஃப்.பி.ஐ. தகவல் சேகரிப்பினை மேற்கொண்டு வந்தது என்பது மிகைப்படுத்தல் அல்ல.

இது அமெரிக்க ஆளும் தட்டின் பிற்போக்குத்தனத்தின் ஒரு பிரதிபலிப்பாகும், இது அறிவுக்கு எதிரான நடவடிக்கைகளுடனும் மற்றும் அரசியல் கருத்துக்களையிட்ட மற்றும் அமெரிக்காவில் வாழும் பரந்துபட்ட மக்கள் அரசியல் கல்வியறிவூட்டப்படுதலால் ஏற்படும் தாக்கத்தினையிட்ட அச்சத்தினால் கட்டுண்டு கிடக்கின்றது. ஐன்ஸ்டைன் இனது பெருமை, பிரபல்யம் மற்றும் அரசியல் புத்திஜீவிதம் எல்லாம் அவரை, தனிப் புத்தகமான அரசியலுக்கான எதிர்ப்புகள் அனைத்தையும் நசுக்கிவிட கங்கணங்கட்டி நின்ற அரச அதிகாரத்திற்கு பெரும் அச்சத்தை விளைவிப்பவராய் மாற்றியது.

கடந்த வருடத்தின் சம்பவங்கள் எஃப்.பி.ஐ. மற்றும் ஏனைய உளவு அமைப்புகளது வேலைகளின் இடையறாத தன்மையினை தெளிவாக வெளிக்காட்டியுள்ளன. அமெரிக்க முதலாளித்துவம் பாரம்பரியமாக ஆட்சி நடாத்திவரும் அரசியல் கட்டமைப்பினுள் முதலாளித்துவ ஜனநாயகத்தின் மிக மட்டுப்படுத்தப்பட்ட எல்லைகளை வரலாறு எடுத்துக்காட்டியுள்ளது. போராட்டம் மூலம் வென்றெடுக்கப்பட்ட, மற்றும் தொடர்ந்து காப்பாற்றப்பட வேண்டிய அடிப்படை ஜனநாயக உரிமைகளும் முதலாளித்துவ ஜனநாயகமும் ஒன்றல்ல. ஆளும் வர்க்கம், பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடிகளின் அச்சுறுத்தல்களை நிச்சயமாக தானே உணரும் சந்தர்ப்பத்தில், அது "ஜனநாயகத்தின்" வரம்புகளை வெளிக் காட்டும்.

கடந்த வருடத்தின் சம்பவங்கள் எஃப்.பி.ஐ. மற்றும் ஏனைய உளவு அமைப்புகளது வேலைகளின் இடையறாத தன்மையினை தெளிவாக வெளிக்காட்டியுள்ளன. அமெரிக்க முதலாளித்துவம் பாரம்பரியமாக ஆட்சி நடாத்திவரும் அரசியல் கட்டமைப்பினுள் முதலாளித்துவ ஜனநாயகத்தின் மிக மட்டுப்படுத்தப்பட்ட எல்லைகளை வரலாறு எடுத்துக்காட்டியுள்ளது. போராட்டம் மூலம் வென்றெடுக்கப்பட்ட, மற்றும் தொடர்ந்து காப்பாற்றப்பட வேண்டிய அடிப்படை ஜனநாயக உரிமைகளும் முதலாளித்துவ ஜனநாயகமும் ஒன்றல்ல. ஆளும் வர்க்கம், பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடிகளின் அச்சுறுத்தல்களை நிச்சயமாக தானே உணரும் சந்தர்ப்பத்தில், அது "ஜனநாயகத்தின்" வரம்புகளை வெளிக் காட்டும். 1920 இல் புகழ்பெற்ற தொழிலாளர்களுக்கும் மற்றும் இடதுசாரி போராளிக் குழுவினருக்கும் எதிராக நடாத்தப்பட்ட பால்மர் ரைட்ஸ் (Palmer Raids) காலத்தில் இருந்து, 1941 இல் ட்ரொட்ஸ்கிச சோசலிச தொழிலாளர் கட்சியின் (SWP) தலைவர்கள் கைதுசெய்யப்பட்டு சிறையிலடைக்கப்பட்டு, மெக் கார்த்தி வேட்டையாடலை மற்றும் இன்று மத்திய கிழக்கு புலம்பெயர் தொழிலாளர்களுக்கு எதிரான வலைவீசிப்புகளுக்கும் மற்றும் உள்நாட்டு பாதுகாப்பு திணைக்களம் (Department of Homeland Security) உருவாக்கப்பட்டதும், அரசாங்கம் வெளியிலிருந்துவரும் புதும் எல்லாம் பயங்களை காட்டி உள்நாட்டில் எழும் எதிர்ப்புக்களை நசுக்குவதற்குமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டொறண்டோ சர்வதேச திரைப்பட விழா 2002: ஏன் அதிகளவில் ஏமாற்றத்தை ஏற்படுத்தும் திரைப்படங்கள் உள்ளன?

டேவிட் வோல்ஷ்
23 செப்டெம்பர் 2002

செப்டெம்பர் 5 தொடக்கம் 14 வரை இடம்பெற்ற டொறன்டோ சர்வதேச திரைப்பட விழா பற்றிய தொடர்ச்சியான கட்டுரைகளில் இது இரண்டாவதாகும்.

அண்மையில் டொறண்டோ திரைப்பட விழாவில் பெரும்பாலான திரைப்படங்கள் முற்றிலும் ஏமாற்றத்தை தந்தன. பொதுவாக நோக்கினால் அவை, அவைகளின் தயாரிப்பாளர்களின் முன்னைய படைப்புகளினால் ஏற்படுத்தப்பட்ட எதிர்பார்ப்புகளை அடையத் தவறிவிட்டன. பொதுவாக ஏமாற்றந்தரும் செயல்களை எதிர்ப்பது மற்றைய ஒவ்வொரு துறையிலும் உள்ளது போலவே சினிமாவிலும் தவிர்க்க முடியாத ஒன்றாகும். ஒவ்வொரு கலைஞனும் முன்நோக்கிச் செல்ல தீர்மானிப்பதில்லை. இருந்தபோதும் சில திரைப்படத் தயாரிப்பாளர்கள் ஒரேயொரு ஆழமான படைப்பையே அவர்களுக்குள் கொண்டுள்ளனர். மேலும் பங்காற்றுவதற்கு தலைவிதிக்கப்பட்டவர்களுக்கு கூட கால் ஊன்ற நேரம் தேவைப்படலாம். ஓர் உறுதியான ஆரம்பத்திற்கு பின்னர், ஒரு திரைப்பட இயக்குனரோ எழுத்தாளனோ பிழையான திருப்பத்தை எடுக்க முடியும். அல்லது இன்னும் பாரிய நோக்குகள் மற்றும் கிராக்கியான கருத்திட்டங்களுக்கு முகம் கொடுக்கவும் தள்ளாடவும் வேண்டி ஏற்படுகின்றது.

எப்படியாயினும் ஏமாற்றம் குறிப்பிடத்தக்களவு கவனிக்க கூடிய ஒரு காட்சியாக அமையுமாயின், இது அதிகளவு பொதுவானதொரு பிரச்சினைக்கு இட்டுச் செல்லும். அவர்களின் தொழில் விருத்தியின் போது தற்போது உள்ள ஒரு சில இளம் திரைப்படத் தயாரிப்பாளர்களே ஆழமாக, கனிந்தும், அதிகளவு முதிர்ச்சியும் பெறுவது ஏன்? மொத்தத்தில், விதிவிலக்கிலும் பார்க்க பின்னடைவு தன்னை உடனடியாக வெளிப்படுத்துவது ஏன்?

நிச்சயமாக விமர்சகரோ அல்லது பார்வையாளரோ ஆரம்பத்திலிருந்து போதுமானளவு கண்டிப்பானவர்களாக இல்லாமை, அவனோ அல்லது அவளோ திரைப்படத் தயாரிப்பாளரிடமிருந்து அல்லது திரைப்படத்திலிருந்து மேலதிக விருப்பமான எண்ணங்களில் ஆழ்ந்திருப்பதற்கு காரணமாகலாம். கலாச்சார தோற்றநிலை ஒப்பீட்டளவில் இருண்டதாக உள்ளமையால் இவ்வாறானவை ஏற்படுகின்றன. நாம், மிக அளவுக்கு மிஞ்சிய "ஆவல் நிறைந்த சிந்தனைக்கு" பதிலாக திரைப்படத் தயாரிப்பாளருக்கு "சந்தேகத்தின் அனுகூலங்களை வழங்குவது" அல்லது "உற்சாகத்தைக் கொடுப்பதோடு" மட்டுமல்லாமல், விமர்சனத்துக்கு அல்லது வாசகருக்கு மிகவும் அருந்தையாக சன்மானமளிக்கும் கலைஞனுக்கு, ஆக்கப் பூர்வமான ஆதரவின் நீடிப்புக்கான ஆரம்பத்தை சாத்தியமாக்கும் புதிய படைப்பை அல்லது ஒரு தொடர்ச்சியான படைப்புகளை சுட்டிக் காட்டுவோமானால், அப்போது நாம் தெளிவுபடுத்தவேண்டியுள்ள வேலைத்திட்டத்துக்கு மீண்டும் ஒரு முறை முகம் கொடுப்போம்: ஒரு பரந்த மற்றும் உறுதியான வீழ்ச்சி.

இந்த வருட திரைப்பட விழாவில் குறிப்பிடும்படியாக அதிகளவு ஏமாற்றத்தை ஏற்படுத்திய திரைப்படங்களில் மைக்கல் அல்மேரயடாவின் *ஹப்பி ஹியர் அன்ட் நௌ (Happy Here and Now)* லின்னே ரம்சியின் *மோவேன் கோளர் (Morvern Callar)* புருட் சானின் *பப்ளிக் டொய்லட் (Public Toilet)* மற்றும் மொகமட் சலே ஹறோனின் *அபூனா (Abouna)* ஆகியவையும் அடங்கும். இத் திரைப்படத் தயாரிப்பாளர்கள் அனைவரும் முன்னர் நம்பிக்கையூட்டும் வேலைகளை செய்திருந்தனர்.

அல்மேராய்டாவின் ஹம்லட் (2000) ஒரு குறிப்பிடத்தக்க முயற்சியாகும். அவருடைய தொழிலில் ஒரேயொரு பிரகாசமான புள்ளியாக இது அமையக்கூடும். *ஹப்பி ஹியர் அன்ட் நௌ (Happy Here and Now)*, நியூ ஓர்லீன்ஸ் இல் காணமற் போன பெண்ணை தேடுவது பற்றிய ஒரு சுய விருப்பம் மற்றும் சுய சிந்தனையுடைய ஒன்றாகும். உண்மையில் எந்தவித தாக்கத்தையும் ஏற்படுத்தவில்லை.

ரம்சியின் முதற் திரைப்படமான *ராய்கசர் (Ratcatcher)* (1999) பரந்தளவு பாராட்டப்பட்டது. "புதிய ஸ்கொட்லாந்து சினிமா" என்ற எவருக்கும் அசௌகரியத்தை ஏற்படுத்தும் பதத்தின் ஒரு பகுதியாக கருதப்படும், இயக்குனர் நம்பமுடியாத அத்துடன் தொடர்புடைய இரண்டாவது அம்சத்தை செய்துள்ளார். கிறீஸ்மஸ் தினம் காலையில் கண்விழிக்கும் ஒரு இளம் பெண் அவரது ஆண் நண்பன் தற்கொலை செய்துகொண்டதை அறிகின்றார். அப்பெண் அவரது உடலை வெட்டி புதைப்பதில் ஈடுபடுகின்றார், அத்துடன் அப்பையனுடைய பிரசுரமாகாத நாவலை தனதென்று உரிமை கோருகின்றார். முடிவில் கிளாஸ்கௌவில் தொழிலாளர் வர்க்க வாழ்க்கை அதிருப்தியை ஏற்படுத்துகையில் பிரசுரத்தாரின் 100,000 பவுண் காசோலையை பத்திரப்படுத்திக் கொண்டு மோர்வேன் அவருடைய வழியில் செல்கின்றார். *குட்வில் ஹன்டிங் (Good Will Hunting)* அல்லது எரின் *ப்ரொகொவிச் (Erin Brockovich)* என்பவற்றில் முக்கிய இடம்பெறும் கடைசி நிமிட சுயநலத்தை விட இது எவ்வாறு சிறந்ததாகக் கருதப்பட முடியும்?

ஹொங்கொங் திரைப்படத் தயாரிப்பாளர் புருட்சன் இரு புத்திசாலித்தனமான மற்றும் உணர்ச்சிமிக்க திரைப்படங்களை *லிட்டில் செயுங் (Little Cheung)* மற்றும் *டூரியன் டூரியன் (Durian Durian)* (2000) ஆகியவற்றில் படைத்தார். குறிப்பிட முடியாதளவு சுவையற்ற மற்றும் கருத்தற்ற *பப்ளிக் டொய்லட்டை (Public Toilet)* யார்தான் முன்கூட்டியே தெரிவித்திருப்பார்கள்? சாட்டிலிருந்து (Chad) மஹமெட் சலே ஹறெணனின் *பாய் பாய் அப்ரிகா (Bye Bye Africa)* (1999) உணர்ச்சிகளை கொண்டிருந்ததோடு சுய விமர்சனமுடைய பிடிகளை கொண்டிருந்தது. *அபூணாவில் (Abouna)* ஒன்றுமே இல்லை.

## கையறோஸ்ராமி, கோடாட் மற்றும் ஏனையவர்கள்

ஈரானிய திரைப்படத் தயாரிப்பாளர் அபாஸ் கையறோஸ்டாமியினால் இயக்கப்பட்ட *10*, சிறிதளவு வித்தியாசமான பிரிவுக்குள் விழுகின்றது. பெரும்பாலும் தாய்க்கும் மகனுக்கும் இடையிலான 10 உரையாடல்களை கொண்டுள்ள இத்திரைப்படம் அடக்கப்பட்டும் பலவீனமானதாகவும் உள்ளது. ஒரு சொற்பளவு சுதந்திரத்தை வெல்லும் முயற்சியில் அந்தப் பெண் கணவரிடமிருந்து பிரிந்துள்ளமை அப் பையனுக்கு பெருமளவு அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. அதில் எதையுமே அவரது மகன் பெற்றுக்கொள்ளப் போவதில்லை, இந்த நிலைமைக்கூடாக மற்றும் நடத்தை மூலமாக ஈரானிலுள்ள பெற்றோருக்குள்ள தொடரும் சுமை மற்றும் அடக்குமுறையான சமூக உறவுகளை விளக்குவதற்கு கையறோஸ்ரோமி முனைகின்றார் என வைத்துக்கொள்வோம். பெரும்பாலான பகுதிகளில் தாயும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்களும் மாத்திரம் எச்சரிக்கை ஏற்படுத்துகின்றதுடன் உபயோகமற்றதாகவும் மற்றதில் சுய சிக்கலுக்குள்ளாகுகின்றனர்.

இத்திரைப்படம் 'மாற்றத்தை ஏற்படுத்தவில்லை' ஏனெனில் ஒருவர் அவருடைய அண்மைய, அதிகளவு படைப்புக்களின் பாதையை அடிப்படையாகக் கொண்டு இந்த மாதிரியான கருத்துக்களை வைப்போன்றாயின் சந்திப்பது என்பதை எதிர்பார்த்துக் கொண்டுதான் இருந்திருப்பார். பெரிய ஈரானிய இயக்குனர்களின் ஈரானிய புரட்சிபற்றிய தீவிரமான மற்றும் இஸ்லாமிய ஆட்சி மற்றும் வேறு வரலாற்று, சமூக பிரச்சினைகளின் மதிப்பீட்டில் தொடர்ச்சியான புறக்கணிப்புகள் ஒரு குறிப்பிட்ட அளவு போன்ற ஒன்றிற்குள் தவிர்க்க முடியாத வகையில் அவர்களை இட்டுச் சென்றுள்ளது. ஈரானியர்கள் குறிப்பாக சமூக வாழ்வின் கடுமை, அழுத்தங்கள், மற்றும் மனிதத்தன்மையுள்ள நாடகங்களில் நிபுணத்துவம் பெற்றுள்ளனர். அவர்கள் 'ஷா'விற்கு எதிரான போராட்டத்தை ஊக்குவித்த, ஆனால் தெஹரானிலுள்ள பிற்போக்கு ஆட்சியால் கொடூரமான முறையில் அடக்கப்பட்ட ஜனநாயக உணர்வுகள் மீதான எல்லையை நிர்ணயித்தனர்.

இந்த வரிசையில் குறிப்பிட்ட ஒன்றை (சிறப்பான மனித உறவு அல்லது வெறுப்பிற்குரிய இரண்டில் ஒன்றைத் தெரிவதற்கான கட்டாயம்) எந்தவொரு ஆழமான முறையிலும் சிந்திப்பதற்கு ஒருவர் உலகின் பொதுவான அம்சம் தொடர்பாக (சமூகத்தின் நிலை மற்றும் அதன் அபிவிருத்தி என்பன) குறிப்பிடத் தக்களவு புரிந்துணர்வின் அடிப்படையிலேயே வரைய முடியும். இல்லையெனில் அந்தச் சித்தரிப்பு வளமற்றதாகையால் அதன் பலத்தையும் நோக்கத்தையும் இழந்துவிடும். இவற்றைச் சிந்தித்துக் கொள்ளும் ஒரு கலைஞர், உடனடியான அனுபவத்துடனும் மனிதநேயத்துடனுமான அனுபவங்களுடனும் கொண்டுள்ள உறவை காண்பதுடன் தனிப்பட்ட மற்றும் பொதுவான விடயங்கள் இரண்டையும் கிரகித்துக் கொள்கிறார். ஈரானிய படத் தயாரிப்பாளர்கள் பெரிய விடயங்களை கையாண்டமை முக்கியத்துவம் பெறுகிறது. கலைத்திறனின் வீழ்ச்சியானது ஏற்கனவே தெளிவாகியுள்ளது. இதே நிலைமை தாய்வான் மற்றும் சீன தயாரிப்பாளர்களுக்கும் குறிப்பாக உண்மையாக உள்ளது.

கவலைக்குரிய விதத்தில் சுவிஸ்-பிரெஞ்சுத் தயாரிப்பாளரும் கலையில் நீண்டகால அனுபவம் பெற்றவருமான ஜீன் லுக் கொடார்ட்-தொடர்ந்தும் தன்னை முட்டாளாகக் காட்டிக்கொண்டுள்ளார். அவரது பங்களிப்புகளில் ஒன்று வெளிவந்த பல படைப்புகளின் தொகுப்பின் அடிப்படையிலான திரைப்படமான டென் மினிட்ஸ் ஓல்டர் (Ten Minutes Older). த செலோ (The Cello) என்ற படத்தில் எட்டு சர்வதேச படத்தயாரிப்பாளர்கள் நேரத்தின் நிலைத்திருத்தலை கருதியுள்ளனர். கொடார்ட்டின் பாகத்தில் 'இன் த டார்க்னஸ்' (In the Darkness) இல் 'நான் மறைந்ததை மட்டுமே காண்கின்றேன்' என ஒரு குரல் ஒலையில் ஒலி இருக்கின்றது. "சிந்தனை," "மௌனம்," "காதல்," என்பன அவற்றின் கடைசி நிமிடங்களில் உள்ளன. கொடார்ட் இவ்வாறு கேட்கிறார், நமக்கு எப்படித் தெரியும்? சோவியத்தின் முந்திய உலகில் ஐரோப்பிய அரசியல் நம்பிக்கையற்ற உணர்வு எல்லாவற்றிலும் கூர்மையான வடிவற்ற இருக்கலை விளக்குகின்றார். அவர்களது சிறிய உலகு ஒரு முடிவிற்கு வந்துள்ளமையால் முழு உலகமே ஒரு முடிவிற்கு வரவேண்டும்.

கனேடிய இயக்குனரான டேவிட் க்ரொனென்பேர்க் -த ஃபிளை (The Fly), டெட் ரிங்கர்ஸ் (Dead Ringers)- இனது பெயர் ஒருபோதும் கொடார்ட், அன்ரோனியோனி ஆகியோருக்கருகே இருக்காத போது அவரது தொடர்ச்சியானதும் பாரதூரமானதுமான வீழ்ச்சி அவதானிக்கப்பட வேண்டும். ஸ்பைடர் அவரின் முந்தைய (சிறந்த) எக்ஸிஸ்டென்ஸ் (eXistenZ) போன்று அபாயகரமானதாக இல்லாத போதும் முக்கியமாக இது ஒரு வெறுமையான மற்றும் மலினமான வெறுக்கின்றதான ஒரு படைப்பாகும். இந்தக் கதையானது தனது தாயின் மேல் இனக்கவர்ச்சிக்கு உட்படுத்தப்பட்ட ஒரு சிறுவனின் உணர்வுகளை ஒரு கொலைகார திருப்பத்திற்குள்ளாவதை காண்கிறது.

சீன இயக்குனர் சென் கைகேயின் கடைசி முயற்சி (யெல்லோ ஏர்த் -Yellow Earth, பெயர்வெல் மை கொன்குபைன் -Farewell My Concubine) டுகெதர் (Together) திறமைமிக்க வயலின் வித்துவானான 13 வயதுடைய சிறுவன் அவனுடைய தனது மகாணத்தை விட்டு பீஜிங் என்கிற நகரத்துக்கு விலகிச் செல்லும் ஒரு உணர்ச்சிமிக்க படைப்பாகும். இங்கு எதுவித புதுமையானவையோ அல்லது அசாதாரணமானவையோ இல்லை. ஐந்தாவது சந்ததி என கூறப்படும் சீன இயக்குனர்கள் (சென், சயங்யிமோ மற்றும் பலர்) மேலே குறிப்பிடப்பட்ட அதே காரணங்களுக்காக அதிகளவு தேய்ந்து போயுள்ளதாக தெரிகின்றது. முன்நோக்கு தொடர்பான கேள்விகளுக்கு சவால் செய்ய அடிப்படையில் ஆற்றலின்மையே தவிர இது முழுமையாக அவர்களுடைய தனிப்பட்ட குறைபாடு அல்ல.

சில இயக்குனர்களுக்கு கூறுவதற்கு எதுவுமில்லாமல் பற்றாக்குறையாக ஏற்படுகையில், சிலருக்கு ஆரம்பிப்பதற்கு கூட அவ்வளவாக ஒன்றும் இருந்ததில்லை. தகேசி கிடனோவினால் இயக்கப்பட்ட டோல்ஸ் (பொம்மைகள்) இந்த ஜப்பானிய இயக்குனரின் திரைப்படத்தில் துப்பாக்கியால் சுடுவதை நிறுத்தப்படுமேயானால் அதிகளவு சொல்வதற்கு இல்லை என்ற ஒருவருடைய சந்தேகத்தை உறுதிப்படுத்துகின்றது. இக்கதையானது தனது குடும்பத்தாரின் விருப்புகளுக்கமைய திருமணம் செய்து, தற்போது தனது உண்மைய காதலை காப்பதற்காக மனமுடைந்து வருந்தும் ஒரு நடுத்தர வர்க்க இளைஞனின் கதை கவர்ச்சியற்றதாகவும் சாதாரணமானதாகவும் உள்ளது.

ருஷ்யத் திரைப்படத் தயாரிப்பாளரான அலெக்சாண்டர் சொக்குரவ் (மதர் அன்ட் சன் -Mother and Son, மொலொச் -Moloch) தொடர்ந்தும் மறைந்த சோவியத் இயக்குனர் அந்ரே டார்கோவ்ஸ்கியின் (1932-86) ஆத்மாவின் தூதர் என குறிப்பிடுகின்றார். தற்போதைய விமர்சனத்திலோ அல்லது சினிமாவிலோ உள்ள எவரும் இந்த கற்பனை கதை பற்றிய சர்ச்சைக்குரிய ஏதோ அங்கு உள்ளது என குறிப்பிட தயங்குவார்கள். இருப்பினும் வெளிநாட்டில் செய்யப்பட்ட டார்கோவ்ஸ்கியின் கடைசி இரண்டு திரைப்படங்களும் மிகவும் பரிதாபகரமானதாகவும் குழப்பமானதாகவும் இருந்தது (நொஸ்டல்ஜியா -Nostalgia, த சக்ரிபைஸ் -The Sacrifice). அவரது வெளிப்பாடுகளில் ஸ்டாலினிச அட்டூழியங்கள் மற்றும் கனமான அடக்குமுறைகள் அதே வேளை அவரது கிறிஸ்தவ அல்லது கடவுள் நம்பிக்கை சடவாத மனிதாபிமானமானது ஒரு வகையில் எதிர்வினையானதாகவும் ஆழமான உண்மையை கொண்டுள்ளதாகவும் இருந்ததை இவை வெளிக்காட்டி உள்ளன. இந்த நோக்கானது நவீன உலகினைப் பற்றி அர்த்தம் தருவதற்கு மிகவும் பற்றாக்குறையான ஒன்றென நிரூபிக்கப்பட்டுள்ளது. அவரது கடைசி படைப்புகளில் டார்கோவ்ஸ்கி முற்றுமுழுதாக அவரது அம்சங்களிலிருந்து விலகியிருந்தார்.

சக்குரோவின் புதிய திரைப்படமான ரஷ்யன் ஆர்க் (Russian Ark) 96 நிமிடங்கள் நீடிக்கின்ற ஒரு டிஜிட்டல் வீடியோவில் செய்யப்பட்ட தொடர்ச்சியான ஒரு காட்சியாகத் தயாரிக்கப்பட்டுள்ளது. ஒரு பத்தொன்பதாம் நூற்றாண்டு பிரெஞ்சுக் கல்விமானும் ஒரு கண்ணிற்படாத திரைப்படத் தயாரிப்பாளரும் செய்ன்ட் பீட்டர்ஸ் பேர்க்கிலுள்ள ஆச்சிரம அரும்பொருள் காட்சிசாலையில் ரஷ்ய வரலாற்றின் காட்சிகளை வழியில் சந்தித்த வண்ணம் பயணிக்கின்றனர். சித்திர அரும்பொருட் காட்சிசாலையின் மண்டபங்களில் பீற்றர் த கிரேட் (Peter the Great), கதரின் த கிரேட் (Catherine the Great), மற்றும் நிக்கொலஸ் I, II (Nicholas I and II) ஆகியோர் அவர்களது பரிவாரங்கள், அரசவை அலுவலர்களுடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்சிதருகின்றனர். அக்டோபர் புரட்சிக்கான பல தவிர்க்க முடியாத விநோதமான சான்றுகள் காணப்படுகின்றன. இத்திரைப்படமானது ஒரு தொழில்நுட்ப உல்லாசப்பயணம் ஆகும். (திரைப்படக் குழுவானது ஏறத்தாழ 900 நடிகர்களையும் துணை நடிகர்களையும் மூன்று நிஜ இசைக்குழுக்களையும் கொண்டுள்ளது எனினும் வேறு எதுவும் இல்லை.

செக.குரோவின் கதாபாத்திரங்களின் மொழியானது, "நான் கண்களைத் திறக்கின்றேன் எனக்கு ஒன்றும் தெரியவில்லை. எனக்கு என்ன நடந்தது என ஞாபகம் இல்லை என யாரோ கூறுகின்றார்கள் இது கோடாட்டினது (Godard) ஒன்றை நினைவூட்டுகின்றது. கண்ணுக்குத் தென்படாத இயக்குனர் ருஷ்யாவின் சோகவரலாறு என கூறப்படுவதை விளக்கமாக குறிப்பிடுகையில் "ஆசியாவின் காதல் கொடூரமானது. கொடூரம் எவ்வளவு எவ்வளவு அதிகமோ அதனிலும் நினைவுகள் நீங்காதவை. இதன் பொது நடையானது நம்பிக்கையற்றது, ஆரோக்கியமற்றதுடன் இனிமையற்ற வேறொரு உலகியலுக்கு உரியது.

## பின்னடைவு சட்டமாவதேன்?

"பின்னடைவுகள் விதிவிலக்குகளைவிட வழக்கில் இருப்பது ஏன்? திரைப்படத் தயாரிப்பாளர்களின் அத்தியாவசியமான அறிவுபூர்வமான மற்றும் கலை மட்டத்தை அடைய அல்லது பற்றிக் கொள்ளத் தவறியுள்ளமை அவர்களை பின் புறமாக நழுவிக்கொள்வதை மிக இலகுவாக்குகின்றது என்பதை குறிப்பிடுவது நியாயமானதாக தோன்றுகின்றது. அந்த "உயரம்" என்னவாக இருக்கும்?

கடந்த சில தசாப்தங்களாக குறிப்பாக முதலாளித்துவம் பற்றிய பொதுவாக எதிரான கருத்துக்களும் சோசிலச விமர்சனங்களும் கலை வட்டத்திற்குள் ஒரு யுத்தத்தை ஏற்படுத்தியுள்ளது. 1964 போன்ற முன்னொரு காலத்தில் ஏகென்ஸ்ட் இன்டர்பிரிட்டேஷன் (Aginst Interpretation-அர்த்தம் கொள்ளலுக்கு எதிரான) என்ற அவருடைய பிரசித்தமான கட்டுரையில் சூசன் சொன்டாக் விவாதித்திருப்பது போல நவீன கலைகள் திருப்தி மற்றும் அர்த்தப்படுத்தல்களால் அதிக பளுவேற்றப்பட்டுள்ளன. அர்த்தம் கொள்ளலானது கலைப்படைப்புக்களின் உணர்வுப் பூர்வமான அனுபவங்களை உண்மையென கொள்கின்றது. தற்போது முக்கியமானது என்னவெனில் தமது பலன்களை மீளப் பெறுவதாகும். உள்ளுணர்வு மற்றும் அபிப்பிராயத்துடன் உணர்வுகளும் கலையில் தற்காலிகமாகவேனும் வெற்றிபெற்றுள்ளதாக ஒருவர் தெரிவித்தாலும் அது பாரிய இழப்புக்களை ஏற்படுத்திய ஒரு வெற்றியாக நிருபிக்கப்பட்டுள்ளது.

பெரும்பாலான போலியான அல்லது உண்மையில் நம்பிக்கையை ஏற்படுத்தும் சமகாலத்து திரைப்படத் தயாரிப்பாளர்கள் குறிப்பிட்ட தனிப்பட்ட அனுபவங்களை மற்றும் நினைவுகள் அல்லது வரலாற்று சம்பவங்களையே ஆச்சரியமூட்டும் உணர்ச்சி சம்பந்தமாக விறளக்குவதில் தமது ஆற்றலை காண்பிக்கின்றனர். சீன மற்றும் தாய்வான் திரைப்பட தயாரிப்பாளர்கள் ஒரு சில இளையவர்களில் உட்படவே முதலாவதும் முன்னையவர்களும் என ஒருவர் நினைக்கின்றார் ஆனால் இது ஒரு பூகோள ரீதியான வரலாற்று காட்சியாகும். (சொக்குரோவின் திரைப்படம் அசாதாரணமான வரலாற்று மின்தயாரிப்புகள் சிலவற்றை கொண்டுள்ளது: மைக் லெய்யின் *டொப்சி-டேர்வி (Topsy-Turvy)* அந்த அம்சத்தை அதனில் கொண்டிருந்தது.)

சில சந்தர்ப்பங்களில், விபரங்களில் மீள் தயாரிப்புகள் அதிகளவு செம்மையாக இருப்பதால் சமுகத்திற்கு கூட பரவுகின்றது, உதாரணமாக வகுப்பு தொடர்பான விளைவுகள் மற்றும் ஒடுக்கப்படுதல் என்பவற்றை அடையாளம் காணுதல், உதாரணமாக புருட்சன் மற்றும் சிலரின் குறிப்பிட்ட வேலைகளை குறிப்பிடலாம். எவ்வாறெனினும் அதிகளவு திரைப்பட கலைஞர்களின் தொடர்ச்சியான கூர்ப்பு ஆனது இந்த சமூக விபரங்களை அவர்களுடைய நாடகங்களின் பின்புற காட்சிகளின் ஒரு அம்சமாக கருதுவதையே நிருபிக்கின்றதே அன்றி அதன் முக்கியமான பாத்திரத்தை அல்ல. சுவாரசியமான மற்றும் அறிவுபூர்வமான வேலைகளைச் செய்த பின்னரும் கூட அதிகளவு தவறான வழிகாட்டல் மற்றும் விபரீதமான திக்குகளுக்கு செல்லலாம். அவர்களுக்கு உதவும் அல்லது வழிநடத்தும் சமுக வாழ்க்கை பற்றிய ஒரு தெட்டத் தெளிவான எண்ணத்தை அவர்கள் வரைந்துகொள்ளவில்லை.

கொடுக்கப்பட்ட சமுக சூழலை மீளத் தயாரிக்கும் ஆற்றலானது தொழிநுட்ப சாதனைகளின் தரத்தை கொண்டுள்ளது. (உதாரணமாக மொழிபெயர்ப்பு கலையில் ஏற்படுத்தப்பட்டுள்ள அசாதாரண முன்னேற்றங்கள் இதை ஒத்த உதாரணமாகும்.) இந்த செயற்பாடுகள் செம்மையான உணர்வுப்பூர்வமான கலைக்குரிய கதாபாத்திரங்களிலிருந்து தனிப்பட்ட அனுபவங்களை நோக்கிய பிரயோகஙல்களுக்கு பகுதியளவில் தன்னிச்சஜயாக மாறமுடியும். இது எமது காலத்தில் மனித நிலைமையின் சாராம்சத்தை பெருமளவு ஒத்திருப்பதை போன்றதல்ல. இது இந்த நெருக்கடியின் பரந்த கருத்துக்களதும் முதலாளித்துவத்தின் தொடர்ச்சியான நிலைத்திருத்தல்லினதும் விளைவான மனிதாபிமானத்துக்கு விரோதமான இருந்ததாக விஞ்ஞானம் உணர்வு மற்றும் ஒழுங்கான நியாயமான என்பன தலையிடவேண்டும்.


குறிப்பாக பல திரைப்படங்களின் உணர்வுள்ள "கொள்வனவுகளும்" ஆழமான சமூக போக்குகளின் தொடர்புள்ள படத் தயாரிப்புகளும் மிகவும் சொற்ப அளவிலேயே உள்ளன. இந்தப் படைப்புக்கள் சில அம்சங்கள், கிளர்ச்சியூட்டும் உணர்வுகள், ஞாபகங்கள் என்பவற்றையே எடுப்பதில் கவனம் செலுத்துகின்றன. மேலும் இவை நடைமுறை உண்மைகளுக்கு மிகவும் அற்பமான கண்ணோட்டத்தையே வழங்குகின்றன. படத்தயாரிப்பாளர்கள் ஒரு பிரச்சினைக்கோ நலைமைக்கே செய்யப்படும் வரலாற்று ரீதியான அனுகுமுறையை நிராகரிப்பதன் மூலம் பகுத்தறிவற்ற ஒரு காட்டுமிராண்டித் தனமான நம்பிக்கையை உருவாக்குகின்றனர் அனைத்துமே மேலோட்டமானவையாகவும் உடனடியானவையாகவும் உள்ளன. எவ்வாறெனினும் கடந்த காலங்களில் தனது வேர்களில் இருந்து துண்டிக்கப்பட்ட நிலையில் "தற்காலமானது" ஒரு அற்பமான முகப்பாகும் என மார்க்ஸிஸ்டுகள் உணர்ந்துள்ளனர்.

அதிகளவு திரைப்படத் தயாரிப்பாளர்களின் கூர்ப்பு ஏமாற்றத்தை தருவது பணம் மற்றும் புகழ் என்பவற்றால் உருவாக்கப்படும் அதிகளவு அமுத்தமே என சிலர் வாதாடலாம். இச்செய்முறையை அதிகரிப்பதில் இவ் அமுத்தங்கள் பிரதான பாத்திரத்தை வகிக்கின்றது என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. பத்தொன்பதாம் நூற்றாண்டில் நாவலாசிரியனோ கவிஞனோ இவ்வாறான ஒன்றிற்கு முகம் கொடுக்கவில்லை, அவனோ அல்லது அவளோ பலதசாப்தங்களுக்கு அதிகமாகவோ அல்லது குறைவாகவோ தனியாக விடப்பட்டிருக்கலாம். ஆனால் இந்த அமுத்தங்களுக்கான சுட்டிக்காட்டல்கள் ஏன் தற்போதைய திரைப்படத் தயாரிப்பாளர்கள் இந்தளவு அதிக நம்பிக்கையை காட்டிய போதும் ஏன் மிக வேகமான வீழ்ச்சி அடைகின்றனர் என விளக்கவில்லை.

எனது கருத்துப்படி, எண்ணங்களுக்கான குறைபாடு மற்றும் குறிப்பாக வரலாற்று விளக்கங்களுள் மற்றும் ஆழமான சமூக உணர்வுகளுக்கான குறைபாடே பதிலாகும். தற்போது பெரும்பான்மையான திரைப்பட கலைஞர்கள் உறுதியாக இருப்பதற்கும் தமது ஆய்வினை விரிவாக்குவதற்கும் மிகவும் குறுகிய அறிவுபூர்வமான அடித்தளத்தையே பேறாகப் பெற்றுள்ளனர். ஆகையால் அவர்களின் பின்னடைவு மற்றும் பார்வையாளர்களின் ஏமாற்றம் ஏற்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தொழிலாளர் பாதை வெளியீடு



### சோசலிச சமத்துவக் கட்சியின் முன்னோக்கு

பொது மக்கள் முகம் கொடுக்கும் சகல பிரச்சனைகளும் சர்வதேச ரீதியிலானவை. சகல போராட்டங்களும் முன்னோக்கு, தலைமை பற்றிய அரசியல் பிரச்சினையை மத்தியமான முறையில் தோற்றுவிக்கின்றது. இச்சவாலுக்கு முகம் கொடுக்க, அனைத்துலகத் தொழிலாள வர்க்கம் [illegible] அனைத்துலகத் தொழிலாளர் இயக்கம் [illegible] புதிய கட்சியை ஸ்தாபிக்கும் [illegible] முதலாளித்துவ [illegible] சமத்துவத்தையும் [illegible] அடிப்படையில் ஆட்சி பற்றிய முன்னோக்கை வழிகாட்டுவதற்கு.

விலை: ரூபா 40.00



### லியோன் ட்ரொட்ஸ்கியும் 20ம் நூற்றாண்டில் சோசலிசத்தின் தலைவிதியும்

டேவிட் நோர்த்

விலை ரூபா. 10.00

### நிரந்தரப் புரட்சியும் சோசலிச அனைத்துலக வாதத்துக்கான போராட்டமும்

[illegible]

டேவிட் நோர்த்


விலை ரூ. 8.00



### ஆகஸ்ட் சதியின் பின்னர்: சோவியத் யூனியன் எங்கே செல்கிறது?

விலை ரூ. 25.00





முதலாளித்துவத்தின் மரண ஓலமும் நான்காம் அகிலத்தின் பணிகளும்

இடைமருவு வேலைத்திட்டம் நான்காம் அகிலத்தின் ஸ்தாபக மாநாட்டில் நிறைவேற்றப்பட்டது.

விலை ரூபா. 15.00



போரின் உலக மகாநாட்டின் முன்னோக்கும்

ஏகாதிபத்திய யுத்தத்துக்கும் அலனித்துவத்துக்கும் எதிரான போராட்டமும் போரின் உலக மகாநாட்டின் முன்னோக்கும்

விலை ரூ. 25.00

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலக சோசலிச வலைத் தள ஆய்வு

## சந்தா

'உலக சோசலிச வலைத் தள ஆய்வு' சஞ்சிகைக்கான ஒரு வருட (நான்கு இதழ்கள்) சந்தாவுக்காக கீழே உள்ள கூப்பனை நிரப்பி சோசலிச சமத்துவக் கட்சியின் பெயரில் எழுதப்பட்ட காசுக் கட்டளை அல்லது காசோலையுடன் த.பெ: 1270, கொழும்பு என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

அஞ்சல் கட்டணத்துடன் ஒரு வருட சந்தா ரூபா. 200.00

பெயர்:...................................................................................................

முகவரி:...................................................................................................

...................................................................................................

தொலைபேசி:...................................................................................................

மின்னஞ்சல்:...................................................................................................

## நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் கிளைகள்

Socialist Equality Party
(United States)
PO Box: 48377, Oak Park, MI 48237
Telephone: 2489672924
E-Mail: Sep@socialequality.com

Socialist Equality Party
(Australia)
PO Box: 367, Bankstown, NSW 1885
Telephone: 0297903511
E-Mail: sep@flex.com.au

Socialist Equality Party
(Canada)
PO Box: 5534, Montreal,
Quebec H3B 4P1
E-mail: sep-pes@wsws.org


Socialist Equality Party
(Britain)
PO Box: 1306, Sheffield, S9 3UW
Telephone:0114244 3545
E-mail:sep@socialequality.org.uk

Socialist Equality Party
(Sri Lanka)
PO Box:1270
Telephone: 712104
E-mail: kmawatha@lanka.ccom.lk

Socialist Equality Party
(Germany)
Postfach: 040 144,10061, Berlin
Telephone: 49 30 30872440
E-mail: info@gleichheit.de

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# உலக சோசலிச வலைத் தளத்தை வாசியுங்கள்

**(சிங்களம், தமிழ், ஆங்கிலம் உட்பட 9 மொழிகளில்)**

# http://www.wsws.org

(நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் வெளியீடு)

* வலைத் தளத்தில் பிரசுரிப்பதற்காக வரலாறு மற்றும் அரசியல் பிரச்சினைகள் அல்லது வேறு ஆழமான தலையங்கத்தில் வாசகர்கள், புத்திஜீவிகள் அல்லது ஏனையவர்களின் பங்களிப்புகளையும் ஆர்வத்துடன் வரவேற்கின்றோம்.

**E-mail: editor@wsws.org**

රාජගිරිය, කේ.එස්.යු. ග්‍රැෆික් හි මුද්‍රණය කර ප්‍රසිද්ධ කරන ලදී

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org